

# இலங்கைப் பயணக் கதை

மணி



இதயம் பேசுகிறது...(XI)

மணியன் பதிப்பகம்



# இலங்கைப்
# பயணக் க

இதயம் பே

மணிய

முதலாம் பதிப்பு—ஏப்ரல் 1979

விலை ரூபாய் 5

'தி இதயம் பிரிண்டர்ஸ்' அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

*2-வது உள் அட்டைப்படம்:*
இலங்கை தமிழர் தலைவர்
திரு. அமிர்தலிங்கத்துடன் ஆசிரியர்

*3-வது உள் அட்டைப்படம்:*
மாண்புமிகு இலங்கை ஜனாதிபதி
திரு. ஜயவர்த்தனவுடன் ஆசிரியர்

வெளியிடுவோரும் – விற்பனைக்கு வழங்குவோரும் :

**மணியன் பதிப்பகம்**
7, ஹனுமந்தராவ் ரோடு,
பாலாஜி நகர்,
சென்னை-14,
தமிழ்நாடு.



54-36



க்கு அமரர் செல்வா வ[illegible] தந்தபோது...



# அணிந்துரை

திரு. மணியன் அவர்களது பயணக் கட்டுரைகள் பலவற்றைப் படித்து மகிழ்ந்தவர்களில் நானும் ஒருவன். நாளும் பலரும் பயணம் செய்கிறோம். அனைவரது பயணமும், பயணத்தில் பெறும் அனுபவங்களும் அவர்களோடு, அல்லது அவர்கள் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளும் அளவோடு முடிந்து விடுகிறது. ஆனால், நண்பர் மணியன் அவர்களது பயணக் கட்டுரைகள் மூலம், 'தாம் பெற்ற இன்பம் பெறுக' இவ்வையகம் என்பது போல் அனைத்துத் தமிழ்கூறும் நல்உலகும் பயன் அடையும் நிலையைக் காணுகிறோம். 'கல்கி' அவர்களுக்குப் பிறகு, இதோ ஒரு 'கல்கி' என்று கூறத் தக்கவராக மணியனின் எழுத்தாற்றல் அமைந்துள்ளது. பல நாடுகளைப் பற்றி எழுதி வந்த அவர் இலங்கையைப் பற்றி ஏன் எழுதவில்லை...? எப்போது எழுதுவார்? என்ற கேள்வி நம்மிடம் இருந்து வந்தது. அந்த ஆவல் நீங்க அவரது 'இலங்கைப் பயணக் கதை' 'இதயம் பேசுகிறது' இதழில் தொடர்ந்து வெளிவந்து, இலங்கையைப் பற்றியும், குறிப்பாக ஈழத் தமிழர் பற்றியும் உலகம் அறியச் செய்த பெரும்பணியைப் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டு ஏடுகளில் ஈழத்தைப் பற்றிய செய்திகளை வெளியிடாமலும் வெளியிட அஞ்சியும் பிற ஏடுகள் இருந்த நிலையில், எங்கள் செய்தியை முதலில் வெளியிட வந்த பெருமை 'இதயம் பேசுகிறது' இதழுக்கு உண்டு!

திரு. மணியன் அவர்களுடன் பழகும் வாய்ப்புப் பெற்றேன். அவர் பழக இனிய பண்பாளர். பல்அறிவு பெற்ற திறனாளர். தனக்குச் சரியெனப் பட்டதைத் துணிந்து சொல்லும் தன்மையும், தவறு என்று சுட்டிக்காட்டினால் ஏற்றுக் கொள்ளும் பண்பும், கள்ளமற்ற உள்ளமும், கனிவு மிகுந்த புன்னகையும், எந்தக் கூட்டத்திலும்

உரையாடலிலும் 'கணீ'ரென அவரது ஒலி முதன்மை பெறுவதும் அவரின் சிறப்புகளாகும்.

இலங்கைக்குப் பலமுறை பயணம் செய்து, பல்வேறுபட்ட மக்களையும் சந்தித்து, கலை, இலக்கிய, சமூக, அரசியல் அனைத்துத் துறைகளிலும் தான் கண்டவற்றை, கேட்டவற்றைத் தொகுத்து அழகுபட இலங்கைப் பயணக் கட்டுரை தீட்டினார்.

அது தற்போது நூலாக வெளிவருவது மகிழ்வைத் தருகிறது.

அவரது பல பயணக் கதை நூல்கள் வரிசையில் — பல இல்லங்களின் நூலகங்களில் மட்டுமல்ல, ஆறு கோடித் தமிழர்களின் இதயங்களில் இடம் பெறும் இனிய மலராகப் போகின்றது 'இலங்கைப் பயணக் கதை.' அதோடு கட்டுரையில் கண்ட சில பிழைகள் நீக்கப் பட்டு, பல புது செய்திகளும் சேர்க்கப்பட்டு புதுப் பொலிவோடும், எழிலோடும் 'இலங்கைப் பயணக் கதை' நூல் வெளிவருவது அறிய மகிழ்ச்சி! எம்மை அறியவில்லையே என்ற ஏக்கம் போக்கிய தமிழ் எழுத்தாளர் வரிசையில் முன்னணியில் நிற்கும், ஈழத் தமிழர் உள்ளம் கவர்ந்த மணியனை மனதாரப் பாராட்டுகிறேன். மறைந்த 'கல்கி'யும், டாக்டர் மு.வ.—வும் இலங்கை பற்றி எழுதினர்கள். மணியனின் கட்டுரை கல்கியின் எழுத்துச் சுவையும், மு.வ.—வின் தமிழுணர்வும் கலந்து தேனுகச் சுவைக்கின்றது.

எதையும் புதுமையாகச் செய்ய வேண்டும், அழகாகச் செய்ய வேண்டும், அறிவு வளரச் செய்ய வேண்டும் என்ற மணியனின் முயற்சிகள் வெல்க!

தமிழ் இலக்கிய உலகம் புதிய மலரைப் பெற்றது. நான் நல்ல ஒரு மணியான நண்பரைப் பெற்றேன். வாழ்க, வளர்க, திரு. மணியன் அவர்களது தமிழ்ப் பணி!

அன்பன்,

தெல்லிப்பழை

2—4—1979

அ. அமிர்தலிங்கம்





# 1

கொழும்பு நகரில் ஒரு வீதி

**தி**னந்தோறும் எனக்கு வருகிற தபாலில் நாலைந்தாவது அப்படி இருக்கும். கொஞ்சம் வேண்டுகோளும் சிறிது கோபமும் அதில் கலந்திருக்கும். பெண்கள் வெளிப்படுத்தும் கோபம் சற்று நிறையவே இருக்கும்.

''எங்கேயெல்லாமோ போய்ச் சுற்றிப் பார்த்து விட்டு வருகிறீர்களே? தமிழ்த் தாய்க்குக் கால் அருகே இருக்கும் இலங்கைத் தீவு உங்கள் கண்ணில் படவில்லையா? உங்களுக்கு ஏன் அந்தத் தொடர்பைப்பற்றி எழுத வேண்டுமென்று தோன்றவில்லை...?''

இலங்கையிலிருந்து இப்படி நண்பர்கள் என்னைக் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் நான் சொல்லிக் கொண்டிருந்த ஒரே பதில், ''உங்களுடைய சர்க்கார் என்னை அங்கே வரவிடவில்லை'' என்பதுதான்.

ஒரு பத்திரிகை ஆசிரியனாகவும், நிருபராகவும், எழுத்தாளனாகவும், அங்கே போய்வர வேண்டுமென்று பலமுறை அவர்களை அணுகியிருக்கிறேன். எத்தனை விதமாக எழுதினாலும் அவர்களிடமிருந்து எந்தவிதப் பதிலும் இருக்காது!



சிரிமாவோ பண்டாரநாயகா பிரதமராகப் பதவியிலிருந்தபோது, அவர்களுக்கே, 'பாரதப் பிரதமர் இந்திராகாந்தியை நான் பலமுறை பேட்டி கண்டுவிட்டேன். இஸ்ரேல் பிரதமர் கோல்டாமேயரையும் சந்தித்து விட்டேன். உலகத்திலேயே பெண் பிரதமராக இருக்கும் மூன்ருவது நபர் தாங்கள்தாம். தங்களைச் சந்திக்க எனக்கு வாய்ப்பு அளியுங்கள்' என்று எழுதியிருந்தேன்.

ஊஹூம், பதிலே இல்லை.

இப்போது ஒரு புதுத்திருப்பம். இந்த மூன்று பேருமே இப்போது பதவியில் இல்லை. சிரிமாவோ பண்டாரநாயகா அவர்கள் பிரதமராக இருந்த போதே எனக்குப் பேட்டி அளித்திருக்கலாம். அந்த 'சான்ஸை' அவர் விட்டு விட்டார்! ஆனுல் அவரைச் சந்திக்கும் 'சான்ஸை' நான் விடவில்லை. இலங்கைக்குப் போனபோது, அவரையும் மறக்காமல் சந்தித்துப் பேசிவிட்டு... ஏன், கொஞ்சம் சண்டையும் போட்டுவிட்டுத்தான் வந்தேன். பெரிய வேடிக்கை அது!

இந்தத் தடவை இலங்கைக்குப் போவது என்று நிச்சயமானதும், கதிர் காமத்துக்குப் போகும் புண்ணிய யாத்திரைப் பிரயாணியாகவே விண்ணப் பித்துக் கொண்டேன். உடனே ரிசர்வ் பாங்க் சாங்ஷன் வந்துவிட்டது. இதைப்பற்றி என்னுடைய நண்பர் ஒருவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்.

''என்ன செய்வது? 'ஜர்னலிஸ்ட்' என்ருல் உள்ளே விடுவார்களோ இல்லையோ என்று பயமாக இருந்தது. புண்ணியதலத்துக்குச் செல்லும் யாத்ரீகன் என்ருல் வம்பு இராது என்று உடனே அனுமதித்து விடுகிருர்கள்'' என்றேன்.

''நீங்கள் இவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டாமே? பிரதமர் ஜயவர்த் தனு அவர்களுக்கு உண்மையான நோக்கத்தைச் சொல்லிக் கடிதம் எழுதுங்கள். அவருக்குத் தெரிந்தவர்கள் யாராவது எழுதினுலும் நல்லது. உங்களை வரவேற்றுப் பதில் எழுதுவார்'' என்ருர் நண்பர்.

அப்படியே ஒரு நண்பர் கடிதம் எழுதினுர். உண்மையாகவே ஆருவது நாள் பதில் வந்து சேர்ந்தது. 'மிஸ்டர் மணியன் வருவதைப் பற்றி அறிய மகிழ்ச்சி. உடனே புறப்பட்டு வரச்சொல்லுங்கள்' என்று அன்பு கனியப் பதில் எழுதியிருந்தார் பிரதமர். சென்னையில் உள்ள இலங்கை ஹைகமிஷன் அலுவலர்கள் மளமளவென்று காரியங்களை முடித்து, விசாவை வழங்கி என்னை அனுப்பி வைக்கத் தயாராகி விட்டார்கள்.

இந்த உண்மைக்கு நடுவில் ஒரு பொய் சொன்னதற்காகவும் வருத்தப் பட்டேன். இவ்வளவு எளிதாகவும், நயமாகவும் எனக்கு அனுமதி கிடைக்கும் என்பது தெரிந்திருந்தால், ஒரு பத்திரிகையாளனுகப் போகும் உண்மையான நோக்கத்தை முதலிலேயே சொல்லியிருக்கலாமே...? கதிர்காமத்துக்குப் பிரார்த்தனைக்குச் செல்லுவதாகப் பொய் சொல்லி இருக்கவேண்டிய அவசியம் இல்லை அல்லவா?

என்ன செய்வது? இன்றும் பலர் இலங்கைக்குப் போக இந்தக் குறுக்கு வழியைத்தான் நாடுகிருர்கள். இந்த மனப்பான்மை மாறுவதற்கு ரிசர்வ் பாங்கு அதிகாரிகள் உட்பட எல்லாருமே தமது கண்ணேட்டத்தையும், மனப்பாங்கையும் ஓரளவு மாற்றிக் கொள்ள வேண்டியது மிக அவசியம்.

சொல்லப்போனுல் இலங்கைப் பயணம், ஒரு வெளிநாட்டுப் பயணம் என்று பிரமாதப்படுத்திக் கொள்ள வேண்டிய விஷயமே அல்ல. இராமேசு வரத்திலிருந்து அது முப்பத்தைந்து மைல்கள் தூரம்தான். சென்னையிலிருந்து பம்பாய்க்குப் போவதைவிடச் சீக்கிரமாக விமானத்தில் இலங்கைக்குப் போய் இறங்கி விடலாம்! நினைத்தால் ஆச்சரியமாக இருக்கிறது.

ஆனுல் அதைவிட ஆச்சரியம், இவ்வளவு பக்கத்தில் இருப்பவர்கள்

நம்மைப்பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ளாமல் இருப்பதுதான்! தமிழ் நாட்டுச் செய்திகளும் நடப்புக்களும் அங்கே ரொம்ப நிதானமாகத்தான் போய்ச் சேருகின்றன.

பல ஆண்டுகளுக்கு முன் காற்றுடி விமானத்தில் பறந்துபோய் இலங்கை விஜயம் செய்தவர் 'கல்கி' அவர்கள். இன்றைக்கும் இலங்கைத் தமிழர்கள் 'கல்கி' அவர்களை நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெருமையுடன் அதைச் சொல்லிக் கொள்கிறார்கள். தமிழ்நாடு என்றதுமே 'கல்கி'யின் பெயர்தான் பெரும்பாலோருக்கு நினைவுக்கு வருகிறது.

இலங்கைத் தமிழர் ஒருவர் என்னிடம் கைகுலுக்கிவிட்டு, ''உங்களுக்கும் 'கல்கி'க்கும் ஒரு ஒற்றுமை பார்த்தீர்களா?'' என்றார்.

''என்ன ஒற்றுமை? இருவருமே இலங்கைக்கு வந்து பயணக்கட்டுரை எழுதுகிறோம் என்பதா?'' என்று கேட்டேன்.

''அது மட்டும் இல்லை. இருவருமே 'ஆனந்த விகடனி'ல் பணியாற்றி இருக்கிறீர்கள். இருவருமே அந்த ஸ்தாபனத்திலிருந்து பிரிந்து வந்து புதிதாகப் பத்திரிகையைத் தொடங்கியிருக்கிறீர்கள். அவர் வெற்றிகரமாக நடத்தி நல்ல பெயர் வாங்கியது போலவே...'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே நான்,

''எனக்கும் வெற்றி கிடைக்கக் கதிர்காமத்து முருகன் அருள் வேண்டும்'' என்று முடித்தேன்.

தமிழ்த் தலைவர் உயர்திரு செல்வா அவர்கள் தமிழ் நாட்டுக்கு வந்திருந்தபோது என்னை 'ஆனந்த விகடன்' அலுவலகத்தில் சந்தித்தார்கள். வெகுநேரம் மகிழ்ச்சியோடு உரையாடிக் கொண்டிருந்தோம். போகும்போது என்னை இலங்கைக்கு வரச்சொல்லி அழைத்துவிட்டுப் போனார் அந்தப் பெருந்தகை.

இந்தத் தடவை யாழ்ப்பாணத்திற்குப் போனபோது எனக்கு அந்த ஞாபகம்தான் வந்தது. அவர் இல்லாத யாழ்ப்பாணம் வெறிச்சென்று இருந்தது. இலங்கைத் தமிழன்பர்களிடம் இந்த ஏக்கம் என்னைக் காட்டிலும் பலமடங்கு அதிகமாக இருப்பதை உணர்ந்தேன்.

அங்கே உள்ள தமிழ் நண்பர்கள் அதிகமாக நினைவுகூரும் இன்னொரு தமிழ் அறிஞர் ஆர்.பி. சேதுப்பிள்ளை அவர்கள். அவரைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டுப் பேசியபோது, எனக்கும் தமிழ்ப் பேராசிரியர் சீனுவாசராகவனுடன் சேதுப்பிள்ளை இலங்கை சென்ற நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது...

இந்த இரண்டு தமிழ் அறிஞர்களுக்கும் அங்கே அமோகமான வரவேற்பு இருந்தது. ஒரு கூட்டத்தில் பேசும்போது, முதலில் பேசிய சேதுப்பிள்ளை உணர்ச்சி வேகத்தோடு சொல்மழை பெய்து தள்ளிவிட்டார். அந்த வெள்ளத்தில் அவ்வளவு பேரும் திக்குமுக்காடிப் போனார்கள்! கவனித்துக் கொண்டிருந்த சீனுவாசராகவனுக்கு, 'நண்பர் இந்தப் போடு போட்டு விட்டாரே? அடுத்தாற்போல இதற்கு இணையாக நாம் என்ன பேசுவது?' என்ற கவலை கொஞ்சம் வந்துவிட்டது. இரத்தினச் சுருக்கமாக ஓர் அறிமுகம் செய்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தார்.

''இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே தமிழ்ப்பாலம் கட்டி விட்டார், சேது; ராகவன் வந்திருக்கிறேன்'' என்று ஒரு போடு போட்டார் சீனிவாசராகவன்!

கேட்க வேண்டுமா கரவொலிக்கு!

சிங்கள மொழியின் ஓசைநயம், கவிதை போன்ற மலர்ச்சி, கேட்கக்

கேட்க அலுக்காத மெருகு இவற்றை நான் மிகவும் ரசித்தேன்.

சிங்களப் பெண்களின் இயற்கையான அழகு, கள்ளமில்லாத முகப் பொலிவு, சிற்பம் நடந்து வருவது போன்ற லாவண்யம் — இதுவும் என்னைக் கவர்ந்தது.

ஆனல், இந்தப் பொல்லாத யாழ்ப்பாணத் தமிழர்கள்தாம் என்னை ஏமாற்றி விட்டார்கள்!

உலகத்தில் பல்வேறு நாடுகளுக்குப் போய் வந்தபோதெல்லாம், நான் ஒரு விஷயத்தைத் திரும்பத் திரும்ப நினைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டதுண்டு. மற்ற நாடுகள் எவ்வளவுதான் முன்னேறியிருந்தாலும், எங்குமே தமிழ்நாட்டு மக்களைப் போன்ற புத்திசாலிகளை நான் பார்த்ததில்லை. தமிழனின் அறிவுக் கூர்மையைப் போல வேறு எங்குமே நான் கண்டதில்லை.

இப்படி ஒரு பெருமையைத் திரும்பத் திரும்பச் சொல்லி எழுதி நிமிர்ந்து நடந்து கொண்டிருந்த என்னை யாழ்ப்பாணத் தமிழர்கள் ஏமாற்றி விட்டார்கள்! தமிழ்நாட்டுத் தமிழர்களைவிடத் தீர்க்கமான அறிவு, ஆழ்ந்த தமிழ்ப்பற்று அங்கே சுடர்விடுவதை நான் பார்த்தேன். பேசினல் அவர்கள் நம்மை யெல்லாம் தூக்கிச் சாப்பிட்டு விடுவார்கள் போல இருந்தது!

'சிரித்திரன்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் சிவஞானசுந்தரம் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தபோது, ''உங்கள் நாட்டைப் பற்றி ஏதாவது சொல்லுங்களேன்'' என்று கேட்டேன்.

''நான்கு புறமும் கடல் சூழ்ந்தது எங்கள் நாடு. ஆனல், இங்கேதான் நாங்கள் டின்னில் அடைத்து வரும் மீன்களை இறக்குமதி செய்கிறோம்'' என்றார் அவர். எப்படி பதில்! அப்புறம் வெகுநேரம் அந்தப் பதிலை நினைத்து நினைத்து ரசித்து அனுபவித்துக் கொண்டிருந்தேன்.

அன்பும் பண்பும் உருவான இலங்கைப் பிரதமர் ஜயவர்த்தன அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவரைச் சந்தித்த முதல் இந்திய 'ஜர்னலிஸ்ட்' நான்தான்!

முன்னள் பிரதமர் சிரிமாவோ பண்டாரநாயகா அவர்களையும் சந்தித்தேன். அதிலும் நான்தான் முதல்!

அந்தச் சந்திப்பில் என்னமாய்ச் சூடு பறந்தது என்கிறீர்கள்...!

தமிழ்த் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களையும் சந்தித்தேன்.

உடல் அலுத்தாலும் நெஞ்சு அலுக்காமல், கண்டும் கேட்டும் அனுபவித்த விஷயங்கள் எத்தனை? சுவையான பேட்டிகளும், சூடான விவாதங்களும் எத்தனை...?

நான் இலங்கைப் பயணத்தை மேற்கொண்ட சமயம் தமிழ்நாட்டிற் கடும் புயல் ஒன்று அடித்து ஓய்ந்திருந்தது.

''ஒரத்தநாடு எப்படி இருக்கிறது ஸார்? அதிகச் சேதமா?''

''நாகப்பட்டினத்தில் புயல் அடித்து நிறையச் சேதமாமே?''

''ராமநாதபுரம் எப்படி சார்? பரவாயில்லையா?''

இலங்கை மண்ணில் நான் காலடி எடுத்து வைத்ததும் என்னைச் சந்தித்த தமிழ் அன்பர்கள் கேட்ட கேள்விகள் இவை. அவர்களைப் பார்த்ததும் என்னையும் மறந்து நான் கேட்ட கேள்விகளும் ஏறக்குறைய இப்படித்தான் இருந்தன:

''சமீபத்தில் நடந்த கலவரங்களில் யாழ்ப்பாணத்தில் அதிகச் சேதம் உண்டா? திரிகோணமலையில் என்ன நடந்தது? கொழும்பில் உள்ள தமிழர்கள் சிரமப்பட்டார்களா?''

—இப்படி ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டபோது நாங்கள் பரிமாறிக் கொண்ட பேச்சு வார்த்தைகள், ஒருவருக்கொருவர் ஆறுதல் தேடிக் கொள்வதுபோல, மகிழ்ச்சி இல்லாத விசாரிப்புகளாக இருந்தன. தமிழ் பரவிய இரண்டு பிரதேசங்களில், இப்படி இருவேறுவிதமாகத் துயரமும் கவலையும் பரவி நின்ற விதத்தை நினைத்துப் பார்க்கும்போது எனக்கு வேதனை யாக இருந்தது.

இதையும் மீறி, 'தமிழ்நாட்டிலிருந்து ஓர் எழுத்தாளர் வந்திருக்கிறார். பத்திரிகையின் மூலம் படித்தும் பார்த்தும் பழகிய நண்பர் ஒருவர் நேரில் வந்திருக்கிறார். அவரைச் சந்திக்கப் போகிறோம்' — என்ற மகிழ்ச்சி அவர்களுக்கு.

'நம் இனத்தைச் சேர்ந்த மக்களைப் பார்க்கப் போகிறோம். கடல் கடந்த ஒரு நாட்டில் தமிழன்பர்களைக் கண்டு பேசப் போகிறோம்.' – இப்படி ஒரு மகிழ்ச்சி எனக்கு!

தென் இந்தியாவின் ஒரு பாகமாகவே இலங்கை இருந்தது என்பது வில்ஹெல்ம் மேயர் போன்ற சில சரித்திர நிபுணர்களின் முடிவு. அங்கே போய்ப் பார்க்கிற நமக்கும் இதை வலியுறுத்துவது போலச் சில பண்புகள் தெரிகின்றன.

முதலாம் பாராக்கிரமபாகு அமைத்த உல்லாச நந்தவனத்தில் தமிழ் நாட்டின் மரங்களான சம்பகம், அசோகம், புன்னை, கடம்பு, மா, பலா போன்றவை இருந்ததாம். மிருகங்களில்கூடச் சிங்கத்துக்கும் புலிக்கும் இலங்கை சொந்த வீடு இல்லை. இங்கிருந்து போனவைதான் அவை. யானை தான் அசல் இலங்கைவாசி!

இலங்கையில் வேடர்கள் என்ற இனத்தார் உண்டு. அவர்களுடைய கடவுள் 'கண்டேசியாகா' என்ற வேட்டுவப் பெருமான். இவரே தமிழர் வணங்கும் முருகன் என்பதும் – குறிஞ்சி மலைப் பிராந்தியத்தைச் சேர்ந்த வள்ளியை மணந்த வேடர் கடவுள் என்பதும் இன்னொரு ஒற்றுமை. வள்ளி என்ற பெயரும் அந்தப் பெண்களிடம் சகஜமாக இருக்கிறது. இலங்கை ஆதி வாசிகளான நாகர்களும் இந்தியாவிலிருந்து போனவர்கள்தாம். நாகப் பட்டினமே தமிழ்நாட்டைச் சேர்ந்ததுதானே? நாகங்களை வணங்கிவந்த அவர்களிடையே தமிழ்ப் புலவர்களும் இருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இடம் பெற்றிருந்த புத்தன் தேவனார் என்பவர்.

இலங்கையில் வாழ்ந்த சரித்திர புருஷர்களாக யட்சர்களை இராமாயண மகாபாரத இதிகாசங்களும், புத்தர் ஜாதகக் கதைகளும் குறிப்பிடுகின்றன. இராமாயணம் இவர்களை நாகரிகம் மிகுந்த மக்களாக வருணிக்கிறது. இலங்கையின் தலைநகரில் நாற்பது லட்சம் வீடுகள் இருந்ததாக இராமாயணப் பாடல்கள் விவரிக்கின்றன. அவர்களுக்கும் தென்னிந்தியாவில் வாழ்ந்த மக்களுக்கும் தொடர்பு இருந்ததாகவும் சொல்லுகிறது.

—இந்த ஒற்றுமைகளை நான் பேராசிரியர் கே. கே. பிள்ளை எழுதிய 'தென் இந்தியாவும் இலங்கையும்' என்ற புத்தகத்தில் படித்தேன். அங்கே போய்ப் பார்த்தபோது அதை நேரில் உணரும் அனுபவமும் கிடைத்தது.

இலங்கையைப் பற்றி இந்தியாவில் திடீரென்று ஓர் அக்கறை தோன்றி யிருக்கிறது. பத்திரிகைகள் பலவிதமாகவும்—இந்தியாவின் அரசியல் சூழ் நிலையையும், இலங்கையின் அரசியல் பின்னணியையும் ஒப்பிட்டு எழுதியிருக் கின்றன.

பிரதமர்களைப் பொறுத்தவரை இந்திராகாந்தி, சிரிமாவோ பண்டார நாயகா; அவர்களுடைய புதல்வர்களைப் பொறுத்தவரை சஞ்சய் காந்தி, அனுரா; ஏறக்குறைய ஒரேமாதிரியான தேர்தல் சூடு, முடிவுகள். – இவற்றை

யெல்லாம் ஒப்பிட்டுப் பல பத்திரிகைகளும் வட இந்தியாவில் சுவையான அரசியல் கட்டுரைகளைக் குவித்திருப்பதை நான் படிக்க நேர்ந்தது!

இலங்கைக்குப் போனபோது எனக்கும் இந்த மாறிய பின்னணியை உணர முடிந்தது. அங்கே கட்டுப்பாடுகள் தளர்ந்திருக்கின்றன. கொழும்பு நகரின் ஒரு பகுதி எந்தத் தடையும் இல்லாமல் 'ஃப்ரி ட்ரேட் ஸோ'னக (Free Trade Zone) முழுச் சுதந்திரத்துடன் இயங்கும்படி பிரிக்கப்பட இருக்கின்றது. வெளி நாட்டினர் அங்கே வந்து முழுச் சுதந்திரத்துடன் முதலீடு செய்யவும், வியாபாரத்தைத் தொடங்கவும் வசதிகள் செய்து கொடுக்கப்பட விருக்கின்றன. எல்லாச் சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ள இந்தப் பகுதியில் 'ஸ்ட்ரைக்' செய்வதற்கு மட்டும் சுதந்திரம் இருக்கப் போவதில்லையாம்!

இந்தப் பகுதியில் நான் சந்தித்த இலங்கை அரசின் அதிகாரிகள், வணிகத் துறையில் முக்கியப் புள்ளிகள், பிரமுகர்கள் எல்லாரிடமும், நான் இதைக் குறிப்பிட்டபோது, சிரித்துக் கொண்டே அவர்கள் சொன்னார்கள்: ''புரியவில்லையா சார்? ஜயவர்த்தன ஒரு லீக்வான்யூ ஆவதற்குத் தான் விரும்புகிறார். அவர் இலங்கையை வேகமாக ஒரு சிங்கப்பூர் ஆக்கி விடுவதில் முனைந்திருக்கிறார்!''

இலங்கை, சிங்கப்பூர் பாணியில் மாறிக் கொண்டிருக்கிறது — இந்தச் செய்தி வெளிநாடுகளில் யார் யார் காதில் விழுந்ததோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் கொழும்பிலேயே இதன் எதிரொலி கணீரென்று கேட்கிறது! பார்த்த மாத்திரத்தில் 'பளிச்' சென்றும் புரிகிறது.

எங்கே பார்த்தாலும் 'ஹோண்டா' கண்ணில் படுகிறது. அந்த மோட்டார் சைக்கிள்களின் பேரிரைச்சல் காதைத் துளைக்கிறது! ஆமாம், ஜப்பான்காரர்களின் காதில் இந்தச் செய்தி நிச்சயமாக விழுந்து விட்டது!

கொஞ்சம் விட்டால் போதுமே! அவர்களுக்குச் சொல்லியா கொடுக்க வேண்டும்? அடுத்த தடவை நான் இலங்கைக்குப் போகும் போது 'ஹோண்டா'வைத் தவிர வேறு மாடல் மோட்டார் சைக்கிள்களே என் கண்ணில் பட முடியாது. காதில் அந்த ஒரே சத்தம்தான் கேட்கப் போகிறது. சிறிது இடம் தந்தால் போதும்—சுறுசுறுப்பாகக் கரையான் அரித்துப் புற்றுவைத்துக் கொண்டு போவதைப்போலப் பரவி விடுவார்கள் இந்த ஜப்பானியர்கள் — யமகாதகர்கள்!



## 2

திருமதி சிரிமாவோ பண்டாரநாயகாவுடன் ஆசிரியர்

**கொ**ழும்பு விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளிடம் நான் எதுவும் சிரமப்படவேயில்லை. என்னைச் சந்திக்க திரு. ரங்கநாதன், திரு. பேரின்ப நாயகம், திரு. பேபி போன்ற நண்பர்கள் பலரும் வந்திருந்தார்கள். பிரியத்தோடு என்னை வரவேற்று அன்பொழுகப் பேசினார்கள். பதிலுக்கு நான் பேசவில்லை. அவர்கள் பேசுவதையே உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தேன. எனக்குள்ளே ஒரு மகிழ்ச்சி வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது. 'தேன்வந்து பாயுது காதினிலே...' என்று பாரதியார் பாடிய ஞாபகமும் வந்தது.

யாழ்ப்பாணத் தமிழ், நாம் படிக்கிற தமிழ். நயமான இலக்கணத் தமிழ். அழகான ஓசை நயத்துடன் அவர்கள் அதைப் பேசும்போது சங்கீதம் கேட்கிற மாதிரி இருக்கிறது. சங்கீதத்தை உற்றுக் கவனித்து ரசிக்கா விட்டால் எப்படி அனுபவிக்க முடிவதில்லையோ, அதைப்போலக் கவனித்துக் கேட்கா விட்டால் அவர்கள் 'கதைப்பதை'ப் புரிந்து கொள்வதும் சிரமமாக இருக்கிறது!



அதனுல் இலங்கைப் பயணம் முழுவதுமே நான் கண்களால் உற்றுக் கவனித்துத் தகவல்களைக் குறித்துக் கொண்டதைப்போலக், காதையும் நன்ருகத் தீட்டி வைத்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்தேன்!

விமான நிலையத்தில் நாலைந்து கார்கள் வந்திருந்தன. எதில் ஏறுவதென்று தீர்மானிப்பதுகூடக் கொஞ்சம் சிரமமாக இருந்தது. கடைசியில் 'நம்முடைய 'இதயம் பேசுகிறது' ஏஜெண்ட் துரைராசாவை அதிருப்தியடையச் செய்யக் கூடாது... அவருடைய காரிலேயே ஏறிவிடுவதுதான் சரி' என்று தீர்மானித்துக் கொண்டேன்.

காரில் ஏறிப் புறப்பட்டதும் முதல் காரியமாக எல்லாக் கதவுகளிலும் கண்ணுடியை மளமளவென்று இறக்கினுர் டிரைவர் ஹஸன்.

''எதற்காக இவ்வளவு வேகமாக கண்ணுடியை இறக்குகிறீர்கள் ஹஸன்?'' என்று கேட்டேன்.

''காற்று வரட்டும் சார்!'' என்ருர் அவர்.

''ஏகப்பட்ட காற்று வேண்டுமா என்ன? குளிருகிறதே?'' என்றேன்.

''சுதந்திரக் காற்று சார் இது! ரொம்ப நாளைக்குப் பிறகு கிடைத்திருக்கிறது. நன்ருக சுவாசித்து அதன் மணத்தை அனுபவியுங்கள் சார்...'' என்ருர் ஹஸன் ஒரு புன்னகையோடு!

'சுதந்திரக் காற்று உள்ளே வரட்டும்!' என்று ஹஸன் சொன்னது எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. அதை இலங்கையில் உள்ள ஒரு தமிழர் சொல்லியிருந்தாலும் பரவாயில்லை. 'ஏதோ இது அவருடைய மனக்குறை!' என்று விட்டிருப்பேன். ஆனுல் சொன்னவர் ஒரு தென்னிலங்கை நண்பர் அல்லவா? அதை என்னுல் லேசில் மனத்தில் வாங்கிக் கொள்ள முடியவில்லை.

'இலங்கையில் இப்படி ஓர் அடிமைத்தனம் இருந்திருக்கிறதா? இவ்வளவு பக்கத்தில் ஒரு நாடு இருந்திருக்கிறது. ஆனுல், அதில் மக்களுக்கு இப்படி ஒரு குமுறல் இருப்பது நமக்குத் தெரியவில்லையே?' என்று திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்துக் கொண்டேன்.

ஜனநாயகம் பறிபோய் விட்ட நிலையில் மக்கள் அங்கே வாழ்ந்திருக்கிருர்கள் என்பது எனக்கு முற்றிலும் புதிதான விஷயம். ஒரு காலத்தில் இந்தியாவிலும் மக்கள் இப்படிக் குமுறி இருக்கிருர்கள். ஆர்ப்பாட்டம் செய்திருக்கிருர்கள். அவையெல்லாம் எனக்கு இப்போது ஞாபகத்துக்கு வந்தது!

இந்தியாவானுலும், இலங்கையானுலும், தென் ஆப்பிரிக்காவானுலும் மனித இனம் ஒன்றுதான். அடிப்படையான மனித உணர்ச்சிகள் ஒன்றுதான். சாப்பாட்டுக்கும் தூக்கத்துக்கும் அடுத்தபடியாக மனிதன் மிகவும் விரும்பிப் போற்றுவது பேச்சு சுதந்திரத்தைத்தான். அவன் நினைத்ததை மனம் திறந்து தடையில்லாமல் சொல்ல வேண்டும். அந்த உரிமை பறிபோய் விட்டால் அவனுல் தாங்க முடிவதில்லை. அந்தக் கட்டுப்பாட்டில் நன்மைகள் சில இருந்தாலும், அவன் தன்னளவில் அதை ஆன்மாவுக்குக் கொடுத்த ஒரு தண்டனையாகவே கருதுகிருன்.

ஹஸனின் பேச்சில் பிரதிபலித்த உண்மை இதுதான். கட்டுப்பாடாக இருந்து முன்னேற்றம் அடைந்திருந்த போதிலும், கம்யூனிஸ்ட் நாடுகளைப் பற்றி உலக அபிப்பிராயம் எடுத்துச் சொல்லும் குறைபாடும் இதுதான்... காற்றும், நீரும், சோறும் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு கருத்துச் சுதந்திரமும் மனிதனுக்கு முக்கியம்.

இந்த நிகழ்ச்சியைச் சொல்லிவிட்ட பிறகு, இதில் சம்பந்தப்பட்டுள்ள திருமதி சிரிமாவோ பண்டாரநாயகாவைப் பற்றி நான் சொல்லியே ஆக

வேண்டியது ரொம்ப அவசியம். இங்கே சொல்வதற்குத் தகுந்த பின்னணி என்பதனுல் மட்டும் அல்ல; இலங்கைப் பயணத்திலேயே நான் மிகவும் முக்கிய மான நிகழ்ச்சிகளில் ஒன்ருகக் கருதியது சிரிமாவோ பண்டாரநாயகாவின் சந்திப்பு என்பதனுலும்தான்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மற்ற விஷயங்களில் எப்படிப்பட்ட ஒற்றுமை இருக்கிறதோ என்னவோ, இந்த விஷயத்தில் அபாரமான ஓர் ஒற்றுமை இருக்கிறது. இந்தியாவில் வீழ்ச்சி அடைந்ததைப்போல அங்கே யும் ஒரு சர்ச்சைக்குரிய ஆட்சி முடிந்து போயிருக்கிறது. இந்தியப் பத்திரிகை களைப் போல அங்கேயும் பத்திரிகைகள் இதை விவாதித்து, முன்னுள் பிரத மரையும், அவருடைய மகனையும் கூண்டில் ஏற்றி அலசிக் கொண்டிருக் கிருர்கள். அவர்களுடைய செயல்களைப் பின்புலம் கண்டு ஆராய்வதற்காகக் கமிஷனுக்கு மேல் கமிஷன்களாக உருவாகிக் கொண்டிருக்கின்றன.

இலங்கை அரசினுல் நியமிக்கப்பட்ட, எதிர்க்கட்சித் தலைவரின் செயலாள ரான பேரின்பநாயகம் என்பவரை இதற்காகச் சந்தித்தேன். இனிமையான பெயர். இன்பமாகப் பேசும் மனிதர். பெயருக்கேற்ற குணப்பொருத்தம் தான்! மெதுவாக விஷயத்துக்கு வந்தேன்...

''மிஸ்டர் பேரின்பநாயகம்! ஒரு வேண்டுகோள். திருமதி சிரிமாவோ பண்டாரநாயகாவை நான் பார்த்தாக வேண்டும்...?'' என்று கொஞ்சம் தயக்கத்துடன் கேட்டேன்.

ஒருகணம் புருவத்தைச் சுருக்கிக் கொண்டார் பேரின்பநாயகம். பிறகு என்னை ஏதோ ஓர் தீர்மானத்துடன் ஏறஇறங்கப் பார்த்தார். ''உங்களிடம் முழுக்கைச் சட்டை இருக்கிறதா?'' என்று கேட்டார். எனக்குப் புரியவில்லை.

''ஐயா! இது என்ன முழுக்கைச் சட்டை மர்மம்? எதையாவது மறைக்க வேண்டுமா? சிவப்பு நிறம் அவசியமா? சிவப்பு முழுக்கைச் சட்டையுடன் நான் நிற்கும் தோற்றத்தை நினைத்தாலே பயமாக இருக்கிறதே?'' என்றேன் கலங்கிப் போய்.

''இப்பொழுது உங்களிடம் முழுக்கைச் சட்டை இருந்தால் சிரிமா வோவை உடனே பார்க்க ரொம்ப சௌகரியமாக இருக்கும்!'' என்ருர் பேரின்பநாயகம். இலங்கைப் பயணப் பெட்டியில் ஒரு முழுக்கைச் சட்டையை எடுத்து வைத்துக் கொண்டு போகாத என் துரதிர்ஷ்டத்தை அந்த நிமிடம் எண்ணிப் பார்த்து ரொம்ப வருத்தப்பட்டுக் கொண்டேன்.

''நிச்சயமாக இப்போது என்னிடம் முழுக்கைச் சட்டை இல்லை. அளவெடுத்துத் தைக்கும் வரையில் காத்திருக்கப் பொழுதும் இல்லை. இப்போது சொல்லுங்கள்'' என்றேன்; அப்போதும் ஒன்றும் புரியாமல்.

''முழுக்கைச் சட்டை இருந்தால் பாராளுமன்றத்தில் 'ஸ்பீக்கர்ஸ் காலரி'க்குப் போகலாம். இல்லையானுல் 'ஜெனரல் காலரி'க்குமட்டும்தான் போகமுடியும்'' என்ருர்.

''அப்பாடா! இவ்வளவுதானே? பரவாயில்லை. ஜெனரல் காலரிக்கே போனுல் போதும். சிரிமாவோ பண்டார நாயகாவை எப்படியாவது பார்க்க ஏற்பாடு செய்யுங்களேன்'' என்று கெஞ்சாத குறையாகக் கேட்டேன்.

''ஓ! இப்பொழுதே பார்க்கலாமே?'' என்ருர் அவர். மிகவும் சிக்கலான ஒரு விஷயம், இவ்வளவு சுலபமாகத் தீர்ந்து போனது எனக்கு வியப்பாக இருந்தது. ''என்னுடன் வாருங்கள்'' என்று அழைத்துப் போனுர் பேரின்ப நாயகம். ரொம்ப ஆவலோடு கூடவே போனேன். பாராளுமன்றத்துக்குள் போய் 'ஜெனரல் விஸிட்டர்ஸ் காலரி'யில் உட்கார வைத்து, ''அதோ பார்த் தீர்களா? அவர்தான் திருமதி சிரிமாவோ பண்டாரநாயகா!'' என்று சுட்டிக் காட்டினுர், அந்தப் பொல்லாத மனிதர்!

''ஐயா! விளையாட்டு இருக்கட்டும். நான் 'சீரியஸா'கக் கேட்கிறேன். ஒரு 'ஜர்னலிஸ்ட்' என்ற முறையில் அவரைப் பேட்டி காண விரும்புகிறேன்'' என்றேன்.

''அப்பாடியோவ்...! அதெல்லாம் ரொம்ப சிரமம். அவர் 'ஜர்னலிஸ்ட்' களைச் சந்திப்பதே ரொம்ப அரிது'' என்றார் பேரின்பநாயகம்.

''எப்படியாவது நீங்கள்தான் உதவி செய்தாக வேண்டும். என்ன பண்ணுவீர்களோ தெரியாது. அவரைப் பார்க்காமல் நான் திரும்பிப் போக முடியாது'' என்றேன்.

''இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறீர்களே?'' என்று ஒரு நிமிடம் யோசனை செய்தார் பேரின்பநாயகம். சட்டென்று அவர் முகம் பிரகாசம் அடைந்தது. ''சிரிமாவோவுக்கு இந்திராகாந்தியிடம் தனியாகப் பற்றுதல் உண்டு. நீங்கள் இந்திராகாந்தியுடன் நெருங்கிப் பழகி இருக்கிறீர்கள். அதை அவரிடம் குறிப்பிட்டுச் சொல்லிப் பார்க்கிறேன். அவர் ஒருவேளை சம்மதிக்கக் கூடும்'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

அந்த 'விஸிட்டர்ஸ் காலரி'யில் அமர்ந்தபடியே, நான் பாராளுமன்ற சட்ட நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். ஆளும் கட்சி உறுப்பினர்கள் அங்கே சிரிமாவோவின் நடவடிக்கைகளைப் பற்றிக் காட்டமாகப் பேசி விவாதித்துக் கொண்டிருந்தார்கள். 'ஊழல்,' 'இலங்கையின் வாட்டர்கேட்' 'சூழ்ச்சி' என்றெல்லாம் குற்றச்சாட்டுக்கள் மிகச் சூடாகப் பறந்து கொண்டிருந்தன.

பேச்சுக்களின் முடிவில் உறுப்பினர்கள் சிரிமாவோவைச் சூழ்ந்து கொண்டார்கள். ஏகக் கலாட்டாவாக இருந்தது. கிட்டத்தட்ட 'கேரோ' செய்கிற சூழ்நிலை உருவாகி விட்டது. என்ன நடக்கப் போகிறதோ என்று எனக்கு ஒரே கவலை! பரபரப்பான நிலையில் திகைத்து நின்ற அந்தப் பெண் மணிக்கு அருகே வந்து அவருடன் இருந்து, பாதுகாப்பாக அழைத்து வெளியே கொண்டுபோய் விட்டார் ஓர் உறுப்பினர். அவர் யார் தெரியுமோ? தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கம்தான்! தமிழர்களைப் பற்றிச் சிரிமாவோ நினைத் ததும், செய்ததும் அப்போது அவருக்கு ஞாபகம் வந்ததோ என்னவோ தெரியாது; ஆனால் எனக்குப் பளிச்சென்று ஞாபகத்துக்கு வந்தது. கொஞ்சம் பெருமையாகவே இருந்தது!

இவ்வளவு முன்னேற்பாடுகளுக்கும் முயற்சிகளுக்கும் பிறகும்கூட, சிரிமாவோவைச் சந்திப்பது என்பது லேசுப்பட்ட காரியமாகத் தோன்ற வில்லை. இரண்டு மூன்று நாட்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.

அப்புறம்தான் எனக்கு ஒரு 'அப்பாயிண்ட்மெண்ட்' கொடுத்திருப்ப தாகக் குறிப்பு வந்தது. ஐந்து நிமிடங்கள் அவர் என்னுடன் பேசுவார் என்றும் அளவு போட்டு அனுப்பியிருந்தார்கள். நானும் அவரைக் கேட்கச் சில கேள்வி களைத் தயார் செய்து கொண்டு போய்ச் சேர்ந்தேன்.

வாசலில் ஒரு பெரிய கேட். என்னுடைய கார் போனதும் ஓர் ஆள் எட்டிப் பார்த்துவிட்டு, என்னை வெளியே நிறுத்திவிட்டு உள்ளே போனார். சிறிது நேரம் காரை உள்ளே விடவில்லை. அவரும் வெளியே வரவில்லை.

பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு ஹாலில் போய் உட்கார இடம் கிடைத்தது. சுற்றிலும் இருந்த பல்வேறு கண்கள் பலவிதமாக என்னைக் கவனித்தன. பெரிய நாய் ஒன்று உறுமிக் கொண்டிருந்தது.

அங்கே இருந்த கட்டுக்காவல், கெடுபிடியான சூழ்நிலை, மூச்சு விடவும் யோசிப்பது போல ஒரு கனத்த அமைதி.... எல்லாமே எனக்கு அவர் இன்னும் ஒரு பிரதமராகவே இருப்பதுபோல ஒரு பிரமையையே எழுப்பின.

வெகு ஆவலுடன் காத்திருந்தேன்.

அரைமணி நேரம் கழிந்த பிறகு, மாடிப்படிகளில் யாரோ இறங்கி வருவது தெரிந்தது. ஆர்வத்துடன் நிமிர்ந்தேன். அவரை நான் பெரிய பெரிய மாநாடுகளில், நேருஜி போன்ற பெருந் தலைவர்களுடன் பார்த்திருக்கிறேன். 'கண்டி' பகுதியிலிருந்து வரும் அந்தப் பெண்மணியைக் கன ஜோரான உடையில் நான் கண்டதுண்டு. அவருடைய நடையிலும், பார்வையிலும் மிதக்கும் பிரமாதமான கம்பீரத்தைக் கவனித்ததும் உண்டு. ஆனால் இப்போது என்முன் வந்து நின்றவர் மிகச் சாதாரண உடையில் இருந்தார். அவருடைய பார்வை, நடை இவற்றில் தெரிந்த தளர்ச்சியைக் காண எனக்குப் பரிதாபமாகக்கூட இருந்தது.

ஆனால் அவருடன் பேட்டியை முடித்துக் கொண்டு திரும்பியபோது இந்த உணர்ச்சி முற்றிலும் மாறிப் போயிருந்தது. அவரிடம் இப்படி ஒரு பரிதாப உணர்வைக் காட்ட வேண்டிய அவசியம் கொஞ்சம்கூட இல்லை என்றே எனக்குத் தோன்றிற்று! மிகவும் சர்ச்சைக்குரிய கேள்வியுடன் நான் என் பேட்டியைத் துவக்கினேன்...

என் முன் அமர்ந்திருந்த அந்தப் பெண்மணியைப் பார்த்ததும் எனக்கு இளமை ததும்பும் ஒரு கண்டிய குடும்பப் பெண்ணின் நினைவு வந்தது. கணவருடன் முகமலர்ச்சியோடு நின்றபடி அவர் தோன்றிய முக்கிய நிகழ்ச்சிகள் ஞாபகத்துக்கு வந்தன. அப்படி அவரைப் பார்த்த அழகான புகைப் படங்கள் மனத்தில் ஊர்வலமாகத் தோன்றின.

ஆமாம்! கொழும்பில் உள்ள அமரர் பண்டாரநாயகா நினைவாலயத்தில்தான் நான் அந்தப் படங்களைப் பார்த்தேன். அங்கே அவர் உபயோகித்த பொருட்கள், படித்த புத்தகங்கள், எழுதிய கடிதங்கள் எல்லாவற்றையும் அழகாக வைத்திருக்கிறார்கள். தொட்டுத் தொட்டுப் பழகிய கைத்தடி, கடிகாரம், நாற்காலி போன்றவைகளைக் காட்சியில் வைத்திருக்கிறார்கள். வரிசை வரிசையாகப் புகைப்படங்களின் மூலம், அவர் பிரதமராக இருந்து புதிய சகாப்தத்தை உருவாக்கிய பொன்னான நாட்களை நினைவூட்டுகிறார்கள்.

புதுடில்லியில் நேருஜியின் நினைவாக 'தீன்மூர்த்தி பவன்' நிறுவப்பட்டிருப்பதைப் போலவே, அங்கேயும் பண்டாரநாயகாவின் ஞாபகார்த்தக் கட்டடம் அமைக்கப்பட்டிருக்கிறது. சீனக் கம்யூனிஸ்டுகளின் ஒத்துழைப்புடன் எழுந்த கட்டடம் இது. அதன் ஒவ்வோர் அமைப்பிலும் அவர்களுடைய கைவாசனை மணக்கிறது. எங்கே அதை நாம் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவோமோ என்று, கட்டடத்தின் வாசலில்கூட, சீன மொழியில் குறிப்புகளை எழுதி வைத்துக் கனஅக்கறையாக நமக்கு ஞாபகப்படுத்துகிறார்கள்!

அங்கே அந்தப் புகைப்படங்களைப் பார்த்தபடி சுற்றி வந்தபோது எனக்கு மனவாசல் திறப்பது போல இருந்தது. 'பஞ்சசீலக் கொள்கைகள்' நேருஜியின் தலைமையில் உலக நாடுகளின் உறவுக்குச் சாசனமாக அமைந்த நாட்கள் நினைவுக்கு வந்தன. அவரும் அவரது நெருங்கிய நண்பர்களான பண்டாரநாயகா, சுகர்ணோ, நாஸர் ஆகிய தலைவர்களும் தத்தம் நாட்டில் ஒரு நவயுகத்தை நிர்மாணிக்கும் சிற்பிகளாக விளங்கியதையும் எண்ணிப் பார்த்துக் கொண்டேன்.

அங்கே இளம்பெண்ணாய், குடும்பத் தலைவியாய், ஒரு புகழ் பெற்ற தலைவரின் துணைவியாய், பல படங்களிலும் தெரிந்த அந்தப் பெண்மணியை நான் பல்வேறு தோற்றங்களில் கண்டேன். அந்த இளமையும், பொலிவும் இப்போது எங்கே? அரசாண்ட ராணியாக இடைக்காலத்தில் அவர் உலக அரங்கில் கொடிகட்டிப் பறந்த கம்பீரமான தோற்றத்தை நினைத்துக் கொண்டேன். அவர்தானா இவர்...?

கூர்மையான பார்வையுடன் என்னை ஒரு நொடியில் அளந்து மதிப்பிடு

வதுபோலப் பார்த்தார் திருமதி சிரிமாவோ பண்டாரநாயகா. அவருடைய பார்வை கத்தி வீச்சைப் போல ஒரு நொடி என் அருகில் அமர்ந்திருந்த ஸ்டெனோ, திருமதி தவமணியின் மீது பட்டுத் திரும்பி மீண்டும் என் முகத்தில் நிலைத்தது.

சுந்தரம் தன் பணியில் மும்முரமாக இருந்தார். 'பளிச்...பளிச்'சென்று மின்னல் வெட்டுவதைப் போல ஒளியுடன் படங்கள் பதிவாகிக் கொண்டிருந்தன. நாலைந்து எடுத்து முடிந்ததும் சட்டென்று திரும்பினார் திருமதி பண்டாரநாயகா. கையை நீட்டி உயர்த்தி, ''போதும் நிறுத்துங்கள்! இனிமேல் புகைப்படங்கள் வேண்டியதில்லை'' என்று உத்தரவிடும் குரலில் சொன்னார். கொஞ்சம் அசந்துபோய் சுந்தரம் எதிரே ஒரு நாற்காலியில் ஓரமாக, சாதுவாய் உட்கார்ந்து விட்டார்.

என்னைப்பற்றி அவர் விசாரிப்பார் என்று எண்ணினேன். ஆனால் இறுகிப்போன அந்த முகத்தில் துளி இளக்கம்கூடத் தெரியவில்லை. ஆகவே, நானே என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

''என் பெயர் மணியன். நான் ஒரு ஜர்னலிஸ்ட். இந்தியாவிலிருந்து வந்திருக்கிறேன். உலகின் பல நாடுகளையும் சுற்றிப் பார்த்திருக்கிறேன். புகழ் பெற்ற பல தலைவர்களையும் சந்தித்திருக்கிறேன். இப்போது தங்களையும் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது...''

அலட்சியமாக என்னை நிமிர்ந்து பார்த்தார் திருமதி பண்டாரநாயகா. உதடுகூட அசையவில்லை.

''சமீப காலம்வரை நான் ஒரு பிரபல பத்திரிகையின் பொறுப்பாசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். இப்போது விலகித் தனியாக நானே ஒரு புதிய வாரப்பத்திரிகை ஆரம்பித்திருக்கிறேன். அதற்கு, நான் மக்களுடன் நெருங்கிப் பழகி, மனம் விட்டுப் பேசி, பதினொரு ஆண்டுகளாக எழுதிவந்த பயணக் கட்டுரைகளின் தலைப்பையே பெயராக வைத்திருக்கிறேன். பெயரே புதுமையாக நெஞ்சைத் தொடுவது போல இருக்கும். அதன் பெயர் 'இதயம் பேசுகிறது.' ஆங்கிலத்தில் சொன்னால், 'Heart Speaks'.

சட்டென்று, ''அது என்ன மொழியில் வெளிவருகிறது?'' என்று கேட்டார், ஓர் ஆவலோடு.

''அது ஒரு தமிழ்ப் பத்திரிகை'' என்று புன்னகையுடன் பதில் சொன்னேன்.

''ஓ! தமிழா?'' என்றார் அலட்சியமாக. எனக்கு அது 'சுருக்'கென்று தைத்தது.

''நீங்கள் வரப்போவதாக மிஸ்டர் பேரின்பநாயகம் சொன்னார்; நீங்கள் என்ன காங்கிரஸ்காரரா? தி.மு.க. உறுப்பினரா?'' என்று என்னை உற்றுப் பார்த்தார்.

''இரண்டும் இல்லை அம்மணி! நான் ஒரு பத்திரிகைக்காரன். என் பணி வாழ்க்கை எல்லாமே அதுவே'' என்றேன்.

''அது உங்கள் தொழில். நீர் எந்தக் கட்சிக்காரர்?''

''எந்தக் கட்சியும் இல்லை. நான் பெருந்தலைவர் காமராஜின் பக்தன். இந்திரா காந்தியிடம் ஈடுபாடு கொண்டு பழகியவன். என்னை மிகவும் கவர்ந்த ஒரு தலைவர் எம்.ஜி.ஆர். கம்யூனிஸ்டுத் தலைவர் கல்யாணசுந்தரம் எனது நண்பர். நான் பெரிதும் மதித்த தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. என்னை எந்தக் கட்சியைச் சேர்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

இந்தப் பதில் அவருக்குப் பிடிக்கவில்லை. அது அவர் முகத்திலேயே

தெரிந்தது. ''வெல்... இங்கே எதற்காக வந்தீர்கள்?'' என்று கேட்டார்.

''பல நாடுகளையும் சுற்றிப் பார்த்தபோது பல தலைவர்களையும் நான் சந்திக்க நேர்ந்தது. அப்போது இலங்கையைச் சுற்றிப் பார்க்கவும், தங்களை சந்திக்கவும் எனக்கு ஆவல் உண்டாயிற்று. அதை வெளியிட்டு தங்களுக்குப் பல கடிதங்கள் எழுதினேன். ஒரு பதில்கூட வரவில்லை! எனக்கு அது பெரிய ஏமாற்றம்...'' என்றேன்.

''ஹூம்.... எனக்கு ஆயிரக்கணக்கில் கடிதங்கள் வந்துகொண்டிருந்தன. அவை ஒவ்வொன்றையும் நான் படித்துப் பதில் எழுதிக் கொண்டிருக்க முடியுமா என்ன?'' என்றார் அவர் அலட்சியமாக. 'சரி... இந்த அம்மணி நமக்குச் சரியாகப் பதில் சொல்லப் போவதில்லை' என்று மனதுக்குள் முடிவு கட்டிக் கொண்டேன்.

''தங்களுடைய நேர நெருக்கடி எனக்குத் தெரிகிறது அம்மணி! ஆனால் அமெரிக்க ஜனாதிபதி கார்ட்டரைப் போன்ற ஒரு 'பிஸி'யான தலைவருக்குக் கடிதம் எழுதினால், அவருடைய அலுவலகத்திலிருந்து பதில் வந்துவிடுகிறது. தங்களுக்கு ஆயிரக்கணக்கில் கடிதங்கள் என்றால், அவருக்கு லட்சக்கணக்கில் கடிதம் வருகிறது. அவர் பதில் அளிக்கவில்லையா? அதைப்போல தங்கள் இலாகாவாவது, என்னுடைய பல கடிதங்களுக்கு, ஒரு முறையேனும் பதில் அளித்திருக்கலாமே?''

'ஹோ...' என்று ஓர் அலட்சியப் பெருமூச்சுதான் அவர் பதில்.

''எங்கள் ஊரில் இன்னும் சிறு கடைகளில்கூட கென்னடியின் படம் தொங்குகிறது. அவர் எழுதிய கடித பதில்களை அவர்கள் பத்திரமாக 'பிரேம்' போட்டு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு அரசியல் தலைவரின் மதிப்பு சாதாரணக் குடிமகனுக்கும்கூடப் பதிலளிப்பதால் ரொம்ப உயர்ந்து விடு கிறது. நான் ஒரு 'ஜர்னலிஸ்ட்' அம்மணி! லட்சக்கணக்கான மக்களின் உள்ளக்கிடக்கையைப் பிரதிபலிப்பவன்...''

''சரி... உங்களுக்கு இப்போது என்ன வேண்டும்?''

''சில விஷயங்களைப் பேச வேண்டும்.''

''கேள்விகளைக் கேளுங்கள்.''

''இந்த ஊரில் — தங்களை இலங்கைப் பிரஜை என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படும் தமிழர் பலரைச் சந்தித்தேன். 'தமிழ் ஈழம்' பிரியவேண்டும் என்ற கருத்து கொண்டவர்களையும் சந்தித்தேன். ஆனால் அவர்களும்கூட இந்த மண்ணில் எல்லாருடனும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள்தாம். அவர்களுக்கும் சிறந்த உணவுக்காக ஒரு பசி உணர்வு இருக்கும் அல்லவா? கலாசாரத்துக்காக ஏங்கும் தாகம் இருக்கும் அல்லவா? நான் சந்தித்த பலரிடம் அந்தத் தாபம் துடிதுடிப்பதை என்னால் உணர முடிந்தது. சிறந்த தமிழ் இசை காதில் விழவேண்டும் என்று அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்ப் பண்பைப் பிரதிபலிக்கும் பரத நாட்டியத்தைப் பார்க்க ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அவற்றை அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை. சொல்லப்போனால் உலகெங்கும் கொடிகட்டிப் பறக்கும் எங்கள் இசைமேதை எம்.எஸ்.கூட — இங்கே வரமுடியவில்லையே? இப்படிப்பட்ட உலகப் புகழ் பெற்ற கலைஞர் களுக்கும்கூட இலங்கையின் வாசல்கள் ஏன் மூடி வைக்கப்பட்டிருந்தன...? தெரிந்து கொள்ளலாமா அம்மணி?''

''ஓ... எல்லாம் எனக்குத் தெரியும். தமிழ்நாட்டில் கலைஞர் என்று சொல்லிக்கொள்ளும் அத்தனை பேரும் தி.மு.க.தான்! ஸி.ஐ.ஏ-க்காரர்களின் கைப்பொம்மைகள்தாம். கலை, கலாசாரம் என்று ஒரு போர்வையைப்

போர்த்திக் கொண்டு இங்கே வந்து நுழைந்து, அரசியல் குழப்பங்களை உண்டாக்குகிறவர்கள்தாம்... எனக்குத் தெரியும்'' என்று வீம்புடன் நிமிர்ந்து பார்த்தார் திருமதி பண்டாரநாயகா.

எம். எஸ். சுப்புலட்சுமியை — அரசியல்வாதியென்றும், குட்டை குழப்புகிறவர் என்றும் வருணித்த அவர் அறியாமையைப் பார்த்து எனக்குச் சிரிப்பு வந்தது.

''என்ன சிரிக்கிறீர்கள்?'' என்றார் கடுமையாக.

''தங்கள் அறியாமையைக் கண்டு சிரிக்கிறேன். ஐயாம் ஸர்ப்ரைஸ்டு அட் மாடம்ஸ் இக்னரென்ஸ்!'' என்றேன்.

அந்தப் பதிலைக் கேட்டு அவருடைய முகம் 'ஜிவுஜிவு' என்று சிவந்தது. குரல் பொங்கிக் குமுறிற்று. ''நீங்கள்கூட தி.மு.க.தான் என்று நினைக்கிறேன். உங்கள் பேச்சைப் பார்த்தால் எனக்கு அப்படித்தான் படுகிறது'' என்றார்.

நான் உடனே பதில் சொல்லவில்லை. ''ஏன் உங்களுக்கு தி.மு.க. மீது இவ்வளவு கோபம்?'' என்று சற்றுப் பொறுத்துக் கேட்டேன்.

''ஓ...'' என்று சீறிக்கொண்டு நிமிர்ந்தார் பண்டாரநாயகா. ஒரு கோபப் பார்வையோடு தலையைக் குலுக்கிக் கொண்டார். ''தெரியாதா எனக்கு? சொல்லிக் கொடுக்க எண்ணுகிறீர்களா? ஒன்று நீங்கள் தி.மு.க. வினராக இருக்க வேண்டும்; அல்லது பிரிந்து போகவேண்டும் என்று எண்ணுகிற இந்த ஊர்ப் பிரிவினைவாதிகளைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். வெளியிலிருந்து வந்திருந்தாலும் உங்களை அவர்கள் 'ப்ரெயின்-வாஷ்' செய்திருக்க வேண்டும். உங்கள் பேச்சில் அந்த வாடைதான் வீசுகிறது. ஐயாம் ஷ்யூர்'' என்று சோபாவின் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டார்.

''அம்மணி....! நான் தங்களுடைய நாட்டுக்கு அன்பு உள்ளத்தோடு வந்திருக்கும் விருந்தினன். தங்கள் நாட்டையும் மக்களையும் பற்றிப் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று மிகுந்த ஆவலோடு வந்திருப்பவன். இலங்கைத் தமிழர்கள் பற்றி மட்டும் எழுத வரவில்லை; இலங்கையின் பெருமைகள் பற்றியும் எழுத வந்திருக்கிறேன். என்னை அப்படியெல்லாம் சந்தேகக் கண்களோடு பார்க்க வேண்டாம் என்று வேண்டிக் கொள்கிறேன்.''

''ஹூம்... சந்தேகமே இல்லை எனக்கு!'' என்று தெறித்தாற்போலச் சொல்லிவிட்டு, அடுத்தாற்போல ஒரு பதிலும் சொன்னார். அதைக் கேட்டதும் என் மனம் சொல்லொண்ணாத வேதனையில் நொந்தது...

''பெரிய பெரிய பத்திரிகைகளுக்கே நான் பேட்டி கொடுக்க முடியாது என்று சொல்லி இருக்கிறேன். எனக்கு அதில் எல்லாம் நம்பிக்கை இல்லை... நீங்கள் என்ன பிரமாதம்...? ஒரு சாதாரண தமிழ்நாட்டுப் பத்திரிகைக்காரர்தானே...!'' என்றார் திருமதி பண்டாரநாயகா.

எனக்கு உடம்பெல்லாம் சுட்டது. என்னை ஏதாவது சொல்லி இருக்கலாம். ஆனால், பத்திரிகைக்காரன் என்று ஏளனம் செய்திருக்க வேண்டாம். அதுவும் தமிழ்நாட்டுப் பத்திரிகைக்காரர் என்று இகழ்ச்சியாகச் சொல்லியிருக்கவே வேண்டாம். அதுதான் என்னை வெகுதூரம் வேதனைக்கு உள்ளாக்கியது.

''பெரிய பெரிய பத்திரிகைக்காரர்கள் என்று சொல்கிறீர்களே? அவர்கள் யார் யாரென்று நான் தெரிந்து கொள்ளலாமா...?'' என்று பதட்டப் படாமல் கேட்டேன்.

''ஏன்...? ஜப்பானியர்கள்... ஜெர்மானியர்கள்... ரோமிலிருந்து வரும் 'ஜர்னலிஸ்டு'கள்!''

''ஸோ, ஜப்பான், ஜெர்மனி என்ருல் பெரிய பத்திரிகைக்காரர்கள் என்று ஒரு தீர்மானத்துக்கு வந்து விடுகிறீர்களாக்கும்? அந்த நாடுகளிலும் ரொம்பச் சாதாரணமான 'ஜர்னல்'கள் இருக்கின்றன. இந்தியாவைப் போன்ற நாட்டிலும் உலகப்புகழ்பெற்ற 'ஜர்னல்'கள் எவ்வளவோ இருக்கின்றன. எப்படித்தான் நீங்கள் தீர்மானம் செய்கிறீர்களோ, தெரியவில்லை! பெரிய 'ஜர்னலிஸ்டு'க்கு உங்கள் இலக்கணம்தான் என்ன...? சொல்லுங்களேன், என்றேன் ஒரு வேகத்தோடு.

அவரும் விடவில்லை. ''பெரிய 'ஜர்னலிஸ்டு'கள் என்ருல் அவ்வளவுதான்—ஸம்திங் ரியலி கிரேட்...'' என்று கையைத் தூக்கி அகல விரித்தார்.

''அம்மணி! அனேகமாக எல்லா உலக நாடுகளையும் சுற்றிப் பார்த்தவர், அமெரிக்காவுக்கும்—ரஷியாவுக்கும் அரசாங்க அழைப்பில் போய் வந்தவர், ஷேக் முஜிபுர் ரஹ்மானை பங்களாதேஷ் விடுதலையானதும் முதலில் சந்தித்தவர், முந்தைய பாரதப் பிரதமர் இந்திரா காந்தியுடன் ஒரு நாள் முழுவதும் இருந்து பேட்டி கண்டவர், வியட்நாம் யுத்தம் முடிந்தவுடன் அந்த மண்ணில் காலடி வைத்த முதல் 'இந்திய ஜர்னலிஸ்ட்' — 'கன்கார்ட்' விமானத்தில் முதலில் பறந்தவர் — இப்படிப்பட்ட ஒருவரைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்...?'' என்றேன்.

''ஏன்...? யாரது...?'' என்று கொஞ்சம் வியப்போடு கேட்டார்.

''அது நான்தான். என்னைப் பற்றிப் பெருமையாகச் சொல்லிக் கொள்வது எனக்குப் பிடிக்காத ஒன்று. சொல்லப் போனுல் அது எனக்குக் கொஞ்சம் வெட்கமாகக்கூட இருக்கும். இப்போது உங்களிடம் நான் என்னையே இப்படி அறிமுகம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது...'' என்று சிறிது அலுப்புடன் சொன்னேன்.

திருமதி பண்டாரநாயகா அசையாமல் உட்கார்ந்திருந்தார். அவருடைய முகம் கல்லில் செதுக்கியதுபோல இருந்தது. தன் உணர்ச்சிகள் எதையுமே அவர் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

''அம்மணி! இனிமேல் உங்களிடம் நான் கேள்விகள் கேட்பதாக இல்லை. கேட்டாலும் உங்களிடமிருந்து பதில்கள் ஏதும் வராது. எனக்குத் தெரியும். ஆனுலும் உங்களிடம் சில விஷயங்களை எடுத்துச் சொல்லிவிட விரும்பு கிறேன். நீங்கள் அதை ஒரு முறையீடாக எடுத்துக் கொண்டாலும் பரவாயில்லை'' என்றேன்.

'என்ன சொல்லப் போகிறீர்கள்...?' என்பது போலப் பார்த்தார் திருமதி பண்டாரநாயகா.

''இந்த நாட்டில் யாரோ என்னை 'ப்ரெயின்-வாஷ்' பண்ணிவிட்டதாகச் சொன்னீர்களே...? அப்படி யாரும் செய்துவிடவில்லை. நான் அவ்வளவு சீக்கிரம் யார் வசத்துக்கும் ஆளாகிறவனும் அல்ல. தமிழ்நாட்டில் அண்ணு முதலமைச்சராக இருந்தபோது, அமெரிக்காவுக்குப் போய்விட்டு, சிங்கப்பூர் வழியாகத் தமிழ்நாட்டுக்குத் திரும்பி வந்தார். அப்போது சிங்கப்பூரில் உள்ள தமிழர்கள் அவரைச் சந்தித்தார்கள். அவர் களிடம் அண்ணு என்ன சொன்னுர் தெரியுமா...? 'நீங்கள் தமிழராக இருக்கலாம்; ஆனுல், சிங்கப்பூர்க்காரர்கள் என்பதுதான் முதல். அப்புறம் தான் மற்றது. கலாசார ரீதியாகத் தமிழர் ஆனுலும், குடிமகன் என்ற முறையில் சிங்கப்பூர்க்காரர்தான். அதைத்தான் நீங்கள் முதன்மையாகக் கருதவேண்டும். அந்த நாட்டு மண்ணின் பயிராக வாழ வேண்டும்' என்று சொன்னுர். அதுதான் தமிழர்களின் பண்பாடு. இலங்கையில் உள்ளவர் களிடமும் அடிப்படையாக ஓடும் உணர்ச்சி அதுதான்!''

''ஸோ...'' என்று நிமிர்ந்தார் அவர்.

''நானும் அதையேதான் இலங்கையின் தமிழன்பர்களிடமும் சொன்னேன். ஒரு வெளிநாட்டுக்காரன் என்ற முறையில் நீங்கள் சொல்லியது போல யாரும் என்னை 'ப்ரெயின்-வாஷ்' பண்ணவில்லை, அம்மணி! எங்களைப் புரிந்து கொள்ள முயலுங்கள். எங்கள் கலாசாரத்தைத் தெரிந்து கொள்ள முயலுங்கள். ப்ளீஸ்...'' என்று மன்றாடும் குரலில் சொன்னேன்.

திருமதி பண்டாரநாயகா நாற்காலியின் கைப்பிடியை இறுகப் பிடித்துக் கொண்டார்.

''அம்மணி! நீங்கள் எழுந்திருப்பதற்கு முன் நான் எழுந்துவிடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு, எழுந்து கரங்குவித்தேன். சிரமப்பட்டு ஒரு புன்னகையையும் வரவழைத்துக் கொள்ள முயன்றேன்.

திருமதி பண்டாரநாயகா ஒரு கணம் என்னை உற்றுப் பார்த்தார். அந்த நேர்ப்பார்வையில், 'இப்படித் தெறித்தாற்போலப் பேசிவிட்டீரே...? நான் மட்டும் இப்போது பிரதமமந்திரியாக இருந்தால் உம்மை என்ன செய்திருப்பேன் தெரியுமா...?' என்று சுடச்சுடக் கேட்கும் கேள்வியின் வெம்மை சுட்டது.

நான் எழுந்து வெளியே வந்துவிட்டேன். காரில் திரும்பி வரும்போது என் மனமும் உடலும் பதறிக் கொண்டிருந்தது. ஒன்றுமே பேசத் தோன்றாமல் எல்லாரும் உட்கார்ந்திருந்தோம்.

''எப்படியும் உங்களுக்குத்தான் வெற்றி'' என்றார் சுந்தரம் பிள்ளை திடீரென்று.

''எப்படிச் சொல்கிறீர்...?'' என்று கேட்டேன்.

''எந்தப் பத்திரிகைக்காரரையும் நெருங்க விட்டதில்லை இந்த அம்மணி! விடாப்பிடியாக அவரை எப்படியாவது பார்த்துப் பேட்டி கண்டுவிடுவது என்று நீங்கள் கங்கணம் கட்டிக்கொண்டு விட்டீர்கள். கடைசியில் ஒரு வழியாகப் பார்த்துப் பேட்டி கண்டு முடித்து விட்டீர்கள். இது வெற்றி இல்லாமல் வேறே என்ன...?'' என்றார் சுந்தரம்.

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது'' என்றேன் நான் ஒரு சொற்பத் திருப்தியோடு.



இசுருமுனியாவிலுள்ள காதலர் சிற்பங்கள்.

ஹூஸன் என்னிடம், 'சுதந்திரக் காற்றைக் கொஞ்சம் தாராளமாக இழுத்து விடுங்கள்' என்று சொன்னது, என்னை அந்த நாட்டின் கெடுபிடியான நிலையைப் பற்றிச் சிந்திக்க வைத்தது. அதைப் பற்றிச் சொல்லப்போய் திருமதி பண்டாரநாயகாவின் பேட்டி முந்திக் கொண்டு விட்டது! என்னுடைய பயணக் கட்டுரையை இப்போது வழக்கம்போல முறைப்படி தொடருகிறேன்...

'லங்கா ஒபிராய்' ஒட்டலில் அமர்ந்திருந்தோம். எங்கெங்கே போவது? என்னென்ன விஷயங்களைச் சேகரிப்பது.? இலங்கையை எப்படிப் பார்ப்பது? என்பது பற்றியெல்லாம் திட்டம் போட்டுக் கொண்டிருந்தோம்.

தமிழ் அன்பர்கள் பலரும் சுற்றி உட்கார்ந்து பேசத் தொடங்கினர்கள்.

''முதலில் ஒருவிஷயம் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறது. ஆனல் கேட்கவும் சிறிது தயக்கமாக இருக்கிறது'' என்று கொஞ்சம் சங்கடத்துடன் சொன்னேன்.

''தாராளமாகக் கேளுங்கள் சார்...! நீங்கள் என்ன கேட்க விரும்புகிறீர்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடிகிறது'' என்றார் திரு. ரங்கநாதன்.

இலங்கை முழுவதையும் எனக்குச் சுற்றிக் காட்டியவர் ரங்கநாதன்தான்.

''1977-ம் ஆண்டு ஆகஸ்ட் இறுதியில் இலங்கையில் நடந்த கலவரங்களினால் பல தமிழர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். தமிழ்நாட்டில் இதைப்பற்றிப் பல்வேறு செய்திகள் வந்து கொண்டிருந்தன. இத்தகைய ஒரு வகுப்புக் கலவரத்தை நாங்கள் பார்த்ததே இல்லை. இங்கே வரும்போது இந்தக் கலகத்துக்கு என்ன அடிப்படை என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையுடனேயே வந்தேன்'' என்றேன்.

''உங்கள் ஊகம் என்ன...?'' என்று கேட்டார் ரங்கநாதன்.

''இலங்கை வாழ் தமிழர்களுக்கும் - சிங்களவர்களுக்கும் ஏதாவது ஒரு 'இண்டலக்சுவல்' போட்டி இருக்கலாமோ...? அவர்களுடைய ஆத்திரத்தை அப்படி ஏதாவது ஒரு சிக்கல் தூண்டி விட்டிருக்குமோ?'' என்று கொஞ்சம் மெதுவாகவே கேட்டேன்.

''இதில் சம்பந்தப்பட்டிருப்பது ஒரு சில அடிப்படைப் பிரச்சினைகள். சாதாரணமாக வாழ்க்கைக்குத் தேவையான சில ஜீவாதார உரிமைகள். அதுபோகட்டும். ஆனால், இந்தத் தடவை நடந்த நிகழ்ச்சிகளுக்குக் காரணம் நீங்கள் நினைப்பதோ, நான் இப்போது குறிப்பிடுவதோ அல்ல. வகுப்புவாதிகளான சில விஷமிகளின் கீழ்த்தரமான தாக்குதல்கள்தான்'' என்று கூறி நிறுத்தினார் ரங்கநாதன்.

''திடீரென்று இப்படி வெடிப்பானேன்...?'' என்றேன் நான்.

''தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து இது ஏற்பட்டிருக்கிறது. தேர்தலில் சிரிமாவோ பண்டாரநாயகாவின் கட்சி தோற்றுப் போனதற்குத் தமிழர்கள்தான் காரணம் என்று அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நினைக்கிறார்கள். சிரிமாவோவின் ஆட்கள் போலீஸிலும் இராணுவத்திலும் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த தைரியத்தில் குண்டர்கள் செய்த வேலைதான் இது!'' என்றார் திரு. ரங்கநாதன்.

''சிங்களவர்களுக்குத் தமிழர்கள் மீது பகை இருந்ததோ...?'' என்று கேட்டேன்.

''எல்லாருமே அப்படியில்லை. இன்னும் இலங்கையில் தமிழர்கள் பலருக்குச் சிங்களவர்கள் நெருங்கிய நண்பர்களாக இருப்பதைக் காணலாம். கொழும்பிலுள்ள பலரும் தங்கள் வீட்டில் தமிழ் மக்களையே குடிவைக்க விரும்புகிறார்கள். அவர்களுக்கிடையே பகை உணர்ச்சி இல்லை என்பது மட்டும் அல்லாமல்...''—அவர் கூறி முடிப்பதற்குள்,

''பின்னே வேறு என்ன...?'' என்றேன் ஆவலோடு.

''ஆழ்ந்த மனிதாபிமானமும் இருக்கிறது. இந்தக் கலவரத்தில் எவ்வளவோ தமிழர்கள் சிங்களவர்கள் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டுக் காப்பாற்றப் பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு தந்து போற்றியிருக்கிறார்கள். வீட்டில் அகப்பட்டுக் கொண்டு வெளியே வரமுடியாமல் பயந்து கொண்டிருந்த தமிழர்கள் பலருக்கு, சிங்கள நண்பர்கள் சாப்பாட்டுக்கு தேவையான சாமான்களைக் கடையிலிருந்து வாங்கிக் கொண்டு வந்து கொடுத திருக்கிறார்கள்'' என்றார் ரங்கநாதன் உணர்ச்சி மிகுந்த குரலில்.

நான் ஆவல் மிகுந்தவனாய், ''அப்படியா? நான் சிங்களவர் குடும்பம் ஒன்றைப் பார்க்க வேண்டுமே...!'' என்றேன் ரங்கநாதனிடம்.

''புறப்படுங்கள்'' என்ருர் ரங்கநாதன்.

நண்பர் ரங்கநாதனுடன் பாமன கடையில் வசிக்கும் ஒரு சிங்களப் பெண்மணியின் வீட்டிற்குச் சென்றிருந்தேன்.

உண்மையில் அந்த ரிசப்ஷன் அறை, சுவர் அலங்காரம், படங்கள், சற்றுத் தள்ளினற்போல பூஜை அறை - எல்லாமே எனக்கு சென்னையில் ஒரு நடுத்தரக் குடும்பத்தின் வீட்டையே ஞாபகப் படுத்தின.

''மிஸஸ் சௌந்தநாயக 'சிலோன் யூனிவர்ஸிடியில் கணித பாடம் போதிக்கும் லெக்சரராக வேலை பார்க்கிருர். அவர் கணவர் டிஸ்டில்லரி கார்ப்பரேஷனில் ஆபீசராக இருக்கிருர். ஒரு 'ஐடியல்' நடுத்தரக் குடும்பத் தைச் சேர்ந்தவர்கள் இவர்கள்'' என்ருர் ரங்கநாதன். நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே மிஸஸ் சௌந்தநாயக அங்கு வந்துவிட்டார்.

''வணக்கம்! நான் தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கிறேன். ஒரு பத்திரிகை ஆசிரியராகப் பணி புரிந்து கொண்டிருக்கிறேன். உங்கள் பூஜை அறையைப் பார்த்ததும் எனக்குத் தமிழ்நாடுதான் ஞாபகத்துக்கு வந்தது'' என்றேன்.

''உண்மைதான். அவர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர். பூஜை பிரார்த் தனை எல்லாம் உண்டு.''

''அப்படியானல் நீங்கள் வேறு மதத்தவரா..?'' என்று கேட்டேன்.

''ஆமாம். நான் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவள். ஆனல், வீட்டில் இரண்டு மதங்களும் உண்டு. அவர் கோயிலுக்குப் போவதில் எனக்கு ஆட் சேபணை இல்லை; நான் சர்ச்சுக்குப் போவதை அவர் தடுப்பதில்லை. குழந்தைகள் இரண்டு இடங்களுக்கும் போகிருர்கள் — இரட்டைப் பண்டிகைகளாகக் கொண்டாடுகிருர்கள்'' என்று கூறிச் சிரித்தார்.

''வேடிக்கையாக இருக்கிறதே...! குழந்தைகள் எந்த மதத்தைச் சேர்ந் தவர்களாக இருப்பார்கள்?'' என்று கேட்டேன்.

''அதைக் குழந்தைகளுக்கே விட்டுவிட்டோம். அவர்கள் எப்படி இருக்க விரும்புகிருர்களோ அப்படியே இருக்கட்டும். வளர்ந்தால் புரிந்து கொள் வார்கள்'' என்ருர்.

''இப்படிப்பட்ட கலப்பு மணங்கள் இலங்கையில் நிறைய உண்டா..?'' என்று கேட்டேன்.

''ரொம்ப அபூர்வம். படித்தவர்களிடையே ஓரளவு இருக்கிறது. அவ்வளவுதான்.''

''சிங்களவர்களிடம் ஜாதிப்பற்று அதிகமாக இருக்கிறதோ...?''

''உண்டு. குறிப்பாக சமூகத்தில் மேல்மட்ட நிலையில் இருப்பவர்கள் இதில் மிகவும் கருத்தாக இருக்கிருர்கள். லேசில் விட்டுக் கொடுக்க மாட் டார்கள். கீழ்மட்ட நிலையில் இருப்பவர்கள் இதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை'' என்று விளக்கினர்.

''சிங்களவர்களில் எந்த மதத்தினர் அதிகமாக இருப்பார்களென்று சொல்லுகிறீர்கள்...?'' என்று கேட்டேன்.

''சிங்களவர்களில் கிறிஸ்துவர்கள் உண்டு; சிங்களவர்களில் பௌத் தர்கள் அதிகம்; ஆனல் சிங்களவர்களில் இந்துக்கள் இல்லை!'' என்ருர் புன்னகையோடு.

''ஏன் அப்படி...?''

''இந்து தெய்வங்களை பௌத்தர்கள் பலரும் வணங்குகிருர்கள். இந்துமதப் பழக்க வழக்கங்கள் 'அடிஷனலாக' இருக்கின்றன. இந்த வீட்டில்கூட நாங்கள் பூஜை பிரார்த்தனை எல்லாம் செய்கிறோம். சமையல் முடிந்த பிறகு சுவாமிக்கு நைவேத்தியமாகக் கொஞ்சம் கொடுப்பதும் உண்டு'' என்ருர்.

''அப்படியா!'' என்று சற்று அதிசயப்பட்ட நான், ''தங்கள் வீட்டில் சமையல் செய்ய ஆள் வைத்திருக்கிறீர்களா..?'' என்று கேட்டேன்.

''வைத்திருக்கிறேன். ஏனென்றால், நானும் வேலைக்குப் போகிறேன்.''

''எதற்காக வேலைக்குப் போகிறீர்கள்...?''

''படித்ததற்கு ஒரு உபயோகமான காரியம் செய்ய வேண்டாமா..? தவிர, இரண்டுபேரும் சம்பாதித்தால்தான் குடித்தனம் செய்யப்போது கிறது'' என்றார் மிஸஸ் சௌந்தநாயக. 'சரிதான், இங்கேயும் ஒரு தமிழ் நாட்டு நடுத்தரக் குடும்பத்தின் நிலைமைதானா?' என்று எண்ணிக் கொண்டேன்.

''உங்களுக்கு எப்படிப் பொழுது போகிறது...?''

''ஏன்? வேலை இருக்கிறது. மற்ற நேரங்களில் குழந்தைகளுடன் பொழுது போய்விடுகிறது. எப்போதாவது சிங்கள சினிமா, டிராமாவுக்குப் போவேன். மாலினி பொன்சேகாவின் நடிப்பு எனக்குப் பிடிக்கும். ஜோ அபயவிக்ரமா ரொம்ப நல்ல நடிகர்.''

''இந்தியப் படங்களையும் பார்ப்பீர்களோ..?'' என்று ஆவலோடு கேட்டேன்.

''சமீபத்தில் 'அபிமான்' பார்த்தேன். ஜெயபாதுரி ரொம்ப இயற்கையாக நடித்திருக்கிறார். பாட்டுக்கள் ரொம்ப இனிமையாக இருந்தன'' என்று ஒரு 'டியூனை' நினைவுபடுத்திக் கொண்டார்.

''தமிழ்ப்படங்கள் பார்ப்பதுண்டோ..?'' என்றேன்.

''ஊஹூம்... எனக்குத் தமிழ் தெரியாது. போய் என்ன செய்வது..?'' என்றார்.

''சுற்றிலும் இவ்வளவு தமிழர்கள் இருக்கிறார்களே? நீங்கள் தமிழ் கற்றுக் கொள்ளக்கூடாதோ...?''

''ஆசைதான். நேரம் இல்லையே..? தமிழ்பேச முடியாதே தவிர நிறையத் தமிழ் நண்பர்கள் உண்டு... மிஸஸ் திருச்செல்வம் எங்கள் குடும்ப நண்பர்.''

''இங்கே நிறைய தமிழர்கள் இருக்கிறார்களோ..?'' என்று கேட்டேன்.

''நிறையப் பேர் இருக்கிறார்கள். இந்த இடத்துக்கு வெள்ளவத்தை என்று பெயர். இது ஒரு குட்டி யாழ்ப்பாணம்!'' என்று சிரித்தார் அவர்.

''தமிழர்கள் உங்களுடன் ஒற்றுமையாக இருக்கிறார்களோ..?'' என்று கேட்டேன்.

''ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? சமீபத்தில் நடந்த கலவரத்தின் போதுகூட நான் அவர்களுக்கு உதவியாக இருந்தேனே... வெளியே போய் அவர்களுக்கு வேண்டிய மளிகை சாமான்களெல்லாம்கூட வாங்கிக் கொடுத்தேன். என்னுடைய வீட்டில் குடி இருப்பவர்கள்கூடத் தமிழர்கள்தாம்!''

''வீட்டில் ஒன்றாக இருக்கலாம்; நாட்டில் இருக்கவேண்டுமே..?'' என்று கேட்டு வைத்தேன்.

''ஏன்? தமிழ் ஈழம் வேண்டும் என்று கேட்பதைக் குறிப்பிடுகிறீர்களா? எனக்கு என்னவோ அந்தக் கோரிக்கை சரியாகப் படவில்லை. ஏற்கெனவே இது சின்னநாடு. இன்னும் பிரிவினை செய்தால் மேலும் சிதறிப் போய்விடும். ஒன்றாக இருந்து ஒற்றுமையாக வாழ முடியாதா என்ன..?'' என்று கேட்டார்.

''பிரிவினை வராது என்று சொல்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

''வரவேண்டாம் என்றுதான் ஆசைப்படுகிறேன். வந்தால் பெரிய கலகம் குழப்பத்துடன்தான் வரும். அது அவசியந்தானா? மேலும், நிறையத் தமிழர்கள் யாழ்ப்பாணத்துக்கு வெளியே வசிக்கிறார்கள். அவர்கள் அனை

வரும் யாழ்ப்பாணத்தில் குடியேறி அந்தச் சூழ்நிலைக்கு ஒத்துப் போக முடியாது'' என்றார் மிஸஸ் சௌந்தநாயக.

''இந்தியாவிலிருந்து முஸ்லீம் சகோதரர்கள் பிரிந்து போய் பாகிஸ்தான் அமைக்கவில்லையா..? அங்கே அவர்கள் அமைதியாக வாழவில்லையா..? அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்...?''

''பங்களாதேஷில் என்ன ஆயிற்று...? அதற்குள் மறந்து விட்டீர்களா..?'' என்று என்னை மடக்கினார் மிஸஸ் சௌந்தநாயக. அவருடைய அறிவுக்கூர்மை என்னை வியக்க வைத்தது.

''மிஸஸ் பண்டாரநாயகா பதவியிலிருந்து விலக நேர்ந்தது பற்றி என்ன நினைக்கிறீர்கள்...?'' என்று கேட்டேன். ஒரு பெண் பிரதமர் பதவியை விட்டு விலகியதைப் பற்றி ஒரு சிங்களப் பெண்மணி என்ன நினைக்கிறார் என்று தெரிந்து கொள்ள ஆவலாக இருந்தது.

''அவருடைய பாலிஸி எல்லாம் சரி என்று நான் சொல்லமாட்டேன். ஆனால், அவருடைய தோல்விக்கு அது மட்டும் காரணமல்ல...''

''பின்னே...?'' என்று கேட்டேன் ஒரு துடிப்புடன்.

''தன்னுடைய மகன் அனுராவுக்கு அவர் அளவுக்கு அதிகமாகவே இடம் கொடுத்துவிட்டார். தனக்கு அடுத்த வாரிசாக அனுரா பிரதமராக வர வேண்டும் என்று நினைத்து—அதற்காகவே திட்டம் போடவும் ஆரம்பித்து விட்டார்.''

என்னையறியாமல் எனக்கு நம் நாட்டின் நிலை ஞாபகத்துக்கு வந்தது. ஓர் இந்தியப் பெண்மணியின் அங்கலாய்ப்பையே அந்தக் குரலில் கேட்பது போல இருந்தது.

அதன்பிறகு, பொதுவாகச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, அவரிடம் விடைபெற்றுக் கொண்டேன்.

அங்கிருந்து நேராக நண்பர் பேபியைப் பார்க்கக் கிளம்பினோம். அருமையான சிலோன் தேநீர் அங்கே எங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தது. அதை ஆவலோடு எதிர்பார்த்தபடி நாங்கள் போனோம். ஆனால் எனக்கு எதிர்பாராமல் நேர்ந்த சந்திப்பு ஷண்முகநாதனைப் பார்த்ததுதான்.

''ஷண்முகநாதன் ஒரு இன்ஷ்யூரன்ஸ் ஆர்கனைஸராகப் பணி புரிகிறார்'' என்று அறிமுகம் செய்துவைத்தார் பேபி.

''எங்கே வசிக்கிறீர்கள்..?'' என்று கேட்டேன்.

''யாழ்ப்பாணத்தில் இருக்கிறேன். உடம்பு அங்கே இருந்தாலும் உள்ளம் தமிழ்நாட்டில்தான். நம் தமிழ் மக்களுடன்தான்...'' என்றார்.

அந்தப் பேச்சைக் கேட்கத் தென்றல் வீசியது போல இருந்தது. ''எப்படித் தொடர்பு கொள்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''திருச்சி, சென்னை வானொலி நிலையங்கள்தான் நான் கேட்பது. தமிழில் செய்திகள், தமிழில் நாடகங்கள், தமிழில் இசை, தமிழில் சினிமாப்பாட்டு'' என்று அடுக்கினார் ஷண்முகநாதன்.

''பேஷ்.. பேஷ்... தமிழ்நாட்டில் உள்ளவர்கள் பெரும்பாலும் ரேடியோ சிலோன்தான் வைக்கிறார்கள். விளம்பரங்களுக்கு நடு நடுவே வரும் அந்த சினிமாப்பாட்டுக்கள்தான் அங்கே எடுபடுகிறது. என்னுடைய பத்திரிகைக்கு விளம்பரம் செய்யும்போதுகூட என்னுடன் பணிபுரியும் கிருஷ்ணாஜிசொன்னார்: ''ஸார், ரேடியோ சிலோனில் விளம்பரம் செய்யலாம். தமிழ்நாடு முழுவதும் லட்சக்கணக்கில் கேட்பார்கள்'' என்று. அங்கே ரேடியோ சிலோன் மோகம்; உங்களுக்கு திருச்சி ரேடியோ மோகம். நல்ல வேடிக்கை!'' என்று சிரித்தேன்.

''நீங்கள் சென்னையில் இருக்கிறீர்கள். திருச்சியிலிருந்து சற்று தூரம்

நாங்கள் பக்கத்தில் இருக்கிறோம். எங்களுக்குத் திருச்சியே தெளிவாகக் கேட்கும்'' என்றார் அவர்.

''தமிழ்நாடு, தமிழ்நாடு என்று இவ்வளவு ஆர்வத்துடன் சொல்கிறீர்களே? எப்போது தமிழ்நாட்டுக்கு வரப்போகிறீர்கள்...?'' என்று கேட்டேன்.

''வரவேணும்... இந்தியாவுக்குப் போய் ரொம்ப நாளாயிற்று. அதுவும் சீக்கிரத்திலேயே தமிழ்நாட்டுக்கு வரவேணும். அவசரமும்கூட!'' என்றார் ஷண்முகநாதன்.

''அவசியம் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால், என்ன அவசரம் சார்...?'' என்று ஆர்வம் ததும்பக் கேட்டேன்.

''சென்னைக்கு வந்து காஞ்சிபுரம் போகவேண்டும். அங்கே காஞ்சிப் பெரியவர்களைத் தரிசிக்க வேண்டும். பழுத்த ஞானப்பழம், மகான். இப்போதெல்லாம் பேசுவதைக்கூட நிறுத்தி விட்டாராம்! கண்குளிரத் தரிசனம் செய்துவிட வேண்டும். அந்த ஆசையினால்தான் அவசரப்படுகிறேன்!'' என்றார் ஷண்முகநாதன்.

என் மெய் சிலிர்த்தது.



# 4

நீர்கொழும்பு வீதியில் ஒரு காட்சி.

"இலங்கைப் பயணத்தில் நீங்கள் முதலில் பார்க்கவேண்டிய இடம் யாழ்ப்பாணம் என்று எனக்குத் தோன்றுகிறது. அங்கே போவதற்குப் பிளேன்-கார் இரண்டில் எது தேவலை...?" என்று கேட்டார் ரங்கநாதன்.

"சந்தேகமில்லாமல் கார்தான்!"

வெளிநாட்டுப் பயணங்களில் நான் பெரும்பாலும் கார் மூலம்தான் பிரயாணம் செய்வது வழக்கம். அப்போதுதான் கிராமப்பகுதிகளைப் பார்க்க முடியும். அபூர்வமான காட்சிகளைக் கண்டு ரசிக்கலாம். மக்களை அவர்கள் இயல்பாக வாழும் சூழ்நிலையில் சந்தித்து உரையாடலாம். அப்புறம்...'

"போதும்சார்! நீங்கள் பிரயாணம் செய்து பார்த்தபின் சொல்லுங்கள்" என்று சிரித்து மழுப்பினர் ரங்கநாதன்.

ரங்கநாதன் சொன்னது உண்மை. நன்முக அனுபவித்த பிறகே அது முழு உண்மை என்று தெரிந்தது. "விவசாயம் செய்வதற்கு நல்ல இடம் யாழ்ப்பாணம் ரோட்டு..." என்று சிரித்திரன் ஆசிரியர் போட்டிருந்த



அட்டைப்படத் துணுக்கு ரொம்பச் சரியானதுதான்! ஒரு படி மேலேயே சொல்லலாம்; அது யாழ்ப்பாண ரோட்டுக்கு மட்டும் பொருத்தமானது அல்ல. இலங்கையின் சாலைகள் எல்லாமே, பெரிய நகரம் தவிர ஒரே மாதிரி யானவைதான்; ஒரு 'மாதிரி'யான சாலைகள்தாம்!

''-பயணக்கட்டுரை தொடங்கி ஆறுவாரங்கள் ஆகின்றன! என்ன இன்னும் சாப்பாட்டைப் பற்றி நீங்கள் ஆரம்பிக்கவே இல்லையே? என்று பார்த்தோம். ஒரு வேளை இலங்கையில் சாப்பாடு சௌகரியமாக அமைந்து விட்டதோ என்று ஒரு சந்தேகமும் ஏற்பட்டது எமக்கு!'' என்று வாசகர்கள் சொல்வது என் காதில் விழுகிறது.

சாப்பாட்டைப்பற்றி எழுத்தாளர் சிலர் குறைவாக எழுதினாலும் அது முக்கியமானது என்றே நான் கருதுகிறேன்.

இலங்கை பக்கத்து நாடுதானே என்று நம் ஊர் சாப்பாட்டை எதிர் பார்த்துக் கொண்டு அங்கே போக வேண்டாம். கொழும்பு நகர் முழுவதிலும் சைவ உணவு கிடைப்பது ஒரு சில ஒட்டல்களில்தான். அங்கேயும் நமக்குக் கிடைக்கிற சாப்பாட்டையும், சிற்றுண்டியையும் பார்த்தால் நமக்கு சென்னை 'உட்லண்ட்ஸும், உடுப்பி ஹோமும்'தான் ஞாபகத்துக்கு வருகின்றன... காரணம்? இந்த ருசியை அங்கே அனுபவிக்க முடியாது என்பதுதான்!

சாலை ஓரம் இருந்த ஒரு கடையில் வண்டி நின்றது. அது ஒரு சிறு கடை. டேபிள் முன் வந்து அமர்ந்து, சிற்றுண்டியைப் பார்த்து, ''என்ன இது?'' என்று கேட்டேன்.

''ஸ்டிரிங்ஸ்!'' என்றார் ரங்கநாதன்.

''என்ன இது, ஸ்டிரிங்க்ஸ்...?'' என்று ரங்கநாதனை விசாரித்தேன்.

''இடியாப்பம்!'' என்று முகமலர்ந்து போனார் சுந்தரம்.

''இதுதான் யாழ்ப்பாணப் பகுதியில் வழக்கமான காலைச் சிற்றுண்டி களில் ஒன்று'' என்றார் ரங்கநாதன்.

''பூப்போல இட்லி – மிளகாய்ப்பொடி, சூடான வடை சாம்பார் இப்படி எதுவும் கிடைக்காதோ...?'' என்று கேட்டேன்.

''இட்லி என்பது வீடுகளில் வழக்கமான சிற்றுண்டி அல்ல; விசேஷ மான சிற்றுண்டியாகவே செய்வார்கள். 'நாளைக்குக்காலையில் இட்லி போட் டிருக்கிறேன். எங்கேயாவது வெளியே போய்விடாதீர்கள்' என்று முதல் நாள் இரவே சொல்வதுகூட இங்கு உண்டு!'' என்றார் ரங்கநாதன்.

அதைக் கேட்ட எனக்கு அதிசயமாக இருந்தது. யாழ்ப்பாணப்பகுதியில் காலைச் சிற்றுண்டியைப்போல், சாப்பாடும் சற்று மாறுபட்டதுதான் ருசியில்! தேங்காய் எண்ணெய் இல்லாத பண்டமே கிடையாது.

முதல்நாள் இரவு, கிரீன் லாண்ட்ஸ் ஒட்டலில் நாங்கள் சாப்பிட உட் கார்ந்தபோது, சுந்தரம் இலையைப் பார்த்துத் திருதிருவென்று விழிக்க ஆரம் பித்தார். அதற்குக் காரணம் இலையில் இருந்த சாதம் அவரைப் பார்த்து கொட்டை கொட்டையாக விழித்துக் கொண்டிருந்ததுதான்! கோயம்புத்தூர் பகுதியில் கிராமங்களில் கிடைக்கும் புழுங்கலரிசிச் சாதத்தைவிட இன்னும் ஒரு மாற்று கூடுதலான காவிநிறம். அதற்குமேல் அதை மூழ்க அடிக்கும் காய்கறிக் கூட்டு!

ஆமாம். சாதம், கறி, கூட்டு, பச்சடி, சாம்பார் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்தே சாப்பிட்டார்கள் அவர்கள்!

அதே கிரீன்லாண்ட்ஸ் ஒட்டலில் உட்கார்ந்து தோசைக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு ஆவலோடு காத்திருந்த ஞாபகமும் எனக்கு வந்தது. தோசை வந்து சேர்ந்ததும் ஏமாற்றமாக இருந்தது. சாம்பார் வந்ததும் இன்னும் பெரிய ஏமாற்றமாக இருந்தது.

''நீங்கள் தவிப்பது எனக்குப் புரிகிறது சார்!'' என்ருர் பக்கத்தில் இருந்தவர்.

''எப்படித் தெரிந்து கொண்டீர்கள்...?'' என்று கேட்டேன்.

''நான் தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்தவன். அந்த முறுகலான தோசையும், அந்த சுவையான வெங்காய சாம்பாரும் இங்கே கிடைக்காது'' என்ருர் அவர்.

''ஏன் சுவாமி..?'' என்று கேட்டேன் ஓர் ஏக்கத்தோடு.

''அதற்கு முக்கியமாகத் தேவைப்படும் பருப்பு வகைகள் இங்கே கிடைப்பதில்லே. அதனுல் இருப்பதை வைத்துக் கொண்டு 'அட்ஜஸ்ட்' பண்ணிக் கொண்டு போக வேண்டி இருக்கிறது!'' என்று சொல்லிவிட்டு ''நீங்கள் பிரதம மந்திரியைப் பார்க்கப் போவதாகப் பத்திரிகைகளில் படித்தேன்'' என்று நிறுத்தினுர்.

''ஆமாம்., ஏன்...?'' என்றேன்.

''இந்தப் பருப்பு விஷயம்தான்! பிரதமரிடம் சொல்லி எப்படியாவது இந்தப் பருப்பு வகைகள் கிடைக்காத சிரமத்தை அவர் உணரும்படி செய்யுங்கள். இந்தியாவிலிருந்து இதை 'இம்போர்ட்' பண்ண ஏற்பாடு செய்யச் சொல்லுங்கள். ரொம்பப் புண்ணியம் உண்டு'' என்ருர் அவர்.

பிரதமரிடம் இப்படி ஒரு விநேதமான கோரிக்கையை நான் சமர்ப்பிக்க வேண்டியிருந்ததை எண்ணி எனக்குள்ளே சிரித்துக் கொண்டேன்.

இலங்கையில் உள்ள தமிழர்கள் பேசும் மொழியைக் கண்ணை மூடிக் கொண்டு கேட்டால், சங்கீதம் கேட்பதைப் போல அனுபவிக்கலாம். கேரளத்தில் நாம் கேட்கும் மலையாள மொழி உரையாடலைப் போல அதில் ஓர் இனிமை கொஞ்சுகிறது.

''உரையாடல் மட்டும் இல்லே; உடையிலும் அப்படித்தான்'' என்ருர் ரங்கநாதன், நான் அதைக் குறிப்பிட்டதும்.

''எப்படி...?'' என்று கேட்டேன்.

''கேரளத்தைப் போல இங்கேயும் பெண்கள் தனியாக மார்புக்கச்சு அணியும் வழக்கம் இருந்தது. சமீப காலம் வரை பணிப்பெண்கள் பலர் மார்பு உடை அணியாமலே இருந்ததும் உண்டு. காதில் தோடு போட்டுக் கொள்ளும் பழக்கத்திலும் அதே ஒற்றுமை உண்டு'' என்ருர் ரங்கநாதன்.

''உடை அப்படி என்ருல் உணவு...?'' என்று கேட்டேன்.

''சாப்பாடு விஷயத்திலும்தான். இங்கேயும் தேங்காய் அதிகமாகச் சேர்த்துச் சமைக்கும் வழக்கம் உண்டு. சமையல் அனேகமாகத் தேங்காய் எண்ணெயில்தான். அரிசிக் கஞ்சியைத் தனியாக எடுத்து 'கஞ்சி வெள்ளம்' என்று கேரளாவில் சாப்பிடுவார்களே...'' என்று ரங்கநாதன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

''அதைப்போல இங்கேயும் சாப்பிடுவது உண்டு..'' என்று முடித்தார் சுந்தரம்!

யாழ்ப்பாணத்தில் இருக்கும்போது கேரளத்தில் இருப்பதைப் போன்ற அனுபவம் எனக்கும் ஏற்பட்டது. அந்த ஊர் ரேடியோ நாடகத்தை கண்ணை மூடிக்கொண்டு கேட்கும் போது, 'இது திருவனந்தபுரம் வானெலி நிலையமாக இருக்குமோ..?' என்று எண்ணவும் தோன்றுகிறது.

எங்கள் கார், யாழ்ப்பாணத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது. ''முதலில் எங்கே நிறுத்தலாம்.'' என்று கேட்டேன் ரங்கநாதனை.

''முன்னேஸ்வரன் கோயிலுக்குப் போகலாம். அது ஒரு முக்கியமான க்ஷேத்திரம். கோயில் மட்டும் அல்ல. குருக்களும் ரொம்பப் பிரபலமானவர்'' என்ருர் ரங்கநாதன்.

''என்ன, நிறையப் படித்தவரோ...?'' என்று கேட்டேன்.

''படித்தவர் மட்டும் அல்ல; ஜோசியம் பார்த்துப் பலனும் சொல்லக் கூடியவர். திருமதி பண்டாரநாயகாவுக்கு ஜோசியம் பார்த்து, 'தேர்தல் வையுங்கள்... நீங்கள் நிச்சயமாக ஜெயித்துவிடுவீர்கள்' என்று சொன்னவரும் அவரேதான்!'' என்று சிரித்தார் ரங்கநாதன்.

''ஜோசியம் கேட்டுத் தேர்தலுக்கு நிற்கும் பிரதமர்தான இங்கேயும்! இப்படி ஓர் ஒற்றுமையா..? நல்ல வேடிக்கை!'' என்று எனக்குள்ளே எண்ணி வியந்து கொண்டேன்! நான்.

''இலங்கையில் நிறைய சிவன் கோயில்கள் இருக்கின்றன'' என்ருர் ரங்கநாதன்.

''சிவன் கோயில்கள் இவ்வளவு அதிகமாக உருவானதற்கு என்ன காரணம்..?'' என்று கேட்டேன்.

''ராஜராஜசோழன் இலங்கைமீது படையெடுத்து வெற்றி கொண்ட தாகச் சரித்திரம் சொல்கிறது. அனுராதபுரம் என்ற தலைநகரை அழித்து, பொலநறுவையில் புதிய தலைநகரையும் ராஜராஜசோழன் உருவாக்கி இருக்கிருர். அந்தப் புதிய தலைநகருக்கு ஜனநாதமங்கலம் என்று தனது 'ஜனநாதன்' என்ற பட்டப் பெயரைப் பொருத்தி பெயர் சூட்டியதாகவும் சொல்லுகிருர்கள்.''

''தமிழ்நாட்டு ராஜராஜனை, இலங்கை ஜனநாதனுக மாற்றியிருக்கிறது. ஜனநாயகத்துக்கு வெற்றிதான்!'' என்று சொல்லிச் சிரித்தேன் நான்.

'ஜனநாதமங்கலத்தில் சிவன் கோயில் ஒன்றும் கட்டினுர் ராஜராஜன். இலங்கை மக்கள், தஞ்சாவூர் பிருகதீஸ்வரர் கோயிலுக்கு நெல்லும், பொற் காசும், தீபங்கள் ஏற்ற இலுப்பை மரப்பாலும் அனுப்பி வைத்தார்களாம்! ராஜராஜன் பெயரிலும், ராணி வானவன்மாதேவி பெயரிலும் சிவன் கோயில்கள் இங்கே கட்டப்பட்டிருக்கின்றன'' என்ருர் ரங்கநாதன்.

''தேவலையே! தென்னுடுடைய சிவன் என்றுதான் தமிழ் வழக்கு கேள்விப் பட்டிருக்கிறேன். தென்இலங்கை உடைய சிவன் என்பதும் இப்போது புரிகிறது'' என்றேன்.

''இலங்கையில் மற்றவை எப்படியானுலும், நாத்திகம் மட்டும் வெகு குறைவு. சமயப் பற்று ரொம்பத் தீவிரமாக இருக்கும்'' என்ருர் அவர்.

முதலில் மாதம்பையில் உள்ள சிவன் கோயிலின் முன் நின்ருேம். தஞ்சாவூர் மாவட்டத்துக் கோயில் ஒன்றின் வாசலுக்கு வந்து சேர்ந்தது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று மரநிழலில். தேங்காய் வைத்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள்.

''தேங்காய் விற்றுக் கொண்டிருக்கும் பெண்களைப் பார்த்தால் உங் களுக்குக் கேரளம் ஞாபகத்துக்கு வரும்'' என்ருர் ரங்கநாதன்.

''தேங்காய் விற்பனையும் அதைத்தான் ஞாபகப்படுத்துகிறது'' என்றேன் நான். ரங்கநாதன் தேங்காய்களை வாங்கினுர்.

''உன் பெயர் என்னவோ..?'' என்று அந்தப் பெண்ணிடம் கேட்டேன்.

''என் பெயர் கருணுவதி. கடையில் எனக்குத் துணையாக என் பெண் புஷ்பலதா இருந்து உதவி செய்கிருள்'' என்ருள் அந்தப் பெண்.

''ஒரு நாளைக்கு எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை ஆகும்..?'' என்று கேட்டேன்.

''பத்து ரூபாய், பன்னிரண்டு ரூபாய் வரையில் கிடைக்கும். ஆனுல், மழை பெய்தால் வியாபாரம் மந்தம்தான்'' என்ருள் அந்தப் பெண்.

''உன் மகள் ஏன் பள்ளிக்கூடத்துக்குப் போவதில்லை..? ஏன் அவளைப்

படிக்க வைக்கவில்லை..? இலங்கையில் கல்வி இலவசமாயிற்றே...?'' என்றேன்,

''ஐயா! படிப்புத்தான் இலவசம். புத்தகங்கள் சும்மா கிடைப்ப தில்லையே..? பள்ளிக்கூடத்தில் இலவசமாகச் சோறு போடுவதில்லையே..? காசில்லாத எங்களைப் போன்றவர்கள் எப்படிப் படிக்க வைக்க முடியும்?'' என்று கேட்டாள் கருணவதி.

எனக்குத் தலைவர் காமராஜ் இலவசக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தபோது, மதிய உணவு இலவசமாக அளிக்கப்படவேண்டும் என்று வற் புறுத்திச் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. பாமர மக்களின் தவிப்பை ஆழ்ந்து கவனித்துப் புரிந்து கொண்ட, அந்தப் பெருந்தலைவரின் பண்பை நினைத்துப் பார்த்து வியந்து கொண்டேன்.

கொழும்பிலிருந்து ஐம்பது மைல்கள் தொலைவில், சிலாபம் என்ற இடத்தில் முனீசுவரன் கோயில் இருக்கிறது. கோயிலின் அமைப்பு, இயற்கை யான சூழ்நிலை, பக்தர்கள் கூட்டம் எல்லாம் நமக்குத் தஞ்சை மாவட்டத்துக்கு வந்துவிட்டது போலவே ஓர் உணர்வைத் தூண்டுகிறது.

''தமிழ்நாட்டில் சிவனுக்கு நிலம் ,நீர், தீ, காற்று, ஆகாயம் என்று வரிசையாக பஞ்ச பூதங்களுக்குரிய சிவஸ்தலங்கள் இருப்பதைப் போல இங்கேயும் உண்டு. மன்னாரில் திருக்கேதீசுவரம், திருக்கோணமலையில் கோணேசுவரம், யாழ்ப்பாணத்தில் நகுலேசுவரம் — அடுத்தாற்போல வைத்தீசுவரம் - இங்கே முனீசுவரம்'' என்று முடித்தார் ரங்கநாதன்.

''இவைகளும் தமிழ்நாட்டு சிவாலயங்களைப்போலப் பாடல்பெற்ற தலங்களாக இருக்குமோ?'' என்று விசாரித்தேன்.

''ஆமாம்! கோணேசுவரத்தில் சம்பந்தரும், திருக்கேதீசுவரத்தில் சுந்தரரும் பாடியிருக்கிறார்கள்'' என்றார் அவர்.

ஆகம விதிகளின்படி அழகாக அமைந்திருந்தது அந்தத் திருக்கோயில். கால் கழுவிக்கொள்ளத் தீர்த்தமும், வேகமாக சதிர்த்தேங்காய் போடத் தொட்டியும் அமைக்கப்பட்டிருந்த விதம் தமிழ்நாட்டையே நினைவுபடுத்தியது.

''இது முனீசுவரன் கோயில் என்று சொல்லாவிட்டால், சீர்காழிக்குப் பக்கத்தில் இருக்கும் வைத்தீசுவரன் கோயில் என்றுதான் நினைக்கத் தோன்றும்'' என்றார் சுந்தரம்.

''நீங்கள் மணியன்தானே?'' என்றார், எங்கள் அருகில் வந்த ஒரு குருக்கள்.

''தேவலையே...? எப்படிப் புரிந்து கொண்டீர்கள்?'' என்று வியப்போடு கேட்டேன்.

''படங்களில் பார்த்ததுதான்!'' என்று சொல்லிவிட்டுத் தமிழ்நாட்டைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தார். அவருடன் ஆலயத்தில் பூஜை செய்யும் குருக்கள்மார் பலரும் என்னைச் சூழ்ந்து கொண்டனர்.

''கைலாசநாத குருக்கள் எங்கே?'' என்று ஆவலோடு கேட்டேன்.

''அவர் இங்கே இல்லை. யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்'' என்றார்கள்.

''சுவாமியை இங்கே பார்ப்போம்; குருக்களை அங்கே பார்ப்போம்!'' என்றார் ரங்கநாதன்.

முனீசுவரன் கோயிலுக்கு புத்த மதத்தினரும் வந்து போகிறார்கள். சமய எல்லைகளைக் கடந்த ஆலயமாக அது விளங்குகிறது. அங்கே பிரார்த் தனைக்கு வந்து முடி கொடுத்துக் கொண்டிருந்த ஒரு தமிழ்க் குடும்பம் என் கண்ணில் பட்டது. வரிசையாக எல்லாரும் மொட்டை அடித்துக் கொண்டி ருந்தார்கள். குடும்பத்தினர் இடையே பெரியவராக இருந்தவரிடம், ''நீங்கள் எந்த ஊர்?'' என்று விசாரித்தேன்.

''தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். சாத்தன்குளம் என்னுடைய ஊர்'' என்றார் அவர். என்னுடன் வராத தாமரைமணாளனையும், மாயாவையும் நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டேன்! அவர்கள் இருவரும் அசல் திருநெல்வேலிக்காரர்கள். தப்பித்தவறி திருநெல்வேலி மாவட்டத்தினர் யாரையாவது சந்தித்துவிட்டால் உடல் புல்லரித்துப் போய்விடுவார்கள்!

''எப்போது இலங்கைக்கு வந்தீர்கள்?'' என்று கேட்டேன்.

''வந்த கதையை விடுங்கள்! இப்போது திரும்பிக் கொண்டிருக்கிறோம்'' என்றார் அவர் ஒரு சலிப்போடு.

''ஏன் திரும்பிப் போகிறீர்கள்?'' என்று விசாரித்தேன்.

''இங்கே இருந்து அடிபட்டுச் சாக விரும்பவில்லை!'' என்று சொல்லி விட்டுச் சூள் கொட்டினார் அவர். அந்தப் பேச்சைக் கேட்க எனக்கு வேதனையாக இருந்தது.

''முனீசுவரன் கோயிலில் விசேஷமான விழாக்கள் என்னென்ன?'' என்று அர்ச்சகரைக் கேட்டேன்.

''சிவராத்திரி இரவை நான்கு யாமங்களாக (காலங்களாக)ப் பிரித்து ஒவ்வொரு யாமத்திலும் பூஜை நடத்துகிறார்கள். நூற்று எட்டு சங்குகளைக் கொண்ட சங்குபூஜையும் அர்ச்சனைகளும் உண்டு. கடைசிக்கால பூஜையின் இறுதிக்கட்டத்தில், காலைச் சூரியன் கதிர்கள் மூலவர்மீது பட்டு ஒளி வீசுவது விசேஷமான நிகழ்ச்சி'' என்றார்.

தொடர்ந்து, ''கார்த்திகை மாதத்துப் பௌர்ணமியன்று திருக்கார்த்திகைப் பெருவிழா நடக்கும். அப்போது சொக்கப்பனையில் தீப கலசங்கள் அமைப்பதற்கு — பனை ஓலை வெட்டுவதற்கென்றே பனைமரங்களை வளர்த்திருக்கிறார்கள். இந்த இடத்தைப் பனங்குடா என்று அழைக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையில் முக்கியமான பண்டிகை தீபாவளிதான்'' என்றார் அவர் ஒரு புன்னகையோடு.

''உங்களைப் பொறுத்தவரை என்ன...? இந்துக்களுக்கே முக்கியமான பண்டிகை தீபாவளிதான்!'' என்றேன்.

''அதற்காகச் சொல்லவில்லை. அன்று வைகறைப் பொழுதுக்குமுன் நாம் எண்ணெய் நீராடிப் புத்தாடை அணிவதைப்போல, விக்கிரகங்களுக்கும் நல்லெண்ணெய்க் காப்பிட்டு, அபிஷேகங்கள் செய்து புது ஆடைகளால் அலங்காரம் செய்வார்கள். அத்துடன் தேவஸ்தான சிப்பந்திகள் அனைவருக்கும் புது வஸ்திரதானம் உண்டு. அது இந்தக் கோயிலில் பழங்காலந்தொட்டு இருந்து வரும் பழக்கம்'' என்றார் அர்ச்சகர்.

''தமிழ்நாட்டைப்போல், வேண்டுதலை நேர்ந்து கொண்டு வருபவர்கள் உண்டோ?'' என்று கேட்டேன்.

''நிறைய உண்டு. தங்கம், வெள்ளி, போன்றவைகளைக் கொண்டு வந்து காணிக்கைகள் செலுத்துவதுண்டு. சருமவியாதிக்கு இந்தக் கோயில் தூண்டாமணி விளக்கின் எண்ணெயைப் பிரசாதமாகக் கொண்டு செல்வார்கள். மனப்பயம் அகல இங்கே கோயிற் குருக்களைக்கொண்டு மஞ்சள் கயிறு கட்டச் சொல்வதுண்டு. பிள்ளைப்பேற்றை வேண்டித் தென்னம்பிள்ளைகளைக் கொண்டுவந்து கொடுப்பதுகூட உண்டு. இப்படி வேண்டிக் கொண்டு வருபவர்களிடையே சாதி, சமய பேதமே கிடையாது'' என்றார் அவர்.

விவரங்களையெல்லாம் தெரிந்து கொண்டபிறகு, ஆலயத்தைச் சுற்றி வந்தவுடன், மனதுக்கு நிம்மதியாக இருந்தது. அங்கிருந்து புறப்பட மனமில்லாமல்தான் புறப்பட்டோம்.



# 5

புனித அரசமரமும் அதைச் சுற்றித் தங்க வேலியும்.

எங்கள் கார் யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்டது. வழியில் புகழ் பெற்ற அனுராதபுரத்தைப் பார்க்கத் திட்டமிட்டிருந்தோம். ''இலங்கையில் நிறைய தமிழர்களைச் சந்தித்து, அவர்கள் பிரச்சினைகளைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்'' என்றேன் ரங்கநாதனிடம்.

''தமிழர்களைச் சந்திக்க விரும்பினால் யாழ்ப்பாணத் தமிழர்களை மட்டும் பார்த்துப் பிரயோசனம் இல்லை. பல்வேறு பகுதிகளில் உள்ள அனைவரையும் சந்திக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான பிரச்சினை; ஒவ்வொரு பகுதியிலும் அந்தந்தப் பகுதிக்கேற்ற பிரச்சினை'' என்றார் ரங்கநாதன்.

''அப்படி எத்தனை விதமான தமிழர்கள் இருக்கிறார்கள்?'' என்று கேட்டேன்.

''யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர்கள், மலைநாட்டில் வாழும் இந்திய வம்சாவளியினர், கொழும்பில் உள்ள தமிழர், மட்டக்களப்புத் தமிழர்கள் இப்படிப் பலவகையினர் இருக்கிறார்கள்.''



''எல்லாரும் தமிழர்கள்தாமே?'' என்று கேட்டேன்.

''ஆமாம். பல்வேறு பகுதிகளில் பிரிந்திருந்தாலும் தமிழ் இனம் என்ற உணர்ச்சி அவர்களை ஒன்று சேர்க்கிறது. தமிழ் உணர்வு, தமிழ்க் கலாசாரம், தமிழ் இசை, ஈடுபாடு, ரசனை, மொழிப்பற்று எல்லாமே இவர்கள் எல்லாருக்கும் ஒரே மாதிரியானதுதான். ஆனால் இப்படிப் பல பகுதிகளில் உள்ள தமிழர்களில் அதிகமாகத் தமிழர்கள் சேர்ந்து இருப்பது யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பு - திருகோணமலை போன்ற பகுதிகளிலும் தான். அதனால்தான் 'தமிழ் ஈழம்' என்ற தனிநாட்டுக்கு இப் பகுதிகளை ஒட்டி எல்லைக்கோடு வகுத்திருக்கிறார்கள்'' என்றார் ரங்கநாதன்.

''இதோ பாருங்கள்' என்று தமிழர் விடுதலைக்காகப் போராடும் ஒருங்கிணைப்பு 'தமிழ் யுனைடெட் லிபரேஷன் ஃப்ரன்ட்' (Tamil United Liberation Front) வெளியிட்டிருந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை என்னிடம் காட்டினார் ரங்கநாதன். அதில் 'தமிழ் ஈழம்' என்றால் என்னென்ன பகுதிகள் அமைந்தது என்று படம் போட்டு விளக்கமும் தரப்பட்டிருந்தது. 'தமிழ் ஈழத்'தில் குடி இருப்பவர்களுக்குரிய விதிமுறைகளைக்கூடக் கொடுத்திருந்தார்கள்.

யாழ்ப்பாணத்துக்குப் போனபிறகு பலபேரை நான் சந்திக்க நேர்ந்தது. அவர்களிடையே வேகமிக்க தமிழ் இளைஞர்கள் பலரை நான் பார்த்தேன். அவர்களுடைய ஆர்வமும் ஈடுபாடும் எனக்குப் பிரமிப்பை உண்டாக்கிற்று.

அனுராதபுரம் என்ற பழம்பெரும் நகரைப்பற்றி நான் புத்தகங்களில் நிறையப் படித்திருந்தேன். பௌத்தர்கள் அதைத் தங்கள் திருத்தலமாகக் கொண்டு, யாத்திரையாக வந்து தரிசனம் செய்துவிட்டுப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டிருந்தேன்.

''முக்கியமாக அங்கே பார்க்க வேண்டியது என்ன?'' என்று ரங்கநாதனிடம் கேட்டேன்.

''பர்மிய பௌத்தர்கள் அமைத்த ருவன்வலிசாயா டகோபா, மிகப் பழைமையான தூபராம டகோபா, துட்டகைமுனு அரசன் நிறுவிய டகோபா, அபயகிரி டகோபா...'' என்று அடுக்கிக் கொண்டே போனார் ரங்கநாதன்.

''கொஞ்சம் இருங்கள். நீங்கள் சொல்வதென்ன? இது என்ன ஏகப்பட்ட டகோபா?'' என்று கேட்டேன்.

''டகோபா என்பது விஹாரை என்று சொல்வதைப்போலத்தான். புனிதமான இடம் என்பதற்கு அடையாளமாக அதன் முடி ஒரு அலங்காரத்தோடு அமைந்திருக்கும். அனுராதபுரத்தில் நீங்கள் பார்க்க நிறைய டகோபாக்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் உருவங்கள் அமைந்த விஹாரை, போதனை நடக்கும் இடம், பிரார்த்தனை செய்யும் பன்ஸல மண்டபம் எல்லாம் இருக்கும். பக்கத்திலேயே போதி விருட்சமும் இருக்கும்'' என்றார்.

''நாம் பார்க்கப்போவது டகோபாக்கள் மட்டும்தானா?'' என்று கொஞ்சம் ஏமாற்றத்துடன் கேட்டேன்.

''இங்கே மிகப் பழைமையான புத்த பகவானின் பிரார்த்தனை உருவம் இருக்கிறது. சொல்லப்போனால் இந்த நகரமே மிகப் பழைமையானது. சுமார் 600 ஆண்டுகள் இலங்கையின் தலைநகரமாக இது விளங்குகிறது'' என்றார் ரங்கநாதன்.

''அனுராதபுரம் என்ற பெயர் எப்படி வந்தது? சொல்லுங்களேன்...'' என்று கேட்டேன். ''கொஞ்சம் இருங்கள். இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல ஒரு 'கைடை'ப் பிடித்துக்கொண்டு வந்துவிடுகிறேன்'' என்று போய், ஒரு 'கைடு'ம் கையுமாகத் திரும்பி வந்தார் ரங்கநாதன்.

''அனுராதபுரம் என்ற பெயர் 'அனுவ' என்ற சிங்களப் பெயரிலிருந்து வந்ததென்று சொல்வதுண்டு. 'அனுவ' என்றால் தொண்ணூறு என்று அர்த்தம்'' என்றார் 'கைடு.'

''இங்கே தொண்ணூறு அரசர்கள் வழிவழியாக ஆட்சி செய்தார்களாக்கும்...?'' என்றேன்.

''தப்பு! 119 அரசர்கள் இருந்திருக்கிறார்கள்'' என்றார் கைடு.

''அப்படியானால் அந்தப் பெயர்க் காரணமும் தப்புதான்'' என்றேன்.

''ஆமாம்! சிங்களவர் இனத்தையே நிறுவிய விஜயனின் சீடரான அனுராதாவினால் இந்த ஊர் ஸ்தாபிக்கப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். சில சந்ததிகளுக்குப் பிறகு இங்கே அனுராதா என்ற பெயரில் குடியிருந்தபெருமகன் ஒருவருக்கு, நிறைய கிராமங்களை இந்தப் பகுதியில் அரசன் மானியமாகக் கொடுத்தானாம். அதனால் அனுராதபுரம் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் கூறுகிறார்கள். பண்டுகாபய என்ற அரசர்தான் இங்கே இலங்கையின் தலை நகரை அமைத்தது'' என்றார் கைடு.

''அந்த அரசர்தான் இதை இப்படி ஒரு பௌத்த ஸ்தலமாக ஆக்கினாரா?'' என்று கேட்டேன்.

''இல்லை. அவருடைய பேரன் தேவநம்பியதிஸ்ஸ என்பவர் ஆட்சி செய்தபோதுதான், அசோகரின் புத்திரன் மஹிந்த என்ற இளவரசன் பௌத்த சந்நியாசிகளுடன் இங்கே வந்து பௌத்த மதத்தைப் பரப்பினான். அவர்கள் தங்கிய இடமே மிஹிந்தலை என்றும் பெயர் பெற்றது. ஆனால், பௌத்தமதம் செழித்துப் படர்ந்தபோது கொஞ்ச காலத்துக்குள் அதை அடக்கும் அரசாட்சியும் ஏற்பட்டுவிட்டது...'' என்று சரித்திர நிகழ்ச்சிகளை விளக்கினார்.

''எப்போது இதில் மாற்றம் ஏற்பட்டது?'' என்று கேட்டேன்.

''எலாரா (எல்லாளன்) என்ற சோழநாட்டு மன்னன் இங்கே படையெடுத்து வந்து, வெற்றி அடைந்து இந்த நகரைச் சீரமைத்தபோதுதான். அந்தச் சோழ மன்னன் நீதிக்குப் பெயர் பெற்றவர், மக்களின் குறையை அறிய அரண்மனை வாயிலில் ஒரு ஆராய்ச்சி மணியையே கட்டி வைத்திருந்தவர்...''

—அவர் முடிப்பதற்கு முன் நான் குறுக்கிட்டேன்: ''ஒரு தடவை ஒரு பசுவின் கன்றை அவருடைய மகன்—இளவரசன் தேரை ஓட்டிக் கொன்றுவிட்டபோது, அந்தப் பசு வந்து ஆராய்ச்சிமணியைப் பற்றி இழுத்தது. அதற்கு நியாயம் கிடைக்கத் தன் மகனையே படுக்கவைத்து அவன் மீது தேரை ஓட்டினார் மன்னன். அப்படித்தானே?''

''ஆமாம்... அப்படியேதான்...''

''அந்தச் சோழமன்னனின் பெயர் எலாரா இல்லை. மனுநீதிச்சோழன்!''

''இந்த நாட்டில் அவருடைய பெயர் எலாராதான். தவிர இந்த ஊரிலும் அவர் தேரை ஓட்டினார். இங்கேயும் ஒரு விபத்து நடந்தது!''

''அது என்ன கதை?''

''கதை அல்ல; சரித்திரம். அவருடைய தேர் பௌத்தமடம் ஒன்றின் வாசல்புறத்தை இடித்துவிட்டது. அதை அறிந்ததும் சோழமன்னன் 15,000 கஹாபணுக்கள் செலவு செய்து, இடிந்துபோன பதினைந்து தூண்களைச் சீர்படுத்திப் புதிய மடமே கட்டிக் கொடுத்தார். அவர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர் அல்லர். ஆனாலும் பிறமதத்தினர் மனம் புண்படக்கூடாது என்று கருதிய அவருடைய மனவிசாலத்தை இது காட்டுகிறது.''

''அப்புறம்?''

''துட்டகைமுனு என்ற சிங்கள இளவரசன் தலைமறைவாக வாழ்ந்து வந்தான். பத்தாயிரம் பேர் கொண்ட படையைத் திரட்டிக் கொண்டு வந்தான். அனுராதபுரத்தின் கோட்டை வாயிலில் கடும்போர் நடந்தது. மார்பில் வேல் பாய்ச்சப்பட்டுச் சோழ அரசன் இறந்து போனான். துட்டகைமுனு சோழமன்னரின் வீரத்தை மிகவும் பாராட்டினான். அவனுக்கு ஈமக்கடன்கள் நடந்த இடத்தில் ஒரு பெரிய நினைவு மண்டபத்தை எழுப்பினான். அந்த இடத்தில் இன்றும் இலங்கையின் பிரபுக்கள், தலைவர்கள் ஆகியோர் வரும்போது பேசுவதில்லை; வாத்தியங்கள் வாசிப்பதில்லை; மௌனத்தைக் கடைப் பிடிக்கிறார்கள்.''

''அப்புறம் துட்டகைமுனு என்ன செய்தான்?''

''பெரிய நீராட்டு விழா கொண்டாடினான். தான் வெற்றிபெற உதவிய வேலின் மையமாக வைத்து, ஒரு டகோபாவை எழுப்பினான்'' என்றார் 'கைடு.'

''இப்போது எங்கே போகிறோம்?'' என்று கைடைப் பார்த்துக் கேட்டேன்.

''இந்தியாவில், பீஹாரில் உள்ள கயாவில், புத்தர் ஞானோதயம் பெற்ற போதிவிருட்சத்தின் கிளை-உலகத்திலேயே மிகப் பழைமையான போதி விருட்சமாக பௌத்தர்கள் கொண்டாடுவது - அது இருக்குமிடத்துக்குப் போகிறோம்'' என்றார் 'கைடு.'

''மரத்துக்கு என்ன வயது?'' என்று கேட்டேன்.

''2200 வருஷங்கள்!'' என்றார் 'கைடு.'

''எப்படி இங்கே வந்து சேர்ந்தது இந்தக் கிளை?'' என்று கேட்டேன். முதிர்ந்த அந்த மரக்கிளை கீழே விழுந்து விடாமல் இருக்க இரும்புச் சட்டங்களினால் முட்டுக் கொடுத்திருந்தார்கள்.

''அசோகரின் மகள் சங்கமித்திரை கொண்டு வந்தது இது. கௌதம புத்தருக்கு ஞானோதயம் கிடைத்த போதிவிருட்சத்தின் கிளை இது. அப்புறம் ஒவ்வொரு அரசரும் இதை மிகுந்த அக்கறையோடு பராமரித்துக் கொண்டு வந்தார்கள். கடைசியாக கண்டியை ஆட்சி செய்த ஸ்ரீவிக்ரமராஜசிங்கனை ஆங்கிலேயர்கள் பிடித்து வெளிநாட்டுக்குக் கடத்திவிட்ட பிறகு...''

''இந்த விருட்சக் கிளையையும் கொண்டுபோகப் பார்த்தார்களாக்கும்?'' என்றேன்.

''இல்லை.. இல்லை. அவர்களுக்கும் இதன் புனிதத் தன்மையில் ஒரு அபாரமான பற்று இருந்தது. இந்த இடத்தையே புதுப்பித்து, சுற்றிலும் சுவர் எழுப்பி உலகெங்கிலும் உள்ள புத்தமதத்தினர் இங்கே வந்து பார்த்துவிட்டுப் போகும்படி செய்தார்கள். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இதற்குத் தங்கமுலாம் பூசிய கம்பிகளால் வேலியும் போட்டார்கள்'' என்றார் 'கைடு.'

''அப்புறம்?'' என்றேன் நான்.

''இது ஒரு 'மாடல்-ஸிடி' என்று சரித்திரம் சொல்லுகிறது. அந்த நாளிலேயே இங்கே ஹாஸ்டல்கள், ஹாஸ்பிடல்கள் இரண்டும் இருந்திருக்கின்றன! பிரமாதமான தண்ணீர் வழங்கும் 'சிஸ்டம்'கூட இருந்திருக்கிறது'' என்றார் 'கைடு.'

''அது என்ன சிஸ்டம்?''

''மூன்று வரிசைகளாகக் குளங்கள் அமைத்து வைத்திருக்கிறார்கள். மேல் வரிசை எல்லாரும் குடிப்பதற்கு, சமையலுக்கு உபயோகிப்பதற்கு; அடுத்த வரிசை எல்லாரும் குளிப்பதற்கு, கால் கழுவிக் கொள்வதற்கு; மூன்றாவது வரிசை மற்ற காரியங்களுக்காக — ஆடுமாடுகள் குளிக்க, பாத்திரங்களைச் சுத்தப்படுத்த. இதில் ஒன்றுக்காக ஏற்பட்டதை மற்ற காரியங்களுக்காக யாரும் பயன்படுத்தியதில்லை!'' என்றார் 'கைடு.'



# 6

ரூவன் வலிசாயா விகாரை.

அனுராதபுர விஜயத்தை முடித்துக்கொண்டு, யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்டோம். மேடுபள்ளமான சாலையில் கார் கஷ்டப்பட்டு ஓடிக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரம் சும்மா இருந்த ரங்கநாதன், ''அனுராத புரம் சரித்திரப் புகழ்பெற்ற இடம். அந்தநாளில் இந்தப் பாதைகளில் எல்லாம் குதிரைகளும் தேர்களும் நிறைய ஓடியிருக்கின்றன'' என்றார் பெருமைப் புன்னகையுடன்.

''நீங்கள் சொல்வதை அப்படியே ஒப்புக் கொள்கிறேன். இந்தச் சாலைகள் இன்றும் அப்படியேதான் இருக்கின்றன. குதிரையும் தேரும் ஓடுகிறமாதிரி குண்டும் குழியுமாகத்தான் இருக்கின்றன!'' என்றேன் நான்.

வழியில் பசுமையான கழனிகள் கண்ணில் பட்டன. எருமை மாட்டைப் பூட்டி உழுது கொண்டிருந்தார்கள். நான் பார்ப்பதைக் கவனித்த ரங்கநாதன், ''தமிழ்நாட்டு ஞாபகம் வருகிறதா?'' என்று கேட்டார்.

நான், ''ஆமாம், ஆனல் ஒரு சிறு வித்தியாசம். தமிழ்நாட்டில் எருமை மாட்டைப் பூட்டி ஏர்பிடித்து உழுவதில்லை'' என்றேன்.



போய்க்கொண்டிருக்கும்போதே, ஓர் ஊரில் வேட்டி அணிந்த தமிழர்கள் பலரும் நிறைய உலாவுவதைப் பார்த்தேன். ''யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்து விட்டோமோ?'' என்று கேட்டேன்.

''இல்லை. இந்த இடத்துக்கு வவுனியா என்று பெயர்!'' என்றார் ரங்கநாதன்.

காரைவிட்டு இறங்கினோம். சுந்தரம், ''பசிக்கிறது... ஏதாவது சாப்பிட லாமா?'' என்றார்.

''வாருங்கள் கடைக்குப்போய்ப் பார்க்கலாம்'' என்று அழைத்துப் போனார் ரங்கநாதன். கடையில் நுழைந்து சாப்பிட உட்கார்ந்தோம். தமிழ்நாட்டு எல்லையை அடைந்து விட்டோம் என்பது நிச்சயமாயிற்று. எங்களுக்காக அங்கே காத்திருந்த சிற்றுண்டியில் தமிழ் மணம் வீசிற்று. இடியாப்பம்-புட்டு-ஸொஜ்ஜி!

பிரயாணம் தொடர்ந்தது. ஒருவழியாக யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்து 'ஜாஃப்னு சுபாஷ் டூரிஸ்ட் ஓட்ட'லில் நுழைந்தோம்.

''யாழ்ப்பாணத்தில் நீங்கள் முதலில் செய்ய விரும்பும் காரியம் என்ன?'' என்று கேட்டார் ரங்கநாதன்.

பதில் சொல்ல வாயெடுத்தபோது என்னையறியாமல் நெஞ்சில் துயரம் கவிந்தது. சென்னைக்கு வந்த தலைவர் செல்வாவைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தபோது, 'யாழ்ப்பாணத்துக்கு வந்தால் முதற் காரியமாக உங்களைத்தான் சந்திப்பேன்' என்று நான் சொன்னதும், அவர் பெருந் தன்மையுடன் முகமலர்ந்ததும் என் நினைவுக்கு வந்தன. இப்போது எனக்கு அந்தப் பேறு கிட்டவில்லையே? அவர் இல்லையே...

''என்ன சார் ஒன்றுமே பேசவில்லை...?'' என்று என்னைத் தூண்டினார் ரங்கநாதன். ஒரு பெருமூச்சுவிட்டு, ''தலைவர் செல்வாவைச் சந்திக்கவேண்டும் என்பதுதான் யாழ்ப்பாணத்தில் என் முதல் ஆசையாக ரொம்ப நாட்களுக்கு இருந்தது. இப்போது அந்தச் சந்தர்ப்பம் கைகூடிவரும் சமயத்தில் அவர் நம்மை விட்டுப் போய்விட்டார்'' என்றேன் நான்.

''அவருடைய சமாதிக்குப் போய் அஞ்சலி செலுத்த விரும்புகிறீர்களா?'' என்று கேட்டார் ரங்கநாதன்.

''இப்போது அதைத்தான் செய்யமுடியும். போகலாம் வாருங்கள்'' என்று அழைத்தேன்.

அந்த இடத்தை அடைந்ததும் என் உள்ளத்தில் ஏமாற்றம் பொங்கிற்று. ஒரு பொட்டல் காட்டில், மிகவும் சாதாரணமான அமைப்பாக இருந்தது அது.

''என்ன இப்படிச் செய்து விட்டீர்கள்?'' என்றேன்.

''நாங்கள் ஒன்றுமே செய்யவில்லையே?'' என்று கையைப் பிசைந்தார் ரங்கநாதன்.

''ஒன்றும் செய்யவில்லை என்றுதான் நானும் சொல்கிறேன். இத்தனை தமிழ் வேகம் உள்ள இடத்தில் செல்வாவின் நினைவாலயம் இன்னும் எவ் வளவோ சிறப்பாக அமைந்திருக்க வேண்டாமா? அவரைப்போன்ற தமிழ்ப் பெரியாரின் நினைவாகச் சுனையும் சோலையும் சூழப் பசுமையாக, இனிமையாக, குளிர்ச்சியாக ஒரு நினைவாலயம் அமைத்திருக்க வேண்டாமா? இப்படியா செய்வது?'' என்று பொருமினேன்.

''விரைவில் இந்த இடத்தை அப்படிச் செய்ய திட்டம் இருக்கிறது'' என்றார் ரங்கநாதன்.

''சென்னைக்கு வந்து பாருங்கள். அங்கே கடற்கரையில் அண்ணா சமாதி அமைக்கப்பட்டிருக்கும் அழகைப் பாருங்கள். நீர் ஊற்று, புல்வெளி, விளக்கு அலங்காரம், யானைத்தந்த முகப்பு — ஒவ்வொன்றும் அவருடைய தமிழைப் போல நமக்கு இனிய உணர்வை எழுப்புகின்றன. அணையாத ஜோதி அவர் நினைவாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. சென்னைக்கு வருபவர்கள் அத்தனை பேரும் தவறாமல் அண்ணா சமாதியைப் பார்த்து விட்டுத்தான் போகிறார்கள். இதுபோன்ற விஷயங்களில், காரியங்களைப் 'பளிச்'சென்று சிறப்பாகச் செய்வதில், எங்கள் தமிழ்த் தலைவர்கள் எவ்வளவு சாமர்த்தியம் படைத்தவர்கள் என்று நீங்கள் நேரில் பார்த்தால்தான் தெரிந்து கொள்வீர்கள்'' என்றேன் நான்.

''சார்... அது என்னவோ உண்மைதான். ஆனால், அங்கே அண்ணாவை மனத்தில் வைத்துப் பெருமையுடன் போற்றுவதைப்போல, இங்கேயும் செல்வாவை மிகுந்த மரியாதையுடன் நினைவுகூர்வதில் ஒரு குறையும் இல்லை'' என்றார் டிரைவர் ஆல்பர்ட். அவர் அதிகமாகப் பேசாத மனிதர். திடீரென அவர் அப்படிப் பேசியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

''ரொம்ப உணர்ச்சி வசப்பட்டுப் போனீர்களே?'' என்றேன்.

''ஆமாம். செல்வாவின் பெயரைச் சொன்னால் இங்கே எல்லாருக்குமே அதைப்போன்ற ஓர் உணர்வுதான் ஏற்படும். இலங்கையின் மக்களிடையே ஆயிரம் பேதங்கள் இருக்கலாம். ஆனால், செல்வா ஒரு பெருமை மிகுந்த தமிழர் என்ற அபிப்பிராயத்தைப் பொறுத்தவரையில், இரண்டாவது பேச்சே இல்லை'' என்றார் ஆல்பர்ட். இவர் ஒரு சிங்களவர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

''அரசாங்கம் அவருக்கு எப்படிப்பட்ட மதிப்புக் கொடுத்திருந்தது?'' என்று கேட்டேன்.

''மிகுந்த மரியாதையுடன், அவர் இறந்துபோன அன்று அமைச்சரவை முழுவதும் இங்கே வந்திருந்தது. மிஸஸ் பண்டாரநாயகா உட்பட அனைவரும் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டார்கள். இன்னும் அந்த நிகழ்ச்சி என் நினைவில் இருக்கிறது'' என்று கூறிப் பெருமூச்சு விட்டார் ஆல்பர்ட்.

''அடுத்தது எங்கே...?'' என்றார் ரங்கநாதன்.

''கலவரங்களால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்க்கவேண்டும்.'' என்றேன்.

''இப்போது நீங்கள் போகவிருக்கும் இடம், அங்கே கேட்கப் போகும் விவரங்கள், பார்க்கப்போகும் காட்சிகள் எல்லாமே உங்கள் நெஞ்சில் சொல்லவொண்ணாத சோகத்தைத் தூண்டப்போகின்றன. யாழ் நகரில் நடந்த இந்தச் சம்பவம், இலங்கை முழுவதும் தமிழ் மக்களின் நூற்றுக்கணக்கான உயிர்ச் சேதம், பொருட்சேதம், சித்திரவதை... — இவற்றுக்கு அடையாளமாக அமைந்த ஒன்று'' என்று நிறுத்தினார் ரங்கநாதன்.

கடைத்தெருவில் கார் நின்றது. 'நீலவண்ணன்' எழுதிய '24 மணி நேரம்' என்ற அந்தப் புத்தகத்தை என் கையில் கொடுத்தார் ரங்கநாதன். 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், பதினைந்தாம் தேதி யாழ்ப்பாணத்தில் நடந்த இனக் கலவர நிகழ்ச்சிகளை, 190 பக்கங்களில்-எட்டுப் பக்கம் படங்களுடன், ஒரு கதைபோல விரிவாக எழுதியிருந்தார் எழுத்தாளர். புத்தகத்தைப் பிரித்தேன்—

'நூற்றாண்டுப் பழைமை வாய்ந்த மார்க்கெட் கட்டடத்துக்கு வைத்த நெருப்பு...'

'மூன்று உயிர்களைப் பலிவாங்கிப் பலரைப் படுகாயப்படுத்திய போலீசாரின் துப்பாக்கிச் சூடுகள்...'

'ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேரத்தில் பஸ் நிலையத்துக்குப் பக்கத்தில் இருந்த 30 கடைகள் தீயினால் அழிக்கப்பட்ட சேதம்...'

'திருவள்ளுவர், ஔவையார், சோமசுந்தரப் புலவர் — ஆகிய தமிழின் புகழ்பாடும் பெரியோர்களின் சிலைகள் உடைத்துத் தள்ளப்பட்ட கொடுமை....'

நிகழ்ச்சிகள் நடந்த இடத்துக்கே வந்துவிட்டோம். கார் நின்றது. ஒரு கணம் மூச்சுக்கூட நின்றது. சொல்லவொண்ணாத மனவேதனையுடன் நானும் சிலையாக நின்றேன்.

''இங்கேதான்...'' என்றார் ரங்கநாதன்.

'எதுவும் சொல்லாதீர்கள்' என்று கையால் ஜாடை காட்டி அவரை நிறுத்தினேன். என்னால் பேசமுடியவில்லை...

அந்த உணர்ச்சி மனத்தில் எழுப்பிய அலைகள் கலையச் சிறிது நேரம் ஆயிற்று.

அங்கே சுவர் ஓரமாக நின்று கொண்டிருந்தார் ஒரு நடுத்தர வயது ஆசாமி. நிதானமாக பீடி பிடித்துக் கொண்டு சூடாக அரசியல் பேசிக் கொண்டிருந்தார் அவர். நானும், ரங்கநாதனும் அருகில் போய் நின்றதும் அவர் மிரண்டு போனார்.

''உங்களிடம் ஒன்று கேட்கவேண்டும்'' என்றேன் நான்.

என் காகிதத்தையும் பென்சிலையும் கண்டு அவருடைய கலவரம் அதிகமாயிற்று.

''ஒன்றுமில்லை சார்.... ஏதோ விளையாட்டாகப் பேசிக்கொண்டிருந்தேன். ஆளை விடுங்கள்'' என்று தப்பிக்கப் பார்த்தார் அவர். நான் விடவில்லை. பின்னாலேயே போனேன்.

''உங்கள் பெயர் என்ன?'' என்று கேட்டார் ரங்கநாதன்.

''நான்தான் ஒன்றும் பேசவில்லை என்றேனே...'' என்று திரும்பிப் பார்த்தார் அவர்.

''இவர் தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கும் பத்திரிகை ஆசிரியர். உங்களைப் பேட்டி காணத்தான் விரும்புகிறார்.... பயப்படாதீர்கள்'' என்றார் ரங்கநாதன்.

''அப்படியா...? இதை முதலிலேயே சொல்லக்கூடாதா?'' என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார் அவர். ''என் பெயர் கந்தசாமி. லாரி ஓட்டி ஜீவனம் செய்து கொண்டிருக்கிறேன்'' என்றார்.

''பின்னே சும்மா இருக்கிறீர்களே...?'' என்றேன்.

''கொழும்பில் கணக்கு (பட்ஜெட்) போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் லாரிப் போக்குவரத்து மந்தம். நான் என்ன செய்ய...?'' என்று கேட்டார்.

''பின்னே உங்களுக்கு எப்படிப் பொழுதுபோகும்?''

''சினிமா பார்ப்பேன்!''

''அப்படியா? யாருடைய படங்கள் ரொம்பப் பிடிக்கும் உங்களுக்கு?'' என்று ஆவலோடு கேட்டேன்.

''நான் ஒரு எம். ஜி. ஆர். ரசிகன் சார்!'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார் கந்தசாமி.

எதிரே ஒரு மூலையில் வெற்றிலை பாக்குக் கடையில் உட்கார்ந்திருந்த ஒரு மனிதர் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் கடையில் நிறைய தமிழ்ப் பத்திரிகைகளும் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றைப் பார்க்கும் ஆர்வத்துடன் அருகில் போனேன்.

''நீங்கள் மணியன்தானே...?'' என்று கேட்டார் அந்த மனிதர்.

இப்படி என்னை அடையாளம் கண்டுபிடித்துக் கேட்கும் பத்திரிகைக் கடைக்காரர்கள் தமிழ்நாட்டில் நிறைய உண்டு. ஆனால், இலங்கையிலும் அப்படி ஒருவர் இருந்தது எனக்கு ஆச்சரியமாகத் தோன்றிற்று.

''ஆமாம். உங்கள் பெயர்?'' என்று கேட்டேன்.

''பாலசந்தர். கப்பல் வரவேண்டும் என்று காத்துக் கொண்டிருந்தீர்களோ?'' என்று கேட்டார் அவர்.

''நீங்கள் சொல்வது புரியவில்லையே? நான் பறந்துதானே வந்திருக்கிறேன்?'' என்றேன்.

''எங்கே சார் பறந்து வந்தீர்கள்...? ஊர் உலகம் எல்லாம் சுற்றிவிட்டு, உங்கள் கூடப்பிறந்தவர்கள் இங்கே அடிபட்டு, நசுங்கி, கண்ணீர்விட்டு ஓய்ந்த பிறகுதானே வந்திருக்கிறீர்கள்...?''

''அப்படி அலட்சியம் எதுவும் இல்லை. சந்தர்ப்பம் சரியாக அமையவில்லை. அரசாங்க உத்தரவு கிடைப்பது சிரமமாக இருந்தது. மன்னித்துக் கொள்ளுங்கள். ஆமாம்! அது என்ன கப்பல் விவகாரம்?'' என்று கேட்டேன்.

''தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருவதற்கு கப்பல்தான் மிகவும் மலிவான வழி. தொண்ணூற்று எட்டு ரூபாய்தான்! நடுவில் காலநிலை சீராக இல்லாததனால் இந்தக் கப்பல் சர்வீஸ் தடைப்பட்டுப் போயிருந்தது. அதனால் தமிழர்கள் பலரும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள். எனக்கும் தமிழ் நாட்டுக்குப் போக ஆசைதான். கப்பல் வரவேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார் பாலசந்தர்.

''இதுதான் உங்கள் கடையோ?'' என்று கேட்டேன்.

''அதோ... அதுதான் என் கடை!'' என்று சுட்டிக்காட்டினார் அவர். சொல்லும்போதே அவர் குரல் ஒரு தினுசாக மாறிற்று. அவர் விரலால் சுட்டிக்காட்டிய இடத்தைப் பார்த்தேன். அங்கே எதுவும் இல்லை. தீப்பற்றி எரிந்து சாம்பலாகக் கிடந்த ஒரு தடயம்தான் கண்ணிற்பட்டது.

''எனக்குப் புரியவில்லை. நீங்கள் 'புதிர்' பாலசந்தராக இருக்கிறீர்களே?'' என்றேன்.

''புரிந்து கொள்ள முடியாது சார்!'' என்று ஒரு சோகச் சிரிப்புச் சிரித்தார் அவர். ''அங்கேதான் என் கடை இருந்தது. பனைப்பொருட்களால் செய்த கைவினைப் பொருட்களை வைத்து விற்றுக் கொண்டிருந்தேன். இப்போது மிச்சம் இந்த சாம்பல் குவியல்தான்... எனக்கு நஷ்டம் 29,000 ரூபாய்.''

''அப்படியா...?'' என்றேன் பதட்டத்துடன்.

''பக்கத்தில் ஜவுளிக்கடை. அதற்கு அடுத்தாற்போல மளிகைக் கடை. இந்தப் பக்கம் கண்ணாடி-சீப்புக்கடை. அதற்குப் பக்கத்தில் புத்தகக் கடை...'' என்று அந்த வரிசையில் இருந்த அத்தனை கடைகளையும் மறுபடி மானசீகமாக உருவாக்கிக் காட்டினார் பாலசந்தர்.

''எல்லாம் உங்கள் பேச்சிலேயே இருக்கின்றனவே? அவையெல்லாம் எங்கே?'' என்று கேட்டேன்.

எரிந்து போய்விட்டன அவ்வளவுதான்... மொத்தம் 131 கடைகள்... 'லங்காதகனம்' என்று புராணத்தில் படித்திருப்பீர்களே'' என்று 'சூள்' கொட்டிக் கொண்டார் அவர்.

''ஹூம்...'' என்று ஓர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டு, ''இதற்கு யாரைக் குற்றம் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''ஆண்டவனைத்தான் குற்றம் சொல்லமுடியும்!'' என்று அவரும் ஒரு பெருமூச்சு விட்டார்.

''அரசாங்கம் என்ன செய்கிறது?''

''என்ன செய்யமுடியும்? ஏதோ செய்து கொண்டிருக்கிறார்கள். நன்மை செய்யவேண்டும் என்றுதான் பார்க்கிறார்கள். என்றாலும் தமிழர்பாடு சங்கடந் தான்'' என்றார் அவர்.

''என்ன சொல்லுகிறீர்கள்? ஈழம் பிரிந்து வரவேண்டும் என்று நினைக் கிறீர்களா?'' எனக் கேட்டேன்.

''இதோ பாருங்கள், நீங்கள் பத்திரிகாசிரியர். எனக்கு வம்பு வேண்டாம்! என்னை அரசியலில் இழுக்காதீர்கள்'' என்றார் பாலசந்தர். ''வாருங்கள் கொஞ்சம் சுற்றிப் பார்க்கலாம். சிலைகள் சிலவற்றைக் காட்டுகிறேன்'' என்று மேலே நடந்தார்.

''முதல்வர் எம். ஜி. ஆர். சௌக்கியமா?'' என்று கேட்டார். தலையை அசைத்தேன். ''கலைஞர் சௌக்கியமா?'' என்று கேட்டார் அடுத்தபடியாக. மறுபடியும் தலையை அசைத்தேன்.

''அவர்கள் பிரிந்ததுதான் எங்களுக்கு மனதுக்கு ரொம்ப வேதனையாக இருக்கிறது சார்... என்னதான் அவர்களுக்குள் மனவேற்றுமை இருந்தாலும் எங்களுக்கு அவர்கள் இருவரும் இரண்டு கண்கள் மாதிரி! எங்கள் பிரச்சினை களைச் சொல்லிக் கொள்வதென்றால் அவர்களிடம்தான் போவோம். எங்கள் தலைவர்கள் எல்லாரும்கூடக் கூட்டத்துக்குக் கூட்டம் இதைத்தான் சொல்லு கிறார்கள்'' என்றார் பாலசந்தர்.

''என்ன சொல்லுகிறார்கள்?'' என்று கேட்டேன் நான்.

''தமிழ்நாட்டில் இப்போது அண்ணன் தம்பிச் சண்டை போட்டுக் கொள்ளுகிறார்கள் என்று...!''

நான் சிரித்தேன். பாலசந்தர் என்னைப் பார்த்து, ''இந்தச் சண்டை எப்போது முடியும் சார்?'' என்று கேட்டார். நான் பதில் சொல்லவில்லை.

''என்ன சார், பதிலே இல்லை...?''

''நான் பத்திரிகை ஆசிரியர். கொஞ்ச நேரம் முன்பு நீங்கள் சொன்ன மாதிரியே நானும் சொல்கிறேன்... என்னை அரசியலில் இழுக்காதீர்கள்'' என்றேன். இப்போது அவர் சிரித்தார்.

மேலே நடந்தோம். ''யாழ்ப்பாணம் பூராவும் சுற்றிப் பாருங்கள் சார்! சிறு இடம்தான். தமிழ் உணர்ச்சி, அதன் வேகம் எல்லாம் உங்களுக்குத் தெரியும்'' என்றார் பாலசந்தர்.

''என்னையும் இங்கே ஒரு வேகம்தான் இழுத்து வந்தது. இந்தப் பகுதியை 'Magnetic North' என்று குறிப்பிட்டார்கள். அந்தப் பெயரே எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. உண்மையாகவே இந்த இடம் என்னைக் காந்தம் போல இழுத்தது!'' என்றேன்.



# 7

ஒரு கிராமியக் காட்சி

இலங்கையின் சில பகுதிகளில் நீங்கள் பௌத்த - சிங்கள நாகரிகத்தைப் பார்க்கலாம். இங்கே இந்து-திராவிட கலாசாரத்தைத்தான் பார்க்க முடியும்'' என்றார் பாலசந்தர். நினைவுச்சின்னம் ஒன்று என் பார்வையில் பட்டது. *'10-1-1974* உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் உயிர்ப்பலி யெடுக்கப்பட்ட ஒன்பதின்மரின் நினைவு நடுகல்' என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

''என்ன இது...?'' என்று வருத்தம் தோய்ந்த குரலில் கேட்டேன்.

''உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடந்தபோதும் இதேபோல ஒரு வகுப்புக் கலவரம் நடந்தது. ஒன்பது இளம் சிங்கங்கள் பலியானார்கள். சிவானந்தம், சரவணபவன், பொன்னுத்துரை...'' என்று வரிசையாக ஒன்பது பெயர்களை அடுக்கினார் அவர்.

''பார்க்கப் பார்க்க வேதனையே அதிகமாகிறது சார்...'' என்றேன்.

காரில் நல்லூரை அடைந்தோம். இதுதான் எங்கள் ஊர் கடைசி மன்னன் சங்கிலியனின் சிலை! யாழ்ப்பாணத்தை பாண்டியர்களுடன் தொடர்பு



கொண்ட மன்னர்கள் ஆண்டார்கள் என்று படித்திருப்பீர்களே? புகழேந்திகூட இங்கே வந்து பாடியிருக்கிறார். சிங்கை ஆரிய சேகரமன்னனிடம் ஆயிரம் பொற்காசுகளும், ஒரு யானையும் பரிசாக வாங்கிக் கொண்டு போயிருக்கிறார்'' என்றார் அவர்.

''சரிதான்... அந்த யானையைக் கட்டித் தீனி போடத்தான் ஆயிரம் பொற்காசுகள் போதுமானதாக இருந்திருக்கும்!'' என்றேன் நான்.

''அப்புறம் — அறிவாளிகள் இருக்கும் பல்கலைக்கழகத்தைப் பாருங்கள். மீனவ நண்பர்கள் சிலரையும் பாருங்கள்'' என்றார் பாலசந்தர்.

''என்னுடைய 'டேஸ்ட்' தெரிந்த மாதிரி பேசுகிறீர்களே? யார் யாரை நான் பார்க்க விரும்புவேன் என்று புரிந்திருக்கிறதே உங்களுக்கு...?''

''உங்கள் பயணக் கதைகளை நான் ஒன்றுவிடாமல் படித்திருக்கிறேன் சார்! நீங்கள் என்ன எழுத விரும்புவீர்கள் என்று எனக்குத் தெரியும்'' என்றார் அவர். பேசியபடியே நடந்தோம். தொடர்ந்து கொஞ்சதூரம் வந்து வழியனுப்பி விட்டுப் போனார்.

''என்ன மிஸ்டர் மணியன்? மீனவர் வாழும் பகுதியைப் பார்க்க விரும்புகிறீர்களா?'' என்று கேட்டார் ரங்கநாதன்.

''கட்டாயமாகப் பார்க்க வேண்டும். ஒரு குடிசையின் உள்ளே போய் உட்கார்ந்து பேசவும் வேண்டும்'' என்றேன்.

''பார்க்கலாம் வாருங்கள்'' என்று 'குருநகர்' என்ற அந்தப் பகுதிக்கு அழைத்துக் கொண்டு போனார். தெருவில் நுழையும்போதே ஒரு 'ஹாலிடே மூட்' தெரிந்தது. ஓய்வெடுத்து சாவதானமாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். சிலர் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள், துணியைப் பரப்பிப் போட்டுக் கொண்டு.

தங்கமணி என்ற வயது முதிர்ந்த ஓர் அம்மையார் உட்கார்ந்து ஆப்பம் சுட்டுக் கொண்டிருந்தார். அதன் மணம் மூக்கை நிறைத்தது. சுற்றிலும் குழந்தைகள், பெண்கள், வயிற்றில் குழந்தையுடனும் பெண்கள்-இப்படி நிறையபேர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். பேச்சும் சிரிப்புமாக இருந்தது.

''என்னம்மா வெளியே ஆண்கள் சீட்டாடிக் கொண்டிருக்கிறார்கள்... நீங்கள் எல்லாம் உள்ளே உட்கார்ந்து பேசிச் சிரித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஏன் இப்படி?'' என்று கேட்டேன்.

''கடலிலே மீன் ரொம்பக் குறைவு. எங்களுக்கும் சுறுசுறுப்பு இல்லை'' என்றார் தங்கமணி.

''கடலை நம்பித்தான் வாழ்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

''ஆமாம்... இது கடலைப் பார்த்த பூமி... எங்களைப் போன்ற தமிழர்கள், உழைப்பாளிகள் வாழ அரசாங்கம் எவ்வளவோ செய்யலாம். நிறைய சலுகைகள் கொடுக்கலாம். ஆனால் அரசியல் எங்கள் வாழ்வைக் கெடுக்குது'' என்றார் தங்கமணி.

''என்ன அரசியல்?'' என்று கேட்டேன் நான்.

பக்கத்தில் இருந்த பெண் ஏதோ சொல்ல வந்தாள். ''இந்தா சின்னப் பிள்ளை, அரசியல் பேச வேணும்!'' என்று இரண்டு பேராகத் தடுத்தார்கள். சின்னப்பிள்ளை மறுப்படி பேசவில்லை; இரண்டு நிமிடங்கள் யாருமே பேசவில்லை.

பக்கத்தில் டேப்-ரிகார்டரில் ஒலித்த பாட்டு என் காதில் விழுந்தது. 'இந்தப் பச்சைக்கிளிக் கொரு...' என்று நயமான மென்மையான குரல்.

''பாட்டு கேட்கப் பிடிக்குமா உங்களுக்கு?'' என்று கேட்டேன்.

''ஜேசுதாஸ் பாடுவார். அவர் பாடினு கேட்டுக் கொண்டே இருக்கலாம். கடலில் வேலை இல்லாட்டிக்கூடப் பாதகமில்லீங்க!'' என்ருர் தங்கமணி.

காரில் கிளம்பினேம். அந்தக் கோயிலுக்கு முன் கார் நின்றது.

''இதுதான் நல்லூர் முருகன் கோயில்'' என்ருர் ரங்கநாதன்.

இறங்கி உள்ளே போகத் தொடங்கினேம். ''கொஞ்சம் நில்லுங்கள்'' என்ருர் வாசலில் இருந்த பெரியவர்.

''சீட்டு ஏதாவது வாங்கவேண்டி இருக்குமோ?'' என்று கேட்டேன்.

''சீட்டு வாங்க வேண்டாம். சட்டையைக் கொடுக்க வேண்டியிருக்கும்'' என்ருர் அந்தப் பெரியவர். நான் அசந்து போய் அவரை நிமிர்ந்து பார்த்தேன். அவரிடம் எனக்கு ஒரு கேரளத்து ஆலய வாசலில் நிற்கும் நம்பூதிரியின் சாயல் தெரிந்தது.

''கேரளத்துக் கோயில்களில்தான் இந்தப் பழக்கம் உண்டு. இங்கேயுமா?'' என்று கேட்டேன்.

சட்டை பனியன் எல்லாவற்றையும் கழற்ற வேண்டுமே? என்று தயங்கினேன்.

''அப்பனே! இந்த சட்டையைக் கழற்ற முடியாதவன் 'மமதை' என்ற சட்டையை எப்படிக் கழற்றப் போகிருய்?'' என்று என்னைப் பார்த்துப் புன்னகை செய்தார் பெரியவர். நான் மளமளவென்று சட்டையையும் பனியனையும் கழற்றத் தொடங்கினேன்..

நான் போன சமயம் உள்ளே ஷண்முக அர்ச்சனை நடந்து கொண்டிருந்தது. ''இந்த மாதிரி நேருவது ரொம்ப அபூர்வம்! நீங்கள் கொடுத்து வைத்தவர்!'' என்ருர் ரங்கநாதன்.

''இங்கே திருவிழா எப்போது?'' என்று கேட்டேன்.

''ஜுலை-ஆகஸ்ட் மாதங்களில், ஆடிக் கிருத்திகையை ஒட்டி பிரமாதமான விழா நடக்கும். தேர்த் திருவிழா அமர்க்களமாக நடக்கும்'' என்ருர் பிரசாதம் கொடுத்த அர்ச்சகர்.

''கோயிலிலும் ஊரிலும் உங்களை எப்படி நடத்துகிருர்கள்?'' என்று கேட்டேன்.

''மிகவும் மரியாதையாக நடத்துகிருர்கள். இந்த ஊர் மக்கள் பக்திப் பற்று மிகுந்தவர்கள். கோயிலில் பணிபுரிபவர்கள் எல்லாருக்கும் ஊரில் நல்ல மதிப்பு உண்டு'' என்ருர் அவர். கேட்கத் திருப்தியாக இருந்தது.

யாழ்ப்பாணம் சுற்றிப் பார்க்கச் சிறிய இடந்தான். ஆனுல் சந்தித்துப் பேச வேண்டியவர்கள் நிறையபேர் இருக்கிருர்கள். நிறைந்த பெரிய மனசு பலரிடமும் இருக்கிறது. அங்கே பெரிய சிந்தனைகளையும் நாம் உணர முடிகிறது.

''இன்னும் 20 ஆண்டுகளில் மகத்தான பல்கலைக்கழகம் ஒன்றை முழுவளர்ச்சியுடன் நீங்கள் இங்கே பார்க்கலாம்'' என்ருர் ரங்கநாதன்.

''இப்போது பல்கலைக்கழகம் இயங்கும் இடத்தைப் போய்ப் பார்க்கலாமே?'' என்றேன். ரங்கநாதன் அங்கே அழைத்துக் கொண்டு போனுர். டாக்டர் இந்திரபாலா, டாக்டர் ஷண்முகநாதன் போன்ற பேராசிரியர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

''பல்கலைக்கழகத்தில் இன்னும் பலவிதத்திலும் வளர்ச்சி தேவை. ஆற்றல் மிக்கவர்கள் இங்கே தேடிக் கொண்டு வரவேண்டும். அதுதான் எங்கள் ஆசை'' என்ருர் டாக்டர் இந்திரபாலா.

''மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர 'பிராக்டிக'லாக என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''உணவுப் பொருள் உற்பத்தியைப் பற்றி நிறைய ஆராய்ச்சி செய்கிறோம். மீன்வளத்தைப் பெருக்க தனியாக ஒரு பகுதி அமைத்து விரிவாக ஆராய்ச்சி செய்கிறோம். பொதுவாகப் பல்கலைக்கழகம் என்றால் கலைகளை வளர்ப்பது மட்டும்தான் முக்கியமாக இருக்கும். இங்கே செவி – வயிறு இரண்டுக்குமே முக்கியமான முதன்மையான இடம் உண்டு'' என்று சிரித்தார் இந்திரபாலா.

''கேட்க ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. தமிழ்நாட்டில் பேராசிரியர்கள் பலரை நான் சந்தித்திருக்கிறேன். அவர்கள் தீவிரமாகப் பாடங்களில் தான் ஆர்வம் செலுத்துவார்கள். இங்கே 'பிராக்டிக'லாக ஏதாவது செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள். பாராட்ட வேண்டியதுதான்'' என்றேன்.

இதற்குள் நாங்கள் வந்த விஷயம் தெரிந்துபோய், மாணவர்களும் மாணவிகளும் நிறையக் கூடிவிட்டார்கள். பல்கலைக்கழகத்தைச் சுற்றிப் பார்த்தபின் அன்புடன் விடைபெற்றுக் கொண்டோம்.

''நீங்கள் கட்டாயமாகப் பார்க்க வேண்டியது ராமநாதன் மியூஸிக் அகாடமி'' என்று சொன்னார் ரங்கநாதன்.

''ஏன் அந்தப் பெயர் ஏற்பட்டது?'' என்று கேட்டேன்.

''பொன்னம்பலம் ராமநாதன் என்ற புகழ்பெற்ற தமிழரின் பெயரால் நிறுவப்பட்ட இசைக் கல்லூரி இது. அவருடைய மருமகன் நடேச பிள்ளை 1960-ம் ஆண்டு இலங்கையில் அமைச்சராகப் பணியாற்றியபோது, அவர்களே இதில் மிகுந்த ஊக்கம் கொண்டு நிறுவினார்கள்'' என்றார் ரங்கநாதன்.

''இசைக் கல்லூரி என்கிறீர்கள்... கர்நாடக இசை என்கிறீர்கள்! தமிழ் நாட்டு வித்வான்கள் இதில் சம்பந்தப்படவில்லையா?'' என்று கேட்டேன்.

''சம்பந்தமாவது? சந்தானம் என்று சொல்லுங்கள்'' என்றார் அங்கே என்னைச் சந்தித்த ஒரு பேராசிரியர்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்றேன்.

''சந்தானம்தான் இந்தக் கல்லூரியில் முதல் நான்கு ஆண்டுகள் பிரின்ஸிபாலாக இருந்தவர். நடேச பிள்ளைக்குப் பூர்வீகம் தஞ்சாவூர். அங்கே காவிரிக் கரையில் மணம் வீசிய கர்நாடக இசையில் அவருக்கு அபாரமான பற்றுதல் உண்டு. இந்தக் கல்லூரியை மகாராஜபுரம் விசுவநாத ஐயர் தொடங்கி வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று அவரை இங்கே குடும்பத்துடன் வரவழைத்தார்...'' என்றார் அவர்.

''ராமநாதன் கல்லூரியைத் தொடங்க விசுவநாதன் - ரொம்பப் பொருத்தம்தான்! காசி விசுவநாதனுக்கும் - சேது ராமநாதனுக்கும் இருப்பது போல...'' என்று சொல்லிச் சிரித்தேன்.

''அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்து டி.எம். நாராயணசாமிப் பிள்ளை வந்து தலைமை வகித்தார்கள். மகாராஜபுரம் விசுவநாத ஐயர் தொடங்கி வைத்தார்கள். அப்போது இலங்கையில் இரண்டு இடங்களில் அவருடைய கச்சேரி நடந்தது. தர்பார் ராகம் பிரமாதமாக இருந்தது. இன்றைக்கும் நினைவிருக்கிறது...'' என்றார் பெருமையோடு அவர்.

''கேட்க வேண்டுமா...? மகாராஜ தர்பார்தான்!'' என்றேன் நான்.

''மகாராஜபுரம் விசுவநாத ஐயர் போகும்போது தமது புதல்வர் மகாராஜபுரம் சந்தானத்தை இங்கே கல்லூரியை நிர்வகித்து நடத்த விட்டுவிட்டுப்

போனுர்கள். ரொம்ப விசாலமான உள்ளம் அவர்களுக்கு. தனக்கு உதவியாக இருந்து கச்சேரியில் பாடி வந்த மகனை, 'எனக்கு மட்டும் அல்ல; ஊருக்கும் உதவ வேண்டும்' என்று இங்கே இருந்து பணியாற்ற விட்டு விட்டுப் போய் விட்டார். விஜயதசமியன்று சந்தானம் கச்சேரி செய்ய, இசைக் கல்லூரி தொடங்கியது'' என்முர் அந்தப் பேராசிரியர்.

''இந்தக் கல்லூரி வளர பலர் உதவியிருக்க வேண்டுமே?'' என்றேன்.

''நடேச பிள்ளைக்கு இந்தக் கல்லூரி ஒரு செல்லப் பிள்ளையைப் போல! ஊர் மக்களும் குழந்தைகளை ஆர்வத்துடன் சேர்த்தார்கள். வாய்ப்பாட்டு, வீணை, வயலின், மிருதங்கம் எல்லாவற்றிலும் பயிற்சி உண்டு. சந்தானம் எல்லாவற்றையும் மிகச் சிறப்பாக நிர்வகித்து நடத்தினுர். தியாகராஜ ஆராதனை பெரிய விழாவைப்போல நடப்பது உண்டு. முதல் பட்டமளிப்பு விழாவில் அப்போது திருப்பதியில் பேராசிரியராக இருந்த சாம்பமூர்த்தியும், சென்னையில் கர்நாடக இசைக் கல்லூரி முதல்வராக இருந்த சந்தியாவந்தனம் சீனுவாசராவும் வந்து கலந்துகொண்டு, மாணவ - மாணவிகளுக்கு 'சங்கீத ரத்னம்' என்ற பட்டத்தை அளித்தார்கள். சந்தானம் முதல் நான்கு ஆண்டு களுக்கு இங்கேயே இருந்து நிறைய ஆராய்ச்சிகள் செய்தார்.''

''இந்த ஊர் மக்களின் ஆர்வம் எப்படி...?''

''அமோகமான ஆதரவு உண்டு. மாணவ மாணவிகள் காலை ஆறுமணிக்கே வந்துவிடுவார்கள். திருமதி சுந்தரி நடேசன், 'ஷ்ராப்' ஜகன்னுதன், இந்து கல்லூரி புரொபசர் சாரி, உணவு கண்ட்ரோலர் பத்மநாதன் போன்ற பிரமுகர்கள் மிகுந்த ஆர்வங்காட்டி இந்தக் கல்லூரியை வளர்த்தார்கள். மறக்க முடியாத ஒரு 'பீரியட்' அது'' என்முர் அவர்.

சென்னைக்குத் திரும்பிய பிறகு இதைப்பற்றி நான் மகாராஜபுரம் சந்தானத்திடம் குறிப்பிட்டபோது அவர் உணர்ச்சி வசப்பட்டுப் போனுர்...

''என் இசையை வளர்த்து மேம்படுத்தியவர்கள் இரண்டு பேர். ஒருவர் என் தகப்பனுர்; இன்னெருவர் நடேச பிள்ளை'' என்முர் அவர்.

''என்ன அப்படிக் குறிப்பாகச் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''ஆமாம்... என் தகப்பனுரின் கடைசி நேரத்தில் நான் அவரோடு இருந்தேன். என் கடமைகளைச் செய்தேன். நடேச பிள்ளையின் இறுதிக் காலத் திலும் நான் கொழும்பிற்குப் போய்ச் சேர்ந்தேன். உடனிருந்து சடலத்தைக் காரில் வைத்து அவருடைய ஊருக்கு நானே ஓட்டிக் கொண்டு வந்து சேர்ந்தேன்'' என்முர் சந்தானம்.

அதைக் கேட்டபோது எனக்கு மெய்சிலிர்த்தது!

தமிழ்ப் புலவர் தனிநாயக அடிகளைப் பார்க்க நானும் ரங்கநாதனும் புறப்பட்டுப் போனபோது கடற்கரை ஓரம் கொஞ்சம் நின்று காற்று வாங் கினேம். நீலக்கடலைப் பார்த்த வண்ணம் நின்று கொண்டு, ''ஆங்கிலத்தில் சொல்வதுண்டு, — 'மிக அருகில் இருக்கிருேம்; ஆனல் எட்டமுடியாத தொலைவில் இருக்கிருேம்' ('So near and yet so far') என்று! அது எங்க ளுக்கு மிகவும் பொருந்தும். தமிழ்நாட்டுக்கு நாங்கள் மிகவும் நெருங்கிய பக்கத்து வீட்டுக்காரர்கள்; ஆனல் எட்ட முடியாதபடி ஒரு பெரிய இடைவெளி தொடர்ந்து கொண்டே இருக்கிறது'' என்முர் ரங்கநாதன்.

அவருடைய ஆசை, ஏக்கம் எதையும் அவர் மறைக்கவில்லை. யாழ்ப் பாணத்தில் எங்கே போனுலும், தமிழர்கள் யாரைச் சந்தித்தாலும் இந்த உணர்ச்சியை அடித்தளத்தில் உணர முடிகிறது. மெல்லிய இசையைப் போல அது அடிநாதமாகக் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

யாழ்ப்பாணம் சிறிய இடம்தான். இரண்டு நாட்களுக்கு மேல் சுற்றிப்

பார்த்தால் அலுப்புத் தட்டிவிடும். ஆனல், யாழ்ப்பாணத் தமிழர்களுடன் இரண்டு மாதங்களானலும் பேசிக்கொண்டே இருக்கலாம். அலுப்புத் தட்டவே தட்டாது.

அவர்கள் பேச்சில் இனிமை ததும்புகிறது. உணர்ச்சி பொங்குகிறது. தமிழ் ஈழம் பிரிந்தே ஆகவேண்டும் என்ற வேகமும் பிடிவாதமும் தெரிகிறது. பொதுவாக இப்படிப்பட்ட உணர்ச்சிபூர்வமான ஆதங்கம் ஆண்களிடமே அதிகமாகத் தென்படும். ஆனல் யாழ்ப்பாணத்தில் பெண்களிடமே இந்தத் துடிப்பு நிறைந்து நிற்கிறது. இந்தப் பிரச்சினையை விரிவாக இதயத்தின் அடித் தளத்திலிருந்து பேசுகிருர்கள்.

''இதயம் பேசுகிறது' என்கிறீர்கள்... நீங்கள் இதைப்பற்றிப் பேச வேண்டாமா? எழுத வேண்டாமா?'' என்று சில நண்பர்கள் கேட்டார்கள். இது உள்ளம் தொடும் பிரச்சினை. ஆனல், வெளியே கொட்டிப் பேசுவதில் நுட்பமான சிக்கல்கள் இருக்கின்றன. பக்கத்து வீட்டுக்காரர்களானலும் இலங்கை ஓர் அயல்நாடுதான்; இந்தச் சிக்கலும் ஓர் உள்நாட்டுப் பிரச்சினை தான். இதை ஆராய்வதிலும் பேசுவதிலும் மிகக் கவனமாக, ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதாகிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழன்பர்களிடம் பேசும்போது வெவ்வேறு விதமான உணர்ச்சிகளை நான் தெரிந்து கொண்டேன். தனி ஈழம் வேண்டும் என்று சொல்வதிலும்கூட வெவ்வேறு விதமான கண்ணோட்டங்களை நான் பார்க்க முடிந்தது....

குறிப்பிட்ட நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, ''இங்கே தமிழர்களில் பல வகையினர் உண்டு. யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர்கள், மலைநாட்டில் உள்ள இந்திய வம்சாவளியினர், கொழும்பில் உள்ள தமிழர், மட்டக்களப்புத் தமிழர் - இப்படிப் பலவிதமாக இருக்கிருர்கள். பண்புகளும் வேறுபடுகின்றன'' என்று அவர் சொன்னர்.

''ஐயா, இது அதிசயம் இல்லை... தமிழ்நாட்டிலும்கூட நுட்பமாகப் பார்க்கப்போனல் இந்த வேறுபாடு தெரியும். தொண்டைமண்டலத்தில் இருப்பவர்களுக்கும் — கொங்கு நாட்டில் வசிப்பவர்களுக்கும், பண்புகளும், பேச்சுவழக்கும் மாறுபாடாக இருக்கும். தஞ்சாவூர் மொழி வழக்கும் — திருநெல்வேலி மொழி வழக்கும் ஒரே மாதிரி இராது. ஆனல் எல்லாரையும் 'தமிழ்' என்ற மொழியும், 'தமிழர்' என்ற உணர்வும் ஒரு நடுநூலாக இருந்து இணைத்து வைக்கிறது'' என்றேன் நான்.

''தனி ஈழம் என்ற பிரிவு வேண்டும் என்று நினைப்பவர்கள் மனத்தளவில் அதற்கேற்ப மாற வேண்டாமா? தமிழர் என்று சொல்லிக் கொண்டாலும் குழந்தைகளை லண்டனிலும் பாரிஸிலும் படிக்க வைக்கவே விரும்புகிருர்கள். கொழும்பில் கலவரம் என்றதும் இங்கே இடம்பெயர்ந்து வந்து தங்குபவர் கள், மூன்று நாட்களானதும் திரும்பிவிடத் துடிக்கிருர்கள். இங்கே வசதி இல்லையாம்... நாகரிகமும் வசதிகளும் மக்கள் ஏற்படுத்திக் கொள்வதுதானே? இங்கே வந்து தங்குபவர்கள் இந்த இடத்தை அவர்களுடைய விருப்பத்துக்கு ஏற்ப வளர்ச்சியடையச் செய்துகொள்ள வேண்டியதுதானே? அதுவரை ஒரு தியாக உணர்ச்சியுடன் இருந்து, சகோதரராகப் பழகி ஒட்டுணர்வுடன் இருக்க வேண்டியதுதானே?'' என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசினர் அந்த நண்பர்.

—இப்படிப் பல கருத்துக்கள்.



# 8

கடற்கரைக் காட்சி

யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து வசதி மிகவும் குறைவு. தப்பித் தவறி அங்கே ஒரு ஆட்டோவோ, சைக்கிள் ரிக்ஷாவோ உங்கள் கண்ணில் படாது. பஸ்ஸில் பிரயாணம் செய்தால் உடம்பைக் குலுக்கி எடுத்துவிடும். சாலையைத் திருத்துவதும் சரியாகச் செய்யப்படவில்லை.

''ஏன் இப்படி இருக்கிறது?'' என்று நண்பர்களைக் கேட்டால், சிலர், ''இன்னும் இங்கேயெல்லாம் நகராட்சித் தேர்தல்கள் நடைபெறவில்லை. அப்புறம்தான் நிலைமை சீரடையும்'' என்கிறார்கள்.

வேறு சில நண்பர்கள், ''நாங்கள் தனி ஈழம் கேட்கிறோம் என்பது இலங்கை அரசுக்கு வருத்தம். இந்தப் பகுதியை அதனாலேயே கவனிக்காமல் ஒதுக்கி வைத்துவிடுகிறார்கள்'' என்று சொன்னார்கள்.

ஆக, சாலையும் பாதையும் எப்படியோ; நம்முடைய பேச்சு எந்தப் பாதையில் போனாலும் கடைசியில் திரும்பித் தனி ஈழம் பற்றிய பிரச்சினையிலேயே வந்து முடிந்து விடுகிறது!



'சுதந்திரன்' பத்திரிகை ஆசிரியர் கோவை மகேசனைச் சந்திக்கப் போயிருந்தேன். என்னை வரவேற்று அன்பொழுகப் பேசினர் அவர். எனக்கென்னவோ அவரைப் பார்த்ததும், தமிழ்நாட்டில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவரைப் பார்க்கும் உணர்ச்சிதான் ஏற்பட்டது.

அவருடைய பேச்சில் தமிழினிமை ததும்புகிறது. துடிப்பான உணர்ச்சிகளில் தமிழர் என்ற வேகம் தலைநிமிர்ந்து நின்றது. இனிமையாகப் பழகும் நயத்தில், முகமன்கூறும் பண்பில், தனியான அன்பும் ஆர்வமும் நிறைந்து நிற்கின்றன.

அவர் என்னேடு சுமார் ஐந்து நிமிடங்கள்தாம் உரையாடினர். அதிலேயே பலமுறை தலைவர் செல்வா, தலைவர் அமிர்தலிங்கம் போன்ற பெரியோர்களைப் பற்றித் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டார். அவர்களிடம் மகேசன் கொண்டிருந்த ஆழ்ந்த பற்று அதில் வெளிப்பட்டது. தமிழ்நாட்டு அரசியலைப் பற்றியும் அவர் மனம்விட்டுச் சில கருத்துக்களைத் தெரிவித்தார்...

சுற்றிப் பார்த்துக் கொண்டே உரும்பராய்க்கு வந்தபோது என் கண்ணில் அந்த உடைந்த சிலை தென்பட்டது.

''இது யாருடைய சிலை? ஏன் உடைந்தபடியே இருக்கிறது?'' என்று ரங்கநாதனிடம் அந்த சிலையைப் பார்த்தபோது கேட்டேன்.

''இது இங்கே உள்ள தமிழர்களின் நெஞ்சம் நிறைந்த தம்பி சிவகுமாரனின் சிலை. தமிழர் சுயாட்சிக் கழகத்தைச் சேர்ந்த தியாகமணி அவன். பிரிவினைக்காகப் போராடிச் சிறையிலே வாசம் செய்து தன்னுயிரையும் கொடுத்தவன். யாரோ வெறியர்கள் சிலர் அந்த இளங்காளையின் சிலையை இப்படிச் சின்னபின்னப்படுத்தி இருக்கிருர்கள்'' என்ருர் அவர்.

''உடைந்தபடியே இருக்கிறதே...?'' என்றேன்.

''தமிழர்களின் உள்ளமும் உடைந்தபடியேதான் இருக்கிறது!'' என்ருர் அவர்.

யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் திருக்குறளும், அருமையான தமிழ் வாசகங்களும் கண்ணிற் படுகின்றன. ''இது யார் செய்த பணி? யாருக்கு இப்படி ஒரு ஆர்வம்?'' என்று கேட்டேன்.

''மில்க்வைட் சோப் அதிபர் திரு. கந்தையா கனகராசாவின் தொண்டு இது'' என்ருர் ரங்கநாதன்.

''பால் போன்ற வெள்ளை உள்ளம் இந்த ஆர்வத்திலும் தெரிகிறது!'' என்று சொன்னேன் நான். பால் என்று சொல்லும்போது பனைமரமும் ஞாபகத்துக்கு வரும். அப்படி ஒரு தமிழ்ப் பழமொழியும் இருக்கிறது. கனகராசாவின் விஷயமும் அப்படித்தான். பனம்பொருள் உற்பத்தியில் மிகுந்த ஈடுபாடு உள்ள ஒரு நண்பர் அவர். திரு. கந்தையா கனகராசாவை சந்தித்தபோது அவர் கூறினர்: ''ஒரு சிறு பனந்தோப்பு இருந்தால் ஒரு குடும்பமே பிழைக்கலாம்...''

''தென்னம்பிள்ளை என்று சொல்லுங்கள்'' என்று திருத்திப் பார்த்தேன்.

''இல்லை... பனைமரம்தான் எனக்குப் பிள்ளை! பாரதநாட்டில் ஐந்து கோடி பனைமரங்கள் இருக்கின்றன. இலங்கையில் 70 லட்சம்தான். இதைக் குறைந்தது ஒரு கோடியாகவாவது ஆக்கவேண்டும். அதுதான் என் திட்டம். அதற்காகத்தான் இரவு பகலாகப் பாடுபடுகிறேன்'' என்ருர் கனகராசா. பனைமரப் பெருக்கம் பற்றிய அவருடைய ஆர்வத்துக்கு இந்தப் பேச்சும் ஒரு கோடி காட்டுவது போல இருந்தது.

''அதோ தெரியும் அந்தக் கொட்டிலுக்கு முன்பாகக் காரை நிறுத்துங்கள், ஆல்பர்ட்...!'' என்ருர் ரங்கநாதன்.

''கொட்டிலா?'' என்றேன் வியப்புடன்.

''ஆம், சுருட்டுக் கொட்டில். உங்களூரில் கொட்டகை என்று சொல்வீர்கள் — எங்களூரில் 'கொட்டில்' என்கிறோம்'' என்றார் ரங்கநாதன்.

உள்ளே சுமார் இருபத்தைந்து பேர் வரையில் நிலத்தில் சம்மணம் போட்டு உட்கார்ந்து சுறுசுறுப்புடன் 'புகையிலைச் சுருட்டு' சுருட்டிக் கொண்டிருந்தார்கள். நாலைந்து எடுபிடிப் பையன்கள் ஓடியாடிக் கொண்டிருந்தார்கள். இவற்றைவிட ஒருவர் தனியாக உட்கார்ந்து கம்பராமாயண உரையினை உரக்கப் படித்துக் கொண்டிருந்தார். அனைவர் காதுகளும் கம்பராமாயண உரையினைக் கேட்க, அவர்கள் கைகள் வேகமாக இயங்கிக் கொண்டிருந்தன.

''சோர்வடையாமல் இருப்பதற்காகவும் அதேசமயம் பயனுள்ளதாகவுமிருக்க இந்த வழியைக் கையாளுகின்றார்கள். நெடுங்காலமாக இந்த வழக்கம் உண்டு. வீண் அரட்டையைத் தவிர்ப்பதற்கும் இவ்வழி பயன்படுகின்றது'' என்றார் ரங்கநாதன், என் எண்ணத்தைப் புரிந்து கொண்டு.

''உங்களுடைய ஊதியம் வாழ்க்கைத் தரம் எல்லாம் எப்படி?'' என்று ஒரு தொழிலாளரைக் கேட்டேன்.

''தற்போது ஆயிரம் சுருட்டுக்கள் சுற்றினால் ரூபா 28/—கிடைக்கிறது. ஒரு நாளைக்கு சராசரியாக ஒவ்வொருவரும் ஐந்நூறிலிருந்து அறுநூறு சுருட்டுக்கள்வரை சுற்றுவோம். ஒரு நாளில் ஆயிரம் சுருட்டுக்கள் சுற்றுபவர்களும் உண்டு. எங்களைப் பொறுத்தவரையில் வாழ்க்கைத்தரம் பின்தங்கிய நிலையில்தான் இருக்கிறது. அதிலும் தற்போது இந்தத் தொழிலிலும் ஒரு தேக்கநிலை'' என்றார் இராசரத்தினம் என்ற அந்தத் தொழிலாளி.

''தேக்கநிலைக்கு என்ன காரணம்?'' என்று கேட்டேன்.

''எங்கள் சுருட்டுக்குப் பிரதான 'மார்க்கட்'டே தென்னிலங்கைதான். சமீபத்திய இனக் கலவரங்களினால் வியாபாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. நிலைமை சீரானாலும் நம்மவர்கள் மீண்டும் தென்னிலங்கையில் கடைகள் திறப்பார்களோ என்னவோ?'' என்று கவலையுடன் தெரிவித்தார்.

''சிகரெட் மற்றும் மெஷினில் சுற்றப்படும் வெள்ளைச் சுருட்டு போன்றவற்றால் தங்கள் தொழில் பாதிக்கப்படுகின்றதா?'' என்று கேட்டேன்.

''ஓரளவிற்குப் பாதிக்கப்படத்தான் செய்கிறது. ஆனால் இந்த சுருட்டிற்கு — இதைக் 'கோடா'ச் சுருட்டு என்று கூறுவார்கள் — இதற்கு ஒரு தனியான 'டிமாண்ட்' உண்டு. இந்தச் சுருட்டின் தயாரிப்பு முறையே தனி. 'கண்டி,' 'ஏறுவூர்' (மட்டக்களப்பு) போன்ற பகுதிகளிலிருந்து தருவிக்கப்பட்ட புகையிலையுடன் எங்களூர்ப் புகையிலையையும் கலந்து (Blending) சுருட்டுக்கள் தயாரிப்போம். பின் அதைக் 'கருப்பட்டி'ப் பாணியில் தயாரிக்கப் பட்ட, 'கோடா' என்னும் ஒருவகைத் திரவத்தில் தோய்த்தெடுப்போம். இதில் சில தொழில் நுணுக்கங்கள் உண்டு. இதனால்தான் இத்தொழிலினை இயந்திரமயமாக்கும் சாத்தியக் கூறுகளை ஆராய வந்த ஒரு ஆங்கிலேய நிபுணர் தன் இயலாமையினைத் தெரிவித்துச் சென்றார். இயந்திரமயமாக்குவதனால் ஒருவித பயனும் ஏற்படப் போவதில்லை. ஏனென்றால் வளரும் தலைமுறையினருக்கு இந்தச் சுருட்டுக்களில் நாட்டமில்லை. ஆமாம்; நாட்டுநடப்புக்களை மனதில் வைத்தும் இதைச் சொல்கின்றேன்'' என்று ஒரு 'லெக்சரே' அடித்து முடித்தார் திரு. இராசரத்தினம்.

இங்கு இப்படி 'கம்பராமாயணம்' படிக்கும் வழக்கம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இங்குள்ளவர்களின் தமிழ்ப்பற்று சுடர் விடுவதற்காகிய

அடிப்படைக் காரணங்களில் இதுவும் ஒன்றுயிருக்குமோ என்று எண்ணி வியந்து கொண்டேன். சுருட்டுத் தொழில் இங்குள்ள பல குடும்பங்களுக்கு ஜீவநாடி என்று அறிந்தபோது என் மனத்தை ஒரு 'பேருண்மை' நெருடியது. இந்தத் தொழிலின் எதிர்காலம் எப்படி இருக்கும்...? நாட்டுநடப்புக்களைப் பார்க்கும்போது இத்தொழிலின் எதிர்காலம் ஸ்திரமற்றதாகத் தோன்று கிறது. அப்போது இதை நம்பியிருப்பவர்களின் கதி? காலத்திற்குத் தக்கவாறு தங்கள் தொழில் நோக்குகளை இவர்கள் 'அட்ஜஸ்ட்' செய்துகொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன். என் எண்ணங்களை அப்படியே திரு. இராச ரத்தினத்திடம் தெரிவித்து விட்டு விடைபெற்றுக் கொண்டேன்.

ஃ ஃ ஃ ஃ

ஊர் உரும்பராய் என்ற இடத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது சாலையின் எதிர்ப்புறத்தில் ஒரு வாலிபர் சைக்கிளில் வந்து கொண்டிருந் தார். ஒரு கையால் ஹாண்டிலைப் பிடித்தபடி மறுகையில் கயிற்றுப்பிடி போடப்பட்ட ஒரு பானையைப் பிடித்துக் கொண்டு சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்தார். சைக்கிளின் பின்புறம் 'காரியரி'ல் ஒரு பிளாஸ்டிக் பாத்திரம் கட்டப்பட்டிருந்தது. பானையிலிருந்து நுரை பொங்கி வழிந்து கொண்டிருந்தது. காருக்கு வழிவிடுவதற்காக ஒதுங்கி ஒரு காலை ஊன்றிக் கொண்டு நின்ற அவரை மடக்கி நிறுத்தினேன்.

''இது என்ன? பால் போலிருக்கிறதே...'' என்று கேட்டேன்.

''ஆம், பனம்பால் கொண்டு போகிறேன்'' என்று சிரித்தபடியே அவர் பதில் சொன்னார்.

எனக்குப் புரியவில்லை. ''பனம்பாலா...?'' என்று வியப்புடன் கேட்டேன்.

''பனங் கள் கொண்டு செல்கின்றார். இவர் ஒரு கள் இறக்கும் தொழிலாளி. தான் சேகரித்த கள்ளை 'தவறணை' (Depot) க்குக் கொண்டு செல்கின்றார்'' என்று புரியவைத்தார் ரங்கநாதன்.

''உங்கள் வருமானம், வாழ்க்கைத் தரம், சமூகத்தில் உங்களுக்கிருக்கும் அந்தஸ்து இவை பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்'' என்று அவரைக் கேட்டேன்.

''என் உடலில் வலிமை இருக்கிறது. நிறைய மரங்கள் ஏறக்கூடிய சக்தி இருக்கிறதினலே, என்னுடைய மாத வருமானம் ரூ. 700-ஐ தாண்டும். ஆனலும் இந்த ஊரில் இப்போது வாழ்க்கைச் செலவுகள் அதிகம். இந்த வருமானம் எந்த மூலைக்கு...? வாழ்க்கைத் தரம் என்று பார்க்கும்பொழுது, நாங்கள் எல்லாரும் அடிப்படையே இல்லாதவர்கள். அதாவது பரம்பரை பரம்பரையாக ஒடுக்கப்பட்டு வறுமையில் உழன்றவர்கள். இப்போதுதான் எம்மவர் மத்தியிலும், எம்மை ஒடுக்கியவர் மத்தியிலும் ஒரு விழிப்புணர்ச் சியும், அதனல் நன்மை பயக்கக்கூடிய மாறுதல்களும் ஏற்பட்டுள்ளன. வித்தியாசங்கள், வேற்றுமைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகின்றன. என்றாலும் நாங்கள் ஆரம்பக் கட்டத்தில்தான் இருக்கின்றோம் என்றார் அவர்.''

''கள் இறக்கும் தொழிலும் இங்கு ஒரு பிரதானமான தொழில். பல குடும்பங்களின் ஜீவநாடி. கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் பெரும் பாலும் 'கருப்பணி'யே (பதநீர்) இறக்கிக் கொண்டிருந்தார்கள்'' இப்போது மறுபடியும் கள்ளுக்குத்தான் முதலிடம்'' என்று சொன்னார் ரங்கநாதன்.

''ஏன் அப்படி...?'' என்று கேட்டேன்.

''சென்ற ஆட்சிக் காலத்தில் சர்க்கரை விலை அதிகமாயிருந்தது.

உள்ளூர்ச் சர்க்கரை உற்பத்தி போதவில்லை. மாற்றுப் பாவனைப் பொருளாகப் பனங்கட்டிக்கு (பனம்சர்க்கரை) நல்ல 'தேவை' இருந்தது. கிராமத்திற்குக் கிராமம் 'ஆலை'கள் போட்டிருந்தார்கள். இப்போது மறுபடி அவை மூடப் பட்டு விட்டன'' என்றார் ரங்கநாதன்.

''மதுப்பிரியர்களின் வயிற்றில் (பனம்) பால் வார்த்ததுபோல...!'' என்றேன்.

''புளிக்காத பனங் கள், பால் மாதிரியேதான், சார்! அது உடம்பிற்குக் கெடுதலை விளைவிப்பதில்லை, அளவோடு அருந்தினால்...'' என்று எனக்கு விளக்கம்தர முற்பட்டார் ரங்கநாதன்.

''போதும், போதும்! பனம் பொருள் அபிவிருத்திச்சபை ஒன்று நிறுவியிருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வந்ததே, அதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்'' என்று அவரைக் கேட்டேன்.

''ஆமாம், உண்மைதான். இதன் தலைமையகம் யாழ் மாவட்டத் திலேயே அமையும். இதன் தலைவராக திரு. கே. ஸீ. நித்தியானந்தா நியமிக்கப்பட்டிருக்கிறார். பனையிலிருந்து பெறக்கூடிய பயன்கள் குறித்து ஆராய்ச்சி செய்வதும், அது குறித்துப் பயிற்சியளிப்பதும் இச் சபையின் முக்கிய கடமைகளாக இருக்கும். இது சம்பந்தமாகப் பயிற்சி பெறுவதன் பொருட்டு தமிழ்நாட்டிற்குச் சிலரை விரைவில் அனுப்பவிருக்கின்றார்கள்!'' என்றார் ரங்கநாதன்.

''காரில் ஒரு சின்ன ரிப்பேர். 'வாட்டர் ஹோஸ்' வெடித்து விட்டது. மாற்றியாக வேண்டும்'' என்றார் டிரைவர் ஆல்பர்ட்.

''எவ்வளவு நேரம் ஆகும்?'' என்று கேட்டேன்.

''பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள்தான் ஆகும், பக்கத்திலேயே 'ஒர்க்ஷாப்'பும் இருந்து அங்கேயே 'ஹோஸ்' கிடைச்சுதானால்...'' என்று இழுத்தார் ஆல்பர்ட், ரங்கநாதனைப் பார்த்தபடியே.

''சரி, நாங்களும் வருகின்றோம். ஒரேயடியாகக் காரைச் சரி பார்த்துக் கொண்டே போய்விடுவோம். எங்கேயாவது 'ஒர்க்ஷாப்'பிற்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று ரங்கநாதனைக் கேட்டேன்.

நாங்கள் சென்ற 'ஒர்க்ஷாப்' பெரியது. சுமார் ஐம்பது பேர்வரை வேலை செய்து கொண்டிருந்தார்கள். அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள் அத்தனையும் 'ஆஸ்டின்' ரகத்தைச் சேர்ந்தவை. அவற்றுள் பல 'ஆஸ்டின் 40' மாடலைச் சேர்ந்தவையாகவும், சில 'சமர்செட்' மாடலைச் சேர்ந்தவையாகவும் இருந்தன!

எனக்கு ஒரே வியப்பு. காரணம், இங்கு மட்டுமல்ல; யாழ்ப்பாணம் முழுவதும் இந்த ரகக் கார்கள்தான் அதிகமாக உபயோகப்படுத்தப் படுகின்றன.

இலங்கையின் பிற பகுதிகளில் பெரும்பாலும் 'லேட்டஸ்ட் மாடல்' கார்களையே பார்த்திருந்த எனக்கு, இந்தப் பழைமை மோகம் புதுமையாக இருந்தது.

அங்கு தனது காரைப் பழுது பார்ப்பதற்காகக் கொண்டு வந்திருந்த இந்திரதாஸ் என்னும் வாலிபர் என்னை அடையாளம் தெரிந்து கொண்டு என்னிடம் வந்தார். இவரிடம் எனது சந்தேகத்தைக் கேட்டேன்.

''இந்த ஊர் ரோடுகள் கரடுமுரடானவை. ஆகவே, நல்ல உறுதியான கார்களே இங்கே தாக்குப் பிடிக்கும். அதுமட்டுமல்ல; இங்கு உபயோகத்தில் இருக்கும் ஆஸ்டின் கார்களில் பெரும்பாலானவை அரைநூற்றாண்டுகளாக ஓடிக் கொண்டிருக்கின்றன. இன்றும் அவை மெருகு குறையாமலிருப்பதன்

காரணம், இங்குள்ள மெக்கானிக்குகளின் வல்லமையே! இவர்கள் பழைய கார்களைப் புதுப்பிப்பதில் நிகரற்றவர்கள். கொழும்பு போன்ற பிறபகுதிகளில் உள்ளவர்களெல்லாம் தங்கள் கார்களை 'ஓவர்ஹால் ரிப்பேர்' செய்வதற்கு இங்கேதான் அனுப்புகின்றார்கள்'' என்றார் இந்திரதாஸ்.

இதற்கிடையில் எங்கள் கார் 'ரிப்பேர்' முடிவடைந்திருந்தது. அவரிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினோம். ''அடுத்தபடியாக எங்களை எங்கே அழைத்துப் போகப் போகிறீர்கள்...?'' என்று ரங்கநாதனைக் கேட்டேன்.

''யாழ்ப்பாணத்து விவசாயம் எப்படி என்று தெரிந்துகொள்ள விரும்பினீர்களே, பார்த்து விடுவோம்'' என்று சொன்னார் ரங்கநாதன்.

இணுவில் என்ற ஊரில், ரயில் நிலையத்திற்குச் சமீபமாகக் காரை நிறுத்தச் சொல்லி எங்களை இறங்கச் சொன்னார் ரங்கநாதன்.

மாலை நேரம். மஞ்சள் வெயிலில் அந்த இடம் மிக ரம்மியமாக இருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் ஒரே தோட்டவெளி. செம்மண் பூமி. பயிர்கள் எல்லாம் நன்றாகச் செழித்து வளர்ந்திருந்தன. கிணறுகளும், 'பம்ப்'செட்டுகளும் ஆங்காங்கு இருந்தன. சில 'பம்ப்'செட்டுகள் இயங்கி, நீர்பாய்ச்சிக் கொண்டிருந்தன.

செருப்புக்களைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு தோட்டத்தினுள் பிரவேசித்தோம். புகையிலை, கத்தரி, வெங்காயம், மிளகாய், வெண்டை என்று பலவகையான செடிகளைப் பயிரிட்டிருந்தார்கள். ஒருபக்கத்தில் வாழைத் தோட்டம் தனியாக இருந்தது. எல்லாவற்றிற்கும் — வாழை உட்பட — தனித் தனியாகப் பாத்திகள் கட்டி நீர் பாய்ச்சியிருந்தார்கள். வாய்க்கால்கள், பாத்திகள் எல்லாம் மிக நேர்த்தியாகக் களை பிடுங்கப்பட்டிருந்தன.

''உங்களுடைய பிரதான வருமானம் விவசாயத்தில்தான் இருக்கிறதா?'' என்று தோட்டக்காரரைக் கேட்டேன்.

''ஆம்... எனது தொழிலே 'கமம்'(விவசாயம்)தான். எனது பிள்ளைகளை நன்றாய்ப்படிக்க வைக்கின்றேன். முடிந்தால் அவர்கள் கூடிய வருவாயுள்ள வேறு தொழிலுக்குப் போவார்கள். இல்லையேல் இதையே செய்யவேண்டியதுதான்'' என்று சொல்லியபடி, பாடசாலையிலிருந்து திரும்பியதும் தந்தைக்கு உதவியாக நீர்பாய்ச்சிக் கொண்டிருந்த தன் மகனைச் சுட்டிக்காட்டினார் அந்தக் 'கமக்காரர்.' அங்கு நின்ற சில நிமிடங்களிலேயே புரிந்து கொண்டேன். நிலத்தினின்றும் பயனடைவதற்கு அங்குள்ள மக்கள் மிகுந்த பிரயாசையுடன் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியிருக்கிறது என்று!

யாழ்ப்பாணத்தில் என்னோடு பழக, மனம் கலந்து உரையாடி, என்னை மகிழ்வித்த மறக்கவொண்ணாத நண்பர்கள் பலர். அந்த அருமை இன்னும் என்னை மனம் நெகிழச் செய்கிறது... நினைவில் நிற்கும் ஷண்முகலிங்கம், ஹேமா ஷண்முகலிங்கம், தர்மலிங்கம், தியாகராசா (எஸ். டீ. ஆர்.), யாழ்ப்பாணம் சிவன் கோவில் மானேஜரும் - குடும்பத்தினரும்....

இந்த மனநிறைவுக்கு நடுவே யாழ்ப்பாணத் தமிழர்களிடம் ஒரு மனக் குறையும் இருப்பதை நான் புரிந்து கொண்டேன்.

'இலங்கைக்கு வரும் யாத்திரிகர்களில் பலர் யாழ்ப்பாணத்துக்கு வருவதில்லை. கொழும்பிற்கு வருபவர்கள் என்ன காரணத்தாலோ எங்களை ஒதுக்கி விடுகிறார்கள்' என்பதுதான் அந்தக் குறை.

அதைக் கேட்டபோது எனக்குச் சொல்லத் தோன்றியது, 'யாத்திரிகர்கள் ஆர்வத்துடன் வந்து கூடும்படியாக இங்கே ஏதும் இல்லையே...? வசதிகள் கூடப் போதவில்லையே?' என்பதுதான்.

இயற்கையான எழிலும், அழகான சூழ்நிலையும், பக்தி மணக்கும் இடங்களும், பண்பு சம்மந்த மக்களும் நிறைந்துள்ள யாழ்ப்பாணம், யாத்திரிகர்களைக் கவர்ந்து இழுக்கும் பகுதியாக மாறக்கூடிய வாய்ப்பு நிச்சயமாக இருக்கிறது. அதற்குரிய பணிகளை அவர்கள் திட்டமிட்டுச் செய்யவேண்டும்.



# 9

யாழ் விவசாயி.

**யா**ழ்ப்பாணத்தில் தமிழர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி எந்தத் தமிழரிடம் கேட்டாலும், ''எங்கள் தலைவர் அமிர்தலிங்கத்தைக் கேளுங்கள்... அவரைவிடத் தெளிவாக, ஆதாரபூர்வமாக வேறு யாரும் எங்கள் உணர்ச்சிகளைப் பிரதிபலித்துப் பேசமுடியாது'' என்றுதான் சொல்வார்கள்.

திரு. அமிர்தலிங்கம் அவர்களைத் திரு. செல்வா அவர்களுடன் சில ஆண்டுகளுக்கு முன்பு நான் சென்னையில் சந்தித்ததுண்டு. அவரை மீண்டும் சந்திக்கவும், நயமிகுந்த இனிய தமிழைக் கேட்கவும் எனக்கு மிகுந்த ஆவல் இருந்தது. ஆகவே, இப்படி ஒரு சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு அவரைச் சந்திக்க நான் போவதில் எனக்கு இரட்டை லாபம் இருந்தது. என் மகிழ்ச்சிக்குக் கேட்பானேன்...?

அவருடைய அந்தரங்க உதவியாளர் திரு. பேரின்பநாயகத்திடம் இதற்காக நான் அணுகியபோது அவர் உடனே உதவ முன்வந்தார். நான் கண்ட பேட்டியில் தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கம் கூறியவற்றை



அப்படியே இங்கே அளித்திருக்கிறேன். இலங்கையின் அரசியல் பின்னணியையும், தமிழர்களின் மனக்குமுறலையும் அவர் கூறியுள்ளபடியே இங்கு வாசகர்கள் முன் வைக்கிறேன்....

''என்னை அடையாளம் தெரிகிறதோ?'' என்று வணக்கம் தெரிவித்தபடி கேட்டேன்.

''தெரியாமல் என்ன...? ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் சென்னைக்கு திரு. செல்வாவுடன் நான் வந்தபோது சந்தித்திருக்கிறேனே...!'' என்று மன அண்மை தெரியும் புன்னகையுடன் என்னை வரவேற்ருர் திரு. அமிர்தலிங்கம்.

''அப்புறம் ஏன் நீங்கள் தமிழ்நாட்டுக்கு வரவில்லை?'' என்றேன்.

''எவ்வளவோ காரணங்கள்... ஆனல் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பது தான் முதற் காரணம். இலங்கை அரசு எனக்கு அனுமதி தர மறுத்து விட்டது. இன்னெரு காரணம், இப்போது தமிழ்நாட்டில் உள்ள அரசியல் சூழ்நிலைதான். ஒன்றுக்கொன்று எதிரான பலருடைய கொள்கைகளையும் நாங்கள் அனுசரித்து ஒத்துப்போக வேண்டியிருக்கிறது (We have to satisfy so many Conflicting Loyalties). அதனல் ஏற்படும் தயக்கமும் காரணம்...'' என்று மீண்டும் புன்னகை செய்தார் அவர்.

''உங்கள் மகன் எங்கே இருக்கிருர் இப்போது?'' என்று கேட்டேன்.

''எனது மகன் தற்சமயம் லண்டனில் படிக்கிருன். பதினைந்து வயதில் சென்னையில் படித்துக் கொண்டிருந்தபோது இலங்கை டெபுடி-ஹை கமிஷனர் அலுவலகத்துக்கும், மகாபோதி விகாரைக்கும் குண்டு வைத்ததாகக் கைது செய்தார்கள். பிறகு மாணவன் என்ற ரீதியில் விடுதலை செய்தார்கள்'' என்ருர் அமிர்தலிங்கம்.

''ஒரு முக்கியமான அரசியல் தலைவரின் மகன் என்ருலே இப்படித்தான் சங்கடங்கள் நேர்ந்து விடுகின்றன...'' என்றேன் நான்.

''எனது மகன் மட்டும் அல்ல; இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான இலங்கைத் தமிழ் இளைஞர்கள், தம் தாய் தந்தையரின் முகத்தைக்கூடப் பார்க்க முடியாமல் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் (Political Asylum) நாடிக் கண்மறைவாக வாழுகிருர்கள்'' என்ருர் அவர்.

''உங்களைத் தொடர்ந்து உங்கள் மகனும் அரசியலில் உங்களைப்போலவே ஈடுபட விரும்புவது நியாயந்தானே...?'' என்று கேட்டேன்.

கையைத் தூக்கி மறுப்புத் தெரிவிப்பது போல அசைத்தார் அமிர்தலிங்கம். ''இல்லை... இல்லை.... பாரம்பரியமாக ஒரு குடும்பத்தில் உள்ளவர்களுக்கே அரசியல் தலைமையை அளிப்பதனை நான் எதிர்க்கிறேன். எனது மகன் அப்படி ஒருவனுக வருவதை நான் விரும்பவில்லை. என் மகனும் அதை விரும்பவில்லை.''

''இங்கே உள்ள தமிழர்களின் இன்றையப் பிரச்சினைகளின் பின்னணி என்ன? உங்கள் குரல் இங்கே உள்ள லட்சக்கணக்கான தமிழர்களின் குமுறலைப் பிரதிபலிக்கிறது என்பது எனக்குத் தெரியும்...'' என்றேன் நான்.

''இலங்கையில் அந்தக் காலத்தில் மூன்று மாநிலங்கள் இருந்தன. வட இலங்கை கிழக்குப்பகுதி உட்பட – தமிழ்; மேற்குக்கரை—சிங்களம்; மத்தியப் பகுதி–சிங்களம்—இவைதான் அன்றையப் பிரிவுகள். அதன்பின் போர்த்துக்கீசியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் ஆட்சியின்கீழ் இலங்கையை ஒன்ருக்கினுர்கள். 1948-ம் ஆண்டில் சுதந்திரம் வழங்கிய போது, தமிழர்கள் சிங்களவர்களுக்குக் கீழ் கொண்டு வரப்பட்டார்கள். அதன்பின் படிப்படியாக எமது உரிமைகள் சிங்களவரால் பறிக்கப்பட்டன. சுதந்திரம் கிடைத்த மூன்று ஆண்டுகளுக்குள், இந்திய வம்சாவளித் தமிழ

களின் அரசியல் பிரவேசம் அரைப்பங்காக ஆக்கப்பட்டது. தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் திட்டமிட்டுச் சிங்களவர்களைக் குடியேற்றி ஞர்கள். உதாரணமாக கிழக்கு மாகாணத்தில், 1,80,000 சிங்களவர்களைக் குடியேற்றி, இரண்டு சிங்களத் தொகுதிகளை உருவாக்கி, தமிழர்களின் பாரம்பரிய நிலத்தில் மூன்றில் ஒரு பங்கைத் தம் வசமாக்கிக் கொண்டார்கள்'' என்ருர் அமிர்தலிங்கம்.

''தொடர்ந்து இந்தப் பாரபட்சம் வளர்ந்து வருகிறதா...?'' என்றேன்.

''ஆமாம்... ஒரே ஒரு உதாரணம்: தற்போது ஒரு தமிழர் 'பாஸ் போர்ட்' பெறுவதாஞல், தமது பிரஜா உரிமையை நிரூபிக்க வேண்டியுள்ளது. சிங்களவர் விஷயத்தில் அப்படி இல்லை'' என்ருர்.

''தமிழர்களுக்குத் தொடர்ந்து சோதனைகள் நேர்ந்து வருகின்றனவா?'' என்று கேட்டேன்.

''ஒன்ரு... இரண்டா? 1958-லும், ஆகஸ்ட் 1977-லும் நடைபெற்ற இனக்கலவரம் தான் தமிழர்களைச் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழவே முடியாது என்ற நிலைக்குத் தள்ளி இருக்கிறது. 1957-ல் பண்டாரநாயகா-செல்வா ஒப்பந்தத்தை உடைக்கக் காரணமாக இருந்தவர் ஜே. ஆர். அவர்கள். அப்போது கண்டிக்குப் பாதயாத்திரை சென்று, சிங்களவர்களைத் தமிழர்களுக்கு விற்று விட்டார் என்று கோஷம் எழுப்பியவர் அவர்'' என்ருர் அமிர்தலிங்கம்.

''1965-ல் ஒப்பந்தம் ஒன்று உருவாயிற்றே?'' என்றேன் நான்.

''ஆமாம். அப்போது டட்லி-செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனல், எங்கள் உதவியுடன் ஆட்சியை அமைப்பதற்காகச் செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்தை அப்புறம் கிழித்தெறிந்து விட்டார்களே...'' என்ருர் வருத்தத்துடன் அவர்.

''பிறகு முயற்சிகள் ஏதும் எடுக்கப்படவில்லையா?'' என்று கேட்டேன்.

''1972-ல் சிரிமாவோ அரசாங்கம் குடியரசு அரசியல் அமைப்பைத் தயார் செய்தபோது, எமது திருத்தங்கள் ('மகஜர்') பூரணமாக நிராகரிக்கப்பட்டுவிட்டன. அதன்பின் ஓர் ஆறு அம்சக் கோரிக்கை (Minimum Demands) கொடுத்தும் அதையும் தள்ளி விட்டார்கள்'' என்ருர் அவர்.

''உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்று மட்டும் குறிப்பிடுகிறீர்களா? அநியாயம் நடக்கிறது என்றும் சொல்கிறீர்களா...? நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று கேள்விகளாக அடுக்கினேன் நான்.

''அரசுக்கு எதிராக எந்தக் கிளர்ச்சி நடந்தாலும்—எதிர்க்கட்சிகள் அதில் பங்கேற்ருலும் — தமிழர்களைத்தான் அதற்குக் காரணமாகக் காட்டிச் சொக்கட்டான் ஆடி விடுகிருர்கள்! (The Tamils Become the Pawns), ஒரு காரணமும் இன்றியேகூடத் தாக்குகிருர்கள். 1974-ம் ஆண்டு தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஒரு குற்றமும் செய்யாத பத்துத் தமிழர்களின் உயிர்கள் பலியெடுக்கப்பட்டன. இதற்கு ஒரு பாரபட்சமற்ற விசாரணை நடத்தவும் மறுக்கப்பட்டது. இவை எல்லாம் சேர்ந்துதான் எம்மை சேர்ந்து வாழ்வதில் பயனில்லை என்று தீர்மானிக்க வைத்தன'' என்ருர் அவர்.

''அரசு அமைப்பிலேயே நீங்கள் ஈடுபட மறுக்கிறீர்கள் என்று சொல்ல முடியுமா...? எதிர்க்கட்சித்தலைவராகப் பொறுப்பேற்று இருக்கிறீர்களே.?'' என்றேன்.

''எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டதில் கொள்கை முரண்பாடு ஏதும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இது அரசாங்கம் பரிந்து அளித்த பதவி அல்ல. ஜனநாயக முறைப்படி எனக்குக் கிடைத்த

வாய்ப்பு இது. இதில் சில உரிமைகளும், வசதிகளும் எனக்குக் கிடைக்கலாம். ஆனால், அவைகூட அரசின் தவறுகளை எதிர்த்துச் சுட்டிக்காட்டுவதற்காகத் தானே...? அண்மையில் ஒரு விழாவில் பிரதமருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும்கூட இதனை நான் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். எந்தப் பதவியில் இருந்தாலும் என் கொள்கைகளை விட்டுக் கொடுக்க மாட்டேன்! நான் விடுதலையை விரும்பும் ஓர் இயக்கத்தின் (Liberation Organisation Movement) தலைவனாக இருக்கிறேன்'' என்றார்.

''உங்கள் இயக்கத்தின் போராட்டங்களை அமைதியாகவே நடத்த விரும்புகிறீர்களா?'' என்று கேட்டேன்.

''ஆமாம்.... அமைதியான வழிகளை ஆய்ந்து தொடரவே விரும்புகிறோம். அதிலேயே வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது'' என்றார் திரு. அமிர்தலிங்கம். பின் தொடர்ந்து, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமிழர்களுக்கு இறையருளாகக் கிடைத்த தலைவர். தமிழர்கள் தமது எல்லைகளைக் காத்துக் கொண்டு, ஒரு தனி இனமாக வாழ்ந்து சிறக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்திக் காட்டினார் செல்வா...'' என்றார் உணர்ச்சிப் பரவசத்தோடு.

''தமிழினத்தின் தந்தை என்றே அவரைக் கருதுகிறார்கள்...!''

''ஆமாம்! அவரை ஈழத் தந்தையாகவே கருதுகிறோம் (Father of Ealom Tamil Nation). திரு. திருச்செல்வம் அவர்கள் அனைத்துலகச் சட்ட ரீதியில், எங்கள் உரிமைகளுக்கு ஒரு பின்புலம் அமைத்துக் கொடுத்தார். அவர் உலகத்துக்கு எடுத்துச் சொன்னது இது: 'சிங்களவர்கள் தமிழர் மீது ஆட்சிபுரிய சம்மதம் பெற்றோ, வெற்றி கொண்டோ, சட்ட ரீதியான தொடர்பு பெற்றோ-ஆணை பெறவில்லை. (Sinhalease did not obtain A Mandate from the Tamil People either by consent, conquest or by Legal Continuity to Rule us.)' தமிழர்களின் தனித்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும்'' என்றார் அமிர்தலிங்கம்.

''தமிழ்நாட்டில் உள்ள சகோதரர்களிடம் நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள்...?'' என்றேன்.

''ஒரு நம்பிக்கை தரும் துணைப்பலம்-அனுதாபம் இவற்றைத்தான்... தமிழ்நாட்டில் உள்ள எல்லாத் தலைவர்களிடமும் நாங்கள் இதை எதிர்பார்க்கிறோம். இந்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, இலங்கைவாழ் தமிழர்களுக்கு உரிமைகள் கிடைக்க, எங்களுடைய பிரச்சினைகள் தீர அவர்கள் வழிசெய்யலாம். ஆனால்...'' என்று இழுத்தார் அவர்.

நானும், ''ஆனால்...?'' என்றேன்.

''தமிழ்நாட்டில் உள்ள தலைவர்களிடமே இன்று ஒற்றுமை இல்லையே... அண்ணாவைப் போன்ற பெருந்தன்மையுடன், மக்கள் பற்றும் கொண்ட ஒரு பெருந்தலைவர் உயிரோடு இருந்திருந்தால், இன்று இந்த நிலைமை வந்திராது. இந்தச் சூழ்நிலை எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. இது சுமுகமாக மீண்டும் மாறவேண்டும் என்றே நாங்கள் விரும்புகிறோம்'' என்றார் வருத்தத்துடன் அமிர்தலிங்கம்.

கைகுவித்து வணங்கி எழுந்தேன். எனக்கு விடைகொடுத்து வாசல்வரை வந்து வழியனுப்பினர் திரு. அமிர்தலிங்கம். அதற்குப் பிறகு அந்த இனிய முகமும், குளிர்ந்த புன்னகையும், நயமான குரலும், நெடுநேரத்துக்கு என் உள்ளத்தில் எதிரலைகளை எழுப்பிய வண்ணமிருந்தன...



# 10

சாயிபாபா பக்தர்களான குமாரசிங்ஹ தம்பதிகள்.

உலகத்தில் எங்கே பிரயாணம் செய்தாலும் நான் சந்திக்க நேரும் ஒருவகை பக்தர்கள் உண்டு. அவர்கள்தாம் பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் பக்தர்கள். அவர்கள் என்னை எப்படியோ சந்தித்து விடுவார்கள். பாபாவின் படத்தை எங்கேயாவது நான் தவறாமல் பார்த்து விடுவேன். சோவியத் யூனியனில்கூட எனக்கு இந்த அனுபவம் கிடைத்தது. இலங்கை மட்டும் விலக்கா என்ன...?

அங்கே பாபாவின் பக்தர்கள் நிறைய இருக்கிறார்கள். அவருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் திரு. கோவூரும் அங்கேதான் இருக்கிறார். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்குத் திரும்பியதும் எனக்கு ஊரைச் சுற்றிக்காட்ட உதவ முன்வந்தார் நண்பர் கந்தசாமி. ஆர்வமும் துடிப்பும் உள்ள தமிழர்.

''நான் ஒரு சிங்கள நண்பர் வீட்டிற்கு அழைத்துப் போகிறேன். அவர் ஒரு தீவிர பாபா பக்தர். பார்க்கலாமா...? உங்களுக்கு ஆட்சேபணை ஒன்றும் இல்லையே?'' என்று கேட்டார் கந்தசாமி.



''பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல ஆயிற்று! அங்கேயே போகலாம்'' என்றேன். வழக்கம்போல பாபா என்னை ஈர்த்த விதம், எனக்கு உள்ளூர ஒரு பிரமிப்பையும் உண்டாக்கிற்று. அங்கே போவதற்கு முன்னதாக திரு. ஞானசேகரர் என்ற தமிழன்பர் வீட்டுக்குப் போனோம். வனஜா என்ற பெண்ணை அங்கே சந்தித்தேன்.

''உங்களுக்கு அந்த நண்பரின் குடும்பத்தைத் தெரியுமா..?'' என்று அவரிடம் கேட்டேன்.

''ஓ! குமாரசிங்ஹவைத்தானே கேட்கிறீர்கள்? அவர்கள் வீட்டில் எங்கே திரும்பினாலும் பாபாவின் படம்தானே...?'' என்றார் வனஜா.

''நீங்களும் பாபாவிடம் பக்தி கொண்டவரோ...?'' என்று கேட்டேன்.

''அந்த அதிர்ஷ்டம் எனக்கும் கிடைத்தது. நான் பிரமை பிடித்தவளைப் போல வாழ்ந்து கொண்டிருந்தேன். அடிக்கடி மயங்கி விழுந்து விடுவேன். ஒருதடவை பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா என் தலையைத் தொட்டு ஆசீர்வதித்தார். அப்புறம் எனக்கு அந்த நோய் முழுவதும் நீங்கி விட்டது. எனக்கு மறுவாழ்வு கிடைத்தது...'' என்று கண்களில் ஒரு புது ஒளி தெரியப் பேசினார் வனஜா.

பாபாவின் பக்தர்களுக்கு இது புது அனுபவம் இல்லை. இதைப் போன்ற நிகழ்ச்சிகளை அவர்கள் நிறையக் கேட்டிருப்பார்கள்; அனுபவித்திருப்பார்கள்.

இரத்மலானை என்ற இடத்தில் குடியிருந்த குமாரசிங்ஹவின் வீட்டுக்குப் போனோம். தெருவிலிருந்து உள்ளே நுழையும்பொழுதே பாபாவின் முகம் என்னைப் புன்னகையுடன் வரவேற்றது. உள்ளே நுழைந்து எங்கே திரும்பினாலும் பாபாவின் படம் என் கண்களில் பட்டது. உட்காரும் ஹாலில், பூஜை அறையில்.... பாபாவின் முகம்... அபயகரம்... பாதங்கள்...

எங்கும் ஒரு தெய்விக மணம் கமழ்ந்து கொண்டிருந்தது.

''பஜனை நடக்கும் இடத்துக்குப் போகலாம் வாருங்கள்...'' என்று அழைத்துக்கொண்டு போனார் குமாரசிங்ஹ.

''சுப்ரமண்யம் — சுப்ரமண்யம் — ஷண்முகநாதா — சுப்ரமண்யம்...'' என்ற கோஷம் காதில் விழுந்தது போன்ற உணர்ச்சி என்னை உடல் புல்லரிக்கச் செய்தது. திரும்பிப் பார்த்து என்னருகே கண்களில் நீர் பெருக நின்றிருந்த திருமதி குமாரசிங்ஹவிடம், ''நீங்கள் பௌத்த மதத்தினர் அல்லவா...? எப்படி ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் பக்தர்கள் ஆனீர்கள்?'' என்று கேட்டேன்.

''பாபா எங்களை ஆட்கொண்டு விட்டார்!'' என்றார் அந்த அம்மணி நிதானமாக.

''எப்படி அது நேர்ந்தது?'' என்று கேட்டேன்.

''அந்த அனுபவத்தை சொல்லி விவரிக்க முடியாது. அது ஓர் உன்னதமான 'எக்ஸ்பீரியன்ஸ்' -- அவ்வளவுதான். பாபாவிடம் கொள்ளும் பக்திப் பற்றைப் பேசி விவரிக்க முடியாது; எழுத்தில் வருணிக்கவும் முடியாது. அதை உணர்ந்து அனுபவிக்க வேண்டும். அந்த உணர்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும். அப்போதுதான் அது புரியும்'' என்று பரவசம் ததும்பும் முகத்துடன் பதில் சொன்னார் திருமதி. குமாரசிங்ஹ.

''பாபாவைப் போல சாமர்த்தியமான ஏமாற்று வித்தைக்காரர் யாரும் இருக்க முடியாது! அவர் அப்படிப் பிரமாதமாக என்ன செய்து விட்டார் சொல்லுங்கள்? எதுவானாலும் நானும் அதைச் செய்து காட்டுகிறேன்!'' என்று என்னிடம் கொஞ்சம் கடுமையான குரலிலேயே சொன்னார் எழுபது வயதைக் கடந்த அந்தப் பெரியவர்...

அவர்தான் திரு. கோவூர்.

கோவூரைப் பற்றி உங்களுக்கு நிறையத் தெரிந்திருக்கும். பெங்களூர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்து விலகிய டாக்டர் நரசிம்மையா, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, பாபாவின் தெய்விக சக்தியைப்பற்றி ஆராய்வதற்காக ஒரு குழு அமைத்ததும், அச்சமயம் கோவூர் இந்தியாவுக்கு வந்ததும், சென்னையில் நிகழ்த்திய சொற்பொழிவுகளும் பலரும் அறிந்த விஷயந்தான். அப்போதே நான் அவரைப் பார்க்க முயன்றேன். அது கைகூடவில்லை. இப்போது இலங்கையில் கோவூரைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. அவருடைய இல்லத்துக்கு டெலிபோன் செய்தேன். ''இரவு எட்டரை மணிக்கு வாருங்கள்'' என்று அவரே போனில் பதில் சொன்னார்.

அவருடைய வீட்டுக்கு நான் போனபோது, பனியன் ஒன்றை அணிந்து கொண்டு நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார் கோவூர். வழுக்கையான தலையும், மூக்குக் கண்ணாடியும், குட்டை வெண்ணிறத் தாடியுமாகக் காட்சி அளித்த அந்த முதியவரின் தோற்றத்தில் எழுபது வயதைக் கடந்த முதுமையைப் பார்க்க முடியவில்லை. அவருடைய பேச்சிலும், பளிச்சென்ற கூர்மையான பார்வையிலும், சுறுசுறுப்பிலும் ஒரு இளம் வாலிபனின் துடிப்பினையே என்னால் உணர முடிந்தது.

அவரை அங்கே அப்படிப் பார்த்தபோது எனக்குத் திருச்சியில் பெரியார் ஈ.வே.ரா. அவர்களைச் சந்தித்த ஞாபகம்தான் உடனே மனத்தில் எழுந்தது. அவரைப் பற்றி கோவூரிடம் சொன்னேன்.

பெரியார் ஈ.வே. ரா.வின் பெயரைக் கேட்டதுமே அவருடைய முகம் மலர்ந்தது. ''பெரியார் மட்டும் ஆக்ஸ்போர்டு அல்லது கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்திருந்தால் ஒரு கார்ல்மார்க்ஸ், ஒரு ரஸ்ஸல்—அந்த அளவில் உலகப் புகழ் பெற்றிருப்பார்!'' என்று பெருமிதத்தோடு சொன்னார்.

தமிழ்ப் பெரியார் ஒருவரை அவர் அவ்விதம் குறிப்பிட்டது எனக்கும், பெருமையாகத்தான் இருந்தது. தொடர்ந்து கோவூர் பேசினார். அவரிடம் பேசியபோது எனக்குக் கிடைத்த விஷயங்கள் மிகவும் அபூர்வமானவை...

''நான்கு தம்ளர்களில் தண்ணீர் கொண்டு வந்து வை!'' என்று வேலையாளிடம் சொன்னார் கோவூர். தனியாக வந்திருக்கும் எனக்கு நான்கு தம்ளர் தண்ணீர் எதற்கு என்று ஆச்சரியப்பட்டுப் போனேன்.

ஓர் இலங்கை நாணயத்தைக் கையில் எடுத்துக் கொண்டு என்னிடம், ''இதோ பாருங்கள்'' என்றார். பார்த்தேன். ''என் அருகில் உட்காருங்கள்!'' என்றார். நகர்ந்து உட்கார்ந்தேன். ''பயபக்தியுடன் கவனிக்க வேண்டும்'' என்றார்; பேசாமல் மூச்சு விடாமல் கவனித்தேன்.

''என்னை நீங்கள் தொடக்கூடாது'' என்றார் ரொம்ப 'சீரிய'ஸாக.

''ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?'' என்று பணிவுடன் கேட்டேன்.

''என் மீது கடவுள் ஆர்ப்பவிக்கிறார். ஒரு தெய்விக சக்தி என்னை ஆட்கொள்ளுகிறது இப்போது. நீங்கள் தொட்டால் அந்த யோகநிலை கலைந்து போகும்'' என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. கோவூர் ஒரு நாத்திகவாதி என்றல்லவா சொன்னார்கள்...!

கையிலிருந்த நாணயத்தை ஒவ்வொரு தம்ளரிலும் போட்டுப் போட்டு மாற்றி மாற்றி எடுத்தார். ''நன்றாகப் பாருங்கள்'' என்று சொன்னார். நான் பார்த்துக் கொண்டே இருந்தேன். அந்த நாணயம் தங்கநாணயமாக மாறி விட்டது. எனக்குப் பிரமிப்பாக இருந்தது.

''எப்படி இந்த மாதிரி மாற்றினீர்கள்?'' என்று கேட்டேன்.

''நான் மாற்றவில்லை. 'லார்ட் கிருஷ்ணு' அப்படி மாற்றி விட்டார்!'' என்ருர் அவர். எனக்குத் திகைப்பாக இருந்தது. பகுத்தறிவுவாதி கோவூர்தான் பேசுகிருரா...?

''அப்படியானல் நீங்களும்...'' என்று இழுத்தேன்.

''ஹோ...'' என்று வாய்விட்டுச் சிரித்தார் கோவூர். ''இந்த 'பிராடை' த்தான் சாமி பெயரைச் சொல்லிச் செய்கிருர்கள். பக்தியும் இல்லை! சித்தும் இல்லை! வெறும் மாஜிக்! எந்த மந்திரவாதியும் இதைச் செய்யலாம்.''

''நீங்கள் எப்படிச் செய்தீர்கள்?''

''சொல்ல மாட்டேன். அது என்னுடைய ரகசியம்'' என்ருர் கோவூர் ஒரு புன்னகையோடு.

கேரளத்தைச் சேர்ந்த கோவூர் என்ற பகுத்தறிவுவாதி இலங்கையில் இருந்து செய்துவரும் இந்தப் பிரச்சாரத்தைப் பற்றி நான் நிறையக் கேள்விப் பட்டிருக்கிறேன். இரண்டு, ஆண்டுகளுக்கு முன்பு அவர் இந்தியாவுக்கு வந்த போது, ''கடவுள் என்பதெல்லாம் பொய். அப்படி ஒரு சக்தி இருந்தால் எனக்கு விஞ்ஞானபூர்வமாக நிரூபித்துக் காட்டுங்கள். நான் ஒரு லட்ச ரூபாய் பரிசு தருகிறேன்'' என்று ஒரு சவால் விட்டார். தமிழ்நாட்டைச் சேர்ந்த கிறிஸ்துவப் பாதிரியார் ஒருவரும், திரைப்பட நடிகர் ஒருவரும்கூட அந்தச் சவாலை ஏற்ருர்கள். பத்திரிகைகளில் அதைப்பற்றிய செய்திகளும், பேட்டிகளும் நிறைய வெளிவந்தன...

சென்னையில் கோவூர் கூட்டங்களில் பேசினர். பகுத்தறிவுவாதிகள் கழகம் வரவேற்பு கொடுத்தது. ஒரு 'கோட்டை' அணிந்து பலருக்கும் விபூதி வரவழைத்துக் கொடுத்தார் கோவூர். இதைப்பற்றி, 'இல்லஸ்டிரேடட் வீக்லி ஆப் இந்தியா' பத்திரிகையில் படக்கட்டுரை ஒன்றும் வெளியாகியிருந்தது. 'கோட்டின் வலது கைப் பக்கத்தில் உள்ளே ஒரு நீளப் பை இருக்கிறது. அதில் நிறைய விபூதி இருக்கிறது. கையை நான் அசைத்தால் அதிலிருந்து விபூதி துளித்துளியாக விழுகிறது' என்று அதில் தன் ரகசியத்தையும் போட்டு உடைத்திருந்தார் கோவூர். அவர் ஒரு சுவாரசியமான பர்சனலிட்டி!

பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபாவின் படங்களைப் போட்டுக் கட்டுரைகள் எழுதிய 'இல்லஸ்டிரேடட் வீக்லி ஆப் இந்தியா' தான் இந்தக் கட்டுரைகளையும் வெளியிட்டது. பெங்களூர் பல்கலைக் கழகத்தின் சார்பாக, திரு. நரசிம்மையா துணைவேந்தர் என்ற தகுதியில், ஒரு கமிட்டியை அமைத்துத் தெய்விக சக்தி என்று சொல்லப்படும் சித்துகளை விஞ்ஞானபூர்வமாக ஆராய்வது பற்றிய கட்டுரைகளையும் அதே 'வீக்லி' தான் வெளியிட்டது. திரு. குஷ்வந்த்சிங் ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற நிலையில் இருந்து இந்த இருவிதக் கட்டுரை களையும் வெளியிட்டார். அதுபோலவே, ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் நடுநிலையாக இருந்து எழுதுவது இங்கு என் நோக்கம்....

பனியன் அணிந்து நாற்காலியில் சாய்ந்து அமர்ந்திருந்த அவருடைய எளிய தோற்றம் என்னைக் கவர்ந்தது. அவருடைய பார்வையும் எளிமையும் மட்டும் எனக்கு பெரியார் ஈ.வே.ரா.வை ஞாபகப்படுத்தவில்லை; அவர் பேசிய விதமும்கூட எனக்கு அவரையே ஞாபகப்படுத்திற்று. தனது எண்பத்தெட்டா வது வயதில்கூடப் பெரியார் ஒரு கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவதற்குப் போனல், மிகுந்த கவனத்துடன் தயார் செய்து கொண்டு போய்த்தான் பேசுவார். ஏதோ முதல் முறையாகப் பேசப்போவது போலத்தான் அதில் ஓர் ஆழ்ந்த ஈடுபாடு இருக்கும். ஐம்பது பேர் கூடியுள்ள கூட்டமானலும் சரி; ஐம்பதினயிரம் பேர் கூடியுள்ள கூட்டமானலும் சரி; அவர் பேசுவது ஒரே மாதிரி மிகுந்த அக்கறையுடன், சிந்தனையைத் தூண்டுவது போலத்தான் இருக்கும். எவரும் தான் செய்யும் எந்த வேலையையும் ஒரு சிரத்தையுடன்

அப்பழுக்கின்றிச் செய்ய வேண்டும் என்பது பெரியார் சொல்லிவந்த, வாழ்க்கையில் கடைப்பிடித்த முக்கியமான கொள்கைகளில் ஒன்று.

இங்கே கோவூர் பேசியபோதும் அதுபோன்ற ஒரு சிரத்தையையே என்னுல் உணர முடிந்தது. அவருடைய குரலில் எந்தத் தயக்கமும் இல்லை. தனக்குப் பட்டவைகளை அப்படியே சொல்வதில் ஒரு தெளிவும் இருந்தது. எதைப் பேசினுலும் ஒளிவு மறைவு இன்றிப் பேசினுர் கோவூர்.

''கடவுளைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''நத்திங்...!'' என்ருர் கோவூர் ஓர் அலட்சியப் புன்னகையோடு.

''ஏன் அப்படிச் சொல்லிவிட்டீர்கள்?'' என்றேன்.

''இல்லாத ஒருவரைப்பற்றி நான் என்ன கருத்துச் சொல்ல முடியும்?'' என்று சொல்லிச் சிரித்தார் கோவூர்.

''நான் இப்போது ஸ்ரீசத்ய சாயிபாபா பக்தர் ஒருவரின் வீட்டுக்குப் போய்விட்டு வருகிறேன்'' என்றேன்.

''அவர்களுக்கு என்னுடைய அனுதாபங்கள்!'' என்ருர் கோவூர்.

''ஏன்...? எனக்கும் ஸ்ரீசத்ய சாயிபாபாவிடம் மிகுந்த ஈடுபாடு உண்டு'' என்றேன் தொடர்ந்து.

''என்னுடைய ஆழ்ந்த அனுதாபங்கள் உங்களுக்கும்கூட...'' என்ருர் கோவூர் விடாப்பிடியாக.

''ஸ்ரீசத்ய சாயிபாபாவைப் பற்றி உங்களுடைய கருத்து என்ன...? தெளிவாகச் சொல்லமுடியுமா?'' என்று கேட்டேன்.

''தாராளமாகச் சொல்லுகிறேன்.... அவர் மக்களை ஏமாற்றுகிருர். நான் அவரிடம் நேரே போனேன். என்னுடைய சவாலை வெளியிட்டேன். அதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் மந்திர தந்திர வேலைகளைக் கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும் செய்து எளிய மக்களிடம் மோசடி செய்கிருர் என்பதை வெளிப்படையாகக் கூறினேன். பெங்களூரில் அவர் தங்கும் 'ஒயிட்பீல்ட்' மைதானத்துக்கு நானும் போனேன். அங்கு வந்து பஜனை செய்யும் பக்தகோடிகளுக்கு நானும் விபூதி வரவழைத்துக் காட்டி கொடுத்து விளக்கினேன்'' என்ருர் அவர்.

''அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்களா?'' என்றேன்.

''அது வேறு விஷயம்'' என்ருர் கோவூர்.

''மனிதன் கடவுள் நம்பிக்கை வைக்கக் கூடாது என்கிறீர்களா?'' என்றேன்.

''அது அவனுடைய முயற்சிக்கு விலங்கு போடுகிறது. அவனைச் சோம்பேறியாக்கி விடுகிறது. பகுத்தறிவு என்பதுதான் மனிதனின் மிகப் பெரிய சொத்து. கடவுளை நம்புகிறவர்கள் அதைப் பயன்படுத்துவது இல்லை. அதுதான் அவர்களுடைய மிகப் பெரிய இழப்பு'' என்ருர் அவர்.

''இலங்கையில் நீங்கள் இந்தக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்து வருகிறீர்களா?'' என்று கேட்டேன்.

''நிறையச் செய்து வருகிறேன். பலரை என் வழிக்கு மாற்றியிருக்கிறேன். ஏன்...? நீங்கள்கூட என்னை நாடிவந்திருக்கிறீர்களே?'' என்ருர் கோவூர்.

''இது வேறு விஷயம்'' என்றேன் நான்.

கோவூர் உள்ளே போய்ப் பல புத்தகங்களைக் கொண்டு வந்தார். பிரித்துக் காட்டித் தனது வாதங்களுக்குரிய ஆதாரப்பூர்வமான சில பகுதிகளைப் படித்துக் காட்டினுர். கேள்விமேல் கேள்வியாகத் தொகுத்து வாதங்களைத் தொடர்ந்தார்.

நான் அவருக்குப் பதில் சொல்லவில்லை. 'கடவுள் இல்லை என்று சொல்கிறவர்களிடம் வாதம் செய்து பயனில்லை; அதற்கு அவசியமும் இல்லை. தன் கட்சியை உணர்த்த முடியாத ஒருவருக்குத்தான் வக்கீல் தேவை. நம்மைவிட மேலான ஒருவரின் கட்சிக்கு நாம் வக்கிலாக முடியாது. தெய்வத்தின் கட்சியை எடுத்துக்கொண்டு பரிந்து பேசி வாதாட நமக்கு ஏது அருகதை?' என்று ஒரு முறை 'கல்கி' எழுதியிருந்ததைப் படித்தது அப்போது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது...

விடைபெற்றுக் கொண்டு எழுந்தேன்.

''கடைசியாக ஒரு சந்தேகம்...'' என்றேன் அவரைப் பார்த்து.

''என்ன அது?'' என்று கேட்டார் கோவூர்.

''ஸ்ரீசத்ய சாயிபாபாவை நாடி லட்சக்கணக்கான மக்கள் போகின்றார்களே...? அதைப்பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''இங்கே இந்தியக் கடற்படையைச் சேர்ந்த ஒரு கப்பல் வந்தது. தளபதியும் அவருடைய ஆபீசர்களும், பணியாட்களும் என்னைப் பார்க்க விரும்பினார்கள். 'என்னால் அங்கே வரமுடியாது. நீங்கள் எல்லாரும் வேண்டுமானால் இங்கே வாருங்கள்' என்று சொல்லி அனுப்பினேன். ஒரு பெரிய 'வானி'லும், காரிலுமாக இருபத்தைந்து பேர் இங்கே வந்தார்கள்.

''வெகுநேரம் இங்கே வந்து என்னோடுபேசிவிட்டுத் திரும்பிப்போனார்கள். என்னுடைய வாதங்கள் அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. என்னுடைய மந்திரஜால வித்தைகளை அவர்களுக்கும் செய்து காட்டினேன். விபூதி வரவழைத்துக் கொடுத்தேன். எல்லாம் முடிந்து அனைவரும் வாசலுக்குப் போனார்கள். காரில் ஏறப்போன கர்ப்டன் திரும்பி வந்தார். என் கையைப் பிடித்து முத்தமிட்டு விட்டு காரில் போய் ஏறிக் கொண்டார். அதைப் பார்த்த 'வானி'ல் ஏறிக்கொண்ட இருபத்தைந்து பேரும் கீழே குதித்து ஓடி வந்தார்கள். ஒவ்வொருவரும் என் கையைப் பிடித்து அதேபோல முத்தமிட்டார்கள். பிறகு ஓடிப்போய் 'வானி'ல் ஏறிக் கொண்டார்கள்...'' என்று நிறுத்தினார் கோவூர்.

''ஸோ,..'' என்று ஒரு புன்சிரிப்புடன் அவரைப் பார்த்தேன்.

''உங்களுடைய மக்கள் எல்லாரும் செம்மறியாடுகள்! ஒருவன் ஒன்றைச் செய்தால் அவ்வளவு பேரும் அவனைப் பார்த்து அதேபோலச் செய்வார்கள். அவ்வளவுதான். ஆட்டுமந்தைக் கூட்டம் ஐயா இது...!'' என்றார் கோவூர்.

ஃ



## 11

ரஸ(மான) வாதம் புரிந்த கோவூருடன் ஆசிரியர்

உயரமான கான்கிரீட் தடுப்புகளில் கம்பிவேலி போட்டிருந்தார்கள். அதற்கு அப்பாலிருந்து என்னை எட்டிப் பார்த்தவை தமிழ் முகங்கள் என்று தெரிந்தது. ''ஐயா... ஐயா... பட்டினிங்க! பசி பொறுக்கலீங்க...'' என்ற தீனமான ஒரு குரலும் அங்கிருந்து கேட்டது.

''என்னப்பா? என்ன சமாசாரம்...? உங்களுக்கு என்ன சிரமம்...?'' என்று கேட்டேன்.

''என்ன சிரமமா..? சிரமத்தைத் தவிர வேறே எதுவும் கிடையாதுங்க இங்கே...! எங்கேயோ நாகப்பட்டினம் பக்கம் போய்க் கொண்டிருந்தேன். சூறுவளி கொண்டு வந்து இங்கே ஒதுக்கிட்டுது. கைது பண்ணிட்டாங்க'' என்றார் அவர்.

''உங்களுக்கு எந்த ஊர்? உங்கள் பெயர் என்ன?'' என்று கேட்டேன்.

''திருநெல்வேலிச் சீமைங்க. என் பெயர் மரியதாஸ்'' என்றார் அவர்.

''என்ன ரங்கநாதன்? 'குற்றாலத்தில் இடி இடித்தால் கோயம்புத்தூரில்



மழை பெய்த' கதையாக இருக்கிறதே...! திருநெல்வேலிக்காரர் நாகப் பட்டினம் போய், கொழும்பில் ஒதுங்கிச் சிறையில் அகப்பட்டுக் கொள் வானேன்...? இது என்ன கூத்து?'' என்று கேட்டேன்.

''ஒன்றுமில்லை. இவர்கள் எல்லாம் கள்ளத்தோணிப் பேர்வழிகள். நாட்டின் பெயரைக் கெடுத்துவிட்டுப் போகிறார்கள்'' என்றார் ரங்கநாதன்.

''ஐயா.. ஐயா... புண்ணியம் உண்டு! எங்களை விட்டுவிடச் சொல்லுங்க. இனிமேல் இந்தப் பக்கமே வரமாட்டோம்'' என்றார் ராஜமாணிக்கம் என்ற இன்னொரு கைதி.

''இது என்ன? நான் செய்து கொடுக்கக்கூடிய காரியமா...? நான் அரசாங்க அதிகாரியா? போனால் போகிறது, கொஞ்சம் பணம் வேண்டு மானால் கொடுக்கலாம்'' என்றேன்.

''கூடவே கூடாது. காசு மட்டும் கொடுத்து விடாதீர்கள். அது சட்ட விரோதம்'' என்று சுற்றியிருந்த எல்லாரும் எச்சரித்தார்கள். காசு சேர்க்க ஆசைப்பட்டுக் கள்ளத்தோணி வேலையில் இறங்கிய அவர்களுக்கு, யாசகமாக சொற்பக் காசு கிடைப்பதற்குக்கூட வழி இல்லாமற் போய்விட்டதே என்று எனக்கு வேதனையாக இருந்தது.

காலிஃபேஸ் திடலில் விளக்குமயமாக மின்னிய அந்த 'நைட்-பஜார்' உல்லாசத்தில் மிதந்தது. நீலமும் மஞ்சளும் சிவப்பும் பச்சையும் கலந்த ஒளிப்பரப்பாக விழுந்திருந்தது. 'கலகல'வென்ற பேச்சும் சிரிப்பும், பட்டுடுத்த பெண்களும், குழந்தைகளுமாக நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

வரிசை வரிசையாகப் புத்தகக் கடைகளும், வளையல் கடைகளும், அழகு சாமான்கள் விற்கும் கடைகளும், துணிக் கடைகளுமாக நிறைந்து விளக்குகளை அலங்காரமாக ஏற்றி வைத்தபடி வருவோரை அழைத்தன. இந்த 'நைட்-பஜார்' நமது மூர்மார்க்கெட்டைப் போல இருந்தது. ஆனால் அளவில் இன்னும் சற்றுப் பெரியது. உலகில் பற்பல நாடுகளிலும் இதைப்போன்ற பல பொருள்-விற்பனை பஜார் ஒன்றை நான் பார்த்திருக்கிறேன். இதைப் பார்த்த போது எனக்குச் சிங்கப்பூரில் உள்ள கடைத்தெருதான் ஞாபகத்திற்கு வந்தது.

சுற்றிப் பார்த்தேன். அடையாளம் தெரிந்து கொண்ட தமிழ் அன்பர்கள் பலர் கையைத் தூக்கி வாழ்த்துத் தெரிவித்தார்கள். சிலர் அருகே வந்து குசலம் விசாரித்தார்கள். அவர்களில் ஒருவர் என்கூட வந்து கையைப் பிடித்துப் பேசினார். பேச்சிலிருந்து அவர் ஒரு போலீஸ்காரர் என்று புரிந்து கொண்டேன்.

தமிழருக்குத் தமிழர் அடையாளம் கண்டுகொள்ளும் மகிழ்ச்சியுடன் பேசிவந்த அவருடைய முகம் சட்டென்று கவலை தோய்ந்து சுருங்கிற்று.

''சார்... தமிழ்நாட்டில் நீங்கள் எல்லாரும் ஒரு முயற்சி எடுத்துக் கொள்ளக் கூடாதா?'' என்று கேட்டார் அவர்.

''என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டேன்.

''கொள்கைகள் அனைத்திலும் ஒற்றுமை உடைய அ.இ.அ.தி.மு.கவும்-தி.மு.க.வும் ஏன் இரண்டு கட்சிகளாக இருக்கவேண்டும்...? ஏன் ஒரே கட்சி யாக இயங்கக் கூடாது? நீங்கள் இந்த ஒற்றுமைக்கு வழி செய்யக் கூடாதா?'' என்று கேட்டார் அவர்.

''அப்படிப்பட்ட எண்ணம் அங்கே பலருக்கும் இருக்கிறது. ஆனால், நீங்கள் அதில் காட்டும் ஆர்வம் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உங்கள் மனக்குறையைக் கட்டாயம் அவர்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றேன்.

நானும் ரங்கநாதனும் தொடர்ந்து நடந்தோம். கடை கடையாகப் போய் நிறைய பொருட்கள் வாங்கினோம். எனக்கு ஒரே மகிழ்ச்சி.

''என்ன இன்று இவ்வளவு மகிழ்ச்சியுடன் செலவு செய்கிறீர்கள்?'' என்று கேட்டார் ரங்கநாதன்.

''சார்...! வெளிநாடுகளுக்குப் போனால் கடைகளில் சாமான்கள் வாங்கும்போது, உள்ளூர ஒரு மனக்குறை என்னை நச்சரித்துக் கொண்டே இருக்கும். அமெரிக்காவில் ஒரு டாலருக்குச் சாமான் வாங்கினால் இந்தியாவில் ஒன்பது ரூபாய்க்குச் சாமான் வாங்குகிற நினைப்பு வரும். இங்கிலாந்தில் ஒரு பவுண்டு கொடுத்து வாங்கினால் இந்தியாவில் பதினெட்டு ரூபாய் கொடுத்து வாங்குகிற ஞாபகம் வந்துவிடும். சிங்கப்பூரில்கூட ஒரு டாலருக்கு ஏதாவது வாங்கினால் இந்தியாவில் மூன்று ரூபாய் கொடுப்பதைத்தான் நினைக்கத் தோன்றும்...''

''ஆனால் இங்கேயோ?'' என்று என்னைப் பார்த்தார் ரங்கநாதன்.

''ஒரு ரூபாய் கொடுத்து வாங்கினால் இந்தியாவில் அரைரூபாய் கொடுப்பதைப் போலத்தான்! அதனால்தான் எனக்கு ஒரே சந்தோஷம்'' என்றேன் நான்.

இந்தியாவில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் இருந்த அரசியல் சூழ்நிலைக்கும்; இலங்கையில்1977ம் ஆண்டு ஜூலை மாதம் இருந்த அரசியல் சூழ்நிலைக்கும் ஒரு வினோதமான ஒற்றுமை உண்டு. இரண்டு நாடுகளிலுமே ஓர் ஐக்கிய முன்னணிக் கட்சி—ஆளும் கட்சியைத் தேர்தலில் சந்தித்தது. பெருவாரியான இடங்களைக் கைப்பற்றி வெற்றியும் அடைந்தது. அதில் இலங்கையில் திரு. ஜயவர்த்தன தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி (U N P) அடைந்த வெற்றி பிரமிப்பூட்டுவதாக இருந்தது! 168 பேர்கள் கொண்ட நாடாளுமன்றத்தில் 139 பேர்களுடன் ஜயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்று பதவிக்கு வந்தது!

இலங்கைவாழ் தமிழ் மக்களின் கலாசார நலன்களும், பொருளாதார நலன்களும், தமிழ்மொழி வளர்ச்சியும் நன்கு பராமரிக்கப்பட, சிரிமாவோ பண்டாரநாயகாவின் ஆட்சியிலிருந்ததைவிட — திரு. ஜயவர்த்தனவின் ஆட்சியில் ஆதரவான சூழ்நிலை இருக்கும் என்று தமிழ்நாட்டு மக்கள் எதிர் பார்க்கிறார்கள்.

கிட்டத்தட்ட மொரார்ஜி தேசாய் பிரதமர் ஆனதுபோலவே ஒரு சூழ்நிலை-இதைச் சுட்டிக்காட்டி இந்தியப் பிரதமர் வாழ்த்துச் செய்தியும் அப்போது அனுப்பியிருந்தார். மொரார்ஜியைப் போல அரசியலில் முதிர்ந்த அனுபவம், முதுமைப் பருவத்தை எட்டிய (எழுபத்து ஒன்று) வயது. அது போலவே ஓர் எளிய தோற்றம் — இவை யாவும் எனக்கு இலங்கைப் பயணத்தில் ஜயவர்த்தனவை சந்திக்க வேண்டும் என்ற ஆவலை வெகுவாகத் தூண்டி இருந்தன.

(நான் முதன்முறை இலங்கைப் பயணத்தை மேற்கொண்ட சமயம் பிரதமராக இருந்த திரு.ஜயவர்த்தன இப்போது இலங்கையின் மாண்புமிகு ஜனாதிபதியாக இருக்கின்றார்.)

ஜனாதிபதி ஜயவர்த்தனவைச் சந்திக்க நான் விரும்பியபோது— தொழிலதிபர் திரு. எம். ஏ. சிதம்பரம், அவர்பால் கொண்டிருந்த நட்புறவின் மூலம் இதற்கு ஏற்பாடு செய்தார். ஜயவர்த்தனவும் மனமுவந்து எனக்குப் பேட்டி அளிக்க ஒப்புக்கொண்டார்.

அவரைப் பார்த்ததும் இதையே நான் அவரிடம் முதன்முதலில் சொல்லிச் சந்தோஷப்பட்டுக் கொண்டேன். எளிய வெண்ணிற உடை அணிந்து, இனிய மென்மையான குரலில் அவர் எனக்கு அளித்த பேட்டி, இலங்கைவாழ் தமிழ்

மக்களுக்கு நல்லுறவை நாடி விடுத்த வேண்டுகோளாகவும் இருந்தது. அவர்கள் பால் அன்பும், அக்கறையும் கொண்ட தமிழ்நாட்டு மக்களுக்கும் அந்தப் பேட்டி சுவாரசியம் நிறைந்ததாக இருக்கும் என்ற அபிப்பிராயம் எனக்கு அப்போது ஏற்பட்டது.

''சட்டமன்றத்தில் 168 இடங்களில் 139 இடங்களை-சுமார் 82 சத விகிதம் பிடித்து ஆட்சியை அமைத்திருக்கிறீர்கள்... தங்களுடைய இந்தப் பிரமிப்பூட்டும் வெற்றிக்கு யார் காரணம்?'' என்று கேட்டேன்.

''மக்கள்தான் காரணம்!'' என்றார் ஜயவர்த்தன ஒரு புன்னகையுடன்.

''முந்தைய அரசாட்சியில் மக்களுக்கு இருந்த வெறுப்பு காரணமா? அல்லது தங்கள் கட்சி மக்களுக்கு முன்வைத்த உறுதிமொழிகளின் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கை காரணமா?'' என்றேன்.

''மக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் கசப்படைந்திருந்தார்கள். 'எஃபெக்டிவ்' ஆக அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. எதிலும் தேக்க நிலைதான் இருந்தது. எங்கள் கட்சியின் ஆட்சியால் மீண்டும் நாட்டு வளர்ச்சிக்குச் சுமுகமான சூழ்நிலை ஏற்படும் என்று மக்கள் நம்பி இருக்கிறார்கள்... அந்த நம்பிக்கையை நாங்கள் காப்பாற்றுவோம். எங்கள் வெற்றிக்கு இதுதான் அடிப்படை'' என்றார் ஜயவர்த்தன.

''தாங்கள் குறிப்பிடும் மக்கள் என்ற சொல்லில் தமிழ் மக்களையும், நிச்சயமாகச் சேர்த்துக் கொள்ளலாம் அல்லவா...? அவர்களுடைய நலன்களில் தாங்கள் முழு அக்கறை காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படும் வகையில் அரசாட்சி இருக்குமா?'' என்று கேட்டேன்.

''நிச்சயமாக இருக்கும்! ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?'' என்று கேட்டார் ஜயவர்த்தன..

''தாங்கள் பதவி ஏற்ற பிறகு-சென்ற ஆகஸ்ட் மாதம் இங்கே நடந்த கலவரங்களைப் பற்றி அறிந்தபோது, இந்தியாவில் தமிழ் மக்கள் கலங்கிப் போனார்கள். இலங்கையில் உள்ள சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையே உள்ள உறவு இதனால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?'' என்றேன்.

''எந்த நாட்டிலும் மக்களிடையே கலவரங்களும் அதனால் ஏற்படும் பாதிப்புகளும் இருக்கும். இலங்கை அதற்கு விலக்கல்ல! இந்தக் கலவரத்துக்குப் பின்னணி சமூக அடிப்படையோ, இன அடிப்படையோ அல்ல. அரசியல் கட்சி வேறுபாடுதான் காரணம். தமிழ் மக்களிடம் எனக்கு உள்ள அன்புக்கு ஓர் உதாரணம் — என் மகன் ஒரு தமிழ்ப் பெண்மணியை மணந்து கொண்டிருக்கிறான்!'' என்றார் ஜயவர்த்தன.

''அப்படியா...?'' என்றேன் நான் வியப்புக் கலந்த குரலில். பிரதமரின் வீட்டுக் கொத்துச்சாவி ஒரு தமிழ்ப் பெண்மணியின் இடுப்பில் அல்லவா இருக்கிறது!

''நல்லது. தமிழ் மக்கள் தனி ஈழம் கேட்கிறார்கள். பிரிந்து போக அனுமதிப்பீர்களா?'' என்றேன் நான்.

''எனது மருமகள்தனிக்குடித்தனம் நடத்தப் பிரிந்து போவதை நான் விரும்பவில்லை!'' என்றார் அவர் புன்னகையுடன்.

''தனி ஈழம் கிடைத்தால்தான் சுதந்திரப் பிரஜைகளாக வாழமுடியும் என்று தமிழ் மக்கள் நினைக்கிறார்கள். தாம் 'இரண்டாந்தரத்து'ப் பிரஜைகளாக வாழ்வதாகவே ஓர் உணர்வு அவர்களுக்கு இருக்கிறது...'' என்று ஆரம்பித்து நிறுத்தினேன் நான்.

''நாங்கள் தேர்தலின் போதே உறுதிமொழி கொடுத்திருக்கிறோம். மொழியைப் பாதுகாப்பது, கல்வி வசதி அளிப்பது, வேலைவாய்ப்பு கொடுப்பது,

குடியேற்றம் அமைப்பது —இவை நான்குமே பாகுபாடின்றி நன்கு நிறைவேற்றி வைக்கப்படும். கவலை வேண்டாம்!'' என்றார் ஜயவர்த்தன.

''பழைய அரசாங்கம் இழைத்த அநீதிகள் எவற்றையாவது-குறிப்பாகக் கல்வித்துறையில் — தாங்கள் நீக்கி இருக்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

''ஆமாம்... கல்வி வசதி அளிக்கும் துறையில் சிக்கல்கள் இருந்தன. மார்க்குகளைச் சீரமைப்பதிலும், சில நிபந்தனைகளைப் போடுவதிலும் பழைய அரசு கடைப்பிடித்த கொள்கைகள் சரி அல்ல என்று எண்ணினோம். இப்போது மாற்றி அமைத்திருக்கிறோம்'' என்றார் ஜயவர்த்தன.

''தங்களுடைய கட்சியின் ஜ ன நா ய க க் கொள்கையை விளக்க முடியுமா?'' என்றேன்.

''எங்கள் நாட்டில் பெருநிலக்கிழார்களோ, வமிசாவளிப்படி அதிகாரத்தைப் பிடிக்கும் முயற்சியோ தொடர்வதை நாங்கள் விரும்பவில்லை. சாதாரண குடிகளின் உரிமைகள் ஜனநாயக அடிப்படையில் சமமாக இருக்க வேண்டும்; யார் வேண்டுமானாலும் அரசாங்கப் பணியிலோ, கார்ப்பொரேஷன்களிலோ—ஜாதி, மத, இன, மொழிப் பாகுபாடு இன்றி இடம்பெற வேண்டும். இதுவே எங்கள் நோக்கம். இதை நீங்கள் என் உறுதிமொழியாக எடுத்துக் கொள்ளலாம். நிச்சயமாகச் செயல்படுத்துவோம்!'' என்றார் அழுத்தம் திருத்தமாக ஜயவர்த்தன.

''அப்படியானால்...?'' என்று தயங்கினேன் நான்.

''சொல்லுங்கள்!'' என்று என்னைத் தூண்டினார் அவர்.

''இலங்கைவாழ் தமிழர் ஒருவர் ஸ்ரீலங்காவின் பிரதமராக வருவதற்கு வாய்ப்பு உண்டா?'' என்று கேட்டுவிட்டு, அவர் சொல்லப்போகும் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்!

''ஆகலாமே! ஏன், இந்த நாட்டின் பிரதமராக ஒரு தமிழர் வர முடியாதென்று நினைக்கிறீர்கள்...? மிஸ்டர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவர். அவருக்கு அப்படி ஒரு வாய்ப்பு இருப்பதை நான் எப்படி இல்லை என்று சொல்ல முடியும்?'' என்று கூறிவிட்டுப் புன்னகை செய்தார் ஜயவர்த்தன.

''அவருக்கு முழுமதிப்பும், மரியாதைகளும் அரசாங்கப் பணியில் கிடைக்கின்றனவா?'' என்று கேட்டேன்.

''எங்களுடைய அரசாங்க, பொதுவிழாக்கள் அனைத்திலும் எனக்கு அடுத்தபடியாகப் பேசுவது அவர்தான். பௌத்தமத சிங்கள விழாக்களிலும் அவர் கலந்து கொள்கிறார். உரிய மரியாதையும் பெறுகிறார். அவர் என்னுடைய பதவிக்கு வந்தால் நான் நிச்சயம் மறுக்கமாட்டேன். (I would not protest if he steps into my shoes)''

''ஆட்சிமொழி சிங்களமாக அல்லவா இருக்கிறது?'' என்றேன் நான்.

''சிங்களத்தை ஆட்சிமொழியாக ஏற்றுக் கொண்டாயிற்று. அதைப் பற்றி விவாதிக்கவோ, மாற்றவோ யாரும் விரும்ப மாட்டார்கள்'' என்றார் அவர்.

''தமிழ் மக்கள் தன்மானம் குறையாமல், அடையாளம் இழக்காமல் தமிழ்க் குடிமக்களாக இங்கு வாழ விரும்புகிறார்கள். அது சாத்தியமாக இருக்குமா...?'' என்று கேட்டேன்.

''தாய்மொழியில்தான் பாடங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று நான் உத்தரவு போட்டிருக்கிறேன். ஆங்கிலம் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. சிங்கள மொழியும், தமிழ்மொழியும் எல்லாருக்கும் கட்டாயமாகக் கற்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு தமிழரும் சிங்களமும் கற்க வேண்டும்; சிங்களவர் ஒவ்வொருவரும் தமிழ் கற்றுக் கொண்டாக

வேண்டும். ஆகவே, இருவரையும் நாங்கள் சமமாகவே பாவிக்கிறோம் என்று புரியவில்லையா...? அரசாங்க உத்தியோகங்களில் சேர்ந்து பணியாற்ற விரும்புவோர் இரு மொழிகளையும் கட்டாயமாகக் கற்க வேண்டும். பள்ளிக் கூட நிலையிலிருந்தே இது கற்பிக்கப்படுகிறது. ஆகவே, தமிழர் – சிங்களவர் இருவருக்குமே வேலை வாய்ப்புக்களிலும் சமஉரிமை கிடைக்கிறது'' என்றார் ஜயவர்த்தன.

''அப்படியானால் தமிழையும் நீங்கள் ஆட்சிமொழியாக ஆக்கலாமே, சிங்கப்பூரில் செய்திருப்பதைப் போல...!''

''தமிழர்களே தமிழும் ஆட்சி மொழியாக வேண்டும் என்று வற்புறுத்த வில்லை. ஆயினும் செயல்முறையில் அவர்கள் என்ன அந்தஸ்தை விரும்பு கிறார்களோ, அதை நான் கொடுக்கத் தயார். (In Practice I am Prepared to offer them the Status they want). தமிழ் மக்கள் அவர்களுடைய அலுவல்களைத் தமிழ்மொழியிலேயே நடத்தலாம். இதற்காக அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை'' என்றார் அவர்.

''தங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். இங்கே உள்ள தமிழ் மக்களுக்கு, சாதாரணத் தேவையான உணவுப் பொருட்களைக்கூட இறக்கு மதி செய்து கொள்ள அனுமதியில்லை. பருப்பு வேண்டும் என்றால் கிடைப்ப தில்லை...'' என்று இழுத்தேன் நான்.

''உணவுப் பொருட்களைக் கூடியவரை இந்த நாட்டு மக்களே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும் என்று ஊக்குவித்து வருகிறோம். அவற்றில் பல இங்கேயே இப்போது விளைகின்றன'' என்று தயக்கமின்றி பதில் அவரிட மிருந்து வந்தது.

''இலங்கையின் வளர்ச்சிக்கு என்னென்ன திட்டங்கள் வைத்திருக் கிறீர்கள்...?'' என்று கேட்டேன்.

''மஹாவலி மாற்றமைப்புத் திட்டம், கொழும்புநகரை விரிவுபடுத்து வது எல்லாம் இருக்கின்றன. இருநூறு சதுரமைல் பரப்பளவிற்குள்ளாக ஒரு சிறு சிங்கப்பூரை உருவாக்கப் போகிறோம். இதனால் வாணிபம் பெருகும். ரூபாயின் மதிப்பு உயரும். கொழும்பில் உள்ள நெரிசலை நீக்க, அதை ஒட்டி புற நகர்களை (Satellite Towns) அமைக்கப் போகிறோம். கொழும்பு அழகிய நகராக மாறப் போகிறது'' என்றார் உற்சாகமாக.

''இதற்கெல்லாம் நிதி வேண்டுமே...?'' என்றேன்.

''மக்கள்தாம் கொடுப்பார்கள். வேலையில் இருப்பவர்கள் கூடுதலாக ஊதியம் கேட்காமல் கொஞ்சம் தியாகம் செய்ய வேண்டும். வேலையே இல்லாதவர்களுக்காக விட்டுக் கொடுக்க வேண்டும். அப்போது வரிப்பணத்தை வளர்ச்சித் திட்டங்களுக்கு உபயோகிக்க முடியும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கலாம்'' என்றார் அவர் திட்டவட்டமாக.

''இதையேதான் தமிழக முதல்வர் எம். ஜி. ஆரும் அடிக்கடி சொல்கிறார்... மக்களிடம் கூறி வற்புறுத்துகிறார்'' என்றேன் நான்.

''அவருடைய தமிழ்ப்படமான 'நீதிக்குத் தலைவணங்கு' என்ற திரைச் சித்திரத்தை நான் பார்த்தேன். அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது'' என்றார் இலங்கைப் பிரதமர்.

''இந்தியாவுக்கும், ஸ்ரீலங்காவுக்கும் இடையே கலாச்சாரப் பரிவர்த் தனைகள் நிறைய இருக்கலாமே...? கலாச்சார நோக்குடன் கவனித்தால் தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும்கூட நிறைய ஒற்றுமை இருக்கிறது. இலங்கையர் புண்யஸ்தலங்கள் என்று மதிக்கும் இடங்கள் இந்தியாவில் இருக்கின்றன. இலங்கையில் உள்ள 'கதிர்காம முருகன்' தமிழ்நாட்டு மக்கள் பலருக்கு குலதெய்வம்'' என்றேன்.

''இந்த ஒற்றுமைகள் குறித்து நானும் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று புன்னகை செய்தார் ஜயவர்த்தன. ''கலாசாரக் குழுக்களை நிச்சயமாகப் பரிவர்த்தனை செய்து கொள்ளலாம். இந்தியாவில் நான் 1968-69-ல் ஒரு சிறப்பான நாட்டிய நிகழ்ச்சியைப் பார்த்தேன். அதுபோன்ற கலைக்குழுக்கள் இங்கே வரலாம். அரசாங்க அழைப்பும் ஆதரவும் இருக்கும்'' என்றார் ஜயவர்த்தன.

திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமியின் இசையைக் கேட்கவேண்டும் என்றும், திருமதி வைஜயந்திமாலா, திருமதி கமலா போன்ற கலைஞர்களின் நாட்டியத்தைக் காணவேண்டும் என்றும் இங்குள்ள தமிழ் ரசிக மக்கள் பலரும் ஆவலாக இருக்கிறார்கள்'' என்றேன்.

''கலை விஷயமாக எதையும் செய்ய அரசாங்கம் ஆதரவும் தரும்'' என்றார்.

''தமிழ்நாட்டு மக்களுக்கு உங்கள் செய்தி என்ன...? தமிழ்நாட்டு மக்களுக்கும், இலங்கைவாழ் மக்களுக்கும் இடையே உள்ள, ஒரு சில மைல்கள் அகலமுள்ள கடலை, பிரிக்கும் கடலாகக் கருதாமல், இணைப்பினை நினைவூட்டும் கடலாகவே தாங்கள் கருதுவது பொருந்தும் அல்லவா..?'' என்று கேட்டேன்.

''தமிழ்நாட்டு மக்களுக்கு எனது நல்வாழ்த்துக்களைச் சொல்லுங்கள். தமிழக முதல்வருக்கும், பாரதப் பிரதமருக்கும் என் வாழ்த்துக்களைக் கூறுங்கள். மொரார்ஜி தேசாயின் ஆட்சி எப்படி இருக்கிறது?'' என்றார் ஜயவர்த்தன.

''நல்ல முறையில் நடக்கிறது. அவர் காந்தியப் பற்று மிகுந்தவர். நேர்மையான நடத்தையில் பிடிவாதம் கொண்டவர். உங்களுக்குத் தெரியுமே...?'' என்றேன் நான்.

''சந்தோஷம். மறுபடியும் இலங்கைக்கு வாருங்கள். எனக்கு எழுதுங்கள். அழைப்பு அனுப்புகிறேன்'' என்றார் கனிவுடன் ஜயவர்த்தன.

''இந்தப் பேச்சு ஓர் எழுத்தாளருக்குச் செய்யும் மரியாதை, தமிழுக்குத் தரும் மதிப்பு — இப்படி நினைத்துத்தான் போற்றுகிறேன்'' என்று சொல்லி விட்டு எழுந்து கைகுலுக்கி விடைபெற்றேன் நான்.

**கொ**ழும்பில் நான் ஆவலோடு சந்திக்க விரும்பியவர்களில் திருமதி புனிதம் திருச்செல்வமும் ஒருவர்.

இவர் மறைந்த சட்டமேதை திரு. எம். திருச்செல்வம் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார்.

அமரர் திருச்செல்வம் முதலாவது தமிழாராய்ச்சி மகாநாட்டின்போது இலங்கைப் பிரதிநிதிகளில் ஒருவராகக் கலந்து கொண்டார். அப்போது அவர் இலங்கை அரசின் மந்திரிகளில் ஒருவர். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர். அமரர் செல்வாவிற்கு வலக் கரம் போன்று விளங்கியவர். இத் தம்பதியரின் புதல்வர் டாக்டர் நீலன் திருச்செல்வம். இவர் சட்டத் துறையில் 'டபிள் டாக்டரேட்' எடுத்திருக்கிறார். இவர்கள் வீட்டிற்குச் சென்றபோது தாயையும் — மகனையும் ஒன்றாகச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. திருமதி புனிதம் திருச்செல்வம் ஒரு சிறந்த சமூக சேவகி.

''இலங்கைத் தமிழரின், குறிப்பாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற பகுதியில் வாழும் தமிழரின் பொருளாதாரத்தைச் சிலர் வேடிக்கையாக 'மணியார்டர் எகானமி' என்று கூறுகிறார்களே?'' என்று என் சந்தேகத்தை இவர்களிடம் கேட்டேன்.

''வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலோர் தென்னிலங்கையில் தொழில் செய்கின்றார்கள். குறிப்பாக அரசாங்க வேலைகளிலும், தனியார் துறைகளிலும், வியாபார நிலையங்கள் நடத்தியும் பொருள் ஈட்டுகின்றனர். இங்குள்ளவர்கள் மாதா மாதம் அனுப்பும் தொகை தான் வட—கிழக்கு மாகாணங்களில் குடும்பங்களை வாழ வைக்கின்றது. இதைத்தான் சில தென்னிலங்கைத் தலைவர்கள் கிண்டலாக 'மணியார்டர் எகானமி' என்கின்றனர்'' என்றார் கலாநிதி நீலன் திருச்செல்வம்.

''இந்நிலை நீடிப்பது தமிழரின் அபிலாசைகளுக்கு முரண்பட்டதாகத் தெரிகின்றதே...'' என்றேன்.

''உண்மைதான். ஆனால் இப்போது, 'மணியார்டர் எகானமி' என்பது போய், 'ட்ராப்ட் எகானமி' என்று மலரத் தொடங்கியிருக்கிறது'' என்றார் அவர்!

''புரியவில்லையே...?'' என்றேன்.

''தமிழ் இளைஞர்கள் பலர் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்கின்றார்கள். அதைத்தான் நான் குறிப்பிட்டேன்'' என்றார் கலாநிதி நீலன் திருச்செல்வம்.

மேலும் சிறிதுநேரம் பயனுள்ள பல விஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்துவிட்டு அவர்களிடம் விடைபெற்றேன்.



# 12

அழகிய நீர்வீழ்ச்சி

இலங்கைக்குப் போவதற்கு முன் ஒரு நாள் நான் எனது நண்பர் டி. ஐ. ஜி. திரு. மோகன்தாஸுடன் பேசிக் கொண்டிருந்தேன்.

''இதற்கு முன் நீங்கள் அங்கே போயிருக்கிறீர்களோ...?'' என்று கேட்டார் அவர்.

''சில ஆண்டுகளுக்கு முன்பு போயிருக்கிறேன்'' என்று பதில் சொன்னேன்.

''அப்படியானல் உங்களுக்கு அடையாளம் தெரியாது. முக்கியமாகக் கொழும்பு அவ்வளவு தூரம் மாறிப் போயிருக்கிறது. 'டூரிஸ்டு'களுக்காக நிறைய வசதிகள் செய்து கொடுத்து இருக்கிறார்கள். சுருக்கமாகச் சொல்லப் போனல், அது ஒரு உல்லாசப் பயணிகளின் சொர்க்கமாக மாறியிருக்கிறது'' என்றார் மோகன்தாஸ்.

அவர் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை என்பதைக் கொழும்பை அடைந்தபோது நானும் உணர்ந்து கொண்டேன். முக்கியமாக உல்லாசப்



பயணிகளைக் கவர்ந்து அழைக்க வேண்டும், அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் அங்கே புதிதாகத் தோன்றியிருக்கிறது. அதுவும் இந்தப் புதிய அரசு பதவி ஏற்ற பிறகு இன்னும் புதிதாகத் தோன்றியிருக்கிறது!

இலங்கையில் நான் பத்திரிகை ஆசிரியர்கள் பலரையும் சந்தித்தேன். 'வீரகேசரி' பத்திரிகை அலுவலகத்துக்குப் போயிருந்தபோது, ஆசிரியர் சிவப்பிரகாசம் வெளியூர் போயிருந்தமையினால், துணை ஆசிரியர்டேவிட் ராஜுவைச் சந்தித்தேன். பாரம்பரியமான அந்தப் பத்திரிகையில் சிறந்த முறையில் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

'ஈழநாடு' துணை ஆசிரியரைச் சந்தித்தபோது அவர் மிக ஆவலுடன், ''தமிழ்நாட்டிலிருந்து வருகிறீர்களா...? எம்.ஜி.ஆர். எப்படி இருக்கிறார்? இங்கே எப்போது வருவார்?'' என்று கேட்டார்.

''என்ன சமாசாரம்? ஏன் அத்தனை ஆவலோடு எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''எம்.ஜி.ஆர். ஒரு சரித்திர புருஷர். சென்ற தடவை அவர் எங்கள் ஊருக்கு வந்தபோது, இந்த யுகத்தில் கண்டிருக்க முடியாத அளவு கூட்டம் கூடியிருந்தது! அரசியலிலும் சரி, கலைத்துறையிலும் சரி — இவ்வளவு அமோகமான வெற்றி அடைந்துள்ள ஒருவரை—இவ்வளவு புகழ்பெற்ற எளிய மனிதரை யாரும் கண்டிருக்க முடியாது'' என்று உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னார் அவர்.

பத்திரிகை ஆசிரியர்களிடையே எனக்குக் கிடைத்த விறுவிறுப்பான சந்திப்பு — 'தினபதி' ஆசிரியர் திரு. சிவநாயகத்தினுடையதுதான். அவர் ஓர் அனுபவம் வாய்ந்த 'ஜர்னலிஸ்ட்' என்றும், ஆழ்ந்த கருத்துக்கள் கொண்ட எழுத்தாளர் என்றும் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால், அவரை நெருங்குவதென்னவோ லேசுப்பட்ட காரியமாக இல்லை! அவ்வளவு பாதுகாப்பு — கெடுபிடிகள்! மூன்று இடத்தில் விசாரித்து, நாலு பேரிடம் கேட்டு, அடையாளம் காட்டி நெருங்க வேண்டியிருந்தது.

சிந்திக்க வைத்ததோடு என்னைச் சிரிக்கவும் வைத்தவர் 'சிரித்திரன்' ஆசிரியர் திரு. சிவஞானசுந்தரம். அடேயப்பா, எப்படிப்பட்ட 'ஜர்னலிஸ்ட்' அவர்! தனிமனிதராக இருந்து, புகழ் பெற்ற ஆங்கில 'பஞ்ச்' போன்ற ஒரு நகைச்சுவைப் பத்திரிகையையே தமிழில் அங்கு உருவாக்கியிருக்கிறார் அவர்.

ரேடியோ சிலோனில் 'மயில்வாகனன்' என்ற பெயர் எல்லாருக்குமே பழக்கமானது. அவருக்குப் போட்டியாக 'மெயில்வாகனன்' என்ற கேரக்டரையே உருவாக்கியிருக்கிறார் 'சிரித்திரன்' ஆசிரியர்! ''கேள்வி — பதில் என்ற பகுதி எந்தப் பத்திரிகையில் சுவாரசியமானதாக இருக்கும்?'' என்று யாரைக் கேட்டாலும், ''கேள்வி-பதிலா? 'சிரித்திர'னில் மகுடியிடம் கேளுங்கள்'' என்றுதான் பதில் வருகிறது!

'சிரித்திரன்' என்ற நகைச்சுவைப் பத்திரிகை ஒரு தனிமனிதனின் அபூர்வ சாதனை. 'ஜோக்கிரட்டீஸ்', 'அதிமதுரம்' போன்றவர்களின் சத்தான நகைச்சுவை அதில் குமிழியிட்டுப் பொங்குகிறது. அவருடைய விசிறிகள் பலரை நான் இலங்கையில் கண்டேன். ஆனால் என்னை வியக்க வைத்த செய்தி, அவரே ஒரு பிரபல நகைச்சுவை ஓவியரின் 'விசிறி' என்பதுதான்!

''மாலியைப் போல ஒரு நகைச்சுவை ஓவியர் உலகத்தில் இதுவரை பிறந்ததில்லை; இனிமேல் பிறக்கப் போவதும் இல்லை'' என்று சொன்னார் சிவஞானசுந்தரம்.

இலங்கையில் மணிமணியான எழுத்தாளர்களைச் சந்தித்தது போலச் சில திரைஉலக மணிகளையும் நான் சந்திக்க நேர்ந்தது.

திரு. குணரத்தினம் என்ற இலங்கைத் திரைஉலகின் பிரபல பட அதிபரை நான் விமான நிலையத்திலேயே சந்தித்தேன். நடிகர் ஜோ அபேவிக்கிரமாவை அவர் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

திரு. ஜோ, ஒரு முதல் தர நடிகர். நூறு படங்களுக்கு மேல் நடித்திருக்கிறார். தமிழ் நண்பர்கள் பலருடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தவர், அவர்களுக்கு என்னையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

''சிங்களத் திரை உலகிற்கும், தமிழ்நாட்டுக் கலைஞர்களுக்கும் நிறைய தொடர்பு உண்டு — தெரியுமா உங்களுக்கு...?'' என்று கேட்டார் அவர்.

''எப்படி...?'' என்று ஆவலோடு கேட்டேன்.

'' 'ஸப்பூ ஸுலாஸ்' என்ற சிங்களத் திரைப்படத்தில் உங்கள் ராஜாவும் - ஜிக்கியும் பின்பாட்டுப் பாடியிருக்கிறார்கள்'' என்றார் அவர்.

''பாட்டு மட்டும்தானா...? நடிப்பவர்களும் உண்டா?'' என்று கேட்டேன்.

''1947—ம் ஆண்டு மதுரையில் ஒரு தமிழ்ப்படம் உருவாயிற்று. அதில் நான் நடித்திருக்கிறேன். 'கைவிட்ட வாக்குறுதி' என்று அதற்குப் பெயர்!'' என்றார் அவர்

''நானும் இங்கே ஓரிரு சிங்களப் படங்களைப் பார்த்தேன். ஒரு சிறு சந்தேகம்...'' என்று இழுத்தேன்.

''சொல்லுங்கள்'' என்று தூண்டினார் திரு. ஜோ.

''அடிதடி சண்டைக்காட்சிகள் — வயலென்ஸ்; கவர்ச்சிக் காட்சிகள் — செக்ஸ் — இரண்டுமே கொஞ்சம் தூக்கலாக இருக்கின்றன. உலகெங்கும் இதே பிரச்சினைதான். திரைப்படங்களுக்கு இவை அவசியந்தானா?'' என்று கேட்டேன்.

''அவை இல்லாவிட்டால் படம் சுவாரசியப்படாது. ஒரு சின்ன உதாரணம் சொல்வேன். சிறுவர்களைக்கூடக் கவருபவை இந்த சண்டைக் காட்சிகள்தாம்! 'மருசிரா' என்று இங்கே ஒரு பெரிய புரட்சிச் சண்டைக்காரர் இருந்தார். குழந்தைகளுக்கு அவரிடம் மிகப் பெரிய மதிப்பு. யாரையாவது கேட்டால் பெரிய விஞ்ஞானியாக ஆகவேண்டுமென்றோ, பெரிய அரசியல் தலைவராக விளங்க வேண்டுமென்றோ சொல்ல மாட்டார்கள் — 'மருசிரா' மாதிரி ஆகவேண்டும் என்றுதான் சொல்வார்கள்!'' என்றார் அவர்.

''தமிழ்நாட்டிலும் பிரபல நடிகர்களுக்கு இப்படி ஒரு தனி மதிப்பும், புகழும் உண்டு. அரசியலிலும் அவர்கள் தீவிரமாக இடம்பெற முடிந்ததற்கு இது ஒரு முக்கியக் காரணம்'' என்றேன்.

''இந்தியாவைப் பொறுத்தவரை, நீங்கள் வெறும் கலைஞர்களை உரு வாக்கி இருப்பதாகச் சொன்னால் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். எம்.ஜி.ஆர்., சிவாஜி, திலீப்குமார் - ஆகியவர்கள் ஒரு சாதனை வம்சம்'' என்றார் திரு. ஜோ.

''உங்கள் திரைஉலகில் சிறந்த நடிகை...?'' என்று கேட்டேன்.

''கட்டாயம் சந்தியுங்கள் அவரை! தமிழ்த் திரைஉலகிற்கும்கூட அறிமுகமாகப் போகிறார் அவர்'' என்றார் அவர்.

''அப்படியா...? யாரது?'' என்று கேட்டேன்.

''மாலினி பொன்சேகா. அந்த சந்திப்பே உங்களுக்கு ஒரு தனி அனுபவமாக இருக்கும்'' என்று என் ஆவலை மேலும் தூண்டினார் ஜோ!

''மாலினி பொன்சேகா என்ற பெயர் தமிழ்நாட்டுக்குப் புதிது. ஆனால்,

இலங்கையில் அவரைத் தெரியாதவர்கள் இல்லை என்று கேள்விப்பட்டேன்...'' என்றேன்.

''தமிழ்நாட்டிலும் இப்போது அவருடைய பெயர் அடிபடத் தொடங்கி இருக்கிறது. விரைவிலேயே தமிழ்ப் படங்களிலும் நடிக்கப் போகிறார்!'' என்றார் நண்பர் கந்தசாமி.

''அப்படியா...? அவரைப் பார்க்க வேண்டுமே? சந்திப்பது என்றால் சிரமமாக இருக்குமோ?'' என்று கேட்டேன். தமிழ்நாட்டில் நிருபர்கள் நடிகைகளைப் பேட்டி காண அலைவதும், ஸ்டூடியோவிற்கும் – வீட்டிற்குமாகப் படையெடுப்பதும், 'லஞ்ச்-ப்ரேக்' சந்திப்புக்காகத் தவம் கிடப்பதும் அப்போது என் நினைவிற்கு வந்தது.

நான் மாலினி பொன்சேகாவுக்கு இதுபற்றி போன் செய்தபோது அவரிடமிருந்து எனக்குக் கிடைத்த பதில் பெரும் ஏமாற்றமாக இருந்தது. கொஞ்சம்கூடப் 'பிகு' பண்ணிக் கொள்ளாமல் உடனே ஒப்புக் கொண்டு விட்டார்!

மறுநாள் காலை பத்து மணிக்கு நான் அவரைச் சந்திப்பதாக இருந்தது. ஆனால், தவிர்க்க முடியாத காரணங்களினால் அவரைப் பார்க்கப்போவது தாமதமாகும் என்று தோன்றியது. மீண்டும் அவருக்குப் போன் செய்து பணிவான குரலில், ''எதிர்பாராதவிதமாக ஒரு தாமதம். ஒரு மணி நேரம் 'லேட்'டாக வருவேன். மன்னிக்க வேண்டும்'' என்று சொன்னேன்.

''மன்னிக்க வேண்டும். ஒன்றரை மணி நேரம் தாமதமாக வந்து சேருங்களேன்'' என்றார் மாலினி! விளையாட்டாகக் கோபித்துக் கொள்கிறாரோ என்று எனக்கு பயமாக இருந்தது. ''என்ன சமாசாரம்...?'' என்று கேட்டேன்.

''அதற்குள் நான் ஸ்விம்மிங்கிற்குப் போய்விட்டு வந்துவிடுவேன்'' என்றார் அவர். 'தேவலையே! இங்கே சினிமா நடிகைகள் இவ்வளவு தூரம் அக்கறையுடன் தேகப்பயிற்சியில் கவனம் செலுத்துகிறார்களே...?' என்று எண்ணிக் கொண்டேன்.

**வ**ரவேற்பறையில் ஒரு நிமிஷம்தான் காத்துக் கொண்டிருந்திருப்போம் எளிமையான ஒரு பாண்ட்-ஷர்ட்டுடன் வந்து எதிரே உட்கார்ந்து கொண்டார் மாலினி. ஒரு தமிழ்க் குடும்பத்துப் பெண்மணியைச் சந்திக்கும் உணர்வுதான் அப்போது ஏற்பட்டது எனக்கு.

''இதுவரை எத்தனை படங்களில் நடித்திருக்கிறீர்கள்...?'' என்று கேட்டேன்.

''எழுபது படங்களுக்கு மேல் நடித்திருக்கிறேன். ஆனாலும், இன்னும் நடிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றே ஆசைப்படுகிறேன்'' என்றார் அவர் ஓர் எளிமையோடு.

தமிழ்ப்படங்களைப் பற்றியும், சிங்களப் படங்களைப் பற்றியும் அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொண்டோம். ''திரைப் படங்களுக்கு அடுத்தபடியாக உங்களுக்கு எதில் பிரியம் அதிகம்...?'' என்று கேட்டேன்.

''கார் ரேஸில்தான். அதில் ஒரு போட்டியில் நான் இரண்டாவதாக வந்திருக்கிறேன்'' என்றார் அவர். ''அப்படியா...?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டேன். அவ்வளவுதான்! அப்புறம் அரைமணி நேரம் அதைப்பற்றி ஒரே ஆர்வத்தோடு பேசினார் அவர்!

புறப்படுவதற்கு முன், ''உங்களுடைய தமிழ்நாட்டுப்பயணம் எப்போது?'' என்று கேட்டேன்.

''ரொம்ப நாளாச்சு...! சென்னைக்கு வரவேண்டும் என்று ஒரு ஆசை. அது எப்போது நிறைவேறப் போகிறதோ...?'' என்றார் மாலினி ஒரு பெருமூச்சுவிட்டபடி. கூடவே, ''உங்கள் நடிகர் கமலஹாசனுடன் நடிக்க வேண்டும் என்றும் ஒரு ஆசை!'' என்றார்.

அவருடைய ஆசைகளில் ஒன்றைத்தான் என்னால் நிறைவேற்ற முடிந்தது. சென்னைக்கு அவரை அழைத்து வரவேற்பு விருந்து அளித்தேன். ஆனால், நடிகர் கமலஹாசனை அவரால் சந்திக்கக்கூட முடியவில்லை. அன்றைக்குப் பார்த்து அவர் ஊரை விட்டு எங்கேயோ போயிருந்தார்.

**பே**ட்டி முடிந்து திரும்பி வந்தபோது, ஓர் ஏரியின் நடுவில் அழகான புத்தர் கோயில் ஒன்று இருப்பதைப் பார்த்தேன். அந்த அழகும், அமைதியும் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. நானும் நண்பரும் காரிலிருந்து இறங்கினோம். தரிசனம் முடிந்து இளம் பௌத்தத் துறவிகள் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள்.

நான் கோயிலுக்குள் போனேன். பிரார்த்தனை முடிந்து எழுந்த இளந்துறவி (ஹாமதுரு) ஒருவரின் அருகில் போய் ''வணக்கம்'' என்றேன்.

''வணக்கம்... வணக்கம்'' என்று பதில்சொன்னார் அவர்.

''தங்கள் பெயர்?'' என்றேன்.

''மெத்தானந்த தேரோ. தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று புன்னகையுடன் கேட்டார் அவர்.

''இந்தியாவிலிருந்து'' என்றேன்.

''அப்படியா...?'' என்று முகமலர்ந்து மீண்டும் வணங்கினார் ஹாமதுரு. ''புத்தபிரான் அருள்பொங்கிய நாட்டிலிருந்து வந்திருக்கிறீர்கள்... புத்தகயாவிற்குப் போயிருப்பீர்களே...?'' என்று கேட்டார்.

''இல்லையே...?'' என்று கொஞ்சம் வெட்கத்துடன் கையை விரித்தேன். ''போனதில்லையா...? உண்மையாகவா? இந்தியாவிலேயே இருக்கும் நீங்கள் அந்தப் புண்ணிய தலத்தைப் பார்த்ததில்லையா...?'' என்று வருத்தப்பட்டுக் கொண்டார் அவர்.

''நீங்கள் வந்து பாருங்கள்'' என்றேன்.

''கட்டாயமாக வருவேன். இந்திய மண்ணில் காலடி வைத்ததும், புத்தர்பிரான் காலடி பட்ட அந்த மண்ணை—திருத்தலத்தைத் தரிசித்து விட்டுத்தான் மறுகாரியம்...!'' என்றார் ஹாமதுரு உணர்ச்சி மிகுந்த குரலில்!

''**போ**ன தடவை நான் இலங்கைக்கு வந்தபோது, கொழும்பிலிருந்து கொஞ்ச தூரத்தில் உள்ள ஓர் இடத்துக்குப் போனேன். இரவு நேரத்தில் பளிச்சென்ற 'காஸ்லைட்' வெளிச்சத்தில் அழகான இளம் கன்னியர்கள் — பளிச்சென்று ஒரு புன்னகையுடன் அங்கே முந்திரிப்பருப்பு விற்றுக் கொண்டிருப்பதைக் கவனித்ததாக ஒரு ஞாபகம்!'' என்று நண்பர் கந்தசாமியிடம் சொன்னேன்.

''நீங்கள் குறிப்பிடுவது 'பஸ்யால' என்ற இடம்தானே...?'' என்று கேட்டார் அவர்.

''பெயர் ஞாபகம் இல்லை. இளமை பொங்கும் அந்தச் சூழல்தான் ஞாபகத்துக்கு வருகிறது'' என்றேன்.

''இன்றைக்கு இரவே போகலாம்'' என்றார் அவர் ஒரு புன்னகையுடன்! பதினைந்து மைல் தூரத்தை அலட்சியமாகக் கடந்து அன்று இரவே அங்கே போய்ச் சேர்ந்தோம்.

அழகில் ஒருவரையொருவர் மிஞ்சும் இளங்குமரிகள் அங்கே 'காஸ்லைட்' வெளிச்சத்தில் இளநீர், முந்திரிப்பருப்பு எல்லாம் விற்றுக் கொண்டிருந் தார்கள். ஒவ்வொருவரும் ஓர் அழகான திரைப்பட நடிகையைப் போல அலங்காரம் செய்து கொண்டிருந்தார்கள்.

வண்டியிலிருந்து இறங்கும் போதே, ''கண்ணுக்கும், நாவிற்கும் ருசியான ஓர் அனுபவம்'' என்றார் கந்தசாமி.

''ப்ளீஸ் கம் ஹியர் சார்!'' என்று அழகான ஆங்கிலத்தில் – ஒருவரை யொருவர் போட்டி போட்டுக் கொண்டு வரவேற்றார்கள். அந்த இரவு நேர அமைதியில் 'கமகம'வென்ற முந்திரிப் பருப்பு மணம் கமழ்ந்ததைப் போல, அவர்களுடைய இளமையின் கவர்ச்சியும்'சென்ட்'போட்ட மாதிரி மணத்தது!

''உங்கள் பெயர்...?'' என்று கேட்டேன்.

''மல்லிகா'' – ''சுமித்ரா'' – ''மாலினி...'' என்று பெயர்கள் பல திசைகளிலிருந்தும் ஒலித்தன. கொஞ்சநேரம் அங்கே நின்று அவர்கள் வாங்க வருவோரைக் கவர்ந்து வியாபாரம் செய்யும் நேர்த்தியையும், அதற்கு அவர் களுடைய அழகு பயன்பட்ட நயத்தையும் கவனித்தேன்.

அருகில் போய், ''பக்கத்தில் நின்று போட்டோ எடுத்துக் கொள்ள லாமோ?'' என்று மல்லிகாவிடம் கேட்டேன்.

''ஓ. எஸ்... ஆனால், நோ டச் சார்! (No Touch Sir)'' என்றார் அந்தப் பெண், மல்லிகைப் பூப்போல ஒரு புன்சிரிப்பு தவழ!

படம் எடுத்துக் கொண்டு திரும்பினேன். ''பார்க்க அழகாக இருக்கும் இந்த இளம்பெண்கள் பழகுவதற்கும் எளியவர்கள். ஆனால், வேறு எண்ணத்துடன் நெருங்கினால்...'' என்று நிறுத்தினார் கந்தசாமி.

''புரிகிறது. முந்திரிப்பருப்பு மணம் பெறுவதற்கு உரிய நெருப்பு அங்கே அடுப்பில் மட்டும் இல்லை; அவர்களிடமே இருக்கிறது!'' என்றேன் நான்.

இரவு சாப்பிடுவதற்கு 'கிரீன்லாண்ட்ஸ்' ஓட்டலுக்குத் திரும்பினோம். அங்கே என்னை அடையாளம் கண்டுகொண்டு, பேசுவதற்கு என்னருகில் வந்து உட்கார்ந்தார் ஓர் இளைஞர்.

''நீங்கள் சமீபத்தில் தமிழ்நாட்டுக்கு வந்தீர்களோ?'' என்று கேட்டேன். அவர், ''வந்தேன். தமிழ்நாட்டு இளைஞர்கள் பலரையும் சந்தித்தேன்'' என்றார் சுவாரசியமில்லாத குரலில்.

''ஏன் அவ்வளவு சுவாரசியம் இல்லாமல் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''பின்னே என்ன சார்...? தமிழ்நாட்டு இளைய தலைமுறையினருக்கு அறிஞர் ஆர். பி. சேதுப்பிள்ளையைப் பற்றித் தெரியவில்லை! ஏன்? பேராசிரியர் ஸ்ரீனிவாசராகவன் பெயர்கூடத் தெரியவில்லையே...!'' என்று அலுத்துக் கொண்டார் அவர்.

''ஒன்று சொல்லுகிறேன் கேட்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

''சொல்லுங்கள்.''

''அது சரியில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால், அதுதான் முக்கியம் என்று என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. உலகம் முழுவதும் விஞ்ஞானம் வெகுதூரம் முன்னேறி விட்டது. மனித சிருஷ்டியின் நுட்பங் களைக்கூட மருத்துவ ஆராய்ச்சிகள் கண்டுபிடித்து விட்டன. ஆனால், தமிழ் நாட்டு இளைஞர்கள் அவற்றை உணர்ந்து புரிந்து கொள்ளும் அளவுக்கு முழு மையாக முன்னேறவில்லை. அதுதான் முக்கியம். அதில் பின்தங்கி விட்டார்களே என்றுதான் எனக்கு ரொம்ப வருத்தம். பழைய பெருமையையும், பழைய

கதைகளையும் பேசிப் பேசி, பாரம்பரியத் தற்பெருமை பாராட்டிக் கொள்வதைக் கொஞ்ச நாளைக்கு நிறுத்தி வைக்கலாம் சார்!'' என்றேன் நான்.

அந்த இளைஞருக்கு அது பிடிக்கவில்லை. 'விருட்'டென்று எழுந்து போய் விட்டார்!

''கொழும்பில் நிறையத் தமிழர்கள்இருப்பதால் தமிழர்களுடைய பண்டிகைகள், விழாக்கள் எல்லாம் சிறப்பாகக் கொண்டாடப்பட வேண்டுமே...? இங்கே தமிழர்கள் செல்லும் கோயிலொன்றுக்குப் போய்ப் பார்க்க முடியுமோ?'' என்று நண்பரிடம் கேட்டேன்.

''தாராளமாகப் போய்ப் பார்க்கலாமே...! சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குப் போய்ப் பார்க்கலாம். வாருங்கள்'' என்று அழைத்தார் அவர்.

ஆலயத்துக்குள் நுழையும்போதே சுகமான நாதஸ்வர இசை என்னை வரவேற்றது. வாசிக்கும் நாதஸ்வர வித்வான் யாரென்று பார்க்க ஆசைப் பட்டேன். ஆனால், அவரோ என்னை அவருடைய வீட்டுக்கே அழைத்துக் கொண்டு போய்விட்டார்! வீட்டுக்குப் போவது என்பது அப்படி ஒன்றும் சிரமமான காரியமாக இல்லை. ஏனெனில், வீடு கோயிலின் பின்பகுதியிலேயே அமைந்திருந்தது — தமிழ்நாட்டில் பெரிய கோயில்களில் இருப்பது போல...

ராஜமாணிக்கம் என்ற அந்த வித்வான் பட்டீசுவரத்தைச் சேர்ந்தவர்.

''ஆனால், நான் சொந்த ஊருக்குப் போனது இந்தக் கலையைக் கற்றுக் கொள்வதற்குத்தான். பரம்பரை பரம்பரையாக இங்கேயேதான் வாழ்கிறோம்!'' என்றார் ராஜமாணிக்கம்.

''இங்கே மணவிழாக்களுக்கு, கச்சேரிகளுக்குக்கூடப் போவீர்களோ?'' என்று கேட்டேன்.

''போவோம். 'செட்'டுக்கு முன்னூறு ரூபாய் கொடுப்பார்கள். இங்கே கோயிலில் நிரந்தர ஊதியம் நூறு ரூபாய்!'' என்றார் அவர்.

''இதுபோல நிறையப் பேர் இந்த ஊரில் இருக்கிறார்களோ...?'' என்று கேட்டேன்.

''ஹூம்...'' என்று சொல்லிவிட்டு யோசித்து, ''கந்தசாமி, சுப்பிரமணியம், நான் — இந்த மூன்று பேர்தாம்!'' என்றுசொன்னார் ராஜமாணிக்கம்.

''தமிழ்நாட்டில் உங்களுக்கு மிகப் பிடித்த தலைவர், பிரமுகர் யாராவது உண்டா?'' என்று கேட்டேன்.

''காரைக்குடி சா. கணேசன் அவர்களை என்னால மறக்க முடியாது. நல்ல ரசிகர் சார் அவர்! இங்கே வந்தபோது என் இசையைக் கேட்டு அனுபவித்துக் 'குழலிசைமணி' என்று ஒரு பட்டத்தையும் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்...'' என்று உணர்ச்சி மிகுந்த குரலில் சொன்னார் அவர்.

''இளமையான தோற்றத்துடன் இருக்கிறீர்களே? ஏதாவது கட்டுப்பாடு விரதம்...'' என்று இழுத்தேன். கொஞ்சம் யோசித்துவிட்டு, ''ஹோ...'' வென்று சிரித்தபடியே, ''ஒன்றும் இல்லையே...? மணிமணியாக ஒன்பது குழந்தைகள்'' என்றார் அந்தக் 'குழலிசைமணி!'

''இந்த நடனம் வெளிநாட்டினருக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கான ஒரு சூழ்நிலையையும் உருவாக்கியிருக்கிறார்கள்...''—இப்படி ஒரு முன்னுரையுடன் என்னை 'ஒபிராய்' ஓட்டலுக்கு அழைத்துக் கொண்டு போனார் நண்பர்.

''என்னென்ன நடனங்கள் காட்டப் போகிறார்கள்?'' என்று ஆவலோடு கேட்டேன்.

''கொஞ்சம் சம்பிரதாயமான நடனங்கள்; சில 'பான்ஸி'யான நடனங்கள்!'' என்றார் அவர்.

அவர் சொன்னபோது வேடிக்கையாக இருந்தது. ஆனால், பார்த்த போது அது உண்மையென்றே தெரிந்து கொண்டேன். மங்கள பேரிகை, பூஜா நட்டுவம், விளக்கு நடனம், தேயிலைத் தோட்ட நடனம் எல்லாம் ஆடினார்கள். அழகைக் காட்டி அற்புதமாக ஆடியதுபோல முகமூடி போட்டுக் கொண்டு மறைத்து விளையாட்டாகவும் ஆடினார்கள்.

''இவர்கள் எல்லாம் நடனப் பணியையே தொழிலாகக் கொண்டவர்கள்தானா?'' என்று கேட்டேன்.

''ஆமாம். இவர்கள் 'ஸ்ரீலங்கா நேஷனல் ட்ரூப்'பைச் சேர்ந்தவர்கள். இந்த நடனம் சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முந்தைய கலாச்சாரங்களைக் காட்டுவது!'' என்றார் அவர்.

பக்கத்தில் அமர்ந்து ரசித்துக் கொண்டிருந்த ஐரோப்பிய நண்பர்கள் பிரமித்துப் போனார்கள்! ஆனால், நான் அயரவில்லை. சிந்துவெளி நாகரிகத்துக்கு வயது அதைவிடப் பழமையானது அல்லவா...?

''உங்களுடைய நாட்டு நடனங்களை அதற்குரிய கிராமியப் பின்னணியிலேயே பார்க்க முடியுமோ?'' என்று கேட்டேன்.

''தாராளமாக! அதற்குக் கண்டிக்குப் போகவேண்டும்!'' என்றார் அவர்.



# 13

கண்டி நகரின் மத்தியிலுள்ள ஏரி.

எதிரும் புதிருமாக வந்த கார்கள் ஒவ்வொன்றிலும் வர்ணக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. கடைகளிலும் அலுவலகக் கட்டடங்கள் பலவற்றிலும் நீலம், வெள்ளை, மஞ்சள், சிவப்பு ஆகிய நிறங்களில் கொடிகள் பறக்கவிடப் பட்டிருந்தன. எனக்கு அந்தக் கோலாகலமான சூழ்நிலையின் காரணம் புரியவில்லை.

''இந்தியாவில் 2500 ஆண்டுகளுக்கு முன்பு, வைகாசி மாதத்தில் பௌர்ணமி தினத்தன்று, கயா என்ற இடத்தில் போதிவிருட்சத்தின் அடியில் அமர்ந்து தவம் புரிந்த சித்தார்த்தனுக்கு ஞானோதயம் உண்டாயிற்று. முப்பத்தைந்து வயது நிறைந்த அந்த மகான் அன்று உலகம் முழுவதும் வணங்கும் புத்தர்பிரானாக மாறினார். அந்த வைகாசி மாதப் பௌர்ணமி தினத்தையே உலகெங்கும் பௌத்தர்கள் 'வெசாக்' (Vesak) திருவிழாவாகக் கொண்டாடுகிறார்கள்'' என்றார் ரங்கநாதன்.

ஓட்டலில் என்னைச் சந்திக்க வந்திருந்தார் துரைராசா. இலங்கையில் அரை நூற்றாண்டு காலமாகத் தமிழ்ப் புத்தகங்களையும், தமிழ்ப் பத்திரிகை



களையும் வரவழைத்து விற்பனை செய்து தமிழ் மணம் பரப்பிக் கொண்டிருந்த பெரியவர் தம்பித்துரை. அந்த நல்ல பணியை இப்போது அவருடைய மகன் துரைராசா தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார்.

லோறிஸ் ஒழுங்கையில் (சந்து என்பதை அவர்கள் அப்படித்தான் சொல்லுகிறார்கள்) பலா, வாழைத் தோட்டங்கள் சூழ்ந்த பசுமையான சூழ்நிலையில், அவருடைய வியாபாரத்தை அமைதியாகச் செய்து கொண்டிருக்கிறார். வியாபாரம்தான் அமைதி என்பதில்லை; அவருடைய பேச்சு, நடை எல்லாமே வெகு அமைதி! ரொம்ப ரொம்ப நிதானம்.

ஓட்டல் அறைக்குப் போனதும்,''என்ன ரங்கநாதன்? (இதில் 'ன' என்ற எழுத்தை அழுத்திக் கால் விநாடி நிறுத்தி உச்சரிக்க வேண்டும். அதுதான் துரைராசாவின் நிதானமான பாணி!)இப்போது எங்கே போகப் போகிறோம்?'' என்று கேட்டார் துரைராசா.

''கண்டிக்குப் போக ஏற்பாடு செய்திருக்கிறோம்!'' என்றார் ரங்கநாதன்.

''கிண்டியிலிருந்து கண்டிக்கு!'' என்றேன் நான். தொடர்ந்து,''நாமெல்லாம் போவது இருக்கட்டும். புகைப்படம் எடுக்க யாராவது கூட வரவேண்டுமே...?'' என்றேன்.

''சுமதிபாலாவை ஏற்பாடு செய்திருக்கிறோம்'' என்றார் துரைராசா.

''பெண்மணியானால் வேண்டாம். அழைத்துக் கொண்டு போவது சௌகரியமாக இராது!'' என்று நான் யோசனையுடன் சொன்னேன்.

''பெண்மணி இல்லை மிஸ்டர் மணியன்!'' என்று ஒரு மென்னகையுடன் சொன்னார் துரைராசா: ''விக்டர் சுமதிபாலா ஒரு புகழ் பெற்ற புகைப்படக்காரர். இலங்கையின் பிரதமர்களுடன் வெளிநாடுகளுக்குப் பலமுறைகள் போயிருக்கிறார். கவனித்து நிதானமாகப் பேசுவார்...''

''கவனித்து நிதானமாகப் படங்களும் எடுப்பார்!'' என்றார் ரங்கநாதன்.

''சரி. புறப்படுவோம்'' என்றேன்.

காரில் போகும்போது சுமதிபாலாவிடம், ''நீங்கள் பிரதமர்களுடன் வெளிநாடுகளுக்குப் போய் வந்திருப்பதாகச் சொன்னார்களே..? இந்தியாவுக்கு வந்திருக்கிறீர்களோ?'' என்று கேட்டேன்.

''வந்திருக்கிறேனே...? அப்போது டட்லி சேனநாயகா பிரதமராக இருந்தார். டில்லியில் பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்தபோது, ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி நடந்தது...'' என்று கூறி நிறுத்தினார் சுமதிபாலா.

''என்ன ஆயிற்று...? நீங்கள் புகைப்படம் எடுத்ததில் ஏதாவது சிக்கலா? சொல்லுங்கள்'!'' என்றேன்.

''அப்படி எதுவும் நடக்கவில்லை. டட்லி சேனநாயகாவை இந்திரா காந்திக்கு அறிமுகம் செய்து வைத்த சபாநாயகர், 'மாடம்! இவர் இலங்கைப் பிரதமர். இராவண தேசத்திலிருந்து உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்!' என்று விளையாட்டாகச் சொன்னார். உடனே டட்லி சேனநாயகா, 'வாஸ்தவம்தான் அம்மணி! ஆனால், அந்த உத்தேசத்துடன் வரவில்லை!' என்று சொல்லிச் சிரித்தார்...''

இப்போது, நாங்களும் சிரித்தோம்.

கார் மலைச்சாலையில் ஏற ஆரம்பித்தது. நன்றாக அமைக்கப்பட்டிருந்த தார் ரோட்டைக் கவனித்துவிட்டு, ''இங்கே சாலைகள் நன்றாக இருக்கின்றனவே...?'' என்று கேட்டேன்.

''இவையெல்லாம் அந்தக் காலத்தில் போடப்பட்டவை. தேயிலைத் தோட்டங்களை வைத்திருந்த கம்பெனிக்காரர்கள் அவர்களுடைய

சௌகரியத்துக்காக வசதியான சாலைகளைப் போட்டுகொண்டார்கள். 1840-ம் ஆண்டுவரை இந்தப் பகுதிகளில் காப்பித்தோட்டங்கள்தாம் இருந்தன. அப்புறம்தான் அவை தேயிலைத் தோட்டங்களாக மாறின!'' என்றார் சுமதிபாலா.

''தேயிலைத் தோட்டங்களா? 'தேயிலைத் தோட்டத்திலே' என்று கிட்டப்பா விருத்தம் பாடி இருக்கிறாரே, அந்தத் தோட்டங்களா...? பார்க்க வேண்டுமே?'' என்று ஆவலோடு கேட்டேன்.

''நிறையப் பார்க்கப் போகிறீர்கள்! அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்துக்கு உங்கள் கண்களில் படப்போவதெல்லாம் நீல நிற ஆகாயமும், பச்சை நிறத் தேயிலைத் தோட்டங்களும்தான்!'' என்றார் சுமதிபாலா.

தம்பட்டம், பேரிகை இவற்றுடன் இசைக்கருவிகளும் ஒலிக்கும் சப்தம் கேட்டது. விளக்கு அலங்காரங்களுடன் மேடையும் கண்ணிற்பட்டது. வாலிபர்களும் பெண்களும் கூட்டம் கூட்டமாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

''என்ன விஷயம்? மறுபடியும்...'' என்று ரங்கநாதனின் புறம் திரும்பினேன்.

''வெசாக் திருவிழாவேதான்! இங்கே விடிய விடியக் கூத்து நடக்கப் போகிறது. புத்தர் ஜாதகக் கதைகளை நடித்துக் காட்டுவார்கள். ஆனால், அதைப் பார்க்க நிறைய இந்துக்களும் வருவார்கள்... இங்கே புத்தர் கோயில் களில்கூட அப்படி ஒற்றுமையான, ஓர் விசேஷமான அம்சம் உண்டு. அங்கே விஷ்ணுவையும் வணங்குவார்கள்!'' என்றார் ரங்கநாதன்.

ஃ ஃ ஃ

''பிரிட்டிஷ்காரர்களால் லேசில் கைப்பற்ற முடியாத நாடாக இருந்தது கண்டி. நாலாபுறமும் மலைகளால் சூழப்பட்ட அந்த இடத்தை அடைவது அவர்களுக்கு ரொம்ப சிரமமாக இருந்தது. கண்டியின் மலைவாசல்களில் எல்லாம் காவலர்கள் இருப்பார்கள். பெரிய பாறைகளை வழியில் உருட்டி விடுவார்கள்!'' என்றார் துரைராசா.

''இப்போது அப்படிப் பாறை எதுவும் இல்லையே...?'' என்று சிறிது கவலையுடன் கேட்டேன்.

''அதோ தெரிகிறதே கற்பாலம்! அதுதான் மிச்சம். மலையைக் குடைந்து பாலத்தைப் போல அமைத்திருக்கிறார்கள். 'கடுகண்ணாவை' என்ற இந்த இடத்தைப் பற்றி சோமசுந்தரப் புலவர் பாடி இருக்கிறார்'' என்றார் அவர். அந்தப் பாட்டின் அடிகளையும் கூடவே பாடிக் காட்டினார்.

''கண்டியை ஒரு நாடு என்கிறீர்களே...? இலங்கையின் ஒரு பகுதி அல்லவா அது?'' என்று கேட்டேன்.

''இலங்கையை மொத்தமாக ஒரு நாடாகத் தொகுத்தவர்கள் பிரிட்டிஷ் காரர்கள்தாம். அதற்கு முன் அது வெவ்வேறு சிறு நாடுகளாகத்தான் இருந்தன. அதில் மலைப்பாங்கான கண்டிப் பகுதி தனிநாடு என்றார் அவர்.

''அப்போது கண்டிதான் தலைநகராக இருந்தோ...?'' என்று கேட்டேன்.

''தலைநகராக இருந்தது மட்டும் இல்லை; அரண்மனையையும்கூடப் புகழ் பெற்ற புத்தர் கோயிலுக்குப் பக்கத்திலேயே வைத்திருந்தான் அரசன். அப்படிக் குடி இருந்தால் பகைவர்கள் தன்னை அபாயத்துக்கு ஆளாக்க முடியாது என்று அரசனுக்கு ஒரு நம்பிக்கை'' என்றார்.

''கோயிலை ஒட்டி அரண்மனை என்றால், அந்தப்புரம், நீதிமன்றம் எல்லாம் எங்கே இருந்தன?'' என்றேன்.

''ஊருக்குள் போனால் ஒரு பெரிய ஏரியைப் பார்ப்பீர்கள். அதற்குப் 'பாற்கடல்' (கிரிமுகுதா) என்று பெயர். அதன் மத்தியில் ஒரு சிறு அரண்மனை இருந்தது. அங்கேதான் அந்தப்புரம். அந்த ஏரியைச் சுற்றி இரவில் இரண்டரை மைல் தூரம் நடக்கலாம். வெகு சுகமாக இருக்கும். அதற்கு ஆங்கிலேயர்கள், 'லேடி ஹார்டன்டிரைவ்'—'லேடி மெக்காலம் டிரைவ்'—'லேடி பிளேக் டிரைவ்' என்றெல்லாம் பெயர் வைத்திருந்தார்கள். எல்லாம் கண்டியில் இருந்த பிரிட்டிஷ் கவர்னர்களின் மனைவிமார்களின் பெயர்கள். அந்தப்புர வாசனை பிரிட்டிஷ்காரர்களுக்கும் அடித்திருக்கிறது!'' என்று சிரித்தார் துரைராசா.

''கண்டி நடனம் ரொம்பப் பெயர் பெற்றதாயிற்றே...?'' என்றேன்.

''அப்படித்தான். இப்போது கோயில்களில், திருவிழாக்களில், முக்கியமான பண்டிகைகளில் கண்டி நடனத்தைப் பார்க்கலாம். தாரை, தம்பட்டம், பேரிகையுடன் — கவசம், மணிமாலைகள், கிரீடம் எல்லாம் அணிந்து ஆடுவார்கள். அந்த முரசு அதிர்வதே ஓர் அழகு — சத்தத்திலிருந்தே திருவிழா முரசு, கோயில் முரசு, கல்யாண ஊர்வல முரசு என்று விதம்விதமாக அடையாளம் பிரிக்கலாம். கண்டிப் பெண்கள் புடவை கட்டுவதே ஓர் அழகு. தமிழ்நாட்டில் கோயம்புத்தூர்க்கட்டைப் போல பின்புறம் கொசுவம் வைத்திருக்கும். இப்போது அந்தப் பின்னழகை யெல்லாம் பார்க்க முடியாது!' என்று பெருமூச்சு விட்டார் துரைராசா.

''ஏன்...? அழகான பெண்கள் குறைந்து போய்விட்டார்களா?'' என்றேன்.

''புடவை கட்டும் பெண்கள்தாம் குறைந்து போய் விட்டார்கள். எங்கே திரும்பினாலும் 'ஸ்கர்ட்'தான் கண்ணில் படுகிறது. சிறு பெண்கள் முதல் பெரியவர்கள் வரை!'' என்றார் அவர், இன்னும் பெரிதாக ஒரு பெருமூச்சுடன்.

கண்டியின் புகழ்பெற்ற 'பேராதனைப்' பல்கலைக்கழகத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தோம். வழியில் ஒரு பௌத்த ஆலயத்தைத் தரிசித்தோம்.

பூஜை முடிந்து தாயும் — மகளுமாகத் திரும்பிவந்து கொண்டிருந்த இருவரைச் சந்தித்தேன்.

''அகல்விளக்குகளை ஏன் கோயிலின் பின்புறம் ஏற்றுகிறீர்கள்...?'' என்று கேட்டேன்.

''பிராகாரத்தில் எண்ணெய் சிந்தக் கூடாது என்பதற்குத்தான். பிராகாரம் சுத்தமாக இருக்க வேண்டும். எங்கு வேண்டுமானாலும் அமர்ந்து பிரார்த்தனை செய்யும்படி இருக்க வேண்டும்'' என்றார் அந்தப் பெண்மணி.

''அரசமரத்தில் துண்டு துண்டுகளாக வர்ணத் துணிகள் கட்டி வைத்திருக்கிறீர்களே...?'' என்றேன்.

''இவையெல்லாம் வேண்டுதலைக்காகக் கட்டி வைத்திருப்பவை. புண்ணியம் கிடைக்கவும் கட்டி வைப்பதுண்டு. இங்கே மே மாதம் வந்திருக்கிறீர்களே..? த்ஸொ...த்ஸொ... ஆகஸ்ட் மாதம் வந்திருக்க வேண்டும்! கண்டி பெரெஹேரா திருவிழாவும், ஊர்வலமும் பத்து நாட்களுக்கு நடக்கும். புத்தர் திருப்பல் இருக்கும் கோயிலுக்குப் போய்த் தரிசனம் செய்தீர்களோ?'' என்று கேட்டார் அவர்.

''இனிமேல்தான் போகவேண்டும். இப்போது இன்னொரு ஆலயத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். அங்கே ஆறாயிரம் இளைஞர்களும், பெண்களும் கலைத்தேவியை வணங்கிக் கொண்டிருக்கிறார்கள்!'' என்றேன்.

அது மிஸஸ் தேனுவரா என்ற அந்த அம்மையாருக்குப் புரியவில்லை. சிரித்துவிட்டு கைகுவித்து விடைபெற்றுக் கொண்டார்.

கண்ணுக்கெட்டியவரை பசுமையான மலைச்சாரல். அதில் ஆங்காங்கே உயர்ந்த கம்பீரமான கட்டடங்கள். நிழல்தரும் நெடிதுயர்ந்த மரங்களுக்கு நடுவே செல்லும் சாலைகள்—இப்படி ஒரு சூழ்நிலையை நினைத்துக் கொள்ளுங்கள். அதுதான் 'பேராதனைப் பல்கலைக்கழகம்.' பேட்ரிக் அபுக்ராம்பே என்ற பிரிட்டிஷ் கட்டடக் கலை நிபுணரின் கற்பனையில் உருவான குழந்தை இது. இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் போன்ற அமைப்பு என்று சொல்லுகிறார்கள்.

சுறுசுறுப்பாக எதிரே நடந்து வந்து கொண்டிருந்த மாணவர் ஒருவரை நிறுத்திக் காரிலிருந்து இறங்கினோம்.

''தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கிறோம். இங்கே சுற்றிப் பார்க்க விரும்புகிறோம். உங்கள் பெயர்...?'' என்றேன்.

''என் பெயர் பாலசுப்பிரமணியம்'' என்றார்

''இங்கே எவ்வளவு மாணவ மாணவிகள் படிக்கிறார்கள்? எல்லாரும் இங்கேயே தங்கிப் படிக்கிறார்களா?'' என்று கேட்டேன்.

''சுமார் ஆறாயிரம் மாணவ மாணவிகள் இந்தப் பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்கள். சட்டப் படிப்பைத் தவிர மற்ற எல்லாம் இருக்கின்றன. ஹாஸ்டலில்தான் பெரும்பாலோர் இருக்கிறார்கள். மற்றவர்களோ வீட்டிலிருந்து வந்து போகிறார்கள்'' என்றார் பாலசுப்பிரமணியம்.

''நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்...? என்ன படிக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''நான் யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறேன். மருத்துவப் படிப்பில் கடைசி ஆண்டு படிப்பு படித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார் அவர்.

''இங்கே மாணவர்களுக்கு யூனியன் எல்லாம் உண்டா? அவை கட்சி சார்போடு தேர்தல் நடத்துவதுண்டா? தமிழ்நாட்டில் அப்படி நடப்பதுண்டே...'' என்று கேட்டேன்.

இருக்கின்றன சார்! எஸ். எல். எப். பி., யூ.என்.பி., கம்யூனிஸ்ட்—இப்படி ஒவ்வொன்றுக்கும் மாணவர்கள் கட்சி அமைக்கிறார்கள்; தேர்தலும் நடத்துகிறார்கள். ஆனால் தமிழ் மாணவர்களுக்குத்தான் இப்படி எதுவும் இல்லை'' என்றார் அவர்.

மரத்தடியில் சிறு கோயில் மாதிரி தெரிந்தது. மாணவர்கள் சிலர் வலம் வந்து கொண்டிருந்தார்கள்.

''இங்கேயே கோயில்களும் உண்டா?'' என்று சற்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

''பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள் எல்லாருக்கும் இந்த 'காம்பஸி'லேயே கோயில்கள் இருக்கின்றன. இந்துக்களின் கோயில் மலைமீது இருக்கிறது. அதை இந்து மாமன்றம் நடத்துகிறது'' என்றார் பாலசுப்பிரமணியம்.

''என்ன கோயில் அது...? எப்படிப் போவீர்கள்?'' என்று கேட்டேன்.

''மலைமீது இருப்பது எந்தக் கடவுளாக இருக்கும்...? முருகக்கடவுள் தான். குறிஞ்சிக் குமரன் கோயில் அது. மூன்று வேளையும் பூஜைகள் நடக்கின்றன. அனேகமாக எல்லாரும் நடந்துதான் போய்த் தரிசித்துவிட்டு வருவோம். 'எக்ஸஸ்ஸைஸ்' மாதிரியும் இருக்கும்; பக்தியில் ஈடுபட்ட மாதிரியும் இருக்கும்'' என்றார் பாலசுப்பிரமணியம்.

கோயிலுக்குப் போனோம். அதிகக் கூட்டம் இல்லை. இரண்டொருவர் மட்டுமே பிரகாரத்தில் இருந்தார்கள். ''குருக்கள் பெயர் குமாரசுவாமி. அதிலும் ஒரு பொருத்தம்'' என்றார் பாலசுப்பிரமணியம்.

''தங்களுக்கு எந்த ஊரோ?'' என்றேன் நான்.

''பெருந்துறை'' என்றார் குருக்கள்.

''பெருந்துறையா...? அடிக்கடி அங்கே போவதுண்டா? ஈரோட்டுப் பெருந்துறைதானே?'' என்று வியப்புடன் கேட்டேன்.

''அந்தப் பெருந்துறை இல்லை. இது யாழ்ப்பாணத்தில் இருக்கும் பெருந்துறை!'' என்றார் குருக்கள். ''இங்கேயே தங்கியிருக்கிறேன். பின்னால் தான் வீடு'' என்றார் தொடர்ந்து.

''தனியாக இருக்கிறீர்களே...? யார் துணை?'' என்று கேட்டேன்.

''கடவுள்தான் துணை'' என்றார் ரங்கநாதன்!

''கோயிலில் உள்ள கடவுள்களுக்கு குருக்கள்தான் துணை!'' என்றேன் நான்.

பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து கிளம்பி வந்தோம். ''இப்போது இந்த ஊரின் பிரசித்தி பெற்ற கோயிலுக்குப் போய்க் கொண்டிருக்கிறோம்'' என்றார் சுமதிபாலா. வழியில் ஆற்றைக் கடந்தபோது யானைகளைக் குளிப் பாட்டிக் கொண்டிருந்தார்கள்.

இந்த யானைகளும் அந்தக் கோயிலைச் சேர்ந்தவைதான். நாற்பது நாற்பத்தைந்து யானைகள் இருக்கின்றன'' என்றார் சுமதிபாலா.

''அது என்ன கோயில்?'' என்று கேட்டேன்.

''புத்தரின் திருப்பல் வைத்திருக்கும் தலதா மாளிகை கோயில். 365 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. புத்தரின் திருப்பல் இந்தியாவிலிருந்து ஒரு ராஜகுமாரியால், சுமார் 1600 ஆண்டுகளுக்கு முன், கூந்தலில் மறைத்து வைத்துக் கொண்டு வரப்பட்டது. அதை ஒவ்வொரு இடமாக மறைத்து மறைத்து மாற்றி வைத்துக் கடைசியில் கண்டியில் கொண்டு வந்து சேர்த்தார்கள். அதை இங்கே தங்கப் பேழை ஒன்றில் வைத்திருக்கிறார்கள். சந்நிதியில் மல்லிகை, ஃபிராங்கிப்பன்னி போன்ற மலர்களின் மணத்துடனும், தங்க வைர நெக்லெஸ் அலங்காரத் துடனும் அது வைக்கப்பட்டிருக்கிறது'' என்றார் சுமதிபாலா.

''ஊர்வலம் எல்லாம் உண்டா?'' என்று கேட்டேன்.

''பேஷாக! எசல பெரெஹெரா என்ற உற்சவத்தில். ஜூலை-ஆகஸ்ட் மாதத்தில் பௌர்ணமியை ஒட்டிப் பத்து நாட்கள் திருவிழா நடக்கும். இரவில் பேரிகை, துந்துபி முழக்கத்துடன், அலங்காரம் செய்த யானைகள் முன்வர, நடன கோஷ்டியுடன் பிரமாதமாகப் பத்து நாள் ஊர்வலம் நடக்கும். ஐந்து கோயில்கள் சேர்ந்து நடத்தும் ஊர்வலம் அது'' என்றார் சுமதிபாலா.

அங்கே கோயிலைச் சுற்றி அமைந்த அகழியில், கோயிலுக்கு வந்திருந்த பெண்களும், பெரியவர்களும், மீன்களுக்குப் பொரியை அள்ளி அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தார்கள்! ''இந்த மீன்கள் தெய்விகமானவை. யாரும் இவற்றைத் தொந்தரவு செய்வதில்லை. இங்கே பொரி போட்டால் வேண்டிக் கொண்டது கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு'' என்றார் ரங்கநாதன்.

உள்ளே போனோம். ஆங்காங்கே தீபம் ஏற்றிவைத்து வணங்கிக் கொண்டிருந்தார்கள். தரையில் அப்போதுதான் பிறந்த குழந்தைகளைப் போட்டுப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள். வர்ணத் துணிகளைக் கட்டி முடிச்சுப் போட்டு-வேண்டுதலை செய்து கொண்டதை நிறைவேற்றிக்

கொண்டிருந்தார்கள். கிண்ணங்களில் மலர்களை எடுத்துக் கொண்டு பெண்கள் பிரகாரத்தைச் சுற்றி வலம் வந்தார்கள்.

''நம்பிக்கைகள் எல்லா ஊரிலும் ஒரே மாதிரியானவைதான்! எல்லா தெய்வங்களும் ஏறக்குறைய ஒரே மாதிரியானவைதான்...'' என்று சுமதி பாலாவிடம் சொன்னேன் நான்.

''அரசரின் அரண்மனை பக்கத்திலேயேதான் இருக்கிறது. பக்கத்து வாசல் ஒன்றின் கதவைத் திறந்தால் போதும்! அரசர் இருப்பிடத்துக்குப் போய்விடலாம்'' என்றார் சுமதிபாலா.

''பாங்காக்கிலும் இதேபோல புத்தர் கோயில் இருக்கிறது. பக்கத்திலேயே அரசரின் அரண்மனையும் இருக்கிறது. பக்தியும்-பயமும்கூட உலகெங்கும் ஒரேமாதிரிதான்!'' என்றேன் நான்.

''அடுத்து எங்கே போகப் போகிறோம்?'' என்று கேட்டேன்.

''சுமார் மூன்று மைல் தூரத்தில் உள்ள 'பேராதனைப் பூங்காவை'ப் பார்க்கப் போகிறோம். நானூறு ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட புகழ் பெற்ற பூங்கா அது!'' என்றார் துரைராசா.

''இன்னொரு சுவாரசியமான விஷயமும் கூட. அங்கேதான் ஆஸ்கார் பரிசு பெற்ற 'பிரிட்ஜ் ஆன் தி ரிவர் க்வாய்' (Bridge on the River Kwai) என்ற படத்தைப் பிடித்தார்கள். ஆறு, காடு, பாலம் எல்லாவற்றையும் அந்தக் கதைக்கேற்றபடி இந்தப் பூங்காவில்தான் அமெரிக்கர்களால் காண முடிந்தது'' என்றார் சுமதிபாலா.

மஹாவலி கங்கை ஆறு அந்தப் பூங்காவையும் விடவில்லை. அதைச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கிறது!

'''ஸ்டுடண்ட்ஸ் கார்டன்' என்று ஒரு பகுதி இருக்கிறதே...? என்ன அது?'' என்று கேட்டேன்.

''பல்கலைக்கழகத்தில் தாவர இயல் படிக்கும் மாணவ – மாணவிகளுக்குப் பயன்படுவதற்காக அமைந்த இடம் இது. ஆற்றை ஒரு தொங்குபாலத்தின் மூலம் கடந்து போனால் உஷ்ணநிலைப் பிரதேசப் பயிர்களைப்பற்றி மட்டும் தாவர இயல் கற்றுக் கொடுக்கும் பள்ளிக்கூடம் இருக்கிறது'' என்றார் சுமதிபாலா.

கார் சுற்றி வந்து கொண்டிருந்தபோது, ''ஒரு நிமிடம் நிறுத்துங்கள்'' என்றார் சுமதிபாலா.

''என்ன விஷயம்? இங்கே சிறிது தங்கலாம் என்று...? நேரம் இல்லை'' என்று 'ரிஸ்ட்வாட்சை'ப் பார்த்தேன்.

''நீங்கள் தங்க வேண்டாம். இங்கேதான் இரண்டாவது உலக யுத்தத்தின்போது மவுண்ட்பேட்டன் படைகளுடன் தங்கியிருந்தார். பிலிப்பைன்ஸ் ஜப்பானியர் வசமான பிறகு இதுதான் தென்பகுதியில் பிரிட்டிஷாருக்கு முக்கிய தளமாக விளங்கிற்று'' என்றார் அவர். காரிலிருந்து இறங்கி மவுண்ட்பேட்டன் மிதித்த மண்ணை நானும் ஒரு முறை பெருமையுடன் மிதித்துவிட்டுக் காரில் ஏறிக் கொண்டேன்!

''அடுத்து மஹாவலி கங்கையைப் பார்க்கப் போகலாம்'' என்றார் ரங்கநாதன்.

''அதுதான் நாம் போன இடத்துக்கெல்லாம் வந்து கொண்டிருக்கிறதே.. இன்னும் அதைப் பார்க்கப் போக வேண்டுமா?'' என்று கேட்டேன்.

''இலங்கையின் முக்கியமான அணைக்கட்டுத் திட்டம் ஒன்றை நாம் பார்க்கலாம். விவசாயத்துக்கும், மின்சார உற்பத்திக்கும் பயன்படும் திட்டம் அது. இங்கிருந்து மூன்று நான்கு மைல்கள் தூரம்தான்'' என்றார் அவர்.

நாங்கள் போய் நின்ற இடத்தில், அணைக்கட்டில் தேங்கிய நீர்த்தேக்க மாக ஆறு நின்று கொண்டிருந்தது. ஓடவில்லை! சுவர்க் கட்டடமும், மதகுப் பலகைகளுமாக நீரைத் தேக்கி அளந்து வெளியேற்றிக் கொண்டிருந்தன.

''நீரைத் தேக்கி சுமார் ஐந்தரை மைல் தூரம் மலையைக் குடைந்து கால்வாய்களின் வழியாக எடுத்துச் செல்லுகிறார்கள். சரிவில் நீரைக் குழாய்கள் மூலம் வேகமாக இறக்கி அதிலிருந்து மின்சாரம் எடுக்கிறார்கள். தண்ணீர் விவசாயத்துக்குப் பயன்படுகிறது'' என்றார் துரைராசா.

''திட்டம் முடிந்துவிட்டதா?'' என்று கேட்டேன்.

''சில ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் முடியவில்லை. பலவிதமான சிக்கல்கள்...'' என்றார் சுமதிபாலா.

''கங்கை என்றாலே இப்படித்தான்; கொண்டு வந்து சேர்ப்பது பகீரதப் பிரயத்தனமாக இருக்கும்!'' என்றேன் நான்.



# 14

ரம்பொடை வழி (Ramboda Passi)

கண்டியிலிருந்து கிளம்பினேம். பிற்பகல் நேரமாகிவிட்டது. டிரைவர் எங்களை அவசரப்படுத்திக் கொண்டிருந்தார்.

''வெளிச்சம் இருக்கிறவரையில் நுவரெலியாவுக்குப் போகும் மலைச்சாலை ரொம்ப அழகாக இருக்கும். மூடுபனி விழுந்து இருட்டவும் ஆரம்பித்து விட்டால் எதிரே பத்து அடி தூரத்துக்குக்கூடப் பாதை தெரியாது'' என்ருர் டிரைவர்.

''போட்டோவைத் தவிர வேறு எதிலும் விழுவதாக இல்லை! உடனே புறப்படுவோம்'' என்றேன் நான்.

பச்சை நிறக் கம்பளம் போட்டு மூடியது போன்ற தேயிலைத் தோட்டங்கள், நீலநிற ஆகாயம், கருநிற மலைமுடிகள் – இவற்றுக்கு நடுவில் துள்ளிக் குதிக்கும் வெள்ளி அருவிகள்... இவற்றைப் பார்க்கும்போது நமக்கு கொடைக்கானல், நீலகிரி மலைகளின் ஞாபகம்தான் வருகிறது.



மலைமுகட்டில் ஒரு சாலையில் திரும்பினோம். குறுகலான அந்த வளைவிலிருந்து கீழே மலைச்சாலை இருபுறமும் தெரிந்தது. மலைப்பாறை மேலே குடைபோல அகன்று சாலை வளைவிற்கு வழிவிட்டது.

''இதுதான் 'ரம்பொட-பாஸ்' என்ற இடம். கண்டியைப் பிரிட்டிஷார் கைப்பற்ற முடியாமல், மலைநாட்டினர் காவல் காத்து வந்த இடங்களில், இது முக்கியமான இடம். இங்கே கல்லை உருட்டி சாலையை அடைத்து விட்டால் கண்டிக்கு வருவதற்கு வேறு வழியே இல்லை!'' என்றார் சுமதிபாலா.

''நுவரெலியாவின் மீது பிரிட்டிஷாருக்கு அப்படி என்ன மோகம்?'' என்று கேட்டேன்.

'' 'நுவர-எலியா' என்றால், விளக்குகளின் நகரம் (City of Lights) என்று அர்த்தம். இந்த 'ரம்பொட-பாஸ்' என்ற இடத்தில் ஆறு மைல் தூரத்திற்குள் மலை உயரம் 1000 அடி ஏறுகிறது. பார்க்க அழகான இயற்கைக் காட்சிகள், ஐம்பத்தொன்பது டிகிரி அளவு உஷ்ணம், 6230 அடி உயரத்தில் அமைந்த சமவெளி-இவைதான் பிரிட்டிஷாரை இங்கே கவர்ந்து இழுத்தன'' என்றார் சுமதிபாலா.

''இன்னொரு குன்னூர்!'' என்றேன்.

''பிப்ரவரியில் குளிர் ரொம்ப ஜோராக இருக்கும்! மார்ச்-ஏப்ரல் அருமையான மாதங்கள். படகில் செல்ல—மீன் பிடித்துப் பொழுது போக்க ஏரி, நடந்து செல்லவும்-மலை ஏறவும் வசதியான இடங்கள், நிறைய காய்கறி, பழங்கள்-இவை எல்லாம் பிறநாட்டு உல்லாசப் பயணிகளை இங்கே வந்து தங்கச் செய்கின்றன. ஒரு காலத்தில் இங்கே யானை வேட்டையும் பிரசித்தமாக இருந்தது'' என்றார் அவர்.

''போயும் போயும் யானைகளை வேட்டையாடுவதா?'' என்றேன்.

''ஆமாம்! பிரிட்டிஷார் பதினேழாம் நூற்றாண்டுக் கடைசியில் இலங்கைக்கு வந்து சேர்ந்தபோது இங்கே ஏராளமான யானைகள் இருந்தன. அந்தக் காட்டு யானைகளை விரட்டாமல் இந்த இடத்தைப் பிடிக்க முடியாது என்று பிரிட்டிஷார் நினைத்தார்கள். டாக்டர் டேவி என்ற ஒரு பிரிட்டிஷ் வேட்டைக்காரர் இங்கே ஆயிரம் யானைகளை வேட்டையாடிக் குவித்திருக்கிறார்...'' என்றார் அவர்.

'''யானை இருந்தாலும்—இறந்தாலும் ஆயிரம் பொன்!' ஆயிரம் யானைகள் இறந்தால் எவ்வளவு பொன்னோ? அடையப்பா...!'' என்றார் ரங்கநாதன்.

''ராணுவ வீரர்கள் ஓய்வெடுத்து உடல்நலத்தைத் திரும்பப் பெறுவதற்கு உரிய 'காம்ப்'பாக இந்த இடத்தைப் பிரிட்டிஷார் பயன்படுத்தினார்கள். நைல் நதியைக் கண்டுபிடித்த ஸர் சாமுவேல் பேக்கர் என்ற பிரிட்டிஷ் ஆராய்ச்சியாளர் இங்கே வந்து ஒரு பெரிய பண்ணையையே நிறுவினார்... பாவம்!'' என்றார் சுமதிபாலா.

''ஏன் பாவம் என்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''பண்ணை சாமான்கள், எருதுகள், வேட்டை நாய்கள்-இவற்றோடு வந்து இறங்கி பெரிய பிரிட்டிஷ் மாடல் பண்ணை ஒன்றைத் தொடங்கினார் அவர். ஆனால் ஏதோ ஒரு சாபக்கேடு—எல்லா மாடுகளும் இறந்து போயின. கால்நடைகள் அழிந்தன. ஆட்கள் வேலையை விட்டுப் போய்விட்டார்கள். பயிர்கள் வளரவில்லை. கடைசியில் பதினொரு ஆண்டுகள் முயன்று பார்த்துவிட்டு ஸர் சாமுவேல் பேக்கர் திரும்பிப் போய்விட்டார்.

அந்தப் பண்ணை இருந்த இடம் மட்டும் இப்போது இருக்கிறது'' என்றார் சுமதிபாலா.

''காட்டு யானைகள் கொடுத்த சாபமாகத்தான் இருக்கும்!'' என்றேன்.

திடீரென்று சாலையில் மூடுபனி இறங்கிற்று. பளிச்சென்ற பகல் நேரம் இருட்டாகி விட்டது. புகைபோலப் பனி சூழ்ந்து கொண்டு மேலே போக வழி தெரியவில்லை.

மெதுவாகக் கொஞ்ச தூரம் போனதும், மூடுபனி விலகிற்று. பசுமையான புல்வெளிக்கு நடுவே அமைதியான ஊரும் அழகான வீடுகளும் தெரிந்தன. இதமான குளிர் 'சில்'லென்று இறங்கிற்று.

''நுவரெலியாவுக்கு வந்துவிட்டோம்'' என்றார் ரங்கநாதன்.

''நீங்கள் சொல்லாமலே தெரிகிறது! வரிசை வரிசையாக அது என்ன செடியோ...?'' என்று சுட்டிக்காட்டிக் கேட்டேன்.

''முட்டைகோஸ் செடிகள்! இலங்கையில் எல்லாப் பகுதிகளுக்கும் இங்கிருந்துதான் இங்கிலீஷ் காய்கறி வகைகள் அனுப்பப்படுகின்றன. தமிழ் நாட்டில் ஊட்டியைப்போல...!'' என்றார் அவர்.

''பலவிதத்திலும் இது பார்க்க ஊட்டி, குன்னூர் மாதிரிதான் இருக்கிறது'' என்றேன்.

''இலங்கையின் முக்கியமான தேயிலைத் தோட்டங்கள் இங்கேதான் இருக்கின்றன. சுமார் ஆறு லட்சம் ஏக்கர் தேயிலைத் தோட்டங்களில் இருந்து ஒவ்வோர் ஆண்டும் ஐம்பது கோடி பவுண்டு தேயிலை உற்பத்தியாகிறது. 'பீதுருதாலகலை' என்ற இலங்கையிலேயே மிக உயரமான சிகரம் இங்கேதான் இருக்கிறது. 8280 அடி உயரம்!'' என்றார் ரங்கநாதன்.

''வேறே முக்கியமான மலைச் சிகரங்கள்...?'' என்றேன்.

''சிவனொளி பாதமலை என்ற சிகரம் ஹட்டன் என்ற இடத்திலுள்ளது. ஆங்கிலத்தில் 'ஆதாம் சிகரம்' (Adam's Peak) என்று சொல்வார்கள். சிங்களத்தில் 'ஸ்ரீபாத' என்று சொல்வார்கள். சுமார் 7360 அடி உயரமுள்ள இந்த சிகரத்துக்கு இந்துக்கள், பௌத்தர்கள், முஸ்லீம்கள் எல்லாரும் போகிறார்கள்'' என்றார் அவர்.

''எல்லாருக்கும் புனிதமான இடமா...? அது எப்படி?'' என்றேன்.

''அங்கே மலையில் உள்ள பெரிய குழிவு ஒன்றைப் பௌத்தர்கள் புத்தர் காலடி என்று கருதுகிறார்கள். இந்துக்கள் சிவபெருமானின் பாதம் என்று வணங்குகிறார்கள். முஸ்லீம்களோ ஈடனிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆதாம், அதற்கு நிகரான அழகு பொருந்திய மலைச்சிகரம் ஒன்றில் இங்குவந்து தங்கியதாகச் சொல்லுகிறார்கள். ஆக, ஒவ்வோர் ஆண்டும் இங்கே வெளி நாட்டினரும், உள்ளூர்க்காரர்களுமாக ஏகப்பட்ட பேர் வருகிறார்கள் என்றார்'' அவர்.

''இன்னொரு 'டூரிஸ்ட்' அட்ராக்ஷனா?'' என்று சிரித்தேன்.

'''டூரிஸ்டு'களை வசியப்படுத்த இங்கே நிறைய வசதிகள் இருக்கின்றன. சுமார் நானூறு வகைப் பறவைகள் இருக்கின்றன. அதில் பாதிக்கு மேல் இங்கே மட்டும்தான் பார்க்கக்கூடியவை. நீர்வீழ்ச்சிகள் அழகு மிகுந்தவை. பெயர்கள்கூடக் கேட்பதற்கு 'மியூசிகலா'க இருக்கும். துன்ஹிந்தை, தியலும, லக்ஸபான—இப்படிப் பல...!'' மேலும், இங்கிருந்து ஆறு மைல்

தொலைவில் உள்ள ஹக்கல பூந்தோட்டம் விசேஷமானது. ஏன்? அது தோன்றிய விதமும் விசேஷமானதுதான்!'' என்றார்.

''எப்படியோ...?'' என்று கேட்டேன்.

''முதலில் அது சின்கோனா தோட்டமாக இருந்தது. அப்புறம் காப்பி, தேயிலைத் தோட்டமாக மாறியது. வில்லியம்நாக் என்ற ஆங்கிலேயர்தான் அதை அழகான பூந்தோட்டமாக அமைத்தார். ரோஜாத் தோட்டம், தாமரைக்குளம் எல்லாம் அழகாக ரம்மியமாக இருக்கும்... இலங்கையிலேயே மிக உயரமான சமவெளி இந்தப் பகுதியில்தான் இருக்கிறது'' என்று கூறியவர் தொடர்ந்து, உலகத்தின் முடிவைப் பார்க்க விரும்புகிறீர்களா...?'' என்று கேட்டார்.

''உலகத்தின் முடிவா...? என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று வியப்புடன் கேட்டேன்.

''ஆமாம்! World's end. அங்கே மலை முகட்டில் நின்று பார்த்தால் சுமார் நூறு மைல் தூரம் சமவெளி முழுவதும் தெரியும். தூரத்தில் கடற்கரையும், அடிவானமும் இழைவது வரையில் தெரியும். பனி மூட்டம் இல்லாத நிலா வெளிச்சத்தில் இந்தக் காட்சி பிரமாதமாக இருக்கும்'' என்றார் ரங்கநாதன் உணர்ச்சியோடு.

''நீங்களே கவிஞர் ஆகிவிட்டீர்கள்... ரொம்ப சரி! இந்தக் குளிருக்குச் சூடாகத் தேநீர் சாப்பிட்டால் நன்றாக இருக்கும். எங்கே போகலாம்?'' என்றேன்.

''முனிசிபல் கெஸ்ட்-ஹவுஸ் இங்கேதான் இருக்கிறது. போகலாம் வாருங்கள். அங்கே வெளியே புல்வெளியில் அமர்ந்து ரேஸ் கோர்ஸ் மைதானத்தைப் பார்த்தபடியே அனுபவித்துத் தேநீர் அருந்தலாம்...'' என்றார் துரைராசா.

''ரேஸ் கோர்ஸா...? அப்படியானால் குதிரைப் பந்தயமும் உண்டா?'' என்று கேட்டேன்.

''குதிரைப் பந்தயத்தை சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பே பண்டார நாயகா தடைசெய்து ஒழித்து விட்டார். இப்போது அங்கே காய்கறித் தோட்டம் போடுகிறார்கள். பள்ளிக்கூடச் சிறுவர், சிறுமியர் பந்தய மைதானங்களும் உண்டு'' என்றார் அவர்.

''ஏதோ ஒரு பந்தயம் நடந்தால் சரி...!'' என்று சிரித்தேன்.

தேநீர் அருந்திவிட்டுக் கிளம்பினோம்.

''சூடான தேநீர் அருந்தினீர்கள்! வழியில் ஒரு தேயிலைத் தோட்டத்தையும் பார்க்கலாமா...?'' என்று கேட்டார் சுமதிபாலா.

''தோட்டம் இருக்கட்டும்! தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளியைப் பார்ப்போம்'' என்றேன்.

வழியில் கார் நின்றது. எங்களைப் பார்த்துவிட்டு சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு மாது கார் அருகில் வந்தார்!

''நீங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களா...?'' என்று கேட்டேன்.

''ஆமாம்! திருச்சிக்குப் பக்கத்தில் தாத்தநேரி. இங்கே தேயிலைத் தோட்டத்தில் ஆரம்பத்திலிருந்து வேலை செய்பவர்கள் தமிழர்கள் மட்டும் தான். இப்போது சிங்களவர்களும் இருக்கிறார்கள்'' என்றார் அந்த அம்மையார்.

''உங்கள் பெயர்...?'' என்றேன்.

''பழனியாயி... நான் மேற்பார்வைப் பார்க்கிறேன். புருசன் உயிருடன் இருந்தவரை நான் வேலை செய்ததில்லை. அவர் காலமான பிறகு நானும் வேலை செய்கிறேன்'' என்று பதில் கூறினர் அவர்.

''வேலை நேரம், கூலி எல்லாம் எப்படி...?'' என்றேன்.

''காலை ஏழரை மணியிலிருந்து வேலை செய்ய வேண்டியதுதான். தேயிலைக் கொழுந்து பறிக்க வேண்டும். ஒரு நாளைக்கு முப்பத்து மூன்று ராத்தல் வரையில் பறிக்க வேண்டும்'' என்ருர் அவர்.

''ஞாயிற்றுக்கிழமை வேலை உண்டா?'' என்று கேட்டேன்.

''அவசியமானல் வேலை செய்ய வேண்டியதுதாங்க! ஒண்ணரைப் பேர்!'' என்ருர் பழனியாயி.

''அப்படி என்ருல்...?'' என்றேன்.

''ஓவர்டைம்! ஒன்றரை மடங்கு கூலி'' என்று விளக்கினர் துரைராசா.

''இதெல்லாம் தனியாருக்குச் சொந்தமான தோட்டங்களா...?'' என்று கேட்டேன்.

''இல்லை. முன்னே கொம்பெனித் தோட்டமாக இருந்தது. இப்போது அனேகமாக எல்லாம் அரசாங்கத்துக்குத்தான் சொந்தம்'' என்ருர் பழனியாயி.

''குடியிருப்பெல்லாம் சௌக்கியமாக இருக்கிறதா...?'' என்று கேட்டேன். பழனியாயி தலையைக் குனிந்து கொண்டார். பதில் சொல்லவில்லை.

''கேட்காதீர்கள்; வம்பு வந்து சேரும்! ஒரு சிறு வராந்தா-ஒரே ஒரு அறை இவ்வளவுதான். அந்த அறையில்தான் சமைப்பது, படுப்பது எல்லாம்: குடும்பத்தில் கணவன், மனைவி, பெண் குழந்தைகள் எல்லாம் ஒன்ருகவே படுத்துத் தூங்க வேண்டும். ரொம்ப 'டெலிகேட்!' குளிக்க, கழிவுக்காத-இப்படி வசதிகள் மிகக்குறைவு. ஒரு முறை இதை பி.பி.ஸி.-யில் படம் எடுத்துக் காட்டிவிட்டார்கள். பெரிய வம்பாகப் போய்விட்டது! இலங்கையின் தேயிலை வியாபாரமே பாதிக்கப்பட்டு விட்டது. இவ்வளவு மோசமான சுகாதாரமா என்று தேயிலையை வாங்க உலக நாடுகள் சங்கடப்பட ஆரம்பித்து விட்டன'' என்ருர் ரங்கநாதன்.

''தேநீர் சுவையாக இருந்தது. ஆனல், அது விளையும் பின்னணியை நினைத்தால்...?'' என்று கூறி ஒரு பெருமூச்சு விட்டேன்....

தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளின் நிலைபற்றி விவரமாகத் தெரிந்து கொள்ள, கொழும்பிற்குத் திரும்பியதும் நான் ஒரு முக்கியமான அரசு அலுவலரைச் சந்தித்துக் கேட்டேன். ஒரு நிமிடம்கூட யோசிக்காமல் பளிச்சென்று பதில் சொன்னர் அவர்:

''திரு. தொண்டைமான் அவர்களிடம் கேளுங்களேன்! கிழக்கு ஆசியா விலேயே மிகப்பெரிய தொழிலாளர் நிறுவனமாகிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் அவர். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பணியிலேயே ஊறிப் போனவர். இப்போது நுவரெலியா பகுதியிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர். உங்களுக்குத் தனது நிறுவனத்தின் பணிகளைப் பற்றியும்-தொழிலாளர்களைப் பற்றியும் விரிவாகச் சொல்லுவார். ஆனல்...'' என்று நிறுத்தினர்.

''ஆனல் என்ன...? சந்திப்பது சிரமமாக இருக்குமோ?'' என்று கேட்டேன்.

''அப்படியில்லே. மிகவும் எளிமை நிறைந்த மனிதர் அவர். நாளைக்கு உலகத் தொழிலாளர் நிறுவனக் கூட்டத்தில் கலந்து கொள்ள ஜெனிவாவுக்குப் போகிருர். இன்றைக்கே எப்படியாவது பார்த்து விடுங்கள்'' என்ருர் நண்பர்.

மாலே நான்கு மணிக்கு நான் அங்கே சென்றேன். அப்போது அந்த சங்கக் கட்டடம் நம் ஊர் கலெக்டர் அலுவலகம் மாதிரி காட்சி அளித்தது! ஏகப்பட்ட பேர் வருவதும், போவதும், மனு எழுதிக் கொடுப்பதும், பணம் கட்டுவதும், சிறு கூட்டங்களாகப் பேசிக்கொள்வதுமாக இருந்தார்கள்.

''தொண்டைமான் இப்போது வந்துவிடுவார். சற்று உட்காருங்கள்'' என்று என்னே வரவேற்று அமரச் செய்த செயலாளர், காங்கிரசின் துணைத் தலேவரான எம்.கே. விஜயசுந்தரத்தை அறிமுகப்படுத்தி வைத்தார்.

''தொழிலாள உறுப்பினர் ஒவ்வொருவரும் தலா இரண்டு ரூபாய் சந்தா கொடுக்கிருர்கள். நூறு பேருக்கு ஒருவராகத் தேர்ந்தெடுத்து, 20 தோட்டங் களுக்கு ஒரு மாவட்டக் கமிட்டி அமைக்கிருர்கள். இப்படி நாற்பது அமைப்புகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டக் கமிட்டியிலும் அந்தந்தப் பகுதியின் சிறு பிரச்சினேகளும் ஆராயப்பட்டு, வழிகாணப்படுகிறது. கொள்கை அளவில் முடிவுகள் இந்த நாற்பது கமிட்டிகளுக்குமாகச் சேர்த்து எடுக்கப்படுகிறது'' என்ருர் விஜயசுந்தரம்.

''இதில் முக்கியமாகப் பங்குகொள்ளும் தமிழ் மக்கள் எங்கே இருக் கிருர்கள்...?'' என்று கேட்டேன்.

''கண்டி, நுவரெலியா பகுதியிலும், அதைச் சூழ்ந்தும் உள்ள தேயிலேத் தோட்டத் தொழிலாளிகளில் பெரும்பான்மையோர் தமிழ்மக்கள்தாம். இந்திய வம்சாவளி மக்கள் என்ற இந்தத் தமிழர்களே இதன் முக்கியமான உறுப் பினர்கள். தவிர அரசாங்க, உள்ளூர் ஆட்சிமன்ற ஸ்தாபனங்கள், புகையிரத இலாகா, பொது மராமத்துத் துறை முதலான இடங்களிலும் இந்திய வம்சாவளி மக்கள் தொழிலாளிகளாக இருக்கிருர்கள். அவர்களே யெல்லாம் சங்கரீதியாக நாங்கள் ஒன்றுபடுத்துகிருேம்'' என்ருர் அவர்.

''சிங்களவர்களும் இதில் உறுப்பினர்களாக இருக்கிருர்களா...?'' என்றேன்.

''சங்கத்தில் மொத்தம் சுமார் மூன்றரை லட்சம் உறுப்பினர்கள் இருக்கிருர்கள். அவர்களில் சுமார் நாற்பதினுயிரம் பேர் சிங்களவர்கள். மற்றவர்கள் யாவரும் தமிழர்களே!'' என்ருர் விஜயசுந்தரம்.

கதர் உடையும், நிமிர்ந்த உருவமும், எளிய தோற்றமுமாக உள்ளே நுழைந்தார் மூக்குக்கண்ணுடி அணிந்த ஒருவர். எங்கள் பேச்சு தடைப் பட்டது. என் பக்கமாகத் திரும்பிப் புன்னகையுடன் கைகுவித்தார் அவர். அதைத் தொடர்ந்து, ''நான் சௌமியமூர்த்தி தொண்டைமான்... சற்று தாமதமாகி விட்டது'' என்று தன்னே அறிமுகப்படுத்திக் கொண்டு கைகுலுக்கினுர்.

''உங்களே எனக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பே தெரியும். எனக்கு மட்டுமல்ல; தமிழ்மக்கள் அனேவருக்கும் நீங்கள் அறிமுகமாகியிருக் கிறீர்கள்...'' என்றேன்.

''அது எப்படி...?'' என்று அவர் ஆச்சரியத்துடன் கேட்டார்.

''அந்த நாளிலேயே 'கல்கி' உங்களேப் பற்றி தனது பத்திரிகையில் நிறைய எழுதியிருக்கிருர். வி. வி. கிரியும், சத்யமூர்த்தியும் இங்கே வந்து தொழிலாளிகளேக் கண்டு, அவர்கள் நலம் பற்றித் தமிழ்நாட்டில் பேசி

யிருக்கிறார்கள். அவர்கள் பேச்சில் உங்கள் பெயர் நிறைய அடிபட்டதுண்டு'' என்றேன்.

''நான் வாழ்க்கையில் ரொம்ப அடிபட்டவன்!'' என்று புன்னகை செய்து கொண்டார் திரு. தொண்டைமான்.

''தமிழ்நாட்டிலிருந்து குடிபெயர்ந்து வந்து இங்கே தங்கி வெகுநாட்களாகி விட்டதோ...?'' என்று கேட்டேன்.

''எங்கள் மூதாதையரின் ஊர் தமிழ்நாட்டில் திருக்கோஷ்டியூர். அங்கே மார்ச் மாதம் நடக்கும் மண்டகப்படியில், ஆறும் திருநாள் 'யானை வாகன மண்டகப்படி' எங்களுடையது. அதற்காக ஆண்டுக்கு ஒருமுறை அங்கே போய்வருவதுண்டு. மற்றபடி நான் இந்த மண்ணுக்குத்தான் சொந்தம். நாலணாக் கூலியாக வந்தேன்... இன்று நாலு லட்சம் தொழிலாளர்களுக்குத் தலைவன் என்ற மதிப்பை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள்'' என்றார் திரு. தொண்டைமான்.

''இந்தத் தொழிற்சங்கம் இவ்வளவு பெரியதாக வளர்ந்திருக்கிறதே? இதைப் பின்னப்படுத்தவோ.... அடக்கவோ அரசாங்கம் முயன்றதில்லையா?'' என்று கேட்டேன்.

''அரசாங்கமும், தோட்ட முதலாளிகளும் ஆரம்ப நாட்களில் தொல்லை கொடுத்ததுண்டு. விலை கொடுத்துத் தலைவர்களை வாங்க முயன்றதும் உண்டு. பல தொழிற்சங்கங்களுடன் போட்டா போட்டியும் இருந்ததுண்டு. இப்போது 'தார்மீக அடிப்படையில் அமைந்துள்ள சம்பிரதாய மதிப்பு வாய்ந்த சங்கம்' என்ற பெயர் எங்களுக்கு உறுதியாகி விட்டது!'' என்றார் அவர்.

''தங்கள் சங்கத்தின் பணியைக் குறித்து சொல்ல முடியுமா?'' என்றேன்.

''பெருமையுடன் சொல்லலாம். இன்று ஒரு சாதாரணத் தொழிலாளியும் கூட, கலெக்டரிடம் தனது குறைகளை முறையிட முடியும். இந்த மண்ணில் வாழ்ந்து – இந்த நாட்டின் வளர்ச்சிக்காக உழைத்த லட்சக்கணக்கான இந்திய வம்சாவளி மக்கள், இந்த நாட்டின் பிரஜைகளாக மதிக்கப்படாமல் இருந்தார்கள். அவர்களுடைய உரிமைக்காகப் போராடியவர்கள் நாங்கள்தாம். நேற்றுவரை முனிசிபல் தேர்தல்களில் அவர்களுக்கு ஓட்டுப்போடும் உரிமைகூட இல்லாமல் இருந்தது. அதையும் இப்போது வாங்கிக் கொடுத்திருக்கிறோம்'' என்றார் திரு. தொண்டைமான்.

''உங்களிடம் சற்று சிக்கலான கேள்வி ஒன்றைக் கேட்கலாமா...? தனி ஈழம் வேண்டுவதை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரிக்கிறதா?'' என்று கேட்டேன்.

''இங்கே வந்து தங்கிவிட்ட தமிழர்கள் அனைவருக்கும் - எல்லாப் பிரச்சினைகளுக்கும் பரிகாரம் கிடைக்கத் தனி ஈழம் ஒன்றுதான் வழி என்று சொல்ல முடியாது. ஆனால், தமிழ் மக்களுடைய குறைகள் அனைத்தையும் நாங்கள் அனுதாபக் கண்ணோட்டத்துடன் கவனிக்கிறோம். எங்கள் தனித்தன்மையை இந்தக் கொள்கையைப் பற்றிய மட்டிலும் நாங்கள் காப்பாற்றிக் கொள்ள விரும்புகிறோம். இந்திய வம்சாவளித் தமிழர்களில் பெரும்பான்மையோர் தமிழ்நாட்டுக்குத் திரும்பக்கூட விரும்பவில்லை. தமிழ் ஈழம் என்று பிரிந்தால் எப்படி அங்கே போவார்கள்?'' என்றார் அவர்.

''ஆனால், அவர்களுடைய நன்மைக்கு இந்த சங்கம் பாடுபடுவது எப்படி...?''

''ஸ்ரீலங்கா பல இனத்தவர்களும், பல மதத்தினரும் வாழும் நாடு என்பதை மனத்தில் கொண்டு, எல்லா இன மக்களும் சரிசம அந்தஸ்துடன்

வாழவும், உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும், சர்வதேச மனித உரிமைகளைத் தங்குதடையின்றிப் பெறவும் நாங்கள் பாடுபடுகிறோம். இதற்குப் பங்கம் உண்டாகும் வகையில் அரசு எடுக்கும் எந்த நடவடிக்கையையும் நாங்கள் எதிர்ப்போம். இந்தத் தொண்டில் தமிழ் மக்களுக்கு முழு நன்மை கிடைக்கும்'' என்றார் திரு. தொண்டைமான்.

''தனி ஈழம் வேண்டுவோர் கேட்பதும் இதுதானே...?'' என்றேன்.

''இருக்கலாம். ஆனால், பிரிவினை மூலம்தான் இது கிடைக்கும் என்பதை நாங்கள் நூற்றுக்கு நூறு ஒப்புக்கொண்டு, அவர்களுடன் ஈடுபட முன்வர வில்லை. அந்த அளவில் அவர்களுக்கு எங்களிடம் மனக்கசப்பும் இருக்கிறது. ஆனால் ஒன்று, தமிழர்களுடைய நன்மை எங்களது முக்கியக் குறிக்கோள். அதற்காக நாங்கள் அரசாங்கத்திடம் வாதாடி வெற்றி பெறுவோம்'' என்றார்.

திரு. தொண்டைமானிடம் விடைபெற்றுத் திரும்பினேன். உலகிலேயே மிகப்பெரிய தொழிலாளர் சங்கங்களில் ஒன்றான இந்த இயக்கத்தின் தலைவராக, இத்தனை ஆண்டுகள் பணிபுரிந்த பின்னரும், அவர் வெளிக்காட்டிய அடக்கமும் பணிவும், சொல்நயமும் என்னை அதன்பின் வெகுநேரம் சிந்திக்கச் செய்து கொண்டிருந்தன....



# 15

தேயிலைக் கொழுந்தெடுக்கும் தமிழ் நங்கையர்

தேயிலைத் தோட்டங்களைப் பார்த்துக் கொண்டே புறப்பட்டோம். மலையிலிருந்து படிப்படியாக இறங்கும் விளைநிலங்கள் கண்ணுக்குப் பசுமையாகத் தென்பட்டன. மரகதக் கம்பளத்தை மடித்துப் போட்டது போல் இருந்தது.

''இதைப்போல மலையின் சரிவுப் பகுதியில் படிப்படியாக நிலத்தை அமைத்து நெல் விளைவிப்பது இலங்கையிலும், ஜாவாவிலும்தான்!'' என்றார் ரங்கநாதன்.

''படிப்படியாக நெல் அளப்பதுதான் எனக்குத் தெரியும். படிப்படியாக நெல் விளைவிப்பதை இங்கேதான் கேள்விப்பட்டேன்!'' என்றேன் சிரித்துக் கொண்டே.

''சீதாதேவி இருந்த இடமாயிற்றே...? செழுமைக்குக் கேட்பானேன்?'' என்றார் துரைராசா.



''சீதாதேவி இருந்த இடமா...? அசோகவனமா? எங்கே இருக்கிறது?'' என்று வியப்புடன் கேட்டேன் நான். சாலை ஓரமாக ஒரு கோயில் முன் கார் நின்றது. ஒரு பெரியவர் கோயிலிலிருந்து வெளியே வந்தார், எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டே.

''இதுதான் சீதாதேவி சிறைவாசம் இருந்த இடமா...?'' என்று பெரியவரிடம் கேட்டேன். ''இது சீதையம்மன் கோயில். பக்கத்தில் மூன்று மலைகள் இருக்கின்றன. அவை சூழ்ந்த பகுதியில் உயர்ந்த இடத்தில், அசோக வனத்தில், சீதாதேவி சிறை வைக்கப்பட்டு இருந்தாகச் சொல்லுகிறார்கள்'' என்றார் அவர்.

''நீங்கள் அங்கே போய் பார்த்திருக்கிறீர்களா...?'' என்று கேட்டேன்.

''பார்த்திருக்கிறேன். நாலு மைல் தூரம் ஒற்றையடிப் பாதையில் போகவேண்டும். அந்த வனப்பகுதியில் பழங்கள் கிடைக்கின்றன. அங்கேயே சாப்பிட்டால் இனிப்பாக இருக்கின்றன. கீழே இறங்கி வந்துவிட்டால் கசந்து போகின்றன!'' என்றார் அவர்.

''சீதாதேவியும், திரிசடையும் இருந்த இடமல்லவா? ஆகையால் அங்கே இனிப்பாக இருக்கும்! கீழே இராவணன் நடந்த இடத்துக்கு வந்தால் கசப்பாக இருக்கும். நியாயந்தானே...?'' என்றேன். பெரியவர் சிரித்துக் கொண்டார்.

''இங்கே ஏன் கோயில் கட்டி வைத்தார்கள்?'' என்று கேட்டேன்.

''பக்கத்திலே ஆறு ஓடுகிறது. அங்கு சீதை விக்கிரகம் கிடைத்தது. அதை எடுத்துக் கோயில் கட்டினார்கள்'' என்றார் அவர்.

''இராவணன் இருந்த இடமும் அருகாமையிலேயே இருக்கிறதோ?'' என்று கேட்டேன்.

''பக்கத்தில் 'இராவணன் எல்லை' என்று ஓர் இடம் இருக்கிறது. அங்கே சிதிலமான பழைய கோட்டை ஒன்று இருக்கிறது. அங்கேதான் இராவணன் வந்து 'காம்ப்' செய்வது வழக்கமாம்!'' என்றார் பெரியவர்.

கார் புறப்பட்டது. சில மைல்களே போயிருப்போம். கார் மேலே போக முடியாமல் சாலையை அடைத்துக் கொண்டு பெரிய ஊர்வலம் ஒன்று வந்தது. இளைஞர்கள் காவடியும் கையுமாக ஆடிக் கொண்டே வந்தார்கள்.

''இங்கே முருகன் கோயில் இருக்கிறதா...? அல்லது திருவிழாவா?'' என்று கேட்டேன்.

''இல்லை. புத்தர் கோயில் இருக்கிறது. நடப்பது பெருமாள் உற்சவம்!'' என்றார் சுமதிபாலா.

''என்ன கூத்தாக இருக்கிறதே, சுவாமி? புத்தர் கோயில் என்கிறீர்கள்... ஆனால், உற்சவம் பெருமாளுக்கு என்கிறீர்கள்! முருகனுக்கு எடுப்பதுபோல காவடி எடுக்கிறார்கள். எல்லாம் ஒரே அவியல்!'' என்றேன்.

''இந்த இடத்துக்குத் 'தோவை' என்று பெயர். வழக்கமாகப் புத்தர் கோயில்களில் இருப்பதைப் போல இங்கேயும் பெருமாளுக்கும் சந்நிதி இருக்கிறது. திருவிழா சேர்ந்துதான் நடக்கிறது. யானைக்கு அலங்காரம் செய்து, அம்பாரி வைத்துப் புத்தருடைய புனிதச் சின்னத்தை எடுத்து வருவார்கள். கண்டியர்கள் நடனம் இருக்கும். கூடவே பெருமாளுக்காக இப்படித் தமிழ் இளைஞர்கள் காவடியும் எடுத்து நடனமாடிக் கொண்டு வருவார்கள். நீங்கள் சொல்வது போலக் கூத்துத்தான்! ஆனால், சுவாரசியமான, இன-மத ஒற்றுமையைக் காட்டும் கூத்து!'' என்றார் சுமதிபாலா.

''புரட்டாசி சனிக்கிழமை இங்கே இன்னும் விசேஷமாக இருக்கும்!'' என்றார் கூட்டத்தில் இருந்த ஒரு தமிழ் அன்பர்.

''இப்போது வைகாசி மாதம்தான் நடக்கிறது. அதுவரையில் காத்திருக்க முடியாது. புறப்படலாம்!'' என்றேன் சிரித்துக் கொண்டே.

வழியில் மலை முகட்டில் 'ஜிலுஜிலு' வென்று ஒரு வெள்ளி அருவி கொட்டிக் கொண்டிருந்தது. ''இதுதான் ராவணன் இருந்த இடம் என்று சொல்லுகிறார்கள். இங்கே ஒரு குகை இருக்கிறது. அதன் உள்ளே ராவணன் சீதைக்காக வைத்திருந்த தங்க வெள்ளி நகைகள் புதைத்து வைக்கப் பட்டிருப்பதாக ஒரு வதந்தி. தேடித் தேடிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஒன்றும் கிடைப்பதாக இல்லை!'' என்றார் துரைராசா.

''சீதைக்காக வைத்திருந்த நகைகள்தாமே? நமக்காகவா வைத்திருந்தான் இராவணன்...? எப்படிக் கிடைக்கும்?'' என்றேன் நான்.

கதிர்காமத்தை அடையச் சில மைல்களே இருந்தன...

''இது 'வீரவில' என்னும் இடம். இங்கிருந்து கதிர்காமம் 14 மைல் தூரம். இங்கே இப்போது விமான தளம் ஒன்று கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இது கட்டி முடிக்கப்பட்டு விட்டால், தமிழ்நாட்டிலிருந்து கதிர்காமத்துக்கு விமானத்திலேயே வந்து பார்த்துவிட்டுத் திரும்பி விடலாம்!'' என்றார் சுமதிபாலா.

''திருப்பதிக்குப் போய் வருவதைப் போல!'' என்றேன் நான்.

''நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு கதிர்காமம் இருந்த இடம் பெரிய காட்டுப்பகுதியாக இருந்தது. காட்டு யானைகளும், விலங்குகளும் இங்கே நிறைய நடமாடுவதுண்டு. கோயிலை அடைவதற்கு சுமார் 16 மைல்கள் காட்டுப்பாதையில் நடந்து போகவேண்டும். அப்படியும் தனியே போய்விட முடியாது. கூட்டமாகச் சேர்ந்துதான் போவார்கள். பகலில் வெயில் அதிகமாக இருக்கும். அதனால் இரவில் நடப்பார்கள்; பகலில் ஓய்வெடுத்துக் கொள்வார்கள்'' என்று சொல்லிக் கொண்டே போனார் சுமதிபாலா.

''கதிர்காமம் இருப்பது எவ்வளவு காலமாக மக்களுக்குத் தெரியும்...?'' என்று கேட்டேன்.

''கைலாச மலை வடக்கு என்றால், அதற்கு நேர் தெற்கே அதே ரேகையில் 'கதிர்காமம்' இருக்கிறது என்று சொல்வார்கள். இந்த இடம் சிங்களவர்கள் வந்து குடியேறுவதற்கு முன்பே இருந்தது. 'தெவியன்கே கலே' அதாவது 'தெய்விகமான காடு' என்று இதற்குப் பெயர். மலை ஜாதியினர் இங்கே வசித்து வந்திருக்கிறார்கள். பதினாறாவது நூற்றாண்டிலேயே போர்த்துகீசியர் இந்தப் பகுதியைக் கைப்பற்றப் பலமுறை முயன்றிருக்கிறார்கள். ஏதோ ஒரு சக்தி அவர்களுடைய திட்டங்களையெல்லாம் முறியடித்து விட்டது!'' என்றார் அவர்.

''இந்த இடம் சம்பந்தமான புராணக் கதை இருக்குமே...?'' என்று ரங்கநாதனிடம் கேட்டேன்.

''இந்த இடத்தில்தான் – இங்கிருந்து நான்கு மைல்கள் தொலைவில் உள்ள காட்டில்தான் வள்ளியம்மை, குழந்தையாக நம்பிராஜனால் கண்டெடுக்கப் பட்டாள். அழகான பெண்ணாக வளர்ந்த அவளை மணம்புரிய முருகன் வேடனாக வந்தான். இந்தக் காடுகளில்தான் அவர்களுடைய ஊடல் நடந்தது. யானை உருவத்தில் கணபதி வந்து, அவர்கள் திருமணம் நடக்க உதவினார். திருமணம் நடந்தபின் முருகனும் வள்ளியும் இங்கே ஒரு குன்றின் உச்சியில் வாழ்க்கை நடத்தத் தொடங்கினார்கள். அந்த இடம் இன்னும் புண்ணிய

ஸ்தலமாக விளங்குகிறது. விழாக் காலங்களில் நிறைய யாத்திரீகர்கள் போகிறார்கள்'' என்றார் ரங்கநாதன்.

''முருகன் தேவியர் இருவருடன் தங்குவது வழக்கமாயிற்றே...?'' அங்கே என்றேன் நான்.

''ஆமாம். தெய்வானைக்கு இந்தச் சங்கதி தெரிந்தது. முருகனை எப்படி யாவது மீட்டுக்கொண்டு செல்வது என்று பல வழிகளிலும் முயன்றாள். கடைசியில் தேவியே இங்கு வந்து தங்கித் தவமும் செய்தாள். முருகன் மனமிரங்கி குன்றத்திலிருந்து இறங்கி வந்து, இங்கே இரு தேவியருடனும் வாழ்க்கை நடத்தினான். அதனால், இந்த இடம் 'கார்த்திகேய கிராமம்' என்றழைக்கப்பட்டது. அந்த சொல்லே நாளடைவில் மருவி 'கதிர்காமம்' என்று ஆயிற்று!'' என்றார் ரங்கநாதன்.

''குமரனின் உருவம் இங்கே ஏன் அப்படிப் பூஜிக்கப்படுவதில்லை?'' என்று கேட்டேன்.

''கதிர்காமத்தில் முருகன் வேல் வடிவமாகவே இருக்கிறார். விக்கிரக வழிபாடு இல்லை. திரைக்குப்பின் இந்த ஸ்தலத்தின் மிக விசேஷமான யந்திரம் இருப்பதாகக் கூறுகிறார்கள். அது முத்துலிங்க ஸ்வாமி நிறுவிய யந்திரம். அது தங்கத்தில் இலை வடிவமாக இருக்கிறது என்று சொல்வார்கள். திருவிழாவின் போது, அதை ஒரு பெட்டியில் வைத்து யானைமேல் ஊர்வல மாகக் கொண்டு வருவார்கள்...'' என்றார் அவர்.

''எங்கேயாவது பார்வைக்கு வைப்பார்களா...?'' என்றேன்.

''வள்ளியம்மை கோயிலுக்கு எடுத்துச் செல்வார்கள். அங்கே வைத் திருந்து திரும்பக் கொண்டு வந்து விடுவார்கள். பத்து நாட்கள் இரவு தோறும் இப்படி நடக்கும். பத்தாவது நாள் பௌர்ணமி இரவு அன்று அங்கேயே வள்ளியம்மை கோயிலில் இருக்கும். அதைத் திருக்கல்யாண இரவு என்று சொல்வார்கள். இறைவனும், தேவியும் சேரும் அந்த இரவு, புதுமணமக்களுக்கு விசேஷமாக ஓர் ஆராதனையாகக் கொண்டாடப்படு கிறது'' என்றார் அவர்.

''இந்தத் தலத்துக்கு அப்படியும் ஒரு மகிமை உண்டா?'' என்றேன்.

''ஆமாம். இங்கே 'செல்லா' என்ற தலம் இருக்கிறது. அங்கே உள்ள விடுதிகளில் புதுமணமக்கள் வந்து தங்கி இரவைக் கழித்துவிட்டுப் போவதுண்டு. அப்படித் தங்கிச் சென்றால் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது'' என்றார் ரங்கநாதன்.

''அது என்ன 'செல்லா' என்ற இடம்?'' என்று கேட்டேன்.

''அங்கேயே முதலில் போவோம் '' என்றார்.

அமைதியும், அழகும் ததும்பும் ஆற்றங்கரை. தெள்ளத் தெளிந்த நீர் கற்பாறைகளுக்கிடையேயும் ஓடும் ஸ்நான கட்டம். நிழல் பரப்பும் பெரிய அரச மரங்கள். இந்தச் சூழ்நிலையில் ஓர் அழகான சிறு கோயில் — இப்படி ஓர் இடத்தைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். இதுதான் 'செல்லா!' என்ற செல்லக் கதிர்காமம்.

'கதிர்காமம்' கோயிலுக்கு நான்கு மைல்கள் தெற்கே மாணிக்க கங்கை ஆற்றங்கரையில் இந்த விநாயகர் கோயில் இருக்கிறது. 'செல்லக் கதிர்காமம்' என்ற இந்த இடத்துக்கு வந்து விநாயகரை வணங்கிய பிறகு தான் பக்தர்கள் முருகனைத் தரிசிக்கச் செல்லுகிறார்கள்.

ஆற்றங்கரையில் விஞயகரை வணங்கி விட்டுப் படிகளில் ஏறி மேலே போனேம். அங்கே முருகன், கண்ணகி, வள்ளியம்மை ஆலயங்களையும் கட்டி வைத்திருக்கிருர்கள்.

''இங்கே முருகனுக்குப் பிரார்த்தனை செய்து, சில்லறை முடிந்து கட்டி வைக்கிருர்கள். பிரசாதம் கொடுப்பதுகூட விசேஷம்தான். பூசாரியே உங்கள் நெற்றியில் இட்டுவிடுவார்!'' என்ருர் துரைராசா.

செல்லக் கதிர்காமத்தை தரிசித்த பின்பு கதிர்காமத்தை அடைந்தோம். அலங்கார வளைவு ஒன்றின் மூலம் கோயிலினுள்ளே நுழைந்தோம். சேவல் உருவம் வைத்த பெரிய பித்தளைக் குத்துவிளக்குகளும், மணியோசையும், பூக்களின் நறுமணமும், வாசனைப் புகையும் எங்களை வரவேற்றன. நீராடிவிட்டு அர்ச்சனைத் தட்டும் கையுமாக நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும் நின்றுகொண்டிருந்தார்கள்.

''முருகன், விஷ்ணு ஆகிய தெய்வங்களின் உருவங்களுடன் புத்தர் விக்கிரகமும் ஒரு பக்கத்தில் இருக்கிறதே...?'' என்று பிராகாரத்தின் இடது பக்கத்தில் இருந்த கோயிலுக்குள் நுழைந்ததும் கேட்டேன்.

''ஆமாம்! இதை விஷ்ணு தேவாலயம் என்று இந்துக்கள் சொல்கிருர்கள். பௌத்தர்கள் தமது கோயிலாகக் கருதி வழிபடுகிருர்கள்'' என்ருர் துரைராசா.

''கதிர்காமம் இந்துக்களின் தலம் என்பதால் முருகக்கடவுள் மட்டும் இருப்பதாகத்தானே எல்லாரும் எண்ணுகிருர்கள்...?'' என்றேன்.

''அப்படி இருந்திருக்கலாம். ஆனல் பௌத்தர்களும் இங்கே பெரும்பான்மையாக வருகிருர்கள். அவர்களுடைய ஆலயமும் இருக்கிறது. ஏன்? முஸ்லீம்களின் மசூதிகூட இங்கேயே இருக்கிறது. வாசலில் நிறைய மயிற் பீலிகள் இருக்கும். ஒருவிதத்தில் அதுவும் பொருத்தமே! மயில் முருகனின் வாகனம் ஆயிற்றே...?'' என்று சொல்லிச் சிரித்தார் துரைராசா.

முருகன் சந்நிதியில் திருக்கல்யாண கோலத்தில் ஒரு திரைமட்டும் தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்ட நான், ''திரைக்குப் பின்னல் யாரும் போவதில்லையா...?'' என்று கேட்டேன்.

''தூய்மையான துணியில் உடை அணிந்து, மஞ்சள் துணியால் வாயையும் கட்டிக் கொண்டு, இரண்டு அர்ச்சகர்கள் மட்டும் போவார்கள். பூசை செய்யும் அதிகாரமும் அவர்களுக்குத்தான்!'' என்ருர் துரைராசா.

பத்தரை மணிக்குச் சந்நிதியின் கதவுகள் திறந்தன. இருபுறமும் பக்தர்கள் நுழைந்தார்கள். தந்தம் வைத்த யானை முகங்கள், சேவல் உருவம் கொண்ட பெரிய பித்தளை விளக்குகள், இரு நாக சர்ப்ப உருவங்கள். —இவற்றுக்கு நடுவில் மல்லிகைச் சரங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. முருகன் திருமணக் கோலத்தில் அழகிய வண்ணப்படங்கள் தெரிந்தன. விளாம் பழம், அன்னசி, பப்பாளி, மலர்கள், தேங்காய் இவற்றுடன் வரிசையாகத் தட்டுக்களைக் கொடுத்துப் பிரசாதம் வாங்கிக் கொண்டார்கள்.

பளிச்சென்று வெள்ளை ஜிப்பா அணிந்து இருவர் அந்தத் தட்டுக்களை வாங்கி, தேங்காயை உடைத்து விபூதிப் பிரசாதம் வைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

''இவர்கள்தான் பூசாரிகளா...? ஷர்ட் போட்டுக் கொண்டிருக்கிருர்களே?'' என்று மெதுவாகக் கேட்டேன்.

''இங்கே இதுதான் சம்பிரதாயம்!'' என்று சொல்லி வாயை மூடிக் கொண்டார் துரைராசா.

பச்சிளம் குழந்தைகளைத் தூக்கி எடுத்து வண்ணத்திரைக்கு முன் பாவனையாகக் காட்டிவிட்டுத் திருப்பிக் கொடுத்தார் பூசாரி. புதுமணத் தம்பதிகள் வந்துநின்றபோது, தன் கையாலேயே அவர்களுக்கு நெற்றியில் விபூதி இட்டார். பக்தர்கள் தொடர்ந்து வந்து பிரசாதம் பெற்றுக் கொண்டு, நகர்ந்து கொண்டே இருந்தார்கள்.

''அர்ச்சனை எதுவும் இல்லையா...?'' என்று கேட்டேன்.

''இல்லை. பிரதம அர்ச்சகர் பூஜை செய்வதுடன் சரி. மற்றபடி தனித் தனியாக அர்ச்சனை இல்லை...!'' என்றார் துரைராசா.

வெளியே வந்தோம்.

சிதறுகாய் போட்டுக் கொண்டிருந்தார்கள். வெண்ணிற உடை அணிந்த பெண்கள் உலர்ந்தும் உலராத கூந்தலுடன் நடந்து கொண்டிருந் தார்கள். அந்த முகப்பும் சூழ்நிலையும் கேரளத்து ஆலயம் ஒன்றை நினைவு படுத்துவது போலத் தோன்றின.

''முருகனின் ஆலயம் தவிர, கணபதி, தெய்வானை, வள்ளி ஆலயங் களும் இருக்கின்றன. பிரார்த்தனைக்கு வரும் பக்தர்கள் மாணிக்க கங்கையில் நீராடி எல்லா ஆலயங்களுக்கும் போவார்கள். சிலர் கதிரமலைக்குப் போவதும் உண்டு'' என்றார் துரைராசா.

''அங்கே என்ன விசேஷம்...?'' என்று கேட்டேன்.

''முருகன் சூரபதுமனை வதம் செய்த வேலை அங்கே ஊன்றி இருப்பதாக ஐதிகம். ஈரத்துணியுடன் மலை ஏறிவிட்டுத் திரும்புவதாகப் பிரார்த்தனை. ஒற்றையடிப் பாதை மூலம் மலைமீது ஏறிப் போகவேண்டும்!'' என்றார்.

ஃ ஃ ஃ

''கதிர்காமம் தோன்றியது எப்படி...? இப்போது அங்கே பௌத்தர் களும் உரிமை கொண்டாடுவானேன்? இலங்கையின் ஆதிக்குடிகள் யார்? புதிதாக வந்தவர்கள் யார்? அவர்களிடையே உள்ள சட்டங்கள்; உரிமை களில் என்ன வேறுபாடு?'' — இந்தக் கேள்விகளுக்கு விடைகாண டாக்டர் தம்பையாவைச் சந்தித்தேன்.

''கதிர்காமம் கிறிஸ்து பிறப்பதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே இருந்திருக்கிறது. அப்போது இங்கே இருந்த ஆதிக்குடிகளில் ஓர் இனத்தவரை சேர்ந்தவள்தான் வள்ளி என்பது புராணம். வள்ளியை முருகன் மணந்த தலம் இது!'' என்றார் அவர்.

''அந்தக் கோயிலில் அப்புறம் மாற்றங்கள் இருந்திருக்கின்றனவா...? இப்போது கோயில் இருக்குமிடம் ஒரு 'பிக்னிக்-ஸ்பாட்' மாதிரி இருக் கிறதே?'' என்றேன்.

''அடிப்படையில் அதிக மாறுதல் இல்லை. அப்படிச் செய்ய முயன்ற வர்கள் இறந்துபோய் விடுவார்கள் என்ற நம்பிக்கையும் மக்களிடையே இருக்கிறது. ஆனால், இன்று அது ஒரு தேசிய ஆலயமாக (National Temple) விளங்குகிறது. தமிழர், சிங்களவர் இருவருமே நிறைய அங்கே போகிறார்கள். நல்லூர் முருகன் கோயிலுக்குத் தமிழர்கள் மட்டும்தான் போவார்கள். இங்கு அப்படி இல்லை. மேலும், இங்கே பத்தினி (கண்ணகி)த் தெய்வத்துக்கு வழி பாடும் உண்டு. இந்த வழக்கத்தை கஜபாலன் என்ற அரசன் கேரளப் பகுதி யிலிருந்து கொண்டு வந்திருக்கவேண்டும்'' என்றார் அவர்.

''இலங்கையின் ஆதிக்குடிகள் யார்? அப்புறம் வந்து குடியேறியவர்கள் யார்?'' என்று கேட்டேன்.

''பூர்வகுடிகள் நாகர் என்பவர்கள். காவியங்களில் அரக்கர்கள் என்று வருணிக்கிறோமே, அந்த மக்களுடன் அவர்களை ஒப்பிடுவது பொருத்தமாக இருக்கும். சிங்களவர் – மேற்கு வங்காளம், ஒரிஸ்ஸா பகுதிகளிலிருந்து வணிகத் தொடர்பு கொள்ள வந்தவர்களாக இருக்கலாம். அப்புறம் அவர்கள் இங்கேயே த்ங்கி இனப்பெருக்கம் செய்து விட்டார்கள்!'' என்றார் அவர்.

''தமிழர்கள் வந்தது எப்போது...?'' என்றேன் நான்.

''தமிழர்களுடன் மூன்றும் சங்க காலத்திலேயே இலங்கை வாழ் மக்களுக்குத் தொடர்பு இருந்திருக்கிறது. சேர–சோழ–பாண்டிய அரசர்கள் மூவருக்குமே இலங்கையுடன் சரித்திரத் தொடர்பு உண்டு. பொலநருவையில் ராஜராஜசோழன் கட்டிய உன்னதமான சிவன் கோயில் இருக்கிறது. ஜெயவர்ம வீரபாண்டியன் திருகோணமலையில் மீன் கொடியை நாட்டிப் பறக்க விட்டதாக வரலாறு உண்டு. கரிகால சோழன் 12,000 சிங்களவர்களை அடிமைகளாகக் கொண்டு சென்று காவிரி நீர்ப்பாசனத் திட்டத்தை வகுத்த தாகச் சரித்திரம் சொல்லுகிறது'' என்றார் அவர்.

''இலங்கைவாழ் சிங்கள மக்களுக்கும் கேரள மக்களுக்கும் நிறையத் தொடர்பு இருக்கிறதே...? பழக்க வழக்கங்கள் உடை எல்லாம் ஒரே மாதிரியாக இருக்கின்றனவே?'' என்றேன் நான்.

''மொஹஞ்சதாரோ காலத்திலேயே 'எழு' என்ற மொழி இருந்திருக் கிறது. அதை வழங்கியவர்கள் எழவர்கள். மலையாளத்தில் உள்ள எழவர்கள் இலங்கையில் ஈழுவர்களாக இருந்தவர்கள்தான். இங்கிருந்துதான் போயிருக் கிறார்கள்! பெண்கள் மார்புக்கச்சு மட்டும் கட்டுவது, இடைக்கு முண்டு அணிவது, ஆண்கள் ஒற்றைக் குடுமியுடன் இருப்பது எல்லாம் இருபாலருக்கும் பொதுவான பண்பாடுகள்'' என்றார் அவர்.

''இலங்கையில் இந்திய வழக்கப்படி கோயில் வழிபாடு தொன்றுதொட்டு இருந்து வருகிறதா?'' என்று கேட்டேன்.

''ஆமாம்! பதின்மூன்றும் நூற்றுண்டிலேயே இங்கு அதுபோன்ற வழிபாடு இருந்திருக்கிறது. ஆயிரக்கணக்கான அந்தணர்கள் சுலோகங்கள் சொல்லி வழிபட, ஆயிரக்கணக்கான விளக்குகள் அலங்காரம் செய்ய, நடன நிகழ்ச்சிகளுடன் ரத்தினக் கல் பதித்த விக்கிரகம் பவனி வந்ததாக வரலாறு கூறுகிறது'' என்றார் டாக்டர் தம்பையா.

''கொஞ்சம் சங்கடமான ஒரு கேள்வி. நீங்கள் 1976 முதல் 1978 வரை கனடாவில் சிலோன் ஹைகமிஷனராக இருந்திருக்கிறீர்கள். அதாவது திருமதி பண்டாரநாயகா, திரு. ஜயவர்த்தன இருவருடைய பதவிக் காலத்திலும் நீங்களும் பதவி வகித்திருக்கிறீர்கள். இதில் உங்களுக்கு ஏதாவது சிரமம் இருந்ததா...?'' என்றேன்.

''அதிகம் இல்லை. சொல்லப்போனால் புதிய அரசு மிகவும் பெருந்தன்மை யாக நடந்து கொள்வதாகவே கூறவேண்டும். இன்னும் பல இடங்களில், சாலமன் பண்டாரநாயகா, சிரிமாவோ பண்டாரநாயகா, ஜயவர்த்தன மூவருடைய படங்களும் மாட்டப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். அகற்ற வேண்டும், மாற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லை. பண்டாரநாயகா கொலை செய்யப்பட்ட தினம் இப்போதும் தேசிய மாவீரர் தினமாகக் (National Martyr's Day) கொண்டாடப்படுகிறது'' என்றார் அவர்.

''உங்களுக்கு எப்படிப் பொழுது போகிறது...?'' என்றேன்.

''எழுபத்து இரண்டு வயதாகிறது. இன்னும் சுறுசுறுப்பாகவே இருக்க விரும்புகிறேன். சட்டப் புத்தகங்கள், இன—குல வழி ஆராய்ச்சிப் புத்தகங்கள் எல்லாம் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன். என்னுடைய அனுபவங்களை எழுதினாலே சுவாரசியமான புத்தகமாக இருக்கும்!'' என்றார் ஹென்றி விஜயக்கோன் தம்பையா.

பேட்டி முடிந்து நான் வெளியே வந்தபோது மணி பத்தரை. எங்களுக்கு விடை கொடுத்துவிட்டு சில புத்தகங்களுடன் அவர் காரில் ஏறிக் கிளம்பி விட்டார். பத்தரை மணி என்றால் ஆபீசுக்குக் கிளம்புவது என்பது ஐம்பது ஆண்டுகளாக அவர் இரத்தத்தில் ஊறிப் போன வழக்கம்போல இருக்கிறது. டாக்டர் தம்பையா சட்டப் புத்தகங்கள் நிறைய எழுதி இருக்கிறார். நீதிபதி, புரொபசர், வெளிநாட்டில் ராஜதூதர் போன்ற பல பதவிகளை வகித்திருக்கிறார்.



# 16

கதிர்காமம்

கதிர்காமத்திலிருந்து கிளம்பி கடற்கரைப் பாதை வழியாகக் கொழும்பை நோக்கி விரைந்தோம்.

அம்பலாந்தோட்டை என்ற சிறிய ஊரில் கார் நின்றது.

''இரண்டு சட்டி தயிர் வாங்கி வந்தார் துரைராசா. வாங்கிப் பார்த்தேன். மண்சட்டியில் தோய்த்துவைத்த தயிர் கட்டிகட்டியாக கத்தியால் வெட்டலாம் போலத் தோன்றியது!

''என்ன விலே?'' என்றேன்.

''இரண்டும் எட்டு ரூபாய்!'' என்றார் துரைராசா. கேட்டதும் எனக்கு அந்தத் தயிர் அங்கேயே ஜீரணமாகி விட்டதைப்போன்ற அதிர்ச்சி ஏற்பட்டது!

பெரிய கோட்டை ஒன்று உயர்ந்து நின்ற அந்த நகரத்தில் நுழைந்தோம்.



''இதுதான் 'காலி' என்ற நகரம். டச்சுக்காரர்கள் இருந்து ஆண்ட இடம். இந்தக் கோட்டைகூட அவர்கள் கட்டியதுதான்!'' என்ருர் சுமதி பாலா.

''கோட்டைக்குள் போக நேரம் இல்லை. ஊரைச் சுற்றிப் பார்க்கலாம்'' என்றேன்.

''தந்த வேலைப்பாடுகள், மணிகள், அழகான இரத்தினக் கற்கள் இவற்றுக்கெல்லாம் பெயர்போனது இந்த ஊர். இந்துக்களுக்கு ஒரு முக்கியமான தலமும்கூட!'' என்று சுற்றிக்காட்டிச் சொல்லிக் கொண்டே வந்தார் சுமதி பாலா.

''என்ன இருக்கிறது அப்படி...? பழைமையான கோயிலா?'' என்று கேட்டேன்.

''இல்லை. அதோ பாருங்கள்! கடற்கரையை ஒட்டி ஒரு பெரிய மலைப் பாறை. அதன் பெயர் ரூமஸாலா கண்டா. இராம-இராவண யுத்தத்தில் இலட்சுமணன் அடிபட்டு மயங்கி விழுந்தபோது, வைத்தியம் செய்து அந்த மயக்கத்தைத் தெளிவிக்க வேண்டி இருந்ததாம். அதற்குரிய மூலிகைகள் உள்ள சஞ்சீவி பர்வதத்தை நோக்கி அனுமார் பறந்து போனுராம். மூலிகைகளைத் தேடி எடுக்க நேரம் இல்லாததால், சஞ்சீவி பர்வதத்தையே பெயர்த்து எடுத்துக் கொண்டு வந்து விட்டாராம்! அதன் காற்றுப் பட்டதுமே இலட்சுமணன் மட்டும் அல்லாமல், மூர்ச்சையாகிக் கிடந்த வானரங்கள் பலவும் பிழைத்து எழுந்து விட்டனவாம். சரி, வேலை முடிந்து விட்டது; அப்புறம் அந்தக் குன்றை வைத்துக் கொண்டு என்ன செய்வது? எனவே அனுமார் அதைக் கடலில் எறிந்து விட்டாராம். அதன் ஒரு பகுதிதான் இந்தப் பெரிய மலைப்பாறை. இன்னும் அதில் மூலிகைச் செடிகள் நிறைய வளர்ந்து கொண்டு இருக்கின்றன!'' என்ருர் சுமதிபாலா.

அம்பலாங்கொடை என்ற அந்த ஊரில் சாலை ஓரமாக இருந்த தேநீர்க் கடையில் நுழைந்தோம். அந்தக் கடையின் சொந்தக்காரர் ஒரு பெண்மணி! எங்களுக்குத் தேநீர் வழங்கியதும் அவர்தான்.

''எப்படி இதைப்போல ஒரு கடை வைத்து நடத்துகிறீர்கள்? உங்கள் தன்னம்பிக்கை எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது'' என்றேன்.

''இதில் ஆச்சரியப்பட ஒன்றுமே இல்லை. இது ஒரு பொழுதுபோக்கு. அவ்வளவுதான்!'' என்ருர் அந்தப் பெண்மணி.

''பொழுதுபோக்கா? அப்படியானுல் குடும்ப வேலைதான் உங்கள் முழுநேரப் பணியா?'' என்று மேலும் ஆச்சரியத்துடன் கேட்டேன்.

''நோ! நோ! அது எப்படி முழுநேர வேலையாகும்? நான் இங்கே பக்கத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் டீச்சராக இருக்கிறேன். சிங்கள மொழி கற்றுக் கொடுக்கிறேன்!'' என்ருர் ஸஸ்லீன் என்ற அந்தப் பெண்மணி.

''உங்கள் வீடு எங்கே?'' என்று கேட்டேன்.

''கடைக்குப் பின்னுலேயே இருக்கிறது. சுமார் பதினைந்து தென்னை மரங்கள் வைத்திருக்கிறேன். தேங்காய்களை விற்பதிலும் வருமானம் கிடைக்கிறது. இவ்வளவும் ஒரு காரியத்துக்காகத்தான்'' என்ருர் அந்த அம்மையார்.

''என்ன காரியமோ?'' என்றேன்.

''இரண்டு பேத்திகள் இருக்கிருர்கள்! பார்க்க லட்சணமாகத்தான் இருக்கிருர்கள். ஆனுல் என்ன செய்வது...? வரதட்சணை கொடுக்காமல் கல்யாணம் செய்து கொடுக்க முடியாதே? அதற்காகத்தான் பணம் சேர்க்க வேண்டி இருக்கிறது'' என்ருர் அந்த அம்மையார்.

''கட்டாயம் வரதட்சணை கொடுத்தாக வேண்டுமா?'' என்று கேட்டேன்.

''பெரியவர்கள் பார்த்து ஏற்பாடு செய்கிற கல்யாணம் என்றால் அப்படித் தான். காதல் கல்யாணங்கள் என்றால் அப்படி நேர்வதில்லை!''

''உங்கள் பேத்திகள்...'' என்று சிரித்தேன்.

''ரொம்ப வெட்கப்படுகிற வகை! கூப்பிட்டுப் பாருங்களேன்'' என்றார் ஸஸ்லீன்.

உண்மைதான்! எவ்வளவோ மன்றாடியும் அந்த இரு பெண்களும் ஒரு போட்டோவுக்கு 'போஸ்' கொடுக்கக்கூட மறுத்துவிட்டார்கள். கட்டாயமாக பாட்டி, வரதட்சணை கொடுக்கப் பணம் சேர்க்க வேண்டியதுதான்!

கார் கிளம்பிற்று. மழை பெய்யத் தொடங்கிற்று. சாலை ஓரமாக ஒரு பெரிய தீக்கொழுந்தைப் பார்த்தேன். அருகே ஒரு சிறு முரசு ஒலிக்கும் சப்தமும் கேட்டது.

''என்ன அது?'' என்று கேட்டேன் சுமதிபாலாவிடம்.

''யாரோ இறந்து விட்டார்கள். தகனம் செய்ய ஏற்பாடு செய்கிறார்கள். அந்த முரசு தட்டுகிறானே-அவன்...'' என்று இரக்கப்பட்டுக் கொண்டார், சுமதிபாலா.

''எதற்காக அப்படி இரக்கப்படுகிறீர்கள்...?'' என்று ஆவலோடு கேட்டேன்.

''யாராவது இறந்துபோனால் தகனம் செய்யும் கிரியைகளுக்கு விறகு மட்டும் 500 ரூபாய் வரையில் செலவாகும். கொழும்பில் 'காஸ்' மூலம் எரிக்கும் மயானம் இருக்கிறது. ஆனால், அது 'பாப்புலர்' இல்லை. சிதைக்குத் தயார் செய்ததும் முரசு ஒலிக்க ஆரம்பித்து விடும். முழுவதும் எரிந்து முடிந்த பிறகுதான் அதை நிறுத்துவார்கள். இன்று மழை பெய்கிறது. எப்போது எரிந்து முடியுமோ? அதுவரையில் அவன் பாடு என்னவோ? அதற்காகத்தான் பரிதாபப்பட்டேன்!'' என்றார் சுமதிபாலா.

''தகனம் செய்வதுதான் இங்கேயெல்லாம் வழக்கமா...?'' என்று கேட்டேன்.

''பொதுவாக அப்படித்தான். பௌத்தர்கள் அடக்கம் செய்வதும் உண்டு. அதில் செலவு குறைவு!'' என்றார் சுமதிபாலா.

''தொடர்ந்து இவ்வளவு நீளமான கடற்கரை இருக்கிறதே...? அதை அரசாங்கம் 'டூரிஸ்டு'களைக் கவர எவ்வாறு பயன்படுத்துகிறது? பிரேஸிலில் இதுபோன்ற கடற்கரைப் பகுதிகளை மிகவும் அழகான உல்லாசப் பகுதிகளாக மாற்றி இருப்பதை நான் பார்த்தேன்'' என்றேன்.

''இலங்கையில் மொத்தம் ஆயிரம் மைல்கள் நீளம் உள்ள கடற்கரை இருக்கிறது. அநேகமாகக் கடற்கரைப் பகுதியில் மணற்பரப்பு மிகுந்தும் இருக்கிறது. தென்னஞ்சோலைகள் சூழ்ந்த அமைதியான இடங்களும், குளிக்க வசதிகளும் நிறைய உண்டு. அதனால் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு இந்தப் பொழுதுபோக்கை நாடி நிறைய வருகிறார்கள். கொழும்பிலிருந்து எட்டு மைல்கள் தூரத்தில் மவுண்ட் லவேனியா என்ற இடத்தில் அழகான பீச்-ஓட்டல் இருக்கிறது. கடலில் குளிக்கவும், நீந்தவும் வசதி உண்டு. கடற்கரையிலேயே அமர்ந்து சாப்பிடலாம். சிற்றுண்டிகள், சாப்பாடு, பானங்கள் எல்லாமே கிடைக்கும். கடற் பொருட்களாலான சாப்பாடு விசேஷமானது...

''இதைத்தவிர ஹிக்கடுவ, திருகோணமலை ஆகிய இடங்களில் கடற்கரையை ஒட்டி அழகான பவளப் பாறைகள் இருக்கின்றன. அவற்றிடையே விதம்விதமான மீன்கள் நீந்தி விளையாடுவதைப் பார்க்க பலபேர் வருகிறார்கள். அதற்காக அடியில் கண்ணாடித் தட்டு வைத்த படகுகளையும் விடுகிறார்கள்!'' என்றார் துரைராசா.

''நீந்திப் பார்க்க முடியுமோ?'' என்றேன்.

''அதற்கும் ஏற்பாடு செய்கிறார்கள். 'ஸ்கின் டைவிங்'கிற்கு ஏற்ற உடைகளும் சாமான்களும் தருகிறார்கள். கடலின் அடிப்பகுதியில் புகைப்படம் எடுக்கவும் வசதிகள் இருக்கின்றன. இதைத்தவிர, இதுபோன்ற கடற்பகுதிகளை சுற்றிப்பார்க்கவும், சிறு தீவுகளைப் பார்க்கவும் 'டூர்' ஏற்பாடு செய்யப்படுகிறது. படகுகள், மோட்டார் – லாஞ்ச் எல்லாம் வாடகைக்குக் கிடைக்கின்றன'' என்றார் துரைராசா.

கொழும்பை நெருங்கிக் கொண்டிருந்தபோது ஓரிடத்தில் கார் நின்றது. மிகப் பெரிய ஊர்வலம் ஒன்று எங்களைக் கடக்கத் தொடங்கிற்று. கார்கள், பஸ் வண்டிகள் எல்லாம் எங்களைத் தொடர்ந்து தேங்கி நின்றன.

பிலிப்பைன்ஸ் தீவில் உள்ள கத்தோலிக்கக் கிறிஸ்துவர்கள், ''நற்பயணம்-நல்ல ஆரோக்கியம் இவற்றை ஆசீர்வதிக்கும் அன்னையின்' விக்கிரகம் ஒன்றை இலங்கைவாழ் கிறிஸ்துவ மக்களுக்கு அன்பளிப்பாக அனுப்பி இருக்கிறார்கள். அதை இங்கே பாணந்துறையில் உள்ள சோக அன்னை சர்ச்சில் இன்று நிறுவுகிறார்கள். அந்த விக்கிரகத்தைப் பவனியாக எடுத்துச் செல்லும் ஊர்வலம்தான் இது'' என்றார் சுமதிபாலா.

திட்டமிட்டபடி இரவு 8 மணி அளவில் கொழும்பு நகரை வந்தடைந்தோம்.



# 17

கௌரவ நீதித்துறை அமைச்சருடன் ஆசிரியர்

ஊருக்குத் திரும்புவதற்கு முன் சில முக்கியமான சாமான்களை வாங்க வேண்டி இருந்தது.

''சாமான்கள் வாங்க வேண்டுமானால் புறக்கோட்டைப் பகுதிக்குப் போய்வருவோம். 'லலிதா ஜுவல்லரி' இருக்கும் இடத்துக்குப் போனால் பிரமித்துப் போய்விடுவீர்கள். அத்தனை விளம்பர ஜாலங்கள்!'' என்றார் ரங்கநாதன்.

''கடைகளுக்கு உள்ளேயும் போயிருக்கிறேன். 'லலிதா ஜுவெல்லரி'யின் உள் அலங்கார அமைப்பைக் கண்டு பிரமித்திருக்கிறேன். நல்லவேளை! நான் தனியாக வந்திருக்கிறேன். லலிதா என்னுடன் வரவில்லை. ஜுவெல்லரியைப் பற்றிக் கவலைப்படவும் வேண்டாம்! மாலையில் அங்கே போகலாம். முதலில் துரைராசாவின் புத்தகக் கடைக்குப் போவோம்'' என்றேன்.



''தமிழ்நாட்டிலிருந்து அநேகமாக எல்லாப் பத்திரிகைகளையும் நான் இங்கே வரவழைக்கிறேன். நான் விற்கும் அளவுக்குத் தமிழ்ப் புத்தகங்கள் விற்பவர்கள் இலங்கையில் யாரும் இல்லை!'' என்று ஒரு பெருமையுடன் சொன்னார். உரிமையாளர் துரைராசா. எனக்கும் அது பெருமையாக இருந்தது. ஏனென்றால் 'இதயம் பேசுகிறது' விற்பனை ஏஜெண்டும் அவர்தான். பொல்லாத மனிதர்! இலங்கையிலேயே அதிகம் விற்பனையாகும் தமிழ்ப் பத்திரிகை என்ற 'ரிகார்டை' எங்களுக்கு அலட்சியமாக வாங்கிக் கொடுத்திருக்கிறார்!

அந்தப் புத்தகக் கடையில் ஒரு மூலையில் அமர்ந்து அமைதியாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார் குமாரி செல்வம் கதிர்காமநாதன்.

''இங்கே வேலை பார்க்கிறீர்களே? பெற்றோர் எங்கே?'' என்று கேட்டேன்.

''பெற்றோர் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள். நான் இங்கே ஒரு சிங்களப் பெண்மணியின் வீட்டில் தங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். மாதம் 175 ரூபாய் கொடுக்கிறேன்'' என்றார் அவர்.

''பெற்றோரை விட்டு வந்துவிட்டீர்களே...?''

''அப்பாவுக்கு விவசாயம்தான் தொழில். நாங்கள் ஏழு குழந்தைகள். அவர்களில் ஐந்து பேர் பெண்கள். நான்தான் கடைசி. என் அக்காமார்களில் மூன்று பேருக்கு மணமாகிவிட்டது. இன்னும் ஒருவர்தான் பாக்கி. அதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார் அவர்.

''யாராவது உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாரா...? லவ் மேரேஜா?'' என்று கேட்டேன். ஒரு புன்னகை செய்து கொண்டார் அவர்.

''சொல்லுங்கள். அவர் யாரென்று தெரிந்து கொள்ளலாமே...?'' என்று மேலும் தூண்டினேன்.

''விஜேமான்ன என்று பெயர். நேஷனல் ஸேவிங்ஸ் பாங்கில் ஆபீசராக இருக்கிறார். அவர் ஒரு சிங்கள இளைஞர்!'' என்று முகம் சிவக்கச் சொன்னார் செல்வம் கதிர்காமநாதன்.

''ஜாதி மத எல்லைகளைக் கடந்த திருமணமா?'' என்று வியப்புடன் கேட்டேன். துரைராசாவுக்கும் இது வியப்புதான். அவருக்கே இந்தத் தகவல் பேட்டியினால்தான் தெரிந்ததாம்!

''புத்தகங்கள், இலக்கியங்கள்-அதுவும் அகத்துறை நூல்கள் எல்லாம் வைத்திருக்கிறீர்கள். அவர்களும் படிக்கிறார்கள். காதல் கல்யாணம் இல்லாமல் வேறு என்ன...?'' என்றேன் துரைராசாவிடம்.

குமாரி செல்வம் கதிர்காமநாதனிடம், ''உங்களுக்குப் பிடித்த தமிழ் எழுத்தாளர் யார்?'' என்று கேட்டேன்.

''மணியன் — கண்ணதாசன்! நீங்களன்றி வேறு யாராவது கேட்டிருந்தாலும் இதே பதிலைத்தான் சொல்லி இருப்பேன்!'' என்றார் அந்தப் பெண்.

''மணியன்-கண்ணதாசன்!' காதல் கல்யாணத்தில் ஈடுபாடு அன்றி வேறு என்ன...?'' என்று உரக்கச் சிரித்தார் துரைராசா.

''கொழும்பின் முக்கியமான கல்லூரிகளில் ஒன்று இந்துக் கல்லூரி. சுமார் 1300 பேர் படிக்கிறார்கள். எல்லாரும் தமிழ் மாணவர்கள். உங்களைப் பார்க்க மிகவும் ஆவலாக இருக்கிறார்கள்'' என்றார் ரங்கநாதன்.

''கட்டாயம் நானும் அவர்களைப் பார்க்க வேண்டும்'' என்றேன்.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் அங்கே போனதும் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். கையெழுத்து வேட்டை ஒருபுறம்; அறிவு முதிர்ந்த பொருளாதார, அரசியல் துறைகளைப் பற்றிய கேள்விகள் மற்றொருபுறம்.

''நீங்கள் சமதர்மவாதியா? முதலாளித்துவவாதியா?''

''நீங்கள் தமிழ் ஈழத்தை ஆதரிக்கிறீர்களா?''

''காதல் திருமணமா? முறைப்படி திருமணமா? எது மேல்?''-இப்படி மூலைக்கு மூலை மாணவர்களிடமிருந்து வந்த கேள்விகள் பலவிதமாகவும் விநோதமாகவும் இருந்தன. அறிவுச் சுடர் வீசும் கண்களும், அதையும்விடக் கூர்மையான அறிவும் கொண்ட மாணவர்களின் பெயர்களும், கேட்க அழகாகவே இருந்தன. ஞானனந்தன், கனகநாதன் போன்ற இனிமையான பெயர்கள்...

''கல்வி பயில சம்பளம் எப்படி ?'' என்று உதவித் தலைமை ஆசிரியையைக் கேட்டேன். பள்ளி-கல்லூரிகளில் பெரும்பாலானவர்கள் ஆசிரியைகள்தாம். குழந்தைகளைத் தாயன்போடு கவனிக்கிறார்கள்.

''சம்பளமா? ஒன்றும் இல்லை. கட்டட வசதி தேவை என்றால் அதற்காகச் சிறுநன்கொடைகள் வாங்கிக் கொள்கிறோம். அதுவும் மாணவர்களின் பெற்றோர்கள் தாமாக முன்வந்து கொடுப்பதுதான்!'' என்றார் அவர்.

வகுப்புகளில் அங்கங்கே இனிய நெறிமுறைகளை அழகான தமிழில் எழுதி வைத்திருந்தார்கள். எல்லாம் 'மில்க்வைட்' அன்பளிப்பு!

''ஒரு தமிழ் அன்பர் வீட்டில் சிற்றுண்டியை வைத்துக் கொள்ளலாம். அங்கே மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் பெண்மணியையும் பார்க்கலாம். நீங்கள் அந்தப் பகுதிக்குப் போக முடியவில்லையே?'' என்றார் ரங்கநாதன்.

''தாராளமாகப் பார்க்கலாம். அப்படியே இங்கே கொழும்பில் வசிக்கும் தமிழர்களைப் பார்த்தது போலவும் இருக்கும்'' என்றேன்.

தயாளம் வரகுணன் என்ற அந்தப் பெண்மணி மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்தவர். நான் போனபோது மட்டக் களப்புக்கு நான் வரவில்லை என்பதைப் பற்றி மிகவும் குறைப்பட்டுக் கொண்டார்.

''தமிழ்நாட்டில் தஞ்சாவூர் பகுதியைப் போன்றது எங்கள் பகுதி. எங்கும் நீர்வளமும் நிலவளமும் இருக்கும். மிகவும் பசுமையான இடம்'' என்றார் அவர்.

''அங்கே நீங்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள்?'' என்றேன்.

''கல்லடியைச் சேர்ந்தவர்கள் நாங்கள். விவசாயம்தான் எங்கள் குடும்பத் தொழில். அநேகமாகக் குடும்ப வேலையே சரியாக இருக்கும். அதிலேயே ஈடுபட்டு விடுவோம்'' என்றார் அந்தப் பெண்மணி.

''அப்படியானால் வாழ்க்கை முறையும் தஞ்சாவூர் மாவட்டம் போலத் தான்! உங்கள் தமிழ் வழக்கு, பேச்சு எல்லாம் இலங்கையின் மற்றப் பகுதிகளை போலவே இருக்குமா?'' என்று கேட்டேன்.

''சற்று வித்தியாசமாக இருக்கும். உச்சரிப்பு கொஞ்சம் மாறுபாடாக இருக்கும். தமிழ்நாட்டில்கூட வெவ்வேறு மாவட்டங்களில் அப்படிப் பேச்சு வித்தியாசமாக இருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றார் தயாளம் வரகுணன்.

''நீங்கள் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறீர்களோ?'' என்று கேட்டேன்.

''வந்ததே இல்லை. வந்து பார்க்கவேண்டும் என்று ஓர் ஆசைதான்'' என்று பெருமூச்சு விட்டார் அவர். ''பல நூற்றாண்டுகளாக இங்கேயே தங்கி வளர்ந்து விட்டோம். தமிழ்மொழி, பண்பாடு, வாழ்க்கை முறை இவை மட்டும்தான் எங்களுக்குப் பழக்கமாக இருக்கிறது'' என்றார் தொடர்ந்து அவர்.

''அரிசி உணவு எப்படி?'' என்றேன்.

''புழுங்கலரிசிதான் சாப்பிடுவோம். இடியாப்பம், புட்டு எல்லாம் செய்வதுண்டு. ஆனால் கிராமங்களில் இன்றும் காலையில் சோறுதான். சாப்பாடு தான் காலை உணவு!'' என்றார் அவர்.

''நெற்பயிரைத் தவிர விவசாயத்தில் வேறு முக்கியமான பயிர்களும் போடுவீர்களா?'' என்று கேட்டேன்.

''முந்திரிப்பருப்பு உற்பத்திக்கு எங்கள் பகுதி மிகவும் புகழ் பெற்றது. மேலும், ஒரு விநோதமான அனுபவமும் எங்கள் ஊரில் உண்டு. பாடுகிற மீன் அங்கே உப்பங்கழிகளில் உண்டு – கேட்கலாம்!'' என்றார் அவர்.

''பாடுகிற மீனா? எப்படிப் பாடும் அது?'' என்று ஆவலோடு கேட்டேன்.

''தண்ணீருக்குள்ளேயிருந்து அந்த சப்தம் மிதந்துவரும். வயலின் இசைக் கருவியில் மென்மையாக இழுத்துவிட்டால் 'நோட்' வாசிப்பது போலக் கேட்குமே, அதைப்போல ஓர் இனிய ஒலி கேட்கும். பௌர்ணமி நிலவு நாட்களில் உப்பங்கழிகளில் படகில் போவது ஒரு சுகமான அனுபவம். அப்போது இந்த மீன்களின் இசை ஒலியையும் கேட்கலாம்'' என்றார் அந்தப் பெண்மணி.

''இரவு வேளைகளில் கலைப் பொழுதுபோக்காக ஏதேனும் நடக்குமா? தஞ்சை மாவட்டப் பகுதியானது நாடகம், கூத்து போன்ற கலைகளுக்குப் பெயர் போனது! இங்கே எப்படி?'' என்றேன்.

''இங்கேயும் உண்டு. நாட்டுக்கூத்தை இரவு முழுவதும் பாடி ஆடக் கேட்கலாம். பெரும்பாலும் புராணக் கதைகளே இடம்பெறும். கூத்துக்களில் ஆண்களே அநேகமாகப் பெண் வேஷமும் போடுவார்கள். மாமாங்கப் பிள்ளையார் கோயில், தான்தோன்றி ஈசுவரர் கோயில் எல்லாவற்றிலும் திருவிழாக்கள், உற்சவங்கள் நடக்கும். கச்சேரிகள், கூத்துகள் எல்லாம் உண்டு'' என்றார் அவர்.

வெள்ளை நிறத்தில் ஒரு சிற்றுண்டியைப் பரிமாறினார்கள். ''இது என்ன?'' என்று சாப்பிடாமலேயே கேட்டேன்.

''இது தமிழ்நாட்டுச் சிற்றுண்டியைப் போலத்தான்! அரிசிப் பொங்கலைப் பாலில் தயார் செய்வது. இங்கேயெல்லாம் இது ஒரு சிறப்பான சிற்றுண்டி. இலங்கையின் ஜனாதிபதிகூடக் காலையில் இதைத்தான் மிகவும் விரும்பிச் சாப்பிடுவாராம்! 'கிரிபத்' என்று சிங்களவர் இதைச் சொல்வார்கள்'' என்றார், அந்த வீட்டில் இருந்த திருமதி நாகரத்தினம் புஷ்பராஜ் என்ற தமிழ்ப் பெண்மணி.

ஓட்டலுக்குத் திரும்பினோம். பிற்பகல் விமானமூலம் திருகோண மலைக்குப் போவதாக ஏற்பாடாகி இருந்தது. என் அறையில் துரைராசா என்னை எதிர்பார்த்து சோகமே உருவமாக அமர்ந்திருந்தார்.

''என்ன ஆயிற்று? விமான சர்வீஸ் இல்லையா?'' என்று கேட்டேன்.

''விமானம் செல்கிறது. ஆனால் இடம்தான் இல்லை. ஏதோ பாதுகாப்பு நடவடிக்கைகளாம். நிறைய ராணுவத்தினர் போய்க் கொண்டிருக்கிறார்கள்'' என்றார் அவர்.

''திருகோணமலைக்குப் போய்விட்டு, அப்படியே 'சிகிரியா' சித்திரங்களையும் பார்த்துவிட்டுத் திரும்பலாம் என்று இருந்தேனே...?'' என்றேன் ஓர் ஏமாற்றத்தோடு.

''ரங்கநாதன் சொல்லுவார். நீங்கள் அவற்றைக் குறிப்பிடலாம்.

தமிழ் நாட்டு மக்களுக்கு இலங்கையைப் பற்றிய விவரங்கள் முழுமையாகவே இருக்கட்டும்'' என்றார் துரைராசா. எனக்கும் அது சரி என்றே தோன்றியது. அவற்றைச் சுருக்கமாக இந்நூலில் தருகிறேன்...

"சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு 'சிகிரியா,' காசியப்பா என்ற சிங்கள மன்னனின் தலைநகரமாக இருந்திருக்கிறது. அவன் இங்கிருந்து 18 ஆண்டுகள் அரசாண்டிருக்கிறான். அந்தக் காலத்தில் அவன் கட்டிவைத்த அரண்மனை, பௌத்த சந்நியாசிகள் உபன்யாசம் செய்ய உபயோகித்த படிக்கட்டு மேடைகள், விஹாரங்கள், இளைப்பாற நிழல்தரும் மண்டபங்கள் எவையுமே இப்போது இல்லை. அரசிகளும் தோழிமார்களும் உல்லாசமாகப் பொழுது போக்கிய நீச்சல்குளங்கள், நந்தவனங்கள், நீர்த்தேக்கங்கள் இவை மட்டுமே உருமாறி இருக்கின்றன. அரண்மனையின் பகுதியாக இருந்த சில படிக்கட்டுகளும் தூண்களும் இருக்கின்றன. அரண்மனை அழகிகள் உபயோகித்த குளங்கள் தூர்ந்து போயும் மறைந்தும் காணப்படுகின்றன...

'''சிகிரியா' ஓவியங்களில் உள்ள கன்னிகைகள் மிக அழகாகத்தான் இருந்திருக்க வேண்டும். அப்சர கன்னிகைகளைப் போலத் தோன்றும் அவர்களுடைய ஓவியங்களில் இன்னொரு விசேஷம்; இடுப்பு அளவில் அநேகமாக எல்லா ஓவியங்களும் நின்று விடுகின்றன. கோயிலுக்குப் போவதானாலும், குளிப்பதானாலும், அணிகள் பூண்டு அழகு பார்ப்பதானாலும் சரி, அந்தப் பெண்களின் அழகு முழுவதும் இடுப்புக்கு மேல்தான். எந்த ஓவியத்திலும் அவர்களுடைய கால்களின் அழகைப் பார்க்க முடிவதில்லை'' என்றார் ரங்கநாதன்.

''எத்தனை ஓவியங்கள் இருக்கின்றன அப்படி?'' என்று கேட்டேன்.

''வளைந்த படிக்கட்டுகள் வழியாக ஏறிப்போனால் மண் வண்ணங்களுடன் சாந்து பூசிய சுவர்மீது தீட்டியுள்ள பத்தொன்பது வண்ண ஓவியங்களைப் பார்க்கலாம். ஐந்நூறுக்கு மேற்பட்ட ஓவியங்கள் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். கல்வெட்டுக்களும் கூறுகின்றன. பாறையின் சுவரினை வழவழ என்று இருக்கச் செய்ய சுண்ணும்புச் சாந்தையும், கோழி முட்டைகளையும், தேனையும் உபயோகித்தார்களாம். ஓவியங்களில் பச்சை நிறம் அதிகமாக உண்டு. இதற்குத் தாமிரச்சத்து உள்ள மண்ணை உபயோகித்ததாகச் சொல்லுகிறார்கள். 'சிகிரியா' மலைக் கோட்டைக்குச் சற்றுத் தொலைவில் செம்பு மூலப்பொருள் உள்ள பாறைகளையும், மண்ணையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த வண்ணம் கலந்த மண்ணை, வழவழப்பான சாந்து ஈரமாக இருக்கும்போதே கலந்து ஓவியங்களை அமைத்திருக்கிறார்கள். அதனால்தான் இவ்வளவு ஆண்டுகளுக்குப் பிறகும் அந்த ஓவியங்கள் வண்ணம் குறையாமல் இருக்கின்றன'' என்றார் ரங்கநாதன்.

''இந்த அழகான கோட்டையும் ஓவியங்களும் அங்கே உருவானதைப் பற்றிக் கதை ஏதாவது இருக்குமே?'' என்று கேட்டேன்.

''உண்டு. கற்பனைக் கதை அல்ல; சரித்திரக் கதைதான்...'' என்று தொடங்கினார் ரங்கநாதன். அதை அப்படியே இங்கே தருகிறேன்...

காசியப்பா என்ற அந்த அரச குமாரன் பிறவியிலேயே ஒரு கவிஞன். இயற்கையான ரசிகன். அழகான வடிவங்களையும் சித்திரங்களையும் எப்போதும் கற்பனை செய்து கொண்டிருப்பான். தன்னையே ஒரு தேவனாகவும், தனது மனைவியரை அப்சர பெண்களாகவும் நினைப்பதுண்டு. இந்தக் கற்பனைகளுக்குக் கிடைத்த வடிவம்தான் சிகிரியாவில் நாம் பார்க்கும் கனவுலகம்...

அவனுடைய தந்தைக்கு ஒரு பாமரப் பெண் மூலமாகப் பிறந்தவன் காசியப்பா. ராஜ வம்சத்திலேயே அவனுக்கு ஒன்றுவிட்ட சகோதரனாக இருந்தான் மொகலானா, 'அடுத்த வாரிசு யார்?' என்ற போட்டி எழுந்தது.

அரசன், பாமரப் பெண்ணின் மகன் சிம்மாசனம் ஏறுவதை விரும்பவில்லை. மொகலானு அரசனுகும் வாய்ப்பு உண்டாயிற்று.

பிரதம சேனுதிபதிக்கு அரசனைப் பிடிக்கவில்லை. அவன் காசியப்பாவுடன் சேர்ந்து கொண்டான். அரசனை அவனுடைய படைகள் சூழ்ந்து கொண்டு கைது செய்து பதவியிலிருந்து இறக்கிவிட்டன. (அந்தக் காலத்திலேயே 'கூ' (Coup) இருந்திருக்கிறது பாருங்கள்!) மொகலானு உயிர் பிழைக்கத் தென்னிந்தியாவுக்குத் தப்பி ஓடிவிட்டான். காசியப்பா அரசனுக முடி சூட்டிக் கொண்டான். உடனடியாகத் தந்தையைச் சிறையில் வைத்தான்.

அரசாங்கத்தின் கஜானு காலியாகக் கிடந்தது. காசியப்பாவின் பெரிய திட்டங்களை நிறைவேற்றப் பணம் இல்லை. ''கஜானுவின் மதிப்பு மிகுந்த செல்வங்களை எங்கேயோ அரசன் பதுக்கிவைத்து விட்டான்'' என்று சொன்னுன் தலைமை சேனுதிபதி. அரசனைச் சிறையிலிருந்து அழைத்து வந்தார்கள். அவன் அமைத்த பெரிய நீர்த்தேக்கம் ஒன்றின் கரைக்கு அழைத்துச் சென்ருர்கள். ''நீ சேமித்த செல்வம் எல்லாம் எங்கே...?'' என்று கேட்டார்கள்.

''இதோ—இதுபோன்ற நீர்த்தேக்கங்கள்தான் மக்களுக்காக நான் சேமித்த செல்வம். வேறு எதுவும் எனக்குத் தெரியாது!'' என்ருன் அரசன்.

காசியப்பாவுக்குக் கோபம் வந்தது: ''என் தந்தையைக் கொன்று விடுங்கள்!'' என்று உத்தரவு போட்டான். தலைமை சேனுதிபதி அரசனை உள்ளே வைத்துச் சுற்றிலும் கட்டடம் கட்டி, அவனை உயிருடன் சமாதியாக்கி விட்டான்.

'இந்த உலகம் அதன் சுகம், அழகு, போகம் எல்லாம் அழியக் கூடியவையே. ஆனுல், அதற்காக எவ்வளவு அழிவுகள் நடக்கின்றன?' என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனுல் காசியப்பா அழகையும் அதன் ரசனையையும் வாழ்க்கையின் ஓர் உன்னத அம்சமாகக் கொண்டு சிருஷ்டித்த சிற்பங்களும், சித்திரங்களும், கூடங்களும், விஹாரங்களும் அமரத்துவம் வாய்ந்தவை. இன்றும் சிதிலமான நிலையிலும் அவற்றின் அழகு நம்மை மயக்குகிறது.

சுவரில் பொறிக்கப்பட்டுள்ள நுட்பமான எழுத்துக்கள் இன்னும் மறைய வில்லை. இந்தக் கவிதைகளை அங்கு வந்தபோன கவிஞர்கள் செதுக்கி இருக்க வேண்டும் என்று சொல்லுகிருர்கள். அவற்றில் உள்ள வருணனைகள் அந்த அப்சர கன்னிகைகளின் உடல் அழகையும், மெருகையும், இளமையின் செழுமையையும் வருணிக்கின்றன.

பதினெட்டு ஆண்டுகள் இந்த சுவர்க்க பூமியில் காசியப்பா வாழ்ந்தான். தன்னையே ஒரு தேவனுகவும் கற்பனை செய்து கொண்டான். ஆனுல் ஒவ்வொரு கணமும் தனது எதிரியான சகோதரன் மொகலானு திரும்பி வந்துவிடுவானே என்ற பயம் அவனுக்கு இருந்துகொண்டே இருந்தது. அதற்காகக் கோட்டைகளையும், காவலாளிகள் நின்று நெடுந்தூரம் பார்க்கக்கூடிய கோபுரங்களையும் கட்டி வைத்திருந்தான்.

பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நாளும் வந்தது. தனது படையுடன் மொகலானு படையெடுத்து வந்தான். காசியப்பாவும் பெரும் படையுடன் அவனைப் போர்க்களத்தில் சந்தித்தான். கடும் போர் நடந்தது.

காசியப்பா் யானை மீது ஏறிச் சண்டை போட்டான். போர்க்களத்தில் யானை சதுப்பு நிலம் ஒன்றின் அருகே வந்ததும் மேலே போகப் பயந்து திரும்பி ஓட ஆரம்பித்தது. அதைப் பார்த்த அவனது படை வீரர்கள் அரசன் புறமுதுகு காட்டி ஓடுவதாக எண்ணி, உயிர் பிழைக்க ஓடி மறைந்தார்கள். காசியப்பா தோல்வி அடைந்தான். ஆனுல் அவன் அரண்மனைக்குத் திரும்ப

வில்லை. போர்க்களத்திலேயே வாளை எடுத்துத் தானே தன் கழுத்தை வெட்டிக் கொண்டு உயிர் துறந்தான்.

தந்தையைக் கொன்ற பாவம் விடவில்லை-பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகும்!

ரங்கநாதன் கதையைச் சொல்லி முடித்தார். ''ரொம்ப சுவையான கதைதான்! இப்போது 'சிகிரியா'வுக்குப் போகிறவர்கள் வேறு எதையாவது பார்க்க முடியுமா?'' என்று கேட்டேன்.

''மலைமீது ஏறிப் பார்த்தால் அழகான காட்சி தெரியும். இரண்டாவது உலக யுத்தத்தின்போது மலையிலிருந்து இரண்டு மைல்கள் தொலைவில் உள்ள விமானதளம் பயன்பட்டதாகச் சொல்லுகிறார்கள். அங்கே அப்போது கன்டோன்மெண்ட் இருந்திருக்கிறது. அந்த குவார்டர்ஸ், கடைகள் இருந்த இடம் எல்லாம் இப்போது காலி!'' என்று ஒரு பெருமூச்சு விட்டார் ரங்கநாதன்!

''உங்களுக்கு நீந்தத் தெரியுமோ...?'' என்று கேட்டார் ரங்கநாதன். ''தெரியாது. ஏதாவது நீச்சல்குளத்துக்கு அழைத்துக் கொண்டு போகப் போகிறீர்களா...?'' என்று கேட்டேன்.

''குளம் அல்ல – கடலுக்கே போகலாம்! திருகோணமலையை ஒட்டிய கடற்பகுதி அப்படிப்பட்டது. ஆண்டுதோறும் 'டூரிஸ்டு'கள் அங்கே கடலுக்கடியில் மூழ்கி விளையாடுவதற்காகவே போகிறார்கள். கிளிஞ்சல்கள், பெரிய சங்குகள் ஆகியவற்றுக்குப் பெயர் போனது அந்த இடம். 'ஹார்புலினு அராஸியகா' என்ற மிக அரிதான கிளிஞ்சல்பாறைகள் உலகத்திலேயே இங்கேதான் கிடைக்கின்றனவாம். புகழ்பெற்ற இந்தக் கடற்கரைக்குப் பவளக்கரை என்று பெயரிட்டிருக்கிறார்கள். ஆண்டுதோறும் பிப்ரவரி முதல் ஏப்ரல் வரையில் சங்கு குளிக்கும் 'சீஸன்.' ஏராளமான இந்துக்களும், முஸ்லீம்களும் இந்தக் குளியலைப் பொறுத்தவரை ஒற்றுமையாகவே மூழ்குகிறார்கள். சங்குக்காக மூழ்குவது ஒருபுறம் இருக்கட்டும்; கப்பல்கள் மூழ்குவதற்கே இலங்கையின் கடற்கரை பிரசித்தமானது!'' என்றார் ரங்கநாதன்.

''அந்த இடங்களையும் டூரிஸ்டுகள் போய்ப் பார்க்கிறார்களோ...?'' என்று கேட்டேன்.

''போய்ப் பார்ப்பது மட்டும் இல்லை. கடலில் மூழ்கி உள்ளே கிடக்கும் கப்பல்களின் சிறு பகுதிகளை ஞாபகார்த்தமாக உடைத்து எடுத்துக் கொண்டும் வருகிறார்கள். பல நூற்றாண்டுகளாகப் போர்த்துக்கீசிய, டச்சு, பிரிட்டிஷ் கப்பல்கள் இங்கே ஆழ்ந்து மூழ்கி இருக்கின்றன. இரண்டாவது உலகப் போரில் கூட சில கப்பல்கள் மூழ்கி இருக்கின்றன. அந்த இடங்களைக்கூடப் படத்தில் 'மார்க்' செய்து காண்பிக்கிறார்கள். மட்டக்களப்புக்கு அருகில் 175 அடி ஆழத்தில் அமிழ்ந்து கிடக்கும் பிரிட்டிஷ் கப்பலை வைத்து, 'ப்ளூ வாட்டர் – ஒயிட்டெத்' என்று ஒரு திரைப்படமே எடுத்திருக்கிறார்கள்'' என்றார் அவர்.

'' 'டூரிஸ்டு'களும் உள்ளே போய் புகைப்படம் எடுக்கலாமோ...?'' என்று கேட்டேன்.

''ஜனவரி முதல் மே மாதம்வரை போட்டோ சீஸன்! வண்ணப்படம் எடுக்க காமிராக்கள், பல்புகள், முகமூடி சாதனங்கள் எல்லாமே கொடுக்கிறார்கள். சுறுமீன் பயம் என்பதே இல்லை'' என்றார் ரங்கநாதன்.

''திருகோணமலையின் பிரசித்தி பெற்ற கோணேஸ்வரன் ஆலயத்திற்குத் தலப் பெருமையும் உண்டு. போர்த்துக்கீசியர் காலத்தில் இந்தக் கோயில் இடிக்கப்பட்டிருக்கிறது. திருகோணமலைக் கோட்டையைக்

கட்ட இந்தக் கற்கள் உபயோகிக்கப் பட்டதாகக் கூறுகிறார்கள். கடந்த இருபத்தைந்து ஆண்டுக் காலத்தில் கோயிற்பணி மீண்டும் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

''இக் கோயிலைக் கட்டி எந்த விக்கிரங்களை வைப்பது என்று நிர்வாக சபையினர் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, ஆனி மாதம் பட்டணத் தெருவில் கிணறு வெட்டும்போது, கோணேசர் விக்கிரங்கள் வெளிக் கிளம்பின. பார்வதி, சிவன், சந்திரசேகர் ஆகிய தெய்வத் திருவுருவங்கள் எந்தப் பின்னமும் இன்றிக் காணப்பட்டன. கோணேநாதரின் திருவருளாக அதை மேற்கொண்டு, 1963-ம் ஆண்டு பங்குனி மாதம் இந்த விக்கிரங்களை வைத்து ஆலயத் திருப்பணியை முடிவடையச் செய்தனர். பங்குனி உத்தரம் இங்கு விசேஷமாகக் கொண்டாடப்படும் விழா. போர்த்துக்கீசியரால் அழிக்கப்பட்ட ஓர் ஆலயம். 340 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நிறுவப் பட்டுப் புதுப்பொலிவுடன் விளங்குகிறது'' என்று கூறுகிறார் தமிழன்பர் ஏரம்பு சரவணபவன்.

உடல்நலம் பெறவும் மக்கள் இங்கே வருகிறார்கள்.

திருகோணமலைக்கு அருகில் உள்ள கின்னியா என்னும் இடத்தில் சுடச்சுட நீர் ஊற்றுப் பொங்குகிறது. அவற்றில் குளித்தால் வாயுப் பிடிப்பு, வாதநோய் ஆகியவை நீங்கும் என்று சொல்கிறார்கள்.

ஃ ஃ ஃ

இலங்கை அரசில் நீதித்துறை — கூட்டுறவுத்துறை அமைச்சராக இருக்கும் திரு. தேவநாயகம் பார்ப்பதற்கு ஒரு திருநெல்வேலி மாவட்டப் பிரமுகரைப் போலவே இருக்கிறார். நயமான குரலில் புன்சிரிப்புடன் பேசு கிறார். இவர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவராதலாலும், தவிர்க்க முடியாத காரணங்களினால் மட்டக்களப்புப் பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்ய எனக்கு முடியாது போனமையினாலும் இவரைச் சந்திப்பதற்கு மிகுந்த ஆவலோடு சென்றேன். என்னை அன்புடன் வரவேற்று உபசரித்துப் பேசினார்.

''தங்களுடைய தொகுதி மட்டக்களப்பைச் சேர்ந்தது என்று கேள்விப் பட்டேன். அந்தப் பகுதியைப் பற்றியும், தங்களுடைய குடும்பப் பின்னணி யைப் பற்றியும் சொல்ல முடியுமா...?'' என்று கேட்டேன்.

''அந்தப் பகுதி தமிழர்கள் மிகப் பழைமையான பின்னணி உடை யவர்கள். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக அங்கே வசித்து வருகிறார்கள். அவர்களுடைய கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், மொழி, வழக்கு ஆகியவற்றை நீங்கள் வேறு எந்தப் பகுதியிலும் பார்க்க முடியாது. மற்றவர்களைக் காட்டிலும் பழைமையானவர்கள் என்பதுடன் ஓரளவு கேரள மக்களை ஒத்தவர்கள் என்றும் குறிப்பிட வேண்டும். அவர்களுடைய உணவு, உடை, வாழ்க்கை முறை எல்லாமே கேரள மக்களைப் போல இருக்கும். மட்டக்களப்புத் தமிழில் அந்தச் சொல்லழகும், ஓசை நயமும் உங்களுக்குப் புரியும். கேரளப் பெண்களைப் போலவே இந்தப் பகுதிப் பெண்களும் இயற்கை அழகு மிகுந்தவர்கள். இன்னொரு ஒற்றுமையும் உண்டு. மாந்திரீகம் இலங்கையிலேயே இந்தப் பகுதியில்தான் அதிகமாக வேரூன்றி இருக்கிறது. கேரள மந்திரவாதிகளைப் போலவே இங்கேயும் சக்தி படைத்தவர்கள் பலர் இருக்கின்றனர்.

''இங்கே உள்ள கோக்கட்டிசுவரர் ஆலயம் புகழ் வாய்ந்தது. மதுரை யில் 'கல் யானை கரும்பு தின்றது' என்று ஒரு வரலாறு உண்டு. இங்கும் அது போல கல்லினால் ஆன பசுமாடு புல் தின்று சாணமும் போட்டதாக வரலாறு

உண்டு! போர்த்துக்கீசியர் காலத்தில் இந்த ஆலயத்தை அடியோடு அழிக்க முயன்றார்கள்.

''என்னுடைய பாட்டனார் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்தவர். நான் மட்டக்களப்பில் பிறந்தேன். எங்களுக்கு விவசாயம்தான் குடும்பத் தொழில். நான் மட்டும் அரசியலில் வந்து சேர்ந்தேன். ஆரம்ப நாட்களில் தமிழ்த் தலைவர்களுடன் சேர்ந்து தமிழர் விடுதலை கூட்டணியில் இருந்ததுண்டு. திரு. செல்வா அவர்களுடன் எனக்கு அபிப்பிராய பேதம் ஏற்பட்டபோது, அவர் மிகப் பெருந்தன்மையுடன் என்னை விலகிச் செல்ல அனுமதித்தார்.

''1965—ம் ஆண்டு கல்கூடா தொகுதியில் பெடரல் கட்சி வேட்பாளரைத் தோற்கடித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஆனேன். 'ஐக்கிய தேசிய கட்சி' (U.N.P.) உறுப்பினராக இருந்து வருகிறேன். கூட்டுறவுத்துறைப் பணிகளில் எனக்கு மிகுந்த அனுபவம் உண்டு. அதனால் இப்போது கூட்டுறவுத்துறையையும், நீதித்துறையையும் எனது பொறுப்பில் கொடுத்திருக்கிறார்கள்'' என்று கூறினார் திரு. தேவநாயகம்.

''மட்டக்களப்பு பகுதியில் உள்ள பாடும் மீனைப் 'பற்றிக் கேள்விப்பட்டேன். தாங்கள் அதைப் பற்றிச் சொல்ல முடியுமா...?'' என்றேன்.

''அழகான உப்பங்கழிகள் அங்கே நிறைய இருக்கின்றன. அவற்றில் சங்கு வடிவம் கொண்ட மீன்களைப் பார்க்கலாம். இரவு வேளையில் நிலவொளியில் அவை 'ஆர்கன்' வாசிப்பது போல ஓர் ஒலியை எழுப்பும். 'நோட்' வாசிப்பது போல அது இருக்கும். அதை நாம் தெளிவாகக் கேட்கலாம்'' என்றார் அவர்.

''திருமதி பண்டாரநாயகாவின் எதிர்காலத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்...?'' என்றேன்.

அவருடைய ஆட்சிக் காலத்தில் நடந்த அநியாயங்கள், இழைக்கப்பட்ட கொடுமைகள், எல்லாவற்றையும் இப்போது மக்கள் தெரிந்து கொள்ளும்படி வெளிப்படுத்தி வருகிறோம். விசாரணைக் கமிஷன்களை நியமித்து விசாரித்து வருகிறோம். மக்கள் அவருடைய உண்மையான உருவத்தைப் புரிந்து கொண்டு வருகிறார்கள். அதற்கேற்ப அவருடைய எதிர்காலத்தையும், மக்களே நிர்ணயிப்பார்கள் என்று நம்புகிறோம்'' என்றார் திரு. தேவநாயகம்.

திரு. தேவநாயகம் எழுந்து கைகுலுக்கி விடை கொடுத்தார். தமிழ்நாட்டு மக்களுக்குத் தனது நல்வாழ்த்துக்களைச் சொல்லி அனுப்பினார். அவருடைய இனிய பண்புகள் என்னை வெகுவாகக் கவர்ந்தன.

ஃ ஃ ஃ

'இலங்கை நம்முடைய அண்டை நாடு என்பதனாலோ என்னவோ, அளவில் சிறியதானாலும், அதைப்பற்றி முடிந்த அளவு விரிவாகவே எழுத வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு நிறைய இருந்தது.

இந்தப் பயணக் கதையில் எனக்கு இன்னொரு முக்கிய நோக்கமும் இருந்தது. இலங்கை வாழ் தமிழர்களுடைய பிரச்சினைகளை எந்தத் தமிழ்ப் பத்திரிகையும் இதுவரை எடுத்துக்காட்டாத அளவுக்கு — இந்த நூலின் வாயிலாக அவற்றை வெளியிட்டு மக்கள் பார்வைக்கு நான் வைத்திருக்கிறேன். இந்த நூலின் மூலம் நான் செய்த தொண்டுகளில் இதையே மிக முக்கியமானதாகவும், மிகச் சிறந்ததாகவும் நான் கருதுகிறேன்.

★



SRI LANKA
REFERENCE
Roads (motorable)
Railways
Air Ports
Rest Houses & Guest Houses
Botanical Gardens
Irrigation & Colonisation Schemes
Basket & Hat Making
Hotels
80°
81°
9°
8°
7°
6°
Kankesanturai
Point Pedro
Jaffna
Kayts
Elephant Pass
Punakari
DELFT
KACHCHATIVU
Devil's Point
Mullaittivu
RAMESWARAM
Dhanushkodi
Talaimannar
Pesalai
MANNAR ISLAND
Mannar
Mantai
Mankulam
Pulmoddai
Kuchchaveli
Madhu
Vavuniya
PEARL
BANKS
Madhu Road
Kebitigollewa
Nilaveli
Uppuveli
Trincomalee
Foul Point
Marichchukkadi
Kudremalai Point
Medawachchiya
Horowupotana
Kahatagasdigiliya
Wilpattu
Pomparippu
Anuradhapura
Mihintale
Dutch Bay Point
Kantalai
Kalpitiya
Kala Oya
Vakarai
Maradankadawala
Gal Oya
Puttalam
Kekirawa
Giritale
Habarane
Polonnaruwa
Elephant Point
Passikudah
Kalkudah
Galgamuwa
Avukana
Sigiriya
Dambulla
Chenkaladi
Udappuwa
Nikaweratiya
Elahera
Batticaloa
Wariyapola
Nalanda
Chilaw
Kurunegala
Mana Oya
Matale
Akaduwa
Marawila
Padiyatalawa
Kalmunai
Polgahawela
Madugoda
Mahiyangana
Weragantota
KANDY
Teldeniya
Kegalla
Ampara
Negombo
Peradeniya
Minipe
Sinnamuttuvaram
Katunayaka
Gampola
Inginiyagala
Bibile
Gampaha
Nawalapitiya
Kandapola
Ja-ela
Lunugala
Nuwara Eliya
Badulla
COLOMBO
Avissawella
Kitulgala
Hatton
Dehiwala
Mt. Lavinia
Ratmalana
Maskeliya
Horton Plains
Welimada
Ella
Monaragala
Lahugala
Pottuvil
Arugam Bay
Adam's Peak
Bandarawela
Panadura
Haputale
Ratnapura
Belihul Oya
Koslanda
Wellawaya
Pelmadulla
Balangoda
Opanake
Kalutara
Kumana
Moragala
Rakwana
Beruwela
Bentota
Kataragama Peak
LITTLE BASSES
Yala
Deniyaya
Urubokka
Ambalangoda
Elpitiya
Wirawila
Tissamaharama
Kirinde
GREAT BASSES
Hikkaduwa
Hambantota
Akuressa
Hakmana
Ambalantota
Galle
Tangalla
Weligama
Matara
Dondra Head
Scale One Inch to 24 Miles
1: 1,520,640
Miles 10 5 0 10 20 30 40 Miles



18933

